INSTRUCTIONS & SERMONS

FOR A WEEK'S SPIRITUAL RETREAT

ஞான ஒடுக்கப் பிரசங்கம்

251
GNA

By

REV. S. GNANA PRAKASAR, O. M. I.

Nallur Swami Gnanapragasar Library
OBLATE FATHERS
"THODARBAHAM"
657/1. HOSPITAL ROAD, JAFFNA

005699

JAFFNA,
ST. JOSEPH'S CATHOLIC PRESS,
1934.

Nihil obstat:

S. ASIRVATHAM, O. M. I.,
Censor Librorum.

Colombogam,
22-7-33.

Imprimatur:

† J. A. GUYOMAR, O. M. I.
10th July, 1933.

To the Memory of
The Late Reverend Father R. Maingot, O. M. I.
Zealous Missionary and Forceful Preacher,
(In Ceylon 1887—1901)
Who Taught Me to Preach
My First Sermons at the Cathedral of Jaffna
While I was a Deacon;
And Who Gave a New Impetus
To the Preaching of Missions
Throughout Ceylon:
This Little Volume of
Instructions and Sermons for a Week's
Spiritual Retreat
Is Gratefully Inscribed.

FOREWORD

The following Instructions and Sermons for a Week's Spiritual Retreat are meant, in the first place, for the Faithful in Tamil-speaking lands. They are also offered for the use of missionaries, who will find in them an aid to clothe their ideas in correct and idiomatic expressions, when subjects similar to those included in this volume are to be treated from the pulpit. The following words of Monseigneur Christopher Bonjean O. M. I., first Archbishop of Colombo, show how useful it is to the preacher of Missions to be well acquainted with the idiomatic expressions of the language which he employs in the ministry of the word of God:

" The preacher of Missions is successful only to such extent as his knowledge of the language of the people goes. But these languages (in the East) are so difficult that, in order to make them a docile instrument in his hands, he has to devote much time for their study. A missionary who knows only what is sufficient for the ordinary purposes of life or for the routine of his ministry, finds himself struck with inability in the pulpit during a Mission; language refuses to lend itself to the expression of his thoughts and sentiments; he is able to say neither what he wants nor how he wants nor how he ought; he is reduced to more or less worn-out sayings; to mere common places of little or no effect. In the exposition of sacred truths, his language is wanting in precision, in correctness, in delicacy or propriety. Devoid of local colour and idiomatic force, it is the foreign language of a foreigner, something exotic which the mind and heart fail to assimilate, something which contains no affinity to the habitual thoughts and sentiments of the people, but

trickles down the surface like water on marble, leaving the audience with a vague impression that the preacher has said and no doubt well said what he ought to have said, 'but all that was not for us' they would avow. How often do we fancy that we have spoken very well and with great simplicity, whereas our words have been merely a sound, more or less intelligible, or a sort of enigma of which every term is understood, but the sense is hidden! What appears simple in our eyes is often entirely European in idea, European in form,—the whole thing being as obscure to an oriental mind as it is clear to us." (Mgr. Bonjean, par le R. P. Jonquet, I, 105—6).

What the great Archbishop said, especially with reference to the European missionaries in the East, is also true of native missionaries to a certain extent, owing to the fact that the latter generally receive their education through the medium of European languages and on European lines. A deep study of the vernacular becomes a necessity for them as well, if they would avoid the "more or less worn-out sayings" and "mere common places" referred to in the above quotation. The writer of these lines too felt this necessity at the commencement of his career as a preacher, and, in giving his junior colleagues the fruits of a continual study of some thirty five years, hopes to lighten their burden even in a slight way and to encourage them to a further study of the language in which they have to announce God's word to their countrymen.

தமிழ் வழங்கும் நாடுகளில் உள்ள

கிறீஸ்தவர்களுக்கு விவேகம்

பிரியமானவர்களே, இலங்கையிலும் தென்னிந்தியாவிலும் உள்ள பல பட்டணங்களில் ஓரோர் காலத்திலே உங்களுக்குத் தேவ வேத சத்தியங்களை எடுத்துப் பிரசங்கிக்கிற பாக்கியம் எனக்குக் கிடைத்திருக்கிறது. ஆனால், நெடுநாட்பட்ட அரும் பிரயாசங்களால் தேக பெலன் குன்றியிருக்கிற இக்காலம், முன் போலத் திரளான விசுவாசிகளின் மத்தியில் நின்றுகொண்டு குரல் உயர்த்திப் பிரசங்கிக்கும் ஆற்றல் எனக்கு இல்லாமற் போய்விட்டபடியால், அச்சிட்ட புத்தகத்தின் மூலமாயாவது உங்களுக்கு நன்மை செய்ய ஆசைப்பட்டு "ஞான ஒடுக்கப் பிரசங்கம்" என்கிற இந்தப் பிரபந்தத்தை வெளிப்படுத்துகிறேன்.

இதில் உள்ள பிரசங்கங்கள் நூறு இருநூறு தடவை திருப்பித்திருப்பிச் சொல்லப்பட்டவைகள் ஆனபடியால், சொல்லிலேயும் பொருளிலேயும் எவ்வளவோ திருந்தித் தெளிந்தவைகளாய் இருப்பதை நீங்களே கண்டுகொள்வீர்கள். சிறியோர்களுக்கும் விளங்கத்தக்கதாக இதை, எளிய பேச்சிலே, ஒவ்வொரு சொல்லையும் வேறு வேறாய்ப் பிரித்து, எழுதியிருக்கிறேன். காலையிற் சொல்லுகிற போதனை ஒன்றும், மாலையிற் பண்ணுகிற பிரசங்கம் ஒன்றும் ஆக, ஏழு நாளைக்குப் போதனையும் பிரசங்கமும் தந்திருக்கிறது. ஒரு கிழமைக்காவது அதற்குக் குறைந்த நாட்களுக்காவது ஞான ஒடுக்கஞ் செய்கிறவர்கள், காலையில் ஒரு போதனையும் மாலையில் ஒரு பிரசங்கமுமாக மெல்ல மெல்ல வாசித்துத் தியானித்துக்கொள்ளலாம். பலர் கூடி ஞான ஒடுக்கஞ் செய்கிறபோது, அவர்களுள் ஒரு ஆள், எல்லாரும் கேட்க, தெளிந்த ஓசையாயும் ஆறுதலாயும் வாசிப்பது உத்தமம். குருமார் இப்புத்தகத்தில் உள்ள போதனைகள் பிரசங்கங்களை ஓரோர் வேளை எடுத்துக் கோயிலிலே பிரசங்கித்தாலும், அதற்குப்பின் கிறீஸ்தவர்கள் அந்தந்தப் போதனையைப் பிரசங்கத்தை வீட்டிலேயும் வாசிக்கலாம். வாசித்தால், சொல்

லப்பட்ட காரியங்கள் மனதிலே நன்றாக அழுந்தி அதிக நன்மை உண்டாகும். ஞான ஒடுக்க நாட்களில் மாத்திரமல்ல, வேறு நாட்களிலேயும், தளர்ந்துபோகிற பத்தியைக் கிள்ளி அருட்டுகிறதற்கும், பாவச் சோதனைகளை வெல்லுகிறதற்கும் இதிலே உள்ள பிரசங்கங்களை வாசித்து நன்மை அடையலாம்.

இந்தப் புத்தகத்தை நீங்கள் வாங்கி வைத்து, உங்கள் அருமையான பொருள் பண்டங்களைக் காப்பதுபோல காப்பாற்றி வந்தால், அநேகருடைய ஆத்தும லாபத்துக்கு இது ஒரு நல்ல வழி ஆகும்.

உங்கள் சகலருடையவும் ஈடேற்றத்துக்காக என்னால் இயன்ற ஊழியம் எல்லாம் செய்ய எப்போதும் ஆயத்தமாயிருக்கின்ற

சா. ஞானப்பிரகாச சுவாமி.

நல்லூர், யாழ்ப்பாணம்.
10-7-33.

CONTENTS

பொருளடக்கம்

Dedication iii
Foreword v
விவேகம் vii

Introductory Sermon: *On the End of Man*—ஆரம்பபிரசங்கம்: எனது ஒரே அலுவல் ... 1--13

முதல் நாள்

Instruction: *On Prayer*—காலைப்போதனை: சேபம் என்னும் நூலேணி ... ... 14—19
Sermon: *On Death as an Excellent Teacher*—மாலைப்பிரசங்கம்: மரணமே நல்ல உபதேசி 20—33

இரண்டாம் நாள்

Instruction: *On Self-denial*—காலைப்போதனை: தன் சிலுவையைச் சுமந்துகொண்டு செல்லல் 34—40
Sermon: *On the Day of Reconning*—மாலைப் பிரசங்கம்: தனித்தீர்வையின் கணக்கு வரையறை ... ... 41—53

மூன்றாம் நாள்

Instruction: *On the Duties of Husband and Wife*—காலைப்போதனை: இல்லறக் கடமைகள்—புருஷனும் பெண்சாதியும் ... ... 54—60
Sermon: *On the Eternal Regrets of the Damned*—மாலைப்பிரசங்கம்: காலாதிகாலமும் தீராத கவலை ... ... 61—73

நாலாம் நாள்

Instruction: *On the Duties of Parents*—காலைப் போதனை: இல்லறக் கடமைகள்—தாயும் தகப்பனும் ... ... 74—81

Sermon : *Confessions made without Conversion of Heart*—மாலைப்பிரசங்கம் : மனம் மாறாத பாவசங்கீர்த்தனம் ... ... 82—98

ஐந்தாம் நாள்

Instruction : *On Forgiveness of Injuries*—காலைப்போதனை : பிறர் பிழை பொறுத்தல் 99—107
Sermon : *On the Fatherhood of God*—மாலைப் பிரசங்கம் : சருவேசுரன் நமக்குப் பிதா 108—123

ஆறும் நாள்

Instruction : *On Sins of the Tongue*—காலைப் போதனை : வாய்ப் பாவ வகை ... 124—135
Sermon : *On Building up a New Life*—மாலைப் பிரசங்கம் : எம் இரட்சணியமானவரைப் பின்பற்றுதல் ... ... 136—148

ஏழாம் நாள்

Instruction : *On the Mother of God being the Mother of Men*—காலைப்போதனை : தேவ மாதா மானிடரின் மாதா ... ... 149—157
Homily : *On Preparation for Holy Communion*—மாலை விரித்துரை : தெய்வீக விருந்துக்கு ஆயத்தம் ... ... 158—167

Conclusion : *A Call to Spiritual Combat*—முடிவுரை : ஞானப் படையெழுச்சி ... 168—178

அநுபந்தம் 1 : *On General Confession*—பொதுப் பாவசங்கீர்த்தனத்தின் பேரில் ... ... 179—189
அநுபந்தம் 2 *Father Gonzalves's "Miserere"* —பிழைதீர்க்கிற மந்திரம் ... ... 190—192

INSTRUCTIONS AND SERMONS
FOR
A WEEK'S SPIRITUAL RETREAT

ஞான ஒடுக்கப் பிரசங்கம்

Introductory Sermon : On the End of Man

ஆரம்ப பிரசங்கம்

எனது ஒரே அலுவல்

Quid proderit homini si lucretur mundum totum et detrimentum animae suae faciat ?-S. Marc VIII 36.

"ஒருவன் உலகம் முழுதையும் தன்னுடையது ஆக்கிக்கொண்ட போதிலும், தன் ஆத்துமத்தை இழந்துபோவானாகில் அதனால் அவனுக்கு என்ன பிரயோசனம்?" (அர்ச். மாற்கு சுவிசேஷம், 8; 36).

மனிதன் ஆத்துமமுஞ் சரீரமுஞ் சேர்ந்த ஒரு படைப்பு. சரீரம், காணப்படுகிற உலகத்தில் உள்ள பிற பொருட்களைப்போல கண்டிப்பான ஒரு பொருள். அது என்னத்துக்காக நமக்குத் தரப்பட்டது என்றது சொல்லாமலே விளங்கும். கையும் காலும், தலையும் வாயும், முதலிய அதன் உறுப்புக்கள் ஒவ்வொன்றும் என்னென்ன வேலைக்கு உதவியாகிறது என்று எடுத்துக்காட்ட வேண்டியதில்லை. சரீரத்துக்குள்ளே நிறைந்திருந்து, சரீரத்தை உயிருள்ளது ஆக்குகிறதாகிய ஆத்துமமோ காணப்படுகிற பொருட்களைப் போல கண்டிப்பானதொன்று அல்ல; அது கண்ணுக்குப் புலப்படாதது; அரூபமானது; உலகத்திலே உள்ள சகல பொன் வெள்ளி மாணிக்க வைடூரியங்களிலும் பார்க்க விலையேறப்பெற்றது. அந்த அருமை பெருமையான பொக்கிஷத்தை மனிதனுடைய

சரீரமானது அடக்கி வைத்துக்கொண்டிருக்கிறதினாலேதான், மனிதன் உலகத்திலே உள்ள மற்றப் படைப்புக்களுக்கெல்லாம் இராசாவாக விளங்குகிறான். புல் பூண்டு மரம் செடி கொடிகளுக்கு மாத்திரமல்ல, பட்சி பறவைகளுக்கும் சகல மிருக இனங்களுக்கும் மனிதன் அதிபதி; அவைகளை ஆண்டு நடத்தும் உரிமையையும் வல்லமையையும் கொண்டிருக்கிறவன். எந்த மிருகத்துக்கும் இல்லாத பரம கொடையாகிய ஆத்துமம் மனிதனுக்கு மாத்திரம் கிடைத்திருக்கிறபடியால், ஒரு சிறு பையன்தானும் நூறு இருநூறு ஆடு மாடுகளைத் தான் விரும்பிய விரும்பிய இடத்துக்கு மேய்த்துக்கொண்டு போகிறதைக் காண்கிறோம். யானை சிங்கம் புலி முதலிய துஷ்ட மிருகங்களையும் மனிதன் அடக்கி வேலை கொள்ளுகிறதை அறிவோம். ஆத்துமத்தில் பிரகாசிக்கிற புத்தியின் விரிவுக்கும் வல்லமையின் பரப்புக்குமோ இணையில்லை. இவ்வளவு மேன்மை உள்ள ஆத்துமத்தைச் சருவேசுரன் மனிதனுக்குக் கொடுத்தருளிய நோக்கம் என்ன? அவனுக்கு உலக பொருட்கள் சகலத்தையும் ஆண்டு நடத்தத் தக்க புத்தியும், நன்மைக்கு மேல் நன்மையைத் தேடத் தக்க தன்னிட்டமும் கிடைத்திருப்பது என்ன முகாந்திரத்துக்காக? உழைத்து, பொருள் தேடி, தின்று குடித்துச் சீவியம் பண்ணுவதற்காகவா? அப்படியானால், புத்தியும் தன்னிட்டமும் பொருந்திய ஆத்துமம் இல்லாத பட்சிகளும் மிருகங்களும் நன்றாக ஊண் தேடித் தின்று, பலுகிப் பெருகி வாழுவதைக் காண்கிறோமே. மனிதன் சரீரத்துக்குரிய சுக போகங்களை மாத்திரம் தேடி அனுபவிக்க வேண்டியவன் என்றால், இதற்கு, அழியாத ஒரு ஆத்துமம் அவனுக்கு தேவையில்லை. ஆத்துமம் இல்லாமலே நல்ல திருத்தமான சரீரசீவியம் நடத்திப்போடலாம். ஆதலால், ஆத்துமத்தைச் சருவேசுரன் நமக்குத் தந்தது அதற்காகவல்ல. ஆத்துமத்துக்கோ மேலான ஒரு சீவியம் உண்டு. அது என்னவானால், தன்னையும் தனக்காக உலகத்தையும் படைத்தருளிய சருவேசுரனை அறிந்து தோத்திரித்து, அவருடைய கட்டளைகளைக் கைக்கொண்டு, அதனால் அவர்பேரிற் தனக்கு உள்ள நேசத்தைக் காட்டி நடந்து, அதனால் அவரிடத்திற் சேருவதுதான். இந்த மேலான சீவியத்துக்காகவே மனிதனுக்கு ஒரு மேலான ஆத்துமம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சீவியந்தான் மனிதனை மிருகத்திலிருந்தும் பிரித்து மனிதனாகக் காட்டுவது. இதனாலேதான்: "சருவேசுரனுக்குப் பயந்து அவர் திருக்கற்பனைகளைக் கைக்கொள்ளு. இதுவே மனிதனை மனிதனாக்குவது" என்று வேத வாக்கியமும் விளம்புகிறது. (எக்கிளேசி. 12, 13).

பிரியமான கிறீஸ்தவர்களே, சருவேசுரனுக்கு ஊழியஞ்செய்வதுதான், அல்லது வேறுவகையாய்ச் சொல்லுகில், தன்னுடைய ஈடேற்ற அலுவல்தான், மனிதனை மனிதனாக்குகிற அலுவல். இந்த அலுவல் இல்லாமல் இவ் உலக வாழ்வை மாத்திரம் தேடுவதானால், மனிதனுக்கு சருவேசுரன் அவ் உலகத்துக்குரிய ஒரு ஆத்துமத்தைக் கொடுத்திருக்கமாட்டார். "நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனிதனை உண்டாக்குவோமாக" என்று வசனித்து (ஆதியாகமம் 1, 26) அவ் ஆத்துமத்திற் தமது திருச்சாயலைப் பதித்திருக்கவும் மாட்டார். ஆதலால், இன்று, இந்த ஞான ஒடுக்கத் தொடக்கத்திலே, ஈடேற்ற அலுவல்தான் (1) மனிதனுடைய ஒரே அலுவலென்றும், (2) அது அவனவன் தான் தானே முடிக்கவேண்டிய அலுவலென்றும், (3) அது தாமதம் பொறாத ஒரு அலுவலென்றும் காட்ட விரும்புகிறேன். இது மிகவும் முக்கியமான ஒரு விஷயம். ஆதலால், நீங்கள் தேவ உதவியை மன்றாடிக் கேட்டுக்கொண்டு, இதிலே உங்கள் முழுக்கவனத்தையும் செலுத்தவேண்டுமென்று உங்களை வினயமாய்க் கோருகிறேன். (பிரியதத்தம்).

I

எம்மைப் படைத்த அன்பு மயமாகிய சருவேசுரனுடைய செயல்களைப் பார்த்தால், அவர், தாம் உலகத்தில் செய்வதை எல்லாம் மனிதனுக்காகவே செய்கிறவராகக் காணப்படுகிறார். அற்ப சிருட்டியைப் போல் தோன்றுகிற இந்த மனிதனைப் பராமரிப்பதுதான் தம்முடைய ஒரே ஒரு அலுவல் என்றபடி சகலத்தையும் நடத்தியருளுகிறார். உலகம் முழுவதையும் அவனுக்காக உண்டாக்குகிறார். அது முழுதுக்கும் அவனையே தலையாக, அதிபதியாக வைத்தருளுகிறார். அம்மட்டோ! அவனைத் தேடித் தாமும் மனித வேஷம் பூண்டு வந்து, மனிதருள் ஒரு மனிதனாகி, தாம் உண்டு பண்ணின மனிதனின் கையால் தாமே பாடுபட்டு மரிக்கிறார். அம்மட்டோ! தாம் பாடுபட்ட பலன்களை ஒருவனாவது அடையாமற் போகாதிருக்கும்படிக்கு, அந்தத் திருப் பலன்களைப் பகிர்ந்து கொடுக்கிறதற்காக ஒரு திருச்சபையை உண்டாக்கி வைக்கிறார். அம்மட்டோ! அந்தத் திருச்சபையிலே தாம் வைத்த சக்கிறமேந்துகளில் ஒன்றாகிய தேவநற்கருணையிலே தாமே தமது மனுஷீக ஆத்தும சரீரத்தோடேயும் தேவ சுபாபத்தோடேயும் மெய்யாகவே எழுந்தருளி, பாவ மனிதனுடைய தேவ போசனமாகவும் வந்

தருளுகிறார். இப்படியே, மனிதனை தம்முடைய வசமாக இழுத்து அவனை ஈடேற்றுவது ஒன்றுமே தம்முடைய ஏக அலுவல் என்றதுபோல அளவில்லாத சருவேசுரன் நடந்துகொண்டு வர, அற்ப மனிதன் வேறொரு அலுவலிலே கண்ணாயிருக்கலாமா ?

சருவேசுரனுக்கு ஊழியஞ்செய்வதுதான்,—ஈடேற்ற அலுவல்தான்,—மனிதனுடைய ஒரே அலுவலாய் இருக்க வேண்டியது. ஆனால் நம்முடைய சரீரத்தைக் காப்பாற்றிக்கொள்ளுகிறதாகிய அலுவலும் நமக்கு உண்டு; சரீரத்தைக் காப்பாற்றுவதற்காக உலக பொருட்களைத் தேட வேண்டிய அலுவலும் நமக்கு உண்டு. இந்த அலுவலைப் பார்த்துக் கொண்டு வரும்போது, நாம் அந்த அலுவலை, அந்த ஒரே அலுவலைப் பின் போடப்படாது. அதை முன்னுக்கு வைத்து, இதைப் பின்னுக்கு வைப்பதுதான் முறை. சரீரத்துக்கு ஊணும் உடுப்பும் விடுதியும் தேடுகிறதாகிய அலுவலுக்கு நாம் அடிமையாய் இருக்கப்படாது. நாம் தின்கிறதற்காகச் சீவிக்கப்படாது. சீவிக்கிறதற்காகத் தின்ன வேணும். மிருகங்களுக்கு ஊணும் பளையும் தேடுவதே ஏக அலுவல். நமக்கோ இதற்கு மேலான அலுவலும் ஒன்று உண்டு. அது தான் நமக்கு முக்கியமான அலுவல். இவ் உலக சீவியத்துக்கு உரியவைகளைத் தேடுவது அதற்குப் பிறகு வருவது. மிருகங்கள் எல்லாம் கவிழ்ந்த முகமாய் உண்டாக்கப்பட்டிருக்கிறது. மண்ணிலே திரிந்து மண்ணுக்குரிய காரியங்களைத் தேடுவதுதான் அவைகளுடைய கதி. விண்ணை நோக்கி நடந்து மேல் லோகத்துக்குரிய எதையும் செய்யத்தக்க புத்தியுள்ள ஆத்துமம் அவைகளுக்கு இல்லை. நாமோ நிமிர்ந்த முகமாய்ப் படைக்கப்பட்டிருக்கிறோம். ஏனென்றால், நாம் மேல் நோக்கிப் பார்த்து, வரப்போகிற உலகமாகிய ஒரு கதியை நோக்கி நடக்க வேண்டியவர்கள். மோட்சத்தை அடைவது நம்முடைய கதி. நாம் உலகத்தில் சீவித்தாலும் "நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது" (பிலிப். 3; 20). உலக சீவியத்தின் பராக்கினால் நமது பரலோக குடியிருப்பை மறந்துவிடப்படாது. இந்தப் பராக்கினால் அந்த ஏக அலுவலைக் கைநெகிழ்ந்துவிட்டால், "கலியாணவீட்டு அமளியிலே தாலி கட்ட மறந்தது" போலிருக்கும். தாலி கட்டாவிட்டால் கலியாணம் நிறைவேறினதாயில்லை என்பது நம்முடைய தேச ஆசாரம். சத்திய வேதத்திலே தாலி கட்டல்ல கைப்பிடிதான் முக்கியம். ஆனபடியால் நாங்கள் அந்தப் பழமொழியை மாற்றி "கலியாண வீட்டு அமளியிலே கைப்பிடிக்க மறந்தது" போல என்று சொல்லலாம். கைப்பிடி நடவாவிட்டால், கரியல் பொரியல் ஆயத்தம் பண்ணினதும் வீண்;

விருந்தாளிகள் வந்ததும் வீண்; மேளகாறருக்குக் காசு கட்டினதும் வீண். கைப்பிடி இல்லாமற் போனால் கலியாணவீடு எல்லாம் பழுதாய்ப் போய்விடும். அதுபோல, ஆத்துமம் ஈடேறாவிட்டால் மனிதனுடைய சீவியம் முழுதும் பாழாய்ப் போய்விடும். செல்வம் இருந்தென்ன ? செல்வாக்கு இருந்தென்ன ? இனசனம் வேலையாள் ஆடுமாடு காணிபூமி இருந்தென்ன ? உத்தியோகம் பார்த்தென்ன ? நல்ல சடங்கு முடித்து அநேகம் பிள்ளைகளைப் பெற்று சீராய்ச் சிறப்பாய் வாழ்ந்தும் என்ன ? ஆத்துமம் ஒன்று ஈடேறாமற் போனால் எல்லாம் விழல் விழலே. "மனிதன் உலகம் முழுதையும் தன்னுடையது ஆக்கிக்கொண்ட போதிலும் தன் ஆத்துமத்தை இழந்து போவானாகில் அதனால் அவனுக்கு என்ன பிரயோசனம் ?"

இவ்வேளை நரக அக்கினியிலே கிடந்து வேகிற இராசாக்களும் பிரபுக்களும் உத்தியோகஸ்தர்களும் கனதனவான்களும் சிற்றின்பப் பிரியர்களும் செல்வர்களும் தாங்கள் உலகத்தில் இருந்தபோது உலகத்தில் அனுபவித்த இன்பங்களைப்பற்றி என்ன எண்ணுவார்கள் ? ஐயோ எங்கள் ஒரே அலுவலாகிய ஈடேற்றத்தை—தேவ ஊழியத்தை—மாத்திரம் மறந்து, மற்றச் சகல அலுவல்களையும் பார்த்தோமே; புண்ணியம் சம்பாதிப்பது ஒன்றைக் கைவிட்டுவிட்டு மற்றச் சகல பொருள் பண்டங்களையும் சுக போகங்களையும் கீர்த்தி மகிமைகளையும் சம்பாதிப்பதில் பகலிரவாய் உழைத்தோமே. இப்போது பொருள் பண்டங்களையும் இழந்தோம். கீர்த்தி மகிமைகளையும் போக்கடித்தோம். இந்தப் பொறுக்க முடியாத வேதனையே எங்களுக்கு இப்போது ஆஸ்திபாஸ்தியாக வந்திருக்கிறது. ஆத்துமத்தை இழந்ததே எல்லாத்தையும் இழந்தோம் இழந்தோம் என்று அல்லவோ ஓயாமற் புலம்பிக்கொண்டிருப்பார்கள். இங்கிலாந்து தேசத்தை ஆண்ட எலிசபேத்து என்கிற இராசாத்தி, சத்தியவேதத்தை விட்டுப் பதித மதத்தில் உட்பட்டிருந்தவள், இவ்வுலக இராசாங்க மகிமைதான் பெரிது என்று மதித்துக் கொண்டு தனக்கு நெடுங்கால அரசு வேணும் என்று மன்றாடினளாம். அப்படியே நாற்பத்து நாலு வருஷம் அரசாண்டு, பதிதத்தை விடாமலே மரித்தாள். தனக்கு மோட்ச ராச்சியம் வேண்டாம் என்று உலக ராச்சியத்தைத் தேடின அந்த இராசாத்தி அக்கினிக் கடலிலே இன்றைக்கும் அமிழ்ந்திக் கிடந்து வருந்தும் வேளையில், இவ் உலக ராச்சியம் ஆண்ட பவிசும் அட்டோலிக்கமும் அவளுக்கு எதுக்கு உதவும்? அவை எல்லாம் புகைபோல மறைந்து போக, நரகத்தின் நித்தியமான

வேதனை மாத்திரம் அவளுக்கு மிச்சமாய் இருக்கும் அல்லவோ? கிறீஸ்தவர்களே, நீங்களும் உங்கள் ஆத்தும ஈடேற்றத்தைக் கைபறிய விட்டுவிட்டால், நீங்கள் இப்போது பாடுபட்டுத் தேடுகிற பொருள் பண்டங்களால் உங்களுக்கு என்ன பிரயோசனம்? தவச தானியங்களால், துணி மணிகளால் என்ன பிரயோசனம்? உத்தியோக ஆடம்பரத்தால், கல்விப் படிப்புக்களால், இன்ப சுக போக சீவியத்தால் என்ன பிரயோசனம்? உங்கள் ஒரே அலுவலை விட்டுவிட்டு பிற்காலம் ஒருநாள் உங்களுடைய மாருக் கவலைக்குக் காரணமாய் இருக்கப்போகிற காரியங்களிலே நீங்கள் அமிழ்ந்தியிருப்பது ஒருபோதும் புத்திஆகாது, புத்திஆகாது.

II

ஈடேறிக்கொள்ளுவதுதான் மனிதனுடைய ஒரேயொரு அலுவல்; முக்கியமான அலுவல்; இன்றியமையாத அலுவல். இந்த அலுவலை நமக்கு யார் பார்த்துத் தருவார்? சருவேசுரனா? திருச்சபையா? இனசனமா? இல்லையில்லை. இந்த ஒரேயொரு அலுவலை, முக்கியமான அலுவலை, இன்றியமையாத அலுவலை ஒவ்வொருவரும் தான்தானே பார்த்து வைக்க வேணும். பிரியமானவர்களே, சருவேசுரன் உங்களைக் கேளாமல் உங்களை உண்டாக்கினார் என்பது சந்தேகமில்லாத உண்மை. ஆனால் உங்களைக் கேளாமல், உங்களுடைய விருப்பம் இல்லாமல், உங்களுடைய அதிக பிடிவாதமான ஆசையில்லாமல், உங்களை ஒருபோதும் ஈடேற்றமாட்டார். கேளாமற் படைத்தது போல, கேளாமலே ஈடேற்றியும் போட அவருக்குச் சித்தமானால், இந்தப் பூவுலகத்திலே மனுமக்களைப் பரிசோதனைக்கு வைத்திரார்; மனிதருக்குத் தன்னிட்டம் என்னும் வரத்தைத் தந்திரார். பாவைப் பிள்ளைகளைப் பண்ணிவைப்பதுபோல மனிதரையும் படைத்துப் படைத்து நிரைநிரையாய் ஒரு இடத்திலே வைத்து, அவர்கள் சும்மா முளிசி முளிசிப் பார்த்துக்கொண்டிருக்க விடுவதானால், அதிலே மனிதருக்கும் யாதொரு இன்பமில்லை, படைத்தவருக்கும் மேலான மகிமை இல்லை. "தான் தேடாப் பொன்னுக்கு மாற்றுமில்லை உரையுமில்லை" என்பது மெய் அல்லவா? மனிதர் தாங்களாகப் பாடுபட்டு, அந்தப் பாடுகளுக்கு ஒரு சம்பாவனையாக மோட்சத்தை அடையாவிட்டால், மோட்ச பாக்கியந்தானும் அவர்களுக்கு இனிக்கமாட்டாது. சருவேசுரனுக்கும் அது மகிமையாய் இராது. கால் கை வழங்காத ஒரு ஏழை நோயாளிக்கு "வீர சூரச் சேனாபதி"

என்ற பட்டங் கொடுத்தால், அதனால் அவனுக்கு ஏதாவது சுகம் உண்டா? புகழ் உண்டா? "நாய் அரசாண்டென்ன பூனை சிங்காசனத்தில் இருந்தென்ன?" மொட்டைச்சியைப் பார்த்து நீ கூந்தல் அழகி என்று சொன்னால், அவளைப் பரிகாசம் பண்ணுவது ஒழிய பாராட்டுகிறதாய் இராதே. அப்படியே சருவேசுரனும் பாடுபடாதவர்களுக்குப் பட்டங் கொடுக்கமாட்டார்; தாங்களாக வருந்தித் தேடாதவர்களுக்கு மோட்ச பாக்கியத்திலே பங்கு அருளமாட்டார். இது ஒரு புறம் இருக்க: சருவேசுரன் மனிதரை ஈடேற்றுவதற்காகப் பாடுபட்டிருக்கிறாரே, அதனால் நாம் சும்மாவிருக்க நமக்கு ஈடேற்றம் கிடையாதோ என்றால், அப்படியும் இல்லை. சுதனாகிய சருவேசுரன் மனித அவதாரம் பண்ணிச் சொல்லில் அடங்காத பாடு பட்டது, நாம் ஒரு பாடும் படாமல் மோட்சம் அடையலாம் என்று காட்டுவதற்காக அல்ல; இதற்கு மாறாக, அந்தப் பாடுகளிலே நாமும் நம்முடைய பங்கைக் கைக்கொள்ளவேணும் என்று காட்டத்தான். துன்பம் அறியாத இன்ப சமுத்திரம் ஆகிய அவர், அத்தனை பாடுகளைப் படாமல், வேறு வகையாகவும் நம்முடைய பாவங்களுக்குப் பொறுதியைத் தந்திருக்கக் கூடும். அப்படிச் செய்ய அவர் திருவுளமாகியிருந்தால், பாவத்தின் பயங்கரமான கொடுமை நமக்குப் புலப்பட்டிராது. நாமும் பாடொன்றும் படாமல் மோட்சத்தை அடைந்துகொள்ளலாம் என்ற மோசமான தப்பெண்ணத்தோடு இருந்துவிடுவோம். ஆனால், ஆண்டவர் பாடுபட்டதினால், அந்தப் பாடுகளுக்குக் காரணமாகிற பாவம் சருவேசுரனுக்குத் தாங்கொணாத மகா அவலட்சணமான அருவருப்பு என்று கண்டுகொண்டோம். நாமே பாவவாளரும் ஆண்டவரோ குற்றம் ஒன்றும் இல்லாதவரும் ஆனபடியால், அவருடைய அளவில்லாப் பாடுகளோடே, இயன்றளவு, நம்முடைய பாடுகளையும் சேர்க்க வேண்டும் என்பது குறையாத நீதியின் கிரமம் ஆகும். நம்முடைய சின்னப் பாடுகளை ஆண்டவருடைய மகா பாடுகளோடே சேராவிட்டால், நாம் ஈடேற முடியாது என்றது தவறில்லாத ஒரு வேத சத்தியம். இதை அர்ச். சின்னப்பர் வெளிப்படுத்தி: "நான் கிறீஸ்துநாதருடைய பாடுகளோடு சேர வேண்டிய குறைப்பங்கை அவருடைய சரீரமாகிய திருச்சபைக்காக என் உடலிலே நிறைவேற்றுகிறேன்" என்கிறார். (கொலோ, 1; 24). ஒரு ஊரிற் சனங்கள் தாகந் தணிக்கத் தண்ணீர் இல்லாமல் வருந்துவதைக் கண்ட ஒரு தருமவாளன், நல்ல நீர்க்கிணறு ஒன்றைக் கன பாடுபட்டுச் செலவு செய்து வெட்டுவித்தான் என்று வைத்துக்கொள்ளுவோம். அதன்பின், தாகமுள்ள சனங்கள்

கிணற்றடிக்குப் போய்த் தண்ணீரை அள்ளுகிற சிறு பாட்டைக் கூடப் படோம் என்று இருந்துவிட்டால், அவர்களுடைய தாகம் தீருமா? தாங்கள் அற்பமும் முயற்சி செய்யாமலிருக்க, தண்ணீர் அவர்கள் வாய்களிலே தானாக வந்து பாயுமா? பாயாதே. இது போல, ஆண்டவர் அநேக பாடுபட்டு அடைந்து தந்த ஈடேற்றப் பலனைக் கைப்பற்ற வேண்டுமானால், நாமும் நம்முடைய பங்கான முயற்சியை ஊக்கமாய்ச் செய்யவேண்டும். இப்படியே நம்மை உண்டுபண்ணிய பிதா, நம்முடைய அதி ஆவலான முயற்சி இல்லாமல் நமக்கு மோட்ச பாக்கியந் தரமாட்டார். நமக்காகப் பாடுபட்ட ஆண்டவரும், நாம் தம்மோடு சொற்பமாவது பாடுபட்டு நமது இரட்சணியத்துக்காக உழையாமல் நம்மை ஈடேற்றமாட்டார்.

அல்லது, நாம் பிரயாசப்படாமல் இருக்க, திருச்சபையானது நமது ஈடேற்ற அலுவலைப் பார்த்துத் தருமா? ஞானஸ்நானத்தினால் நாம் திருச்சபையில் சேர்ந்துகொண்டோமே. அதின் சகல நன்மைகளுக்கும் பங்காளிகள் ஆகிவிட்டோமே. திருச்சபையிலே எத்தனையோ செப தபங்களும் பூசை பிரார்த்தனைகளும் நடைபெறுகிறதே. அவைகளின் பங்கு நாம் சும்மா இருக்க நமக்குக் கிடையாதா? இப்போதுதான் நாம் ஈடேற்றத்தைக் கவனியாமல் இருந்துவிட்டாலும், அவஸ்தை நேரத்திலே குருவானவர் வந்து செய்ய வேண்டிய சடங்குகளை எல்லாம் நிறைவேற்றும்போது, நம்முடைய இரட்சணிய அலுவல் சுகமாய் முடிந்துவிடும் என்று நம்பியிருக்கக் கூடாதா? ஒருபோதும் கூடாது. திருச்சபையின் செப தபம் முதலிய நன்மைகள் எல்லாம், அவைகளை விரும்பித் தேடுவோருக்கு ஒழிய மற்று எவருக்கும் கிடையாது. எவ்வளவு தண்ணீர்தான் ஆறாகப் பெருகிப் பாய்ந்தாலும், குடத்தைக் கொண்டுபோய் அள்ளினால் ஒழிய வீட்டுக்குத் தண்ணீர் வருமா? வராதே. யாராவது புண்ணியவாளர் தாங்களாகத் தண்ணீர் கொண்டுவந்து குடத்திலே வார்த்துவிட்டுப் போவார்கள் என்றுதான் வைத்துக்கொண்டாலும், அதற்குங் குடத்தை நிறுத்தி வைத்துத் தான் தண்ணீர் வாங்கவேணும். குடத்தை நிறுத்திப் பிடித்து வாங்குவதற்குப் பதிலாய், அதைக் கவிழ்த்து வைத்துக்கொண்டிருந்தால் எவ்வளவு தண்ணீரைத்தான் அதின் மேலே வார்த்தாலும் உள்ளுக்கு ஒரு சொட்டாவது சுவறாதே. அதுபோல, தன் இரட்சணியத்தைப்பற்றி ஒரு கவலையும் இல்லாமல், திருச்சபையின் சக்கிறமேந்துகளையும் அசட்டைபண்ணிவிட்டு, அதின் செப தபப் பலன்களுக்குந் தன்னை அப்புறப்படுத்திக்கொண்டிருப்பவன் ஈடேறுவது

எப்படி? இப்படிப்பட்டவனுக்கு அவஸ்தைச் சடங்கு பலிப்புள்ள சடங்கு ஆவதும் அருமையிலருமை அல்லவா? சிறு குழந்தையானது தன்னுடைய முயற்சியில்லாமல் ஞானஸ்நானத்தினால் திருச்சபையிலே சேருவது மெய். இது, நம்மைக் கேளாமல் பிதா நம்மை உண்டாக்கினதுக்குச் சரி. ஆனால், அவர் நமது உடன் முயற்சியில்லாமல் நம்மை இரட்சியாதது போல, புத்தி விபரம் அறிந்தபின் ஈடேற்றத்துக்கு உரிய காரியங்களை ஒவ்வொருவனும் தான் தானே தேடிச் செய்யாமல் மோட்சத்தை அடையவுங் கூடாது.

கடைசியாக நாம் நம்முடைய இனஞ்சனங்களுக்காக, பிதா மாதாவுக்காக, பெண்சாதி பிள்ளைகளுக்காக நம்மையும் பாராமல் உழைக்கிறோமே. அவர்கள் நமது ஈடேற்ற அலுவலை நமக்குப் பார்த்துத் தருவார்களா? இப்படிப்பட்ட ஒரு எண்ணம் சில அசட்டையான கிறீஸ்தவர்களுடைய மனதின் அடித்தளத்திலே காணப்படுவது உண்டு. நான் கோயில் குளத்தைக் கவனிக்கிறதில்லைத் தான்; நான் நடக்கிற நடை செப்பமில்லை என்பது மெய். என் பெண்சாதியோ நல்ல பத்தியுள்ளவள்; பிள்ளைகளோ தவறாமற் பூசை காண்கிறவர்கள்; அடிக்கடி சற்பிரசாதம் பெறுகிறவர்கள் என்று சிலர் சொல்லிக்கொள்ளுகிறார்கள். ஆத்துமத்தை நித்தியமாய்ப் பிழைக்கப்பண்ணுகிற அருமையான அலுவலிலே சிரிப்புக்கு இடமான இந்தப் போக்கைச் சொல்லுகிறவர்கள், நாளைக்கு அழிந்துபடப்போகிற சரீர விஷயமாயும் இப்படிச் சொல்லுவார்களா? என் பெண்சாதி பிள்ளைகள், தாய் சகோதரங்கள் நேரத்துக்கு நேரம் சாப்பிடுகிறார்கள்; ஆனபடியால் எனக்கு ஒருக்காலும் தீன் வேண்டாம் என்பார்களா? அப்படி ஏன் சொல்லவில்லை என்று கேட்டால்: "தாயும் பிள்ளையுமானாலும் வாயும் வயிறும் வேறே" என்ற பழமொழியை எடுத்து ஒப்பனை பண்ணத் தாமதியார்கள். வாயும் வயிறும் வேறு என்றது போலத் தானே ஆத்துமமும் வேறு. அப்படியிருக்க, இந்த ஈடு சொல்லக் கூடாத விலையுள்ள முத்தாகிய ஆத்துமத்தைச் சுழற்றி எறிந்துபோட்டு, மண்ணாகப் போகிற சரீரம் என்கிற நாறற் சிப்பியை இடுப்பில் முடிந்துகொண்டு போகிற பைத்தியத்தை என்னென்று சொல்லுவோம்! வேறு வேறு அலுவல்களைத் தனக்காக இன்னுமொரு ஆள்விட்டுப் பார்ப்பிக்கலாம். தன் தோட்டத்தைத் தான் கொத்தாமல் கூலியாள் பிடித்துக் கொத்துவிக்கலாம். தன் வழக்கைத் தரணியைக் கொண்டு ஆடுவிக்கலாம். தன் உடலிலுள்ள காயம் முதலியவைகளைத்தானும் பிறரைக்கொண்டு கட்டுவிக்கலாம். ஆனால், தன் வயிற்றுப் பசிக்குப்

பிறரைக்கொண்டு சாப்பிடுவிக்க முடியுமா? பிரசவ வேதனைக்காரி தன் பிள்ளையை வேறொருவரைப் பெறச் சொல்லிக் கேட்க முடியுமா? "அழுதும் பிள்ளை அவளே பெறவேணும்" என்றது உலகப்பேச்சு அல்லவா? இப்படியே, அவனவன் தான்தானே தன் ஆத்துமத்தை ஈடேற்றுவது ஒழிய, பிறரால் அந்த அலுவலைச் செய்விக்க முடியாது. "ஒவ்வொருவனும் தன் சுமையைத் தானே சுமப்பான்" என்ற வேத வாக்கியத்தை (கலாத். 6; 5) அநீத வாக்கியம் ஆக்க எவராலும் கூடாது.

III

ஈடேற்ற அலுவல்தான் நம்முடைய முக்கியமான ஒரே அலுவல். அதை ஒவ்வொருவனும் தான் தானே செய்து முடிக்க வேண்டியது; அது பிறரைக்கொண்டு பார்ப்பிக்கத்தக்க ஒரு அலுவல் அல்ல. இந்த இரண்டு துறையையுங் கண்டுகொண்டோம். இனி அந்த அலுவலை நாம் எப்போது பார்க்க வேணும்? பிற்காலம் பிற்காலம் என்று வைத்துக்கொண்டிருக்கலாமா? ஒருபோதுமில்லை. அது இப்போதுதானே செய்ய வேண்டிய ஒரு அலுவல்; நாளைக்கு என்று வைக்கத்தக்கது அல்ல. அது ஒரு நிமிஷமாவது தாமதம் பொறுதது. எப்படியென்றால், பிரியமான கிறீஸ்தவர்களே, நமக்குக் கிடைத்திருக்கிற ஒவ்வொரு நிமிஷத்தையும் நமது ஈடேற்ற அலுவலுக்காக என்றே சருவேசுரன் தந்தருளுகிறார். ஆனபடியால், ஒவ்வொரு நிமிஷமுந்தானே நாம் அவருக்கு ஊழியம்பண்ணி நம்முடைய ஆத்துமத்தைப் புண்ணியங்களால் அலங்கரித்துக்கொண்டிருக்க வேண்டியது. வட்டிக்கு எடுத்த முதலுக்கு ஓயாமலே நாள்தோறும் வட்டி பெருகிக்கொண்டிருப்பது போல, நாம் சருவேசுரனுக்குச் செய்ய வேண்டிய ஊழியத்தின் கடனும் நாள் வீதம், மணித்தியால வீதம், நிமிஷ வீதம் பெருகிக்கொண்டு வருகிறது. இன்றைக்கு ஆண்டவரைச் சேவியாமல் நாளைக்குச் சேவிப்போம் என்று இருந்தால், நாளையிற் கடன் ஒரு புறங் கிடக்க, இன்றையிற் கடனும் தீர்க்க வேண்டிய கடன்தானே. வட்டிக்கு எடுத்த பணத்தை இந்த மாதம் இறுமல் மற்ற மாதம் இறுப்போம் என்று வைத்திருந்தால், இந்த மாதத்தின் வட்டி இல்லாமற் போய்விடுமா? மற்ற மாதத்தானோடு இந்த மாத வட்டியையுங் கூட்டியே இறுக்க வேண்டி வருமே. அதுபோல, பிற்காலம் சருவேசுரனுக்கு ஊழியம் பண்ணுவோம் என்று இருந்தால், அது பிற்காலத்துக்கு உரிய கடன். அதனால் இப்போது நடக்கிற இக்காலத்தின் கடன் அற்றுப் போகாது.

அல்லாமலும் பிற்காலம் என்றது மிகவும் சந்தேகமான ஒரு சாமான். சருவேசுரன் அதை நமக்குத் தருவாரோ, அல்லது, நாம் இப்போது அவருக்குக் காட்டுகிற நன்றிகேட்டுக்கு நீதியான ஒரு தண்டனையாக, அதை நமக்குத் தராமல் சீக்கிரத்திலே மரணத்தை வரவிடுவாரோ—சொல்லக்கூடியவர் யார்? நாம் மரணத்தின் நடுவே சீவிக்கிறோம். நமது சீவியத்தின் நடுவே மரணம் வந்து நம்மை இருஞ்சிக்கொண்டு போய்விடும். வயது வந்துதான் சாவோம் என்று சொல்லிக்கொண்டு இருக்க ஏதுவில்லை. "ஆறிலுஞ் சாவு நூறிலுஞ் சாவு". இராசாக்களென்ன பிரபுக்களென்ன, பாப்புமாரென்ன விசுப்புமாரென்ன, கப்பற்காரரென்ன பிச்சைக்காரரென்ன, சகலருக்கும் மரணம் காத்திராப்பிரகாரமே வரும். தமோக்கிளிஸ் என்ற கிரேக்கனுக்கு ஒரு புத்திமானான பெரியவன் சம்பிரமமான விருந்து கொடுத்தானாம். தமோக்கிளிஸ் அந்த விருந்தின் நயத்தையும் பெரியவனின் செல்வ சம்பத்தையும் புகழ்ந்து பேசிக்கொண்டிருக்கும் வேளை, திடீரென்று கண்களை ஏறெடுக்கவே, தன் தலைக்கு மேலே உறை கழித்த கூரிய வாளொன்று ஒரு மயிரிற் தொங்க விட்டிருக்கிறதையும் அது எப்போது அறுந்து விழுந்து தலையைப் பிளக்குமோ என்ற நிலையிற் கிடக்கிறதையும் கண்டு அங்கம் நடுங்கி உள்ளம் பதறத் தொடங்கினானாம். இப்படியே நமது தலைக்கு மேலும் மரணம் என்கிற வாள் தொங்கிக்கொண்டிருக்கிறது. ஆதலால், பிறகு பார்த்துக்கொள்ளுவோம் என்று ஆத்தும ஈடேற்ற அலுவலைப் பின்போடுவதைப் போல பெரிய மதியீனம் இல்லை. ஓர் வேளை, நாம் ஒருக்கால் ஆத்துமத்தை இழந்தபின் மறுபடியும் அதை ஈடேற்றிக்கொள்ள இடமிருந்ததானால், பின்போட்டு வைத்தும் பார்க்கலாம். அப்படியோ இடமுமில்லை. ஒரு கண் கெட்டுப் போனால், மற்றக் கண்ணாவது பார்க்க உதவும். ஒரு கை ஒரு கால் இல்லாவிட்டால், மற்றக் கை காலாவது வழங்கும். இந்த அவயவங்கள் இல்லாமல் சீவிப்பவர்களும் உண்டு. ஆனால், ஆத்துமத்தை ஒரு தரம் இழந்துபோனால், பிறகு ஈடேற்றுவதற்கு வேறு ஆத்துமம் இல்லையே. ஒரு சீவிய காலத்தை தனக்கு மோசம் ஆக்கிக்கொண்டால், ஆதாயம் ஆக்குகிறதற்கு வேறு சீவிய காலம் இல்லையே.

ஆதலால், நாம் இப்போதே நமது ஆத்தும ஈடேற்ற அலுவலைப் பார்க்கத் தொடங்க வேணும். அதுதான் நமது ஏக அலுவல். அதை நாம் ஒழிய வேறு ஒருவர் நமக்குப் பார்த்துத் தர முடியாது. அது தாமதம் பொறுத அலுவல். நாளைக்கு நாளைக்கு என்று விட்டு வைத்துக்கொண்டிருந்தால் அது முற்றாய்க் கை

பறிந்து போய்விடும். சென்றுபோன தருணம் திரும்பி வராது. இந்த முழு முக்கியமான அலுவல்—நம்முடைய நித்திய நன்மையையோ நித்திய கேட்டையோ பொறுத்த அலுவல்—இருக்க, நாம் உலகத்தின் கஞ்சல் குப்பை போல கிடக்கிற பொருள் பண்டங்களை, இன்பங்களை மகிமைகளையே தேடிக்கொண்டிருந்து காலத்தைப் போக்குவோமா? தன் வீடு பற்றி எரிகிறதைக் காணும்போது எவனாவது தாயம் விளையாடிக்கொண்டிருப்பானா? தன் சீவனுக்கு மோசம் வருகிற ஆபத்தான தருணத்திலே எவனாவது பகிடி சேட்டை பண்ணிக்கொண்டிருப்பானா? இரான் இரான். அப்படியாகையால், பிரியமானவர்களே, உங்கள் ஒரேயொன்றான, அருமையான, விலைமதிக்கக் கூடாத சீவியத்தின் காலம், நெருப்புப் பற்றியெரிந்து அழிந்து போவது போற் கடந்து போய்க்கொண்டிருக்க, நீங்கள் நாலு நாளைக்குமேல் நில்லாத உலக காரியங்களிலே அமிழ்ந்திக் கிடப்பது என்ன? உங்கள் ஆத்துமத்துக்கு காலாதி காலமாய் முடியாத கேடு வரத்தக்க நிலையில் இருந்து கொண்டு, உலக வீண் வேடிக்கை விநோதங்களிலே நாட்போக்குவது என்ன?

இதோ இன்று உங்களுக்கு நல்ல ஒரு காலந் தொடங்குகிறது. இந்த ஞான ஒடுக்கம் உங்கள் நித்திரைத் தூக்கத்திலிருந்து உங்களைக் கிள்ளி அருட்டி, இதுவரைக்கும் நீங்கள் முழு முயற்சியோடு தேடாமல் விட்டிருந்த ஆத்தும ஈடேற்ற அலுவலை இனியாவது கவனிக்கப் பண்ணுவதாகும். ஞான ஒடுக்க நாட்களானவை, சருவேசுரனுடைய வரப்பிரசாதம் ஆகிய மழை ஆத்துமம் என்கிற நிலத்திலே ஏராளமாய்ப் பொழிகிற ஒரு காலமாம். நிலத்தைக் கொத்தி, களை பிடுங்கி, நல் விதையை விதைத்தால் மாத்திரம் அதற்கு மழையினால் பிரயோசனம் உண்டு. தேவ வரப்பிரசாதம் உங்கள் ஆத்துமங்களுக்கு நன்மை செய்யத்தக்கதாக, நீங்கள் அவைகளை மவுனத்தினாலும் செபத்தினாலும் தவக்கிரியைகளினாலும் ஆயத்தப்படுத்தவேணும். உங்களுடைய ஊக்கமான பிரயாசையும் சேராவிட்டால், ஞான ஒடுக்கத்தின் வரப்பிரசாதங்கள் கடல் மேற் பெய்த மழை போலவும் காட்டில் எறித்த நிலவு போலவுமே வீண் ஆகிவிடும். ஆதலால், கூடியளவில் உலக வீண் பராக்குகளையும் கதை கண்ணிகளையும் தவிர்த்து, இருதயம் என்கிற மறைவிடத்திலே ஒளித்திருந்து, ஆண்டவரைப் பிரார்த்தியுங்கள். உங்கள் நிலைமையை ஆராய்ந்து பாருங்கள். மனந்திரும்பப் பிரயாசப்படுங்கள். இதற்கு செபமே அதிக முக்கியமான காரியம். இன்றியமையாத காரியம். என் இரட்சணியத்துக்காகச் சிலுவை

யில் அறையுண்ட ஆண்டவரே, என் ஈடேற்றத்தைப் பற்றிய கவலையை எனக்குத் தாரும். என் பாவங்களுக்காக நான் மெய்யான மனஸ்தாபப்பட அருள்புரியும். இரக்கமுள்ளவரே, என்னை மனந் திருப்பியருளும்; அப்போதுதான் நான் மனந்திரும்புகிறவன் ஆவேன் என்று இந்தச் சாரப்பட அடிக்கடி செபியுங்கள். அதிகமாய்ச் செபம் பண்ணுங்கள். செபத்தோடு தவத்தையும் சேர்த்து, கண்ணை ஒறுங்கள்; காதை ஒறுங்கள்; விசேஷமாய் நாக்கை ஒறுங்கள். மவுனமும் செபமும் தவமும் சேருமானால் தப்பாமல் ஆண்டவருடைய வரப்பிரசாதத்தினால் மனந்திரும்புவீர்கள்; சருவேசுரனை முழு மனதோடும் நேசித்து அவருக்காகவே சீவித்து அவருடைய திருக் கற்பனைகளை எல்லாம் சமுத்திரையாய் அனுசரிக்கத் தொடங்குவீர்கள். அளவில்லாத தயாபரரான அவரும் உங்களுக்கு அருளின் மேல் அருள் கூட்டி, தமது அன்பிலே நீங்கள் நாளுக்கு நாள் வளரச்செய்து, உங்களுக்குத் தமது இணையில்லாப் பாக்கியமாகிய பேரின்ப முக தரிசனத்தையுந் தந்தருளுவார் ஆமென்.

முதல் நாள்

Instruction: On Prayer

காலைப் போதனை :

செபம் என்னும் நூலேணி

பிரியமான கிறீஸ்தவர்களே, நம்முடைய ஈடேற்றத்துக்கு இன்றியமையாத வழிவகை ஒன்று இருக்கிறது. அந்த வழிவகையைக் கையாடினதினாலேதான், இப்போது மோட்ச ராச்சியத்திலே பேரின்பக் கடலில் மூழ்கியிருக்கிற புண்ணியவாளர்கள் எல்லாரும் அந்தப் பாக்கியமான இராச்சியத்திற் போய்ச் சேர்ந்திருக்கிறார்கள். அந்த வழிவகையை அசட்டைபண்ணிக்கொண்டு வந்ததினாலேதான், எத்தனையோ ஆயிரக்கணக்கான, லட்சக்கணக்கான பாவிகள் நரக அக்கினிக் கிடங்கிலே அழுந்தி, இவ்வளவு அவ்வளவு என்று இல்லாத துன்ப துயர உபத்திரவங்களின் நடுவே குளறிக் கூச்சலிட்டுக்கொண்டு கிடக்கிறார்கள். நான் சுட்டிப் பேசும் வழிவகை என்னவானால், செபமேயாம். செபந்தான் நாம் பரலோக ராச்சியத்துக்கு ஏக, அனந்த கருணையுள்ள பிதாவினால் தரப்பட்டிருக்கிற நூலேணி என்று சொல்லலாம். சரியாகச் செபம் செய்வோர் தப்பாமல் ஈடேறுவார்கள். செபத்தை அலட்சியம் பண்ணுகிறவர்களோ நித்தியமாய்க் கெடுவார்கள். ஆதலால், செபத்தின் அவசியத்தையும், சரியாய்ச் செபஞ் செய்யும் விதத்தையும் இப்போது சுருக்கமாய் யோசிப்போம்.

1. செபம் நமக்கு அவசியம். ஏனென்றால், முதன்முதல், தன்னைப் படைத்துக் காப்பாற்றி, தனக்கு இந்தப் பூலோகத்தில் உள்ள சகல பொருட்களையும் உபகாரமாய்த் தருகிற சகல நன்மைச் சுரூபியான பிதாவுக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செலுத்துவது மனிதனுடைய பாரமான கடமை. இந்தக் கடமையை

இடையிடையே ஆவது செலுத்தாமல் ஒருவன் நெடுங்காலம் மிருகம்போலத் திரிந்தால், அது கனமான பாவமே ஆகும். தம்மைத் தோத்திரியாமல் விட்ட பாதகத்தைப்பற்றித்தானே சருவேசுரன் பழைய ஏற்பாட்டிலே: "மாடு தன் எசமானையும் கழுதை தன் ஆண்டவனின் முன்னிட்டியையும் அறியும்; இசிரவேலோ அறிவில்லாமலும், என் சனம் உணர்வில்லாமலும் இருக்கிறது" என்று இசையாஸ் தீர்க்கதரிசியின் வாயினால் முறையிடுகிறார் (இசை. 1; 3). "உப்பிட்டாரை உள்ளளவும் நினை" என்றது தமிழ்ப் பழமொழி. சருவேசுரன் நமக்கு உப்பு மாத்திரம் இட்டவரா? நம்முடைய சரீரத்தைக் கை கால் முதலிய அவயவங்களோடும், நமது ஆத்துமத்தைப் புத்தி தன்னிட்டம் முதலிய தத்துவங்களோடும் தந்தவரும் அவர்; கண்ணை மடல் காப்பது போல, நம்மை ஓயாமல் காத்துவருகிறவரும் அவர்; அம்மட்டோ! நமக்காகப் பாடுபட்டு நம்மை மீட்டெடுத்தவரும் அவர். நமக்குள் அன்போடு வாசம்பண்ணி நம்மை நல்வழியில் நடத்தியருளுகிறவரும் அவர். இவ்விதமே, நமக்குச் சகலமும் ஆனவருக்கு நன்றியறிந்திருந்து தோத்திரம் பண்ணாமல் விடலாமா?

கிறீஸ்தவர்களே, தோத்திரச் செபம் நமது ஈடேற்றத்துக்கு முழுதும் அவசியம். இதனோடு பரிகாரச்செபமும் வேணும். அதாவது: செய்த பாவத்துக்கும் நன்றிகேட்டுக்கும் பொறுதி கேட்கிற செபம். நாமெல்லாம் சிறு வயதுக்குள்ளே பெரிய பாவங்களைக் கட்டிக்கொண்ட பாதகர்கள் அல்லவோ! சருவேசுரன் நம்மை நீதிப்படி தண்டிக்கச் சித்தமானால், இது வரையில் அடி நரகத்திலே கிடந்து அழுந்தவேண்டிய அக்கிரமிகள் அல்லவோ! இந்தப் பாவங்களுக்கு நாம் பொறுதி அடைய வேண்டுமானால், ஓயாமலே பரம தயாநிதியினுடைய இரக்கத்தை மன்றாடிப் பாவப் பரிகாரஞ் செய்ய வேண்டியவர்கள் ஆகிறோம். "ஆண்டவரே, உமக்கே துரோகஞ் செய்தேன்; உமது சமுகத்திற் தின்மையைப் பண்ணினேன். என் பாவமோ எப்போதும் என் கண் முன்பாக நிற்கிறது". இரக்கமுள்ளவரே "என்னுடைய அக்கிரமங்களை மேலும் மேலும் கழுவி என்னைச் சுத்தமாக்கியருளும் என் பாவ சுபாவத்தை மாற்றியருளும்" என்று இப்படி இராச தீர்க்கதரிசியோடு (சங்கீதம் 50) இடைவிடாமல் மன்றாட வேண்டியவர்கள் ஆகிறோம். இதுதான் பிராயச்சித்தச் செபம். இந்தச் செபம் இல்லாமலோ எமக்குப் பாவப் பொறுத்தல் கிடையாது.

இதுமட்டும் அல்ல, நமக்கு வேண்டிய விசேஷ வரப்பிரசாதங்கள், இவ்வுலகத்துக்கு உரிய விசேஷ உதவிகள், முதலான

தேவ சகாயங்களை அடைவதற்குப் பிரார்த்தனைச் செபமும் அவசியம். அதாவது: சருவேசுரன் தாம் படைத்தவர்களுக்கெல்லாம் அருமையான பிதாவாய் இருக்கிறபடியால், சகலருடைய சரீரப் பிழைப்புக்கும் ஆத்தும ஈடேற்றத்துக்கும் அவசியமாய் உள்ள வழக்கமான உதவிகளையும் வரப்பிரசாதங்களையும் சகலருக்கும் தந்தருளுகிறார். "அவர் தீயோர் மேலும் நல்லோர் மேலும் தமது சூரியனை உதிக்கச்செய்து, நீதியுள்ளவர்களுக்கும் அநீதியுள்ளவர்களுக்கும் மழை பெய்யப் பண்ணுகிறார்" (மத். 5; 45). ஆனால் வழக்கத்துக்கு மேற்பட்ட விசேஷ சரீர உதவிகளையும் விசேஷ வரப்பிரசாதங்களையும் பெறவேண்டியபோதெல்லாம் நாம் செபம் பண்ணிக் கேட்பது அவசியம். விசுவாசத்தோடு கேட்கும்பொழுதோ, கேட்பது எல்லாம் கிடைக்கும் என்பது ஆண்டவருடைய திரு வார்த்தைதப்பாது. "கேளுங்கள், உங்களுக்குக் கொடுக்கப்படும். தேடுங்கள், கண்டடைவீர்கள். தட்டுங்கள், உங்களுக்குத் திறக்கப்படும். ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக் கொள்ளுகிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும்" (மத். 7; 7-8). கேளாமல் விடுவோமானால் நமக்கு வேண்டிய விசேஷ உதவிகள் கிடையாமற் போய்விடும். நாமெல்லாம் எத்தனை பாவச் சோதனைகளில் அகப்பட்டு வருந்துகிறோம்! ஞான காரியங்களில் எவ்வளவு அசமந்தம் உள்ளவர்களும் பத்தி வேகம் இல்லாதவர்களுமாய் இருக்கிறோம்! இந்தச் சோதனைகளைச் செயித்து, தேவ நேசத்திலே வளருவதற்குச் செபம் இல்லாமல் முடியுமா? இதனாலேதான் நம்முடைய பரம குருவாகிய ஆண்டவரும்: "செபஞ் செய்யுங்கள்....ஓயாமல், சலியாமற் செபம் பண்ணுங்கள்...சோதனையில் உட்படாதபடிக்கு விழித்திருந்து செபம் பண்ணுங்கள்" என்று பல முறையும் திருவாக்கினால் வற்புறுத்தினது மாத்திரம் அல்ல (லூக். 18;1-மத். 26; 41), தம்முடைய திரு நடக்கையாலும் போதித்தருளினார். எத்தனை முறை தனித்திருந்து செபம் பண்ணும்படியாக அவர் வனாந்தரத்துக்குச் சென்றார்! பகல் முழுதும் பாவிகளைத் தேடி தமது பூவிலும் மெல்லிய சீர் பாதம் நோக நடந்து திரிந்தபின், இரா முழுதும் பலநாள் செபத்திலே போக்கினாரே. ஆண்டவரைப் பின்பற்றி, அவருடைய அடியார்களான பத்தியுள்ள விசுவாசிகளும் நாள்தோறும் நெடும் தியாலம் செபத்தில் செலவழிப்பார்களே. ஆதலால் நாமும் செபம் பண்ண வேண்டும். சருவேசுரன் நமக்குச் செய்த, செய்து வருகிற ஒப்பில்லாத நன்மைகளுக்குத் தோத்திரமாகச் செபம் பண்ணவேண்டும். நம்முடைய பாவக்கடன் முற்

றுகத் தீரச் செபம் பண்ண வேண்டும். நமக்கு அவசியமாயிருக்கிற எத்தனையோ இக பர நன்மைகளை அடையும்படியாகச் செபம் பண்ண வேண்டும். செபம் இல்லாமல் நமக்கு அவசியமான விசேஷ வரப்பிரசாதங்களை அடைந்துகொள்ளமாட்டோம். செபம் இல்லாமல் ஈடேறமாட்டோம்.

2. இனி, நாம் செபம்பண்ண வேண்டிய உத்தமமான முறை என்ன? முதலிலே, ஓயாமற் செபம்பண்ணவேண்டும் என்று ஆண்டவர் கற்பித்தாரே, அதற்குக் கருத்தென்ன? இடைவிடாமல் கோவிலுக்குள்ளே இருந்து செபம் சொல்லிக்கொண்டுவரவேணுமா? வேலையெல்லாம் விட்டுப்போட்டு முழங்காலிலே நின்றுகொள்ளவேண்டுமா? அதல்ல ஆண்டவருடைய கற்பனையின் கருத்து. அர்ச். சின்னப்பர் கொரிந்து நகரத்திலிருந்த புதுக்கிறீஸ்தவர்களுக்கு எழுதின முதல் நிருபத்தில்: "நீங்கள் புசித்தாலும், குடித்தாலும், எதைச் செய்தாலும் எல்லாவற்றையும் சருவேசுரனுடைய தோத்திரத்துக்காகச் செய்யுங்கள்" என்று வசனித்தபடியே (1 கொரி. 10; 31), நம்முடைய சகல கிருத்தியங்களையும் வேண்டுதலோடு கூட சருவேசுரனுக்கு ஒப்புக்கொடுப்பதும் மெய்யான செபமாகும். இப்படியே "எத்தொழிலைச் செய்தாலும் ஏது அவத்தைப் பட்டாலும்" சருவேசுரனிலே மனதை வைத்துக்கொண்டு அடிக்கடி அவரை நோக்கி "மனவல்லயச்" செபங்களைச் சொல்லி வருவோமானால், ஓயாமற் செபம்பண்ணுகிறவர்கள் ஆவோம். ஒரு பத்தியுள்ள நூலாசிரியர் கோழியைக்கொண்டு ஒரு உவமையைக் காட்டுகிறார். அதெப்படியென்றால்: கோழி தண்ணீர் குடிக்கும்போது என்ன செய்கிறது? ஒருக்கால் குனிந்து சொண்டினால் தண்ணீர் அள்ளுகிறது. பிறகு நிமிர்ந்து தண்ணீரை விழுங்குகிறது. தண்ணீர் குடிக்கும் நேரமெல்லாம், அது, கீழே நோக்கிக் குனிவதும் மேலே நோக்கித் தலையை எடுப்பதுமாக இருக்கும். இப்படியே, நீங்களும் யாதொரு வேலையிற் கையிட்டிருக்கும் போது, அதிலே மனதை முழுதும் அமிழ்ந்த விடாமல், இடைக்கிடை மேல் நோக்கி: நேசமுள்ள பிதாவே உமக்குத் தோத்திரம்! ஆண்டவரே என் பாவங்களைப் பொறும்! யேசுவே எனக்கு உம்முடைய தூய நேசத்தைத் தாரும்! என்று இது முதலான பற்றுதலுள்ள மன்றாட்டங்களைப் பண்ணுவது ஆத்துமத்துக்கும் சரீரத்துக்கும் கணக்கில்லாத நன்மைகளைக் கொண்டுவருகிற உத்தம வழக்கமாகும்.

ஓயாமற் செபம்பண்ணுவது என்றது இதுதான். இது தவிர, நாம் நாள்தோறும் குறித்த நேரங்களில்,—விசேஷமாய் காலை

மாலைகளில்,—சிற்சில வாய்ச்செபங்களையும் சொல்லவேணும். நாள்
தோறும் வாய்ச் செபமாவது சொல்லாத நாள் இல்லாத நாள்
என்று எண்ணிக்கொள்ள வேணும். அல்லாமலும், கூடுமான
அளவில் மனச்செபமும் செய்வது உத்தமம். மனச்செபத்துக்குத்
தியானம் என்று பெயர். தியானஞ் செய்யும் முறையைத் தியா
னப் புத்தகங்களிலிருந்து, அல்லது அறிந்தவர்கள் மூலமாய்ப் பழ
கிக்கொள்ளலாம்.

நம்முடைய செபங்களிலெல்லாம் பத்தியும் விசுவாசமும்
விளங்க வேண்டியது. விசேஷமாய், நாம் கேட்கிற மன்றாட்டுக்கள்
கிடைக்க வேண்டுமானால், அவைகளை மிகுந்த தாழ்மையோடும்
விசுவாசத்தோடும் விடாப்பிடியோடும் செய்யவேண்டும். அர்ச்.
யாகப்பர் வசனித்திருக்கிறபடி: ,“ சந்தேகப்படுகிறவன், காற்றினால்
அடிபட்டு அலைகிற கடல் அலைக்கு ஒப்பாவான். அப்படிப்பட்ட
வன் ஆண்டவரிடத்தில் எதையாவது கேட்டுப் பெற்றுக்கொள்ள
லாம் என்று நினையாதிருப்பானாக ” (யாகப். 1; 6—7). தாழ்
மையோடு, விசுவாசத்தோடு, விடாப்பிடியோடு செய்யும் செப
மோ தேவ சமுகத்தில் வல்லமையுள்ளது. அப்படிப்பட்ட செபத்
தைச் சருவேசுரன் தள்ளமாட்டார். இதற்கு உதாரணமாக அர்ச்.
மத்தேயு சுவிசேஷத்திலிருந்து (15-ம் அதி.) ஒரு சிறு சரித்திரம்
எடுத்துச்சொல்லுகிறேன், கேளுங்கள். நம்முடைய திவ்விய கர்த்
தர் இப்பூவுலகத்தில் இருந்த காலத்தில், ஒரு நாள் தீர் சீதோன்
பட்டணங்களின் திசையாய்ப் போய்க்கொண்டிருக்கையில், அப்
புறங்களிற் குடியிருந்த ஒரு கானானிய அக்கியான ஸ்திரி, தன்னு
டைய மகள் பிசாசு ஆவேசத்தினால் நோய்வாய்ப்பட்டிருந்ததினால்
வருந்திக்கொண்டிருந்தவள், ஆண்டவர் அங்கு வந்திருக்கிறார் என்று
கேள்விப்பட்டு அவரிடம் ஓடிவந்து: ஆண்டவரே! தாவீதின்
குமாரனே! என்மேல் இரங்கும்; என் மகள் பிசாசினால் கொடிய
வேதனைப் படுகிறாள் என்று மன்றாடினாள். ஆண்டவர், அவளைப்
பரிசோதிக்கும்படியாக, ஒன்றும் சொல்லாமலே நடந்து போய்க்
கொண்டிருக்கிறார். அவளும் பின்தொடர்ந்து பின்தொடர்ந்து
வருகிறாள். இதைக் கண்ட சீஷர்கள்: ஆண்டவரே இவள் என்
பிறகாலே இழுபட்டுக்கொண்டு வருகிறாள்! இவளுக்குச் சொல்
லுகிறதைச் சொல்லி அனுப்பிவிடுமேன் என்கிறார்கள். இரக்கமே
தமது சுபரூபமாகக் கொண்ட நம்முடைய கர்த்தர் இன்னமும்
அவளைச் சோதிக்கும்படியாக: நாம் யூத சனங்களுக்குள்ளே
காணாமற்போன ஆடுகளைத் தேடி வந்தோம் ஒழிய இந்த மனுஷி
யைப் போல அஞ்ஞானிகளுக்காக வரவில்லை என்று கடின வசன

மாய்ச் சொல்லிப்போட்டு வழி நடக்கிறார். கானானிய ஸ்திரியோ
இதைக் கேட்டும் மனந் தளராமல், முகத்தைச் சுளித்துக்கொண்டு
திரும்பி விடாமல், எட்டி நடந்துவந்து ஆண்டவருடைய பாதத்
தின் முன் விழுந்து: ஆண்டவரே எனக்கு இரங்கும்! என் மக
ளைக் குணமாக்கும்! என்று விண்ணப்பிக்க, மீண்டும் எம் அரிய
இரட்சகர் அவளைப் பார்த்து: பிள்ளைகளின் அப்பத்தை எடுத்து
நாய்களுக்குப் போடுகிறதோ என்று அதட்டுகிறார். பாருங்கள்,
கிறீஸ்தவர்களே, ஆண்டவர் அந்த மனுஷியை ஒரு நாய் என்றது
போல சொல்லாமற் சொல்லுகிறாரே. யூதர்தான் பிள்ளைகள், நீங்
கள் நாய்கள்; யூதருக்கு நாம் நன்மை செய்ய வந்தோம் ஒழிய
அஞ்ஞானிகளாகிய உங்களுக்குச் செய்ய அல்ல என்றபடி அல்ல
வோ சொல்லுகிறார்! ஆனால் அந்த தாழ்மையுள்ள ஸ்திரி, விசு
வாசம் நிறைந்த அந்த மனுஷி, விடாப்பிடியுள்ள அந்த வீரத்
தாய் சொன்ன மறுமொழியைக் கேளுங்கள்: மெய்தான் ஆண்
டவரே, நாங்கள் நாய்கள் தான்; யூதர் பிள்ளைகள்தான்; ஆனால்—
ஆனால், நாய்க்குட்டிகளும் தங்கள் எசமான்களின் மேசையிலிருந்து
விழும் துண்டு துகள்களைத் தின்னுமே என்று இந்த விதமாய்த்
தாழ்மையோடு விடை சொல்லவே, இனி ஆண்டவருடைய இரக்
கப் பெருக்கத்தைத் தடுக்க முடியாது. அவர் அவள் மேற் திருக்
கண் சாத்தி: ஸ்திரியே உன் விசுவாசம் பெரிது; நீ விரும்பிக்
கேட்டது இதோ கிடைத்தது; உன் மகள் சுகமாகி விட்டாள் என்
கிறார். உடனே பிசாசு பிடித்தவள் குணப்பட்டவள் ஆனாள்.

இப்படியே, நீங்களும், அத்தியந்த தாழ்மையோடும், தளம்
பாத விசுவாசத்தோடும், விடாப்பிடியாயும் மன்றாடினால் உங்கள்
மன்றாட்டுத் தப்பாமலே கேட்கப்படும். இந்தப் பாக்கியமான
ஞான ஒடுக்க நாட்களிலே நீங்கள் முக்கியமாய்க் கேட்க வேண்
டிய மன்றாட்டு ஒன்று உண்டு. அதாவது: உங்கள் ஆத்துமத்தின்
உண்மையான நிலையை நீங்கள் கண்டுகொண்டு முற்றாக மனந்திரும்
பிவிட வரந் தரவேணும் என்ற மன்றாட்டு. இந்த மன்றாட்டை
அடிக்கடி பண்ணுங்கள்; தக்க மனப் பக்குவங்களோடு பண்ணுங்
கள். பண்ணினால், இரக்கமுள்ள ஆண்டவர் உங்களுக்கு மெய்
யான மனந்திரும்புதலின் வரத்தைத் தந்து, இவ்வுலகத்திலே நீங்
கள் தமக்கு நல்லூழியம் செய்யப் பண்ணி, மறு லோகத்திலே
உங்களுக்குத் தமது பேரின்ப திருமுக தரிசனத்தையும் அளித்தரு
ளுவார். ஆமென்.

SERMON:

On Death as an Excellent Teacher

மாலைப் பிரசங்கம் :

மரணமே நல்ல உபதேசி

Memorare Novissima tua et in aeternum non peccabis-Eccles. VII 40.

“ உன் கடைசி முடிவுகளை ஞாபகப் படுத்திக்கொள்ளுவாயானால் என்றென்றுமே பாவஞ் செய்ய மாட்டாய் ” (எக்கிளே. 7; 40).

பிரியமான கிறீஸ்தவர்களே, ஒரு பரிசுத்த தபோதனர் சகலருக்கும் நன்மை செய்யக்கூடிய ஒரு நற்புத்தியைச் சொல்லிவருவார்: அதாவது: “ நீ காலையில் எழும்பும்போது, இன்றிரவு வரைக்கும் நான் சீவனோடு இருப்பேனோ தெரியாது என்று எண்ணிக்கொள். மாலையில் நித்திரைக்குப் போகும் வேளையில், காலை மட்டும் இருப்பேனோ தெரியாது என்று சொல்லிக்கொள் ” என்பார். மரணத்தின் நினைவால் உண்டாகும் நன்மையை முற்கால அஞ்ஞானிகளும் அறிந்திருந்தார்கள். மசிடோனிய தேச அரசனான பிலிப்பு என்பவர்: “ அரசரே நீர் ஒரு மனுஷன்; நீரும் சாக வேண்டும் என்ற நினைவோடு நடந்துகொள்ளும் ” என்று தனக்கு ஒவ்வொரு நாட் காலையிலும் நினைப்பூட்டுவதற்கு ஒரு பணியாளை நியமித்திருந்தார். சாவை நினைந்துகொள்ளாமையினாலேதான், அநேகர் சருவேசுரனையும் தங்கள் ஆத்துமத்தையும் கவனியாமல் தாறுமாறாய் நடந்துகொண்டுவருகிறார்கள். சாவு, இழவு, மரணம் என்ற சொற்களையே அமங்கலமான சொற்கள் என்று தள்ளிவைத்துவிடுகிறார்கள். சாவின் நினைவு அவர்களுக்குத் திடுக்காட்டம் உண்டாக்குகிறது. சாவை நினைத்தால் திருந்தி நடக்க வேணும், அந்த நினைவை எப்போதும் அகல வைத்துக்கொண்டுவந்தால் மனம் போன போக்கெல்லாம் போகலாம், என்ன துட்டாட்டத்தனத்தையுஞ் செய்யலாம் என்று எண்ணிக்கொள்ளுவார்கள். பாவப் பழக்கங்களிலே நன்றாய் வேர் ஊன்றுகிறதற்கு அதுதான் கைகண்ட உபாயம். இதற்கு மாறாக, மரணத்தின் நினைவு பாவத்தின் நினைவைத் தடுத்து வைக்கும்; பாவத்திலே நிலைக்கவும் விடாது.

இதினாலே தான் “உன் கடைசி முடிவுகளை ஞாபகப் படுத்திக்கொள்ளுவாயானால் என்றென்றுமே பாவஞ் செய்ய மாட்டாய் ” என்று பரிசுத்த வேதாகமம் நமக்குப் புத்தி புகட்டுகிறது.

மரணத்தைப் போல் நல்ல உபதேசி இல்லை. மரணத்தின் நினைவு நம்முடைய பாவங்களுக்காக நாம் மனஸ்தாபப்பட்டுத் தவம் பண்ணச் செய்யும். அதின் நினைவு, நாம் சகல புண்ணியங்களையும் தேடிச் செய்யும்படியாக நம்மை எப்போதும் தூண்டிக்கொண்டிருக்கும். மரணத்தை ஊன்றி நினைக்கத் திடுக்காட்டம் உண்டுபடும் என்றது மெய்தான். இந்தத் திடுக்காட்டமே நம்முடைய ஞான நித்திரையில் இருந்து நம்மைத் தட்டி எழுப்பி, நமது ஆத்தும ஈடேற்றமாகிய ஒரே அலுவலைச் சுறுசுறுப்போடு பார்க்கும்படி நம்மை ஏவி விடுவதற்கு முதற்றரமான வழியாகும். உண்மையில், மரணத்திலே இனிமேல் இல்லை என்ற ஒரு பயங்கரம் இருக்கவே இருக்கிறது. (1) மரணத்தில் உள்ள அதோ இதோ என்ற சந்தேகத்திலும் பயங்கரம்; (2) அது ஒறுத்துப் பாராமற் பண்ணும் பார அழிவிலும் பயங்கரம்; (3) அது, இனிமேல் மாற்றக்கூடாதபடி, கட்டிவிடும் முடிவிலும் பயங்கரம். இந்த மூவிதமான பயங்கரத்தையும் மூன்று பிரிவாக வகுத்துப் பேச விரும்புகிறேன். பிரியமான கிறீஸ்தவர்களே, நீங்கள், சகலருக்கும் வரப்போகிற இந்தக் கடைசி நேரத்தின் மூவித பயங்கரத்தையும் நன்றாகக் கண்டு உணர்ந்துகொள்ளுவீர்களாகில், மெய்யாகவே மனந்திரும்பினவர்கள் ஆகிவிடுவீர்கள்; பாவத்தை என்றென்றும் பகைத்து புண்ணியத்திலே நிலை கொள்ளுவீர்கள். ஆதலால், இந்தப் பிரசங்கத்தை நான் அருளோடு பண்ணி முடிக்கவும், நீங்கள் ஆத்தும பலனோடு கேட்கவும் தக்கதாக, சருவ தயாபர சருவேசுரனையும் அவருடைய திருத் தாயாரையும் பிரார்த்திக்கக் கடவோம். (பிரியதத்தம்).

I

மரணத்தில் உள்ள சந்தேகத்தை நான் ஒரு பயங்கரமாக எடுத்துச் சொல்வது உங்களுக்கு விபரீதமாகத் தோற்றலாம். நாம் சாவோம் என்றதும் சந்தேகமா என்று நீங்கள் கேட்கக்கூடும். பிறந்தவர்கள் எல்லாம் இறந்தே தீரவேணும் என்றதிற் சந்தேகம் இல்லை என்றது மெய்தான். சென்ற காலம் அதற்கு அத்தாட்சி. ஏன்? உங்களுடைய பேரன், பீட்டன், கொப்பாட்டன், கோந்துரு எல்லாம் எங்கே? இறந்தேபோனார்கள். பழைய ஏற்பாட்டிலே, ஆதி பிதாப்பிதாக்களைப் பற்றி வரைந்திருக்கிற இடத்திலே,

சொல்லியிருக்கிறதாவது: ஆதாம் தொளாயிரத்து முப்பது வருஷம் சீவித்தார்...அவரும் மரித்தார். சேத்து தொளாயிரத்துப் பன்னிரண்டு வருஷம் சீவித்தார்...அவரும் மரித்தார். ஏனோசு தொளாயிரத்து ஐந்து வருஷம் சீவித்தார்...அவரும் மரித்தார் என்று இப்படியே வரிசை வரிசையாய் மரித்தவர்களுடைய இடாப்பே காட்டியிருக்கிறது. (சனிப்பாகமம், 5-ம் அதி). உங்களுக்குள்ளே சாவு இல்லாத குடும்பம் எது? மரணம் வராத வீடு எது? வீடெல்லாம் சாவீடு தானே. புத்த சமயம் என்கிற பொய் மதத்தை உண்டாக்கின கவுதம புத்தர் என்கிறவர் இருந்த காலத்தில், ஒரு நாள் தன்னுடைய ஒரே ஒரு மகனைச் சாகக் கொடுத்த ஒரு கைம்பெண்சாதி அந்தக் கல்விமானிடத்திலே வந்து: சுவாமி என் ஏக மகன் இறந்துபோனான்; அவனுக்கு உயிர்ப்பிச்சை தரவேணும் என்று மன்றாடினாள். மனுஷனாய்ப் பிறந்து வந்த கடவுளாகிய எம்முடைய ஆண்டவர் ஒரு விதவைக்கு இறந்த மகனை உயிர்ப்பித்துக் கொடுத்தருளினது போல, பொய்ம் மார்க்கத்தை ஸ்தாபித்த ஒரு வெற்று மனுஷனாலும் செய்ய முடியுமா? மரித்தோரை உயிர்ப்பிக்கும் வல்லமை தனக்கு இல்லை என்று கவுதம புத்தருக்கு நல்லாய்த் தெரியும். ஆனாலும், தன்னாலே அஃது முடியாது என்று வெளிப்படையாய்ச் சொல்லிவிட மனம் இல்லாமல், அந்த ஸ்திரிக்கு தந்திரமான ஒரு மறுமொழியைச் சொன்னாராம். அதாவது: நீ ஊருக்குள்ளே போய் எங்கேயாவது இதற்கு முன்னே ஒருவரும் சாகாத வீடு பார்த்து அந்த வீட்டிலே கொஞ்சம் கடுகு வாங்கிக்கொண்டு வா, உன் மகனை எழுப்பிவிடுகிறேன் என்று சொல்லி அனுப்பினாராம். மனுஷியும் வீடு வீடாய்ப் போய்: இங்கே முன் ஒருவரும் சாகவில்லையோ? சாகவில்லையோ? என்று கேட்டுக்கொண்டு போனாள். ஒரு வீட்டிலாவது இங்கே முன்னே ஒருவருஞ் சாகவில்லை என்று சொல்லுவார் இல்லை. அப்போது தான் அவளுக்குக் காரியம் விளங்கினது. எல்லாருஞ் சாகவேண்டும் என்ற முறையின்படியே தன் மகனுஞ் செத்தான்; அவனை உயிர்ப்பிக்க மகா சாஸ்திரியான கவுதம புத்தராலும் இயலாது என்று அறிந்துகொண்டாள்.

இப்படியே, மனிதனுக்குச் சாவு நிச்சயம் என்றதற்குச் சென்ற காலம் சாட்சி; நிகழ்காலமும் சாட்சி. நாலு புறமும் சாவை அல்லாமல் வேறு என்னத்தைக் காண்கிறோம்! புல் பூண்டு மரஞ் செடிகளைப் பார்த்தால், அவைகள் முளைத்து வளருகிறவைகளும், வளர்ந்து சாகிறவைகளுமாகவே இருக்கிறது. மாடு ஆடு கொக்கு குருவி எல்லாஞ் சாகிறது. நம்மைச் சூழ இருக்கிறவர்களிலே

எத்தனைபோ பேர் சாகக் காண்கிறோம்; சாவுக்கு உரிய நோயோடு இருக்கக் காண்கிறோம். நம்முடைய அயலிலே மாத்திரம் சாவல்ல, உலகம் முழுதும் சாவு நடக்கிறது. இப்போது, நான் பேசிக்கொண்டிருக்கிற இந்த வேளையிலே, இந்தப் பிரசங்கம் முடியுமுன்னே, உலகத்திலே மூவாயிரம் பேர்வரையிற் செத்துப் போவார்கள். நாள்தோறும் உலகத்திலே ஒரு லட்சம் பேருக்கு அதிகமாய்ச் சாகிறார்கள் என்று அறிவாளிகளாற் கணக்குப் பூட்டப்பட்டிருக்கிறது. உள்ளபடி, உலகம் ஒரு பெரிய கொலைக்களம். மரணத்தின் நடுவேதான் நாம் சீவிக்கிறோம். ஆனபடியால், நாமும் சாவோம் என்பதிற் சந்தேகம் இல்லை. மரணத்தை வெல்ல எவராலும் முடியாது. சுவாலித்து எழுந்துவரும் நெருப்பை மனுஷன் நூர்த்து அதை வெல்லுகிறான். மலைபோல புரண்டு மோதுகிற அலையை வெல்லுகிறான். வாட்படையை, குதிரைப் படையை, யானைப் படையை வெல்லுகிறான். ஆனால் மரணத்தை வெல்ல நால்வகைச் சேனைகளாலும் முடியாது; அட்ட ஐசுவரியமும் நிறைந்த அரசனாலும் முடியாது; உலகம் முழுதுக்கும் மகா குருப்பிரசாதியாகிய பாப்பானவராலும் முடியாது. மனுஷனுடைய வாழ்வென்ன? தாய் உதரத்திலே அருவாகி, உருவாகி, குழந்தையாகி, இளந்தாரியாகி, சிறியவனாகி, பெரியவனாகி, குடியானவனாகி, அரசனாகி, குருவாகி, பாப்புவாகி தப்பாமல் சவமாகிறான். மரணமோ சருவேசுரனால் அமைக்கப்பட்ட ஒரு மாறாத முறை. வேதவாக்கியம் இதைத் தெளிவாக வெளிப்படுத்தும்: "மனிதர் ஒரே தரம் மரிக்க வேணும் என்றும் அதன்பின் நடுத்தீர்வை என்றும் நியமிக்கப்பட்டிருக்கிறது" (எபிரே. 9; 27) என்றது திருவாசகம்.

"மரணம் நிச்சயம். எனக்கு மரணத்தீர்வை இடப்பட்டாயிற்று. நான் சாகவே வேணும்" என்று உணர்ந்துகொண்டு, நல்ல மரணத்துக்கு ஆயத்தமாய் எப்போதும் நடந்துவருவோமானால் இதிலே பயங்கரம் ஒன்றும் இராது. எல்லாம் ஆறுதலும் இன்பமுமாகவே இருக்கும். ஆனால் சாகும் காலம், சாகும் இடம், சாகும் விதம் என்ற இவைகள் எவருக்குந் தெரியாதானபடியால், சத்துராதித்தனமான ஒரு சந்தேகம் உண்டாகிறது. இதிலே தான் நான் சொன்ன பயங்கரம் அடங்கியிருக்கும். சாகுங் காலம் குறித்திராதபடியால் ஒவ்வொருவரும் "நான் இப்போது சாகப் போகிறேனோ? மரணம் எனக்கு அவ்வளவு சுறுக்கில் வருமோ? நான் இன்னும் பல நெடும் வருஷங்களுக்கு இருப்பேன். இப்போது நான் ஏன் தவம் பண்ணுவான்? ஏன் மரணத்துக்கு ஆயத்தப்படுத்துவான்? பிறகு பார்ப்போம் பிறகு பார்ப்போம்" என்று வாயினாற்

சொல்லாவிட்டாலும் மனதிற்குள்ளே எண்ணிக்கொள்ளுகிறோம். அதுமட்டோ, சாவு நிச்சயம் என்ற உண்மையை மனதின் ஆக அடித்தளத்துள்ளே தள்ளி வைத்துக்கொண்டு, நமக்கு சாவு வரும் என்ற நினைவை அதில் நுழைய விடாமல் முற்றாக அப்புறப்படுத்திக்கொண்டு, காரியத்தளவிலே நாம் ஒரு போதுஞ் சாகாதவர்கள் என்றபடி இருந்துவிடுகிறோம். அதினாலே தான் மரணம் என்ற சொல்லைக் கேட்கும்போதும் சில வேளைகளிலே திடுக்காட்டம் உண்டாகி விடுகிறது. காதிலே விழுந்த ஒரு சொல்லினால் வரும் திடுக்காட்டம் என்ன திடுக்காட்டம்! நாம் சாவதில்லை என்றது போல ஒரு ஆயத்தமும் நினைவும் இல்லாமல் நித்திய கேட்டுக்கு உரிய பாவ நிலையிலே இருக்கும் வேளை, மெய்மெய்யாக, சற்றும் காத்திராத நேரத்திலே, சடுதியாய்ச் சாவு வரும் போது கொள்ளும் திடுக்காட்டம் அல்லவோ பயங்கரமானது! சாவுமோ சடுதியாகத்தான் வரும் என்று ஆண்டவர் திருவுளம்பற்றியிருக்கிறார். "நீங்கள் நினையாத நேரத்திலே மனுஷ குமாரன் வருவார். ஆதலால் நீங்களும் ஆயத்தமாய் இருங்கள்" (மத். 24; 44) இது தான் சாவிலே உள்ள சந்தேகப் பகுதி. சீவியத்துக்கும் மரணத்துக்கும் அதிபதியானவர் தெட்டத்தெளிவாய் திருவுளம்பற்றியருளியதை நம்பாதவர்கள் போல நாம் அற்பமேனும் ஆயத்தம் இல்லாதிருக்கும் வேளையிலே சாவு வருமானால் பயங்கரம் இல்லாமற் போமா?

அது காத்திராத நேரத்திலே மாத்திரம் அல்ல காத்திராத இடத்திலேயும், காத்திராத விதமாயும் வரும்போது மரணத்தின் பயங்கரம் இன்னும் அதிகம் ஆகும். நேரத்தைப் பற்றிய சந்தேகத்தைப் போலவே இடத்தையும் விதத்தையும் பற்றிய சந்தேகமும் சதிமானம் நிறைந்தது. "நான் நெடும் நெடும் காலத்தின் பின், வருஷா வருஷங்கள் சென்ற பின், அதுவும் வீட்டிலே, எனது குசாலான அறையிலே, இனசனங்கள் சூழ, மனைவி மக்கள் கால் கை பிடித்து உதவி செய்யப் பாக்கியமாய் மரிப்பேன், அவ் வேளை என் பாவங்களுக்காக நல்ல நல்ல பாவசங்கீர்த்தனங்கள் பண்ணி, ஒறுத்தல் உபவாசங்கள் முடித்து, பூரண ஆயத்தத்தோடு அவஸ்தைப் பூசுதல் பெற்று, வழித்துணை நற்கருணை உட்கொண்டு, வலது கையில் குருசு செபமாலை ஒளிர, இடது கையில் மெழுகுதிரி எரிய, யேசு மரியாயி சூசை என்ற திரு நாமங்களை உச்சரித்துக் கொண்டு, நல்லறிவோடே இருந்து மரண நித்திரையாவேன்" என்ற ஒரு மாயமான, பேய்த்தேர் போன்ற எண்ணம், இன்றைக்கே நன்மரணத்துக்கு ஆயத்தப்படாமல் பின் போட்டு பின் போட்டுக் கொண்டு வருகிற நம்முடைய மனதிற்குள்ளே கரந்து மறைந்து

கிடக்கிறது அல்லவா? இந்த மனக் கோட்டை எல்லாம் புகைப் போலப் பறந்து போகும்படியாக, வீட்டிலே அல்ல, பிறதேசத்திலேயோ காடுகரம்பையிலேயோ தெருவிலேயோ கடல்மேலேயோ வேலைத் தலத்திலேயோ விளையாட்டிடத்திலேயோ எனக்கு மரணம் வராதா? வருத்தமாய்ப் பாயிற் படாமற் திடீரென்று சடுதி மரணம் நேரிடாதா? பாவசங்கீர்த்தனத்துக்கு நேரம் இல்லாமல், அவஸ்தைப் பூசுதலுக்கு இடம் இல்லாமல், மனஸ்தாபப்படவும் நினைவு வராமலிருக்கும் வேளையிலே, அசுப்பிலே, சாகவேண்டி வராதா? "நீங்கள் நினையாத நேரத்திலே மனுஷ குமாரன் வருவார்" என்ற திரு வாக்கியம் ஒரு வேளை எனக்குத் தான் பொருந்துவதாகாதா? எத்தனை பேர் கொண்டாட்டங்களின் நடுவே, இருந்தாற்போல சாகிறார்கள்! எத்தனை பேர் றெயில் வண்டியிலே, மோட்டர்கார் ஆபத்திலே அகப்பட்டு திடீரென்று மரணம் அடைகிறார்கள்! எத்தனை பேர் வழியிலே தெருவிலே எடுத்துக் கொள்ளப்படுகிறார்கள்! "நேற்று இன்னை நல்ல சுகத்தோடே நிற்கக் கண்டேனே, அவரும் செத்துப் போனாரா? இதை நம்புவது எப்படி?" என்று சொல்லத் தக்கதாக, எத்தனை பேர் சிமிக்கிடாமல் மரணத் திரைக்குள் மறைந்துபோகிறார்கள்! எத்தனை பேர் வீட்டோடே தான் வியாதியாயிருந்து மரித்தாலும், மரணத்தை நினைத்து மனந்திரும்பு முன் திடீரென்று அறிவிழந்து கிடந்து சாகிறார்கள்! இப்படி, காத்திராத நேரத்திலே, இடத்திலே, காத்திராத விதமாக மரணம் வரும்போது உண்டாகும் பதகளிப்பையும் அங்கலாய்ப்பையும் திடுக்காட்டத்தையும் திகிலையும் என்னென்று விபரிப்போம்! "ஐயோ, நான் இப்படி வருமென்றிருந்தேன் இல்லையே! இது வரையும் நான் எனக்கு ஏதோ நிலையான நன்மை என்று நம்பி இருந்த உலகம், பார்த்திருக்க மின்னி மின்னி மறைந்து போகிறதே! மறுலோகப் பயணத்துக்கு ஒரு ஆயத்தமும் இல்லாமல் சாகிறேனே! ஐயோ, இதுவரையும் நான் நினைக்கவும் மனமில்லாமல் எவருக்கு முகத்தைத் திருப்பிக்கொண்டு வந்தேனோ, அவருக்கு முன்னாலே தானே போக வேண்டியிருக்கிறதே! நான் கெட்டேன்! கெட்டேன்!" என்று உள்ளடங்கிச் சமித்து, கலங்கி, மலங்கி, நெஞ்சழிந்து நெருப்பாய்ப் பற்றி எரிகிறது போலிருக்குமே.

II

மரணத்தின் காலமும் இடமும் விதமும் தெரியாமல் இருக்கிறதினால் மயங்கி, உலகத்தைச் சதமென்று நடக்கிறவர்களுக்கு வரப் போகிற திக்குமுக்காட்டான பயங்கரம் இது. ஆனால் இந்த உல

கமும் இதின் மாய்கையும் கடந்து போகிறதினால் (1 கொரி. 7. 31) உண்டாகுகிற பார அழிவையும் நாம் விசாரித்துப் பார்க்க வேணும். கிறீஸ்தவர்களே, இந்தக் கண்ணராவியைக் காண வேணுமானால் உங்கள் ஊர்ச் சவக்காலைக்கு மனதினாலே என்னோடு கூட வாருங்கள். இதோ சவக்காலை. இங்கே என்னத்தைக் காண்கிறீர்கள்? உங்கள் தாய் தகப்பன், பேரன் பிட்டன், உறவு உற்றாரை அடக்கம் பண்ணிய இடங்கள் இதோ இருக்கிறது. சில பழங் காலக் கல்லறைகளுக்குள்ளே ஒன்றையுங் காணமுடியாது. ஒருவேளை சில எலும்புகளைத் தவிர மற்றதெல்லாம் மண்ணாய்ப் போய் விடும். கொஞ்சநாட்களுக்கு முன் புதைத்த சவம் என்றால், எவ்வளவு அச்சம் வருவிக்கிற காட்சி! இதோ இந்தக் குழியிலே கிடக்கிற ஆளைக் கவனியுங்கள். இது ஒரு பணக்காரப் பெண் பிள்ளையின் சவம். சீவனோடு இருந்தபோது இவள் ஒரு மாளிகை போன்ற வீட்டிலே எவ்வளவு சொகுசாய்ச் சீவித்து, பஞ்சணை மெத்தையிலே படுத்து வந்தவள்! இவளுக்கு எத்தனை வேலைகாரர்! எத்தனை தோழிகள்! எவ்வளவு வாஷம் ஊட்டிய அழகான உடுப்புக்கள்! இவளுக்கு எவ்வளவு அழகான முகம்! மயிலையும் நாணப் பண்ணுகிற சாயலாய், ஒய்யாரமாய் நடப்பாளே. குயிலையும் வெட்கப் பண்ணுகிற தீங்குரலோடு பேசுவாளே. சந்தோஷ உல்லாசமாய் கலகலவென்று சிரிப்பாளே. ஆனால் இப்போது இவள் இருக்கிற வீட்டைப் பாருங்கள்: ஒரு நாலு முழக் கிடங்கு. கட்டிலைப் பாருங்கள்: கல்லும் மண்ணும் பரவிய வெறுந் தரை. இப்போது இவளுக்கு வேலைகாரரும் தோழிகளும் ஆர்? இவள் தேகத்தைத் தின்றுகொண்டிருக்கிற புழுக்கள் தான். யோபு சொன்னது போல இவளும் "உளுப்பைப் பார்த்து நீ எனக்குத் தகப்பன் என்கிறேன்; புழுக்களைப் பார்த்து நீங்கள் எனக்குத் தாயும் எனக்குச் சகோதரியும் என்கிறேன்" என்று அல்லவோ சொல்ல வேண்டியிருக்கிறது (யோபு 17; 14)! இவள் மெலுக்காய்ப் பூசிப் புணர்த்தி வந்த சரீரத்திலே தானே கணக்கில்லாத புழுக்கள் உண்டுபட்டு, வாயிலே வயிற்றிலே குடலிலே மொய்த்து நெளிந்துகொண்டு குப்பையாகக் கிடக்கிறது. கண் காது முதலிய துவாரமெல்லாம் அருவருப்பான நாறற் புழுக் குவியல். உடுப்புக்களின் வாசனை எங்கே? முகத்தின் அழகு எங்கே? எத்தனையோ பாவப் பார்வைகளுக்கு இடமாயிருந்த வசீகரம் பொருந்திய கண்கள் புழுவாய் மாறிவிட்டது. காந்தளுக்கு உவமிக்கப்பட்ட மிருதுவான கைகள் மூட்டு விட்டு எலும்பு தெரியப் புழு மொய்த்துக் கிடக்கிறது. ஆண்டவருடைய திருக் கட்டளைகளையும் பாராமல் சிற்றின்ப சுகத்தில்

ஈடுபட விட்ட சரீரம் முழுதும் இடிந்து தகர்ந்து ஊனமுந் தசையுமாய் நாறுகிறது. நடையின் ஒய்யாரம் எங்கே? பேச்சின் அலங்காரம் எங்கே? சிரிப்பின் கலகலப்பு எங்கே? எவ்வளவு அருவருப்பான அவலட்சணம்! எவ்வளவு வாந்தி எடுக்கிற துர் நாற்றம்! இஸ்பானிய தேசத்தின் மகா ரூப லாவண்ணியம் உள்ள இராசாத்தி இராச நகருக்கு அப்பால் மரித்தபோது, அவளுடைய சவத்தை இராசாக்களுடைய கல்லறையில் அடக்கஞ் செய்யும்படியாக, போர்சியா என்கிற துரை அதைப் பெட்டியிலே வைத்து மூடி எடுப்பித்துக்கொண்டுவந்தார். இராச நகரியில் வந்து சேர்ந்து, அங்குள்ள இராசப் பிரபுக்களுக்குச் சவத்தைக் காண்பிக்கும்படியாக பெட்டியைத் திறந்தபோது, அந்த அழகு சவுந்தரியம் உள்ள இராசாத்தியின் முகம் காட்டின அவலட்சண கோர ரூபத்தையும், பெட்டியிலிருந்து கிளம்பின சவவெடிலையும் பார்த்து போர்சியா பிரபு திடுக்கிட்டு திக்குக் கெட்டு, அந்தச் சணமே உலக சுகபோக வைபவங்களின் நிலையாமையை உணர்ந்து கைவிட்டு சன்னியாசியாகிக் குருப்பட்டம் பெற்றதும் அல்லாமல், தமது சுகிர்த சீவியத்தின் பிரபலியத்தினால் திருச் சபையிலே அர்ச்சியசிஷ்ட போர்சியா என்று வணங்கப் படுகிறவரும் ஆனார். மகா அலக்சாந்தர் என்கிற அரசர் இறந்தபோது ஒரு ஞானவான் சொல்லுவான்: அலக்சாந்தர் நேற்றுப் பூமியை அடக்கி ஆண்டார், இன்றைக்கு பூமி அவரை அடக்குகிறது. நேற்றுப் பூமி முழுதுந்தானும் தமக்குப் போதாதென்றது போல பல தேசங்களையும் அடிப்படுத்த முயன்றுகொண்டுவந்தார், இன்றைக்கு அவருடைய இராச்சியம் ஒரு நாலு முழக் கிடங்கு மாத்திரமே. நேற்று சேனை படை புடைசூழ ஒட்டோலகமாய்ப் பவனி போய்க்கொண்டிருந்தார், இன்றைக்கு அவரை நாலு கூலிக்காரரே சுமந்துகொண்டு போகிறார்கள் என்றாலும். "பாவியுடைய மகிமை மலக் குவியலும் புழுவுமே" என்ற வேதவாக்கியம் இப்படியே சவக்கிடங்கில் நிறைவேறுகிறது (1 மக்கபே. 2; 62).

மாணமானது சரீரத்துக்குக் கொண்டு வருகிற அழிவு இது. அது சரீரத்துக்குச் சேர்ந்த பொருள் பண்டங்களுக்கும் ஆத்துமத்தைச் சேர்ந்த இவ்வுலக நன்மைகளுக்கும் வருவிக்கிற அழிவையும் இப்போது நோக்குங்கள். எத்தனை காணி பூமி, தோட்டம் வயல், வீடு வாசல், மாடு கன்று, நகை நட்டுகள், பல முறையும் அநியாயமாய் தேடின திரவியங்கள், வங்குக் கணக்குகள், நோட்டுச் சீட்டு ஈடு ஒற்றி வருமதிகள்! எத்தனை அருமையாய்ப் பேணி வந்த சிறுச் சிறுச் சாமான், தட்டு முட்டு, தளவாடம், புத்தகங்

கள்! எவ்வளவோ பாடுபட்டுத் தேடி வைத்த இந்தப் பொருட்கள், எவ்வளவோ அருமை பெருமையாய் காப்பாற்றி ஆண்ட இந்தத் தட்டுமுட்டுக்கள் எல்லாம் கனவிற் கண்ட திரவியம் போல இல்லாமற் போய்விடும். சலாதின் என்னும் சுலுத்தான் சாகக்கிடந்த போது, ஒரு பணியாளை அழைத்து அவனிடம் ஒரு தடியின் தலைப்பிலே கட்டின நாலு முழத் துணியைக் கொடுத்து: நீ இதைக் கொண்டுபோய் ஊரெங்குங் காட்டி “இதுதான் இராசாதிராசன் இராசமார்த்தாண்டன் சலாதின் மகா ராசன் தன்னோடு கொண்டுபோகிற சகல சம்பத்தும்” என்று சொல்லிக்கொண்டு வா என்றாராம். மரணமானது நம்முடைய சகல செல்வ சம்பத்துக்களையும், உடைமை உரிமைகளையும் அறவே அழித்துப்போடும். மரண நேரம் “நிர்வாணியாய் என் தாயின் கர்ப்பத்திலிருந்து வந்தேன், நிர்வாணியாய் திரும்பிப் போவேன்” என்று யோபு மகாத்துமா சொல்லிய வாக்கியம் ஒரு அரவுந் தவறாமல் நிறைவேறுவதாகும் (யோபு. 1; 21).

பொருள் பண்டங்களைப் போலவே, குலம் கோத்திரம், உத்தியோகம், சங்கை வெகுமானம், கல்விச் செருக்கு எல்லாம் மரணத்தோடே சூறைக் காற்றில் அகப்பட்ட துரும்பாய்ப் போம். எத்தனை முறை நாம் எமது உயர்ந்த சாதி, இனக்கட்டு, இவைகளைப் பற்றி இறுமாப்புக் கொண்டு தலையெடுப்பாய் நடந்துவருகிறோம்! ஏழை எளியோரை, வேலைகாரரை எவ்வளவு பராமுகமாய் நடத்துகிறோம்! நமது உத்தியோகம் எவ்வளவு கர்வத்துக்குக் காரணமாகிறது! நமக்குக் கொஞ்சம் தாழ்ச்சியான ஒரு சொல்லை யாராவது சொல்லிப் போட்டால்: “என்னையோ இப்படிச் சொல்லுவது? நான் ஆர் என்று நினைத்துக்கொண்டாய்? என் குணம் தெரியுமா?” என்று கோபித்துச் சடபிடக்கிறோம்! நம்முடைய கல்வியைப்பற்றி எவ்வளவு அகங்காரமான எண்ணம் நமக்கு இருக்கிறது! இது எல்லாம் மரணத்தோடே அக்கினியாற்றின்மேல் இட்ட மயிர்ப் பாலம் போல கண் மூடி விளிக்குமுன் பொசுங்கி அற்றுப்போம். மரணம் ஒரு விசேஷமும் பாராது. சவக்கிடங்கு, அரசர் என்றும் பிரசை என்றும் நோக்காது. மேட்டிமை மிகவும் நிறைந்தவரான அலக்சாந்தர் இராசா ஒரு சவக்காலைக்கு அருகே குதிரையிலேறிப் போய்க்கொண்டிருக்கும்போது, ஒரு ஞானியானவன் அச் சவக்காலைக்குள் ஏதோ கிளறிப் பார்த்துத் தேடிக்கொண்டிருக்கிறதைக் கண்டு, குதிரையை நிறுத்திக்கொண்டு: இங்கே நீர் என்ன தேடிக்கொண்டிருக்கிறீர் என்று கேட்க, அந்த ஞானி: அரசனே தங்களுடைய பிதாவான பிலிப்பு இராசாவுடைய தலைமண்டையையும்

எலும்புகளையும் தேடுகிறேன். இங்கே ஓடுகள் எலும்புகள் எல்லாம் ஒன்றடிமன்றடியாய்ப் போய்க்கிடக்கிறதினால், அவைகளைக் கண்டுகொள்ளக் கூடியதாய் இல்லை. பிதாவின் தலை ஓடும் எலும்பும் என்றபடியால் ஒரு வேளை தங்களுக்கு அவைகளின் குறிப்புத் தெரியுமாக்கும் என்றானும். இப்படியே, நம்முடைய சகல சம்பத்துக்களும் சங்கை கீர்த்திகளும் எல்லாம் மரணத்தோடு மறைந்துவிடும். நம்முடைய பேரையும் உலகம் மறந்துவிடும். “அவர்களுடைய ஞாபகம் சத்தத்தோடு அழிந்துபோயிற்று” என்ற வேத வாக்கியம் (சங். 9; 7) உண்மையான வாக்கியந்தானே. உற்றார் உறவோர் நாலைந்து நாள், நாலைந்து மாதம், அல்லது நாலைந்து வருஷம் மட்டும் நம்மை எட்டிலே தப்பிலே நினைக்கக் கூடும். அதற்குப் பிறகு ஒருவரும் நம்மைக் கவனிப்பார் இல்லை. கவனித்தும் என்ன? நினைத்தும் என்ன? நமது சரீரம் முழுதும் அழுகிப் புழுத்து மண்ணாக, நம்முடைய பொருள் பண்டம் ஆஸ்தி பாஸ்தி எல்லாம் போக, ஆணவம் சங்கை வெகுமானம் எல்லாம் நம்மை விட்டு நீங்க, உலகத்தால் முற்றாக மறக்கப்பட்டுத் தட்டத்தனியே புறப்பட்டு ஒருவரும் துணையாய் வரக்கூடாத தனிப் பாதையால் மறுலோகத்துக்குப் பயணப்படுவது எவ்வளவு அச்சம் வருவிக்கிற ஒரு காரியம்!

III

மரணத்திலுள்ள சந்தேகத்திலேயும் பயங்கரம்; அது ஒறுத்துப் பாராமற் செய்யும் அழிவிலேயும் பயங்கரம். ஆனால் ஆகப் பெரும் பயங்கரத்துக்குக் காரணம் என்னவானால், மரணமானது, இனி ஒருபோதும் நம்மால் மாற்றிக்கொள்ளக் கூடாமல், நமது கதிக்கு முடிவு கட்டிவிடுவது தான். “மனிதன் ஒரே தரம் மரிக்க வேணும் என்று......நியமிக்கப் பட்டிருக்கிறது” என்ற வேத வாக்கியத்தை ஞாபகப் படுத்திக்கொள்ளுங்கள். மனிதன் “செத்தால் பிழைக்க அறியான்”. நமக்குச் சாவு ஒன்றே ஒன்று தான். அந்தச் சாவுதான் நமது கதியையும் தீர்த்து முடிவு கட்டிவிடும். சாகும் வேளை சருவேசுரனுக்குப் பிள்ளையாய், சுத்தமாய் இருந்தால், நித்திய மோட்ச பாக்கியம். சாகும்வேளை பிசாசுக்கு அடிமையாய், பாவத்தோடு இருந்தால், ஊழியுள்ள கால நரக வேதனை. இத் தீர்வை மாறாத தீர்வை. செத்தவன் மறுபடி உயிர்த்து வந்து தான் செய்த பிழையை மாற்றிக்கொண்டு பெயர்ந்து ஒருக்காற் சாக முடியாது. “மரமானது தெற்கே விழுந்தாலும் வடக்கே விழுந்தாலும் விழுந்த இடத்திலேயே கிடக்கும்” (பிரசங். 11; 3) புண்

ணியவானாய்ச் செத்தவன் புண்ணியவான் தான்; பாவியாய்ச் செத்தவன் பாவிதான். இனி மாற்றம் இல்லை. அல்லாமலும் சீவியத்துக்கு ஏற்றதே மரணம். சரிந்த பக்கத்துக்குத் தானே மரம் விழும். கிழக்கே சரிந்த மரம் மேற்கே விழாது. சீவியகாலத்திலே மனந்திரும்பாதவர்கள் மரணவேளையிலும் மனந்திரும்புவது இல்லை. தாம் எத்தனையோ அற்புத சகாயங்களினால் அருட்டி அருட்டி, எத்தனையோ புத்திமதிகளினால் ஏவி ஏவிக்கொண்டு வந்தும், தேடித் தேடித் திரிந்தும் தமக்குச் செவிகொடாமல் மூர்க்கராய் நின்ற யூத சனங்களைப் பார்த்து ஆண்டவர் வசனிப்பார்: "நீங்கள் என்னைத் தேடுவீர்கள், தேடியும் உங்கள் பாவத்திலேதான் சாவீர்கள். நான் போகிற இடத்துக்கு வர உங்களாற் கூடாது" என்றார் (அருளப். 8; 21). மனந்திரும்புவது என்றால் நினைத்த நினைத்த உடனே அடையக்கூடிய ஒரு ஆத்தும நிலை அல்ல. அது ஒரு பரம வரம். சருவேசுரனுடைய விசேஷ அருள் இல்லாமல், ஒரு பாவி மனந்திரும்புவது ஒருபோதுங் கூடாது. அந்த அருளுமோ ஒரு அற்புதமான அருள். எவ்விதமான அற்புதம் என்று எண்ணுகிறீர்கள்? சின்னஞ் சிறு அற்புதம் அல்ல. அர்ச். சின்னப்பர் இஸ்பிரீத்துசாந்து சருவேசுரனின் வாக்கியமாக எழுதி வைத்ததைக் கேளுங்கள்: "எவர் கிறீஸ்துநாதரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரோ அந்தத் தேவ வல்லமையை விசுவசிக்கிற நீங்களும் அந்த விசுவாசத்தினால் அவரோடு கூட உயிர்த்தெழுந்தவர்களாகிறீர்கள்" (கொலோ. 2; 12). தேவ குமாரனை மரித்தவர்களிடத்திலிருந்து உயிர்ப்பித்தது அற்புதங்களின் மேலான அற்புதம்; தேவ வல்லமையின் விசேஷ செயல். நம்மைப் பாவ மரணத்திலிருந்து எழும்பப் பண்ண அப்படிப்பட்ட ஒரு மகா அற்புதம் வேண்டுமாம். இந்த அபூருவமான அற்புதத்தை, மகத்தான அற்புதத்தை சருவேசுரன் ஆருக்குச் செய்வார்? சீவிய காலமெல்லாம் தம்மை அவமதித்துக் கொண்டு, சீவியகாலமெல்லாம் தமக்கு நன்றிகேடு இழைத்துக் கொண்டு வந்த ஒருவனுக்குச் செய்வாரா? மூர்க்கமாய் நிற்கிற பாவிகளின் இருதயத்தைக் கடினப்படுத்துவோம் என்று அல்லவோ அவர் திருவுளம்பற்றியிருக்கிறார் (யாத். 7; 3)! அப்படிப்பட்ட பாவியின் இருதயத்தைக் கடைசி நேரத்தில் இளகப்பண்ணுவார் என்று எப்படி நம்பியிருக்கலாம்? இது எவ்வளவு பயங்கரமான நிலைபரம் என்று பாருங்கள். பாவியானவன் சாகும்வேளையில் மனந்திரும்ப நினைத்தாலும் மனந்திரும்புதலின் வரம் அவனுக்கு அருளப்படாமற் போகக் கூடும். கண்ணீர் விட்டு அழுதாலும் மனஸ்தாபம் இல்லாமற் போகக் கூடும். "சருவேசுரனுக்கு

ஏற்ற துக்கம் நிலைமாறாத, இரட்சணியத்துக்கு ஏற்ற மனஸ்தாபத்தை உண்டாக்கும். உலகத்துக்கு உரிய துக்கமோ மரணத்தை உண்டாக்கும்" என்றது வேத வாக்கியம் (2 கொரிந். 7; 10). இப்படியே ஆண்டவரைக் காட்டிக்கொடுத்த சதிமானத் துரோகியும் துக்கப்பட்டான். துக்கப்பட்டும், மனந்திரும்பவில்லை. ஆண்டவரை மும்முறை மறுதலித்த பேதுருவானவர் துக்கப்பட்ட போது அவருக்கு மனந்திரும்பும் வரம் கிடைத்தது. யூதாஸ்கரியோத்து துக்கப்பட்டபோது அந்த வரம் அவனுக்குக் கிடைக்கவில்லை. "நான் குற்றம் இல்லாதவரைக் காட்டிக் கொடுத்தேனே" என்று சொல்லிக்கொண்டு, அடங்காத கிலேசத்தினால் ஓடிப் போய்ப் பப்பரப் புளியிலே நான்றுகொண்டு இறந்தான். அவனுடைய வயிறு வெடித்து குடல் புறப்பட்டுச் சரிந்தது. ஆத்துமமோ மனந்திரும்பாத பாவிகளின் உபத்திரவ இருப்பிடத்துக்குப் போயிற்று. இப்படியே, உள்ள நாள் எல்லாம் சருவேசுரனுக்கு மாறாய் நடந்து கொண்டு வந்து கடைசி நேரத்தில் மனந்திரும்பலாம் என்றிருந்தவன், தன் சீவிய காலம் தன் கையிலிருந்து பறிந்து போவதையும், தனக்கோ மனஸ்தாப வரம் கிடையாமல் இருப்பதையும், தனக்கு இனி வேறொரு சீவிய காலம் இல்லாமல் மரணத்தோடே எல்லாம் தலைக்கட்டி விடப்படுவதையும் காணும் போது கொள்ளும் பயங்கரத்துக்கு இணை இல்லை. அதை உங்களுக்கு எடுத்துக் காட்ட போதிய உவமை இல்லை. அந்தப் பயங்கரம், தானே தனக்கு இணையானது. அது வெளியே தோற்றாத ஒரு பயங்கரம். ஆகையால், எந்த உவமையாலும் அதை விளக்கக் கூடாமல் இருக்கும். வெளியே தோற்றாதது என்றேன். எத்தனை பேர் வெளிக்கு நல்ல மரணம் அடைகிறவர்கள் போலக் காணப்பட்டும் நித்திய கேட்டுக்கு உரிய முடிவை அடைகிறார்கள்! மரணப் படுக்கையிலே குருவானவர் வந்து அவஸ்தைப் பூசுதல் செய்வதையும், சவத்தை வெகு துக்க ஆடம்பரங்களோடும் திருச்சபைப் பாடல்களோடும் கோவிலுக்குக் கொண்டுபோய்க் கடைசிச் சடங்குகள் எல்லாம் சரிவர நிறைவேற்றுவதையுங் கொண்டு, நாம் ஒரு முடிவும் சொல்லத்தக்கதாய் இராது. பல முறையும், அவஸ்தைப் பூசுதலும் சாச்சடங்குகளும் இனசனர்களாலே சாத்திரப்படிக்கு நிறைவேற்றப்படுகிறது என்றதையும் ஞாபகப் படுத்திக்கொள்ளுங்கள். கோவிற் சாமானும் சங்கையான அடக்கமும் இல்லாமற் போய்விடுமே என்றதற்காக குருவானவரை அவஸ்தைப் பூசுதலுக்குக் கொண்டுவரத் துரிதப்படுகிறவர்களும் உண்டு. சாச் சடங்கெல்லாம் சட்டவட்டமாய் நடந்த போதிலும், இறந்தவன் மெய்யாக மனந்திரும்பாமல், அதா

வது நன் மரண வரம் என்ற கடைசிப் பிரசாதத்தை அடையாமல், இறந்திருக்கக் கூடும். நாம் இங்கே சவத்தைப் பூசித ஆசாரத்தோடு பூமதானம் பண்ண, அங்கே ஆத்துமம் நெருப்புக் கிடங்கிலே புதைக்கப்படக் கூடும். எல்லாம் முடிந்ததே! அந்த ஆத்துமத்தின் கதி நித்தியத்துக்கும் முத்திரையிடப்பட்டதே! இது எவ்வளவு அங்கம் பதறி உளம் நடுங்கச் செய்கிற ஒரு நினைவு!

பிரியமானவர்களே, இதுவரைக்கும் நான் எடுத்துச் சொன்ன மூன்று விதமான பயங்கரமும் உங்களுக்கு வராமல் நீங்கள் பாக்கியமாய்ச் சீவித்து பாக்கியமாய் மரிக்க விரும்பினால், இன்றைக்கே உலக ஆசைகளையும் சரீர இச்சைகளையும் வீண் சங்கை வெகுமானங்களையும் வெறுத்து சருவேசுரனுக்கு நல்ல ஊழியம் பண்ணத் தொடங்கிக்கொள்ளுங்கள். மரணம் நிச்சயம் ஆகையால், அதைப் பற்றிய நினைவைப் பின்னுக்குப் பின்னுக்குப் போட்டு வையாமல், ஒவ்வொரு நாளும் அந்த நினைவோடு நடந்து ஆயத்தமாயிருங்கள்.

நடக்கையிலோ இருக்கையிலோ கிடக்கையிலோ பிறரோடு
நான் நீ என்ன
உடற்றலிலோ உண்கையிலோ உடுக்கையிலோ உயிர்போவது
உணரேன் மாய
விடக்கையிலோடு உறவாக்கி அறம் புரியேன் பொதுத் தீர்வை
விளம்புங் காலம்
இடக்கையிலோ வலக்கையிலோ நிற்பவனாவேன் கருணை
எம் பிரானே

என்று பயத்தோடு இருங்கள். உலகத்தில் இருந்தாலும் உங்கள் நடபடி எல்லாம் பரலோகத்தை நாடி இருக்கும்படியாக நடந்து கொள்ளுங்கள். உலக பொருட்களையும், சரீரத்தின் விலக்கப் படாத இன்பங்களைத் தானும் பற்றில்லாத விதமாய்ப் பாவிக்கப் பழகிக் கொள்ளுங்கள். இவைகளோடு நீங்கள் "ஓடும் புளியம்பழமும் போல" ஊடாடி வர வேண்டியது. எல்லாத்தையும் தேவ தோத்திரத்துக்காக ஆண்டு அனுபவிக்கிறது ஒழிய, அவைகளிலே நீங்கள் அமிழ்ந்தி முக்குளித்துப் போகப்படாது. செய்த பாவங்களுக்காக மனஸ்தாபப் பட்டு மனந் திரும்பித் தவத்துக்கு உரிய கிரியைகளைச் செய்து புண்ணியஞ் சம்பாதிப்பதைப் பின் போட வேண்டாம். நாளை நாளை என்று சொல்லிக் கொண்டு வந்தால் அந்த "நாளை" ஒரு நாளும் வராது. நாமும் காத்திராத மரணத்துக்கு உள்ளாகி, இந்தப் பிரசங்கத்திலே காட்டின மூவித பயங்கரத்துக்கும் ஆளாகி விடுவோம். நன்மையான காரியம் ஒன்றை

யும் நாளைக்கு என்று வைக்கப் படாது. நாளை நம்முடையது அல்ல, இன்றுதான் நம்முடையது. அஞ்ஞான சாஸ்திரிகளும் இதை வற்புறுத்தியிருக்கிறார்கள்.

நன்றே செய்யவும் வேண்டும்—நன்றும்
இன்றே செய்யவும் வேண்டும்

என்றது ஒரு தமிழ் வாக்கியம். பின் போட்டு வைத்தாலோ மனந் திரும்பாமல் மரிக்கிற பெரும் ஆபத்து, நித்தியமும் அழுதழுது புலம்ப வேண்டிய ஆபத்து வந்து சூழும். பின் போட்டு வைக்கப் பண்ணுவதெல்லாம் பிசாசின் தந்திர சூழ்ச்சியான சோதனை. இந்தப் படா வஞ்சனையான துர்ப்புத்திக்கு இணங்காமல், இன்றைக்கே மனந்திரும்பி ஆண்டவருடைய திருப்பாதத்தை அடையக் கடவோம். அளவில்லாத இரக்கமுள்ள பிதாவானவர் நம்முடைய பாவங்களைப் பொறுத்து, நாம் தம்மை நேசித்து சேவிக்கிறதற்கு வேண்டிய வரப்பிரசாதங்களை ஏராளமாய்த் தந்து, நம்மைத் தம்முடைய பாதைகளிலே நடத்தி, நமக்குப் பயங்கரம் இல்லாத நல்ல மரணந் தந்து, ஒருநாள் தமது திருமுக தரிசனத்தையும் அளித்தருளுவார்—ஆமென்.

இரண்டாம் நாள்

Instruction : On Self-denial

காலைப் போதனை :

தன் சிலுவையைச் சுமந்துகொண்டு செல்லல்

பிரியமான கிறீஸ்தவர்களே, மோட்சத்தை அடைகிறது தான் நமது சீவியத்தின் ஒரே இலக்கு. அதற்காகத்தான் சருவேசுரன் நம்மை உண்டாக்கினார். நாம் மோட்சத்தை அடைய வேண்டுமானால் நம்முடைய பரம குருவாகிய யேசுநாதசுவாமியைப் பின்பற்றுவது அவசியம். அவரே நம்முடைய வழியும் உண்மையும் சீவியமும் ஆனவர் (அருளப். 14; 6). அவருடைய திருப் போதகங்களுக்கெல்லாம் அத்திவாரமான போதகம் ஒன்றை இப்போது உங்களுக்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். யேசுநாதசுவாமி “ எல்லாரையும் நோக்கித் திருவுளம்பற்றியதாவது: யாராவது என் பின்னே வர விரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து தன் சிலுவையை அனுதினமும் சுமந்து கொண்டு என்னைப் பின்பற்றி வரக்கடவான் ” (லூக். 9; 23) என்றார். இந்தப் போதகத்திலே ஐயப்பாட்டுக்கு இடமில்லை. ஆண்டவர் சகலரையும் நோக்கிச் சொல்லுகிறார்—சந்நியாசிகள் தவத்தாளிகளை மாத்திரமல்ல, சகலரையும். ஏனென்றால், மோட்சத்தை அடைய விரும்புகிறவர்கள் எவர்கள் எவர்களோ அவர்களெல்லாரும் அவரைப் பின்பற்ற வேண்டியவர்கள். இனி, ஆண்டவரை நாம் எல்லாரும் பின்பற்ற வேண்டிய முறை என்ன ? அனுதினமும்—இதைக் கவனியுங்கள்—அனுதினமும், அதாவது ஒவ்வொரு நாளும், நாம் எமது எமது சிலுவையைச் சுமந்துகொண்டு தமக்குப் பின்னே வர வேண்டுமாம். எமது எமது சிலுவை என்றது என்ன? இதுதான் தன்மறுப்பு

என்கிற புண்ணியம். நாம் நாள்தோறும் நம்மை மறுத்து, அதாவது நம்முடைய ஆசாபாசங்களை அடக்கி, மனம் போன போக்கெல்லாம் போகாமல் நம்மை மட்டுப் படுத்தி, ஆண்டவருடைய சிலுவையின் பாதையிலே நடக்க வேணும். தன்மறுப்பு இல்லாமல் நாம் கிறீஸ்து நாதருடைய சீஷராய் இருக்க முடியாது. தன் மறுப்பு இல்லாமல் புண்ணிய வளர்ச்சியும் இல்லை.

1. நம்முடைய அன்பு நிறைந்த மீட்பராகிய யேசுநாதசுவாமி பாவச் சகதியிலே தவழ்ந்துகொண்டிருந்த மனுக்குலத்தை அந்த மோசமான சகதியிலேயிருந்து வெளியேற்றி பரலோக பாதையிலே நடப்பிக்கவென்று இவ்வுலகத்துக்கு எழுந்தருளுகிறவரானார். இதற்காக அவர், பாவம் ஒன்று தவிர, மற்றும் மனுஷ சுபாவத்துக்கு உரிய சகல பலவீனங்களையும் கையேற்று (மத். 8; 17), மனிதர் மத்தியில் ஒரு மனிதனாக விளங்கி, நமக்கெல்லாம் முன்மாதிரிகையான ஒரு சீவியத்தை நடப்பித்துக் காட்டினார். அந்தச் சீவியமோ முழுதும் தம்மை மறுத்து நடத்திய சீவியம் அல்லாமல் வேறல்ல. பெரிய வெள்ளிக்கிழமையன்று மாத்திரம் அவர் நமக்காகப் பாரமான மரச்சிலுவையைச் சுமக்கலானார். ஆனால், அதற்கு முன் தமது திருச்சீவிய காலம் முழுதுமே, பெத்தலேமின் புல்லணை தொடக்கமாகவே, மரச்சிலுவையிலும் அதிக பளுவான ஒறுத்தல் என்னும் மனச் சிலுவையை அனுதினமும் ஓயாமற் சுமந்துகொண்டு வரலானார். “ கிறீஸ்து நாதர் தமது பிரியப்படி நடவாமல், உம்மை நிந்திக்கிறவர்களுடைய நிந்தைகள் என்மேல் விழுந்தது என்று எழுதியிருக்கிறபடியே நடந்தார் ” (ரோமர் 15; 3). அவர் தாமே திருவுளம்பற்றியபடி : “ என் சித்தத்தின்படி அல்ல என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான் பரலோகத்தினின்று இறங்கி வந்தேன் ” (அருளப். 6; 38). நம்முடைய தாறுமாறான ஆசாபாசங்களைப் போல ஆண்டவருடைய கீழ் அங்கிஷம் அவருடைய மேல் அங்கிஷத்துக்கு எதிராய் ஒருபோதும் கிளம்பியிருக்கக் கூடாது. ஏனென்றால், அவருடைய திரு மனுஷீக சித்தம் தேவ திருச் சித்தத்துக்கு எப்போதும் கீழ்ப்படிந்திருந்ததும் அல்லாமல், இரண்டு சித்தமும் ஒரு தேவ ஆளிலே தானே தங்கியிருந்தது. தேவ ஆளுடைய சித்தத்திலேயும் கீழ் அங்கிஷத்திலேயும் ஒருபோதும் எந்த நெறிகேடும் வர முடியாது. இப்படி இருந்தாலும், நெறிகேட்டுக்கு உட்பட்ட நமக்கு முன்மாதிரிகை காட்டும்படியாக, ஆண்டவர், தாம் மனித சுபாவத்திலே

யாதொரு தவறும் இல்லாமல் அனுபவிக்கக் கூடிய சுகங்களைத்தானும் வெறுத்து, சிலுவையையே எப்போதும் சுமந்துகொண்டார். “ தமக்கு முன்னே சந்தோஷம் வைக்கப்பட்டிருந்தபோதிலும் அவமானத்தை எண்ணாமல் சிலுவையையே சகித்தார ” (எபி. 12; 2).

தம்மை மறுப்பதும் சிலுவையைச் சகிப்பதும் ஆண்டவருக்கு அவசியமாய் இருக்கவில்லை. நமக்கோ அது அவசியம்; இன்றியமையாத ஒரு அவசியம். ஏனென்றால், சென்ம பாவ தோஷத்தினால் நம்முடைய ஆசாபாசங்கள் நெறி தப்பி எழுந்து நம்மை எப்போதும் பாவ வழியிற் செலுத்திக்கொண்டிருக்கப் பார்க்கும். கடிவாளமும் சவுக்கும் முள்ளுக்களும் இல்லாமல் குதிரையில் ஏறினவன் பாடு எப்படியோ, அப்படியே தன்மறுப்பு இல்லாதவன் பாடும் இருக்கும். குதிரைச் சவாரிக்காரன் கடிவாளத்தைச் சரியாய்ப் பிடித்துச் சவுக்கை விசுக்கி தன் காற் குழைச்சுகளில் மாட்டிய முள்ளுக்களால் இடுக்கிக்கொண்டு வந்தால், குதிரை போக வேண்டிய பாதையால் போகும். கடிவாளம் இல்லாமலும், சவுக்கு முள் இல்லாமலும் ஏறியிருக்கிறவனை, அந்த மிருகம் தன் எண்ணத்துக்கு இழுத்துக்கொண்டு ஓடி, எந்தப் பற்றையிலோ எந்தக் கிடங்கிலோ விழுத்தி விடும் என்று சொல்ல முடியாது. தன்மறுப்பு இல்லாமல் ஆசாபாசங்களின் நெறிகேடுகளை அடக்கி ஆளுவது கூடாத காரியம். ஆசாபாசங்களை அடக்கி ஆளாமல், கிறீஸ்துநாதருடைய சீஷராயிருப்பது எப்படி? கிறீஸ்து நாதருடைய சீஷராய் இராமல், மோட்சத்தை அடைவது எப்படி? இதினாலேதான் அர்ச். சின்னப்பரும்: “ கிறீஸ்து நாதருடையவர்கள் தங்கள் மாமிசத்தையும் அதின் துர் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்துவிட்டவர்களாம் ” என்று வசனித்தார் (கலாத். 5; 24). இதிலே சீஷனானவர் தம்முடைய குருவின் திருப் போதகத்தை எடுத்து எதிரொலி பண்ணினார் ஒழிய வேறு அல்ல. பரம குருவானவர்: “ தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின் செல்லாதவன் எனக்கு ஏற்றவன் அல்ல ” (மத். 10; 38), “ யாதொருவன் தன் சீவனையும் வெறுக்காவிட்டால் எனக்குச் சீஷனாய் இருக்க மாட்டான் ” (லூக். 14; 26) என்று திருவுளம்பற்றின போதகத்தைத்தான் சின்னப்பர் வியாக்கியானம் பண்ணி: நாம் ஆண்டவருடைய சீஷராய் இருக்கவேணுமானால் நம்முடைய ஆசாபாசங்களையும் சரீரத்தையும் சிலுவையில் அறைய வேணும் என்றார். இப் போதகத்தைத்தான் அர்ச். அகுஸ்தினார் வேறொரு விதமாய் வற்புறுத்துகிறார். அதெப்படியென்றால்: “ நீ யேசுக்கிறீஸ்து நாத

ருடைய சிலுவையைச் சுமந்துகொள்ளாவிட்டால் இன்னும் அவருடைய சீஷன் ஆகவில்லை. உன்னுடைய இச்சைகளையும் நெறிகெட்ட ஆசைகளையும் சிலுவையில் அறையாவிட்டால் நீ கிறீஸ்துநாதருக்குச் சேர்ந்தவன் அல்ல ” என்கிறார். அர்ச். மகா சிங்கராய பாப்பானவரும் சின்னப்பர் எழுதிய வேறொரு வேதவாக்கியத்தை (ரோமர் 6; 4) வியாக்கியானம் பண்ணிக் கிறீஸ்தவர்களுக்குச் சொல்லுவது: “ ஞானஸ்நானத்தினால் யேசுக்கிறீஸ்து நாதருடைய அவயவங்கள் ஆகிவிட்டீர்கள்; ஆதலால் உங்களை மறுத்து நடந்துகொள்ளுங்கள். கொள்ளாவிட்டால், அவருடைய அங்கங்கள் என்ற சுதந்திரத்தை இழந்து போவீர்கள் ” என்றார்.

இந்தப் போதகத்தை ஆண்டவருடைய அடியார்கள் எல்லாரும், உண்மையான கிறீஸ்தவர்கள் எல்லாரும், தங்கள் நாளாந்த சீவியத்தில் அனுசரித்துக் காட்டியிருக்கிறார்கள். ஆண்டவருடைய அப்போஸ்தலர்களது சீவியமெல்லாம் தன்மறுப்புத்தான். “கிறீஸ்து நாதருடனே கூடச் சிலுவையில் அறையப்பட்டிருக்கிறேன் ” (கலாத். 2; 19), “ கர்த்தராகிய யேசுவுடைய காயத் தழும்புகளை என் சரீரத்திலே தரித்துக்கொண்டிருக்கிறேன் ” (கலாத். 6; 17), “ மற்றவர்களுக்குப் பிரசங்கம் பண்ணுகிற நான் தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன் ” (1 கொரிந். 9; 27) என்று புறச் சாதிகளின் அப்போஸ்தலர் சொல்லியதை மற்றவர்களும் முழு உண்மைப்படி சொல்லக் கூடியவர்களாய் அல்லவோ நடந்தார்கள்! அப்போஸ்தலர்களிடத்திற் போலவே சகல நல்ல கிறீஸ்தவர்களிடத்திலும் தன்மறுப்பு என்கிற ஒறுத்தல் எப்போதும் காணப்படும். தன்மறுப்பு இல்லாமல் கிறீஸ்த சீவியமில்லை.

பிரியமானவர்களே, நான் இப்போது கடின ஒறுத்தல் உபவாசங்களைப் பற்றி, சரீரத்தை இரத்தம் பீரிட்டு ஓடக் கசைகளால் அடிப்பதைப் பற்றி, வனவாசத்திலே இருந்து தவம் பண்ணுவதைப் பற்றிப் பேசவில்லை. கிறீஸ்து வேத சீவியத்துக்கு அத்திவாரமாகிய தன்மறுப்பைப்பற்றி மாத்திரம் பேசுகிறேன். தன்னை மறுத்து நடவாமல், மனம் போன போக்கெல்லாம் நடந்துகொண்டு கிறீஸ்துநாதருடைய சீஷனாய் இருக்கலாம், மோட்சத்தை அடையலாம் என்று நம்பி மோசம் போகாதேயுங்கள். ஆண்டவர் திருவுளம்பற்றின படியே: “ பரலோகத்துக்குச் செல்லுகிற பாதை ஒடுக்கமானது; அதின் வாசலும் இடுக்கமானது. நரகத்துக்கு நடக்கிற பாதையோ விசாலமானது; அதின் வாசலும் விட்டுவீதியானது; அதில் பிரவேசிக்கிறவர்களும் அனந்தம் பேர் ” (மத். 7; 14).

ஒடுக்கமான பாதையால் போகாமல், அதாவது உங்கள் ஆசாபாசங்களை அடக்காமல், சரீரம் என்கிற குதிரைக்கு நல்ல கடிவாளம் போடாமல் இருந்தால், அல்லது, ஆண்டவருடைய வாக்கியப்படியே, உங்கள் சிலுவையை ஒவ்வொரு நாளும் சுமந்துகொண்டு அவர் பின்னே நடவாவிட்டால், நீங்கள் கிறீஸ்து நாதருடையவர்களும் அல்ல, அவர் தம்முடையவர்களுக்கு என்று திறந்துவிட்டிருக்கிற மோட்ச இராச்சியத்துக்குப் பங்காளிகளும் அல்ல.

2. தன்மறுப்பு இல்லாமையினாலேதான் நாம் புண்ணியத்தில் வளராமல் பாவச் சகதியிலே கிடந்து புரளுகிறோம். மனதிலே வந்த வந்த எண்ணம் எல்லாத்துக்கும் இடங்கொடுத்து, கண் விரும்பியதை எல்லாம் பார்க்க, காது விரும்பியதை எல்லாம் கேட்க, வாய் விரும்பியதை எல்லாம் பேச விட்டுக்கொண்டு வந்தால், பாவத்தை விலக்குவது எப்படி? புண்ணியத்தைச் செய்வது எப்படி? ஒருவனை அசுத்த நினைவுகள் வந்து எப்போதும் மொய்த்துப் பிடித்துக்கொண்டிருக்கிறதற்குக் காரணம் என்ன? ஒரு முக்கியமான காரணம் கண்ணை அடக்கி நடவாததுதான். கண் இச்சித்ததையெல்லாம் பார்த்துக்கொண்டு வரவர, கற்புக்கு அடாத ரூபங்கள் தன்னை அறியாமலே மனதிலே பதிந்துகொள்ளும். பிறகு காத்திராத நேரத்திலே அந்த ரூபங்கள் தலை காட்டவே, மொலுமொலுவென்று துர் எண்ணங்கள் ஆசைகள் பிறந்துகொண்டிருக்கும். ஆசைகள் முற்றிக் கிரியைகளாகிறதற்கு நேரஞ்செல்லுமா?

கண்ட நின்ற கதையெல்லாத்துக்கும் காதைத் திறந்து பிடித்துக் கொண்டிருப்பதினாலும் இப்படியே பல பாவ எண்ணங்களுக்கும் ஆசைகளுக்கும் இடம் உண்டாகும். தெருத்திண்ணைகளிலே எத்தனை பிற சிநேகத்துக்கு மாறான கதைகள் பேசுவார்கள்! எத்தனை ஆவலாதிகள்! எத்தனை அழுகற் பேச்சுக்கள்! பலமுறையும், வேதத்துக்கும் திருச்சபைக்கும் ஆசாரக் குறைவான எத்தனை சன்னை சூசனைகள்! இப்படிப்பட்ட பேச்சுக்களுக்கு மனம் பொருந்திச் செவி கொடுத்தால், மெல்ல மெல்ல மனம் பழுதாகி, இருதயம் உளுத்து, பாவச் சோதனைகளுக்கு அகலமான வழி திறந்துவிடப்படாமல் இருக்குமா? காற்றுடன் நெருப்புப்போல இந்தச் சோதனை நேரத்திலே பிசாசும் ஒரு கை பாராமல் விடுமா? வாய்க்குக் கடிவாளம் போடாமல் விடுவதினால், எத்தனை மனஸ்தாபங்கள் சண்டை சச்சரவுகள் பழி பாதகங்கள் உண்டாக வழியாகிறது!

நேரத்தோடு தன்னை மறுத்து இச்சைகளை அடக்கிவையாததினாலேதான், கோபம் குடிவெறி முதலிய பல பாவங்கள் விளைகிறது அல்லவா? புத்தியில்லாத மிருகமானது தன்னிச்சை தூண்டித்தூண்டி விட்டபடி அதையும் இதையும் செய்வதுபோல, நாமும் தன்னடக்கம் இல்லாமல் நினைத்த நினைத்தபடியெல்லாம் செய்தால் ஒருபோதும் பாவத்தை விலக்கமாட்டோம். ஒரு போதும் புண்ணிய பாதையில் நடக்கமாட்டோம்.

தன்மறுப்பிலே நாள்தோறும் பழகாதவர்கள் செய்கிற நற்கிருத்தியங்கள் புண்ணியங்களைப் போலத் தோற்றினாலும் உள்ளபடி அவைகள் புண்ணியங்கள் அல்ல. இரகசியமான பழிவாங்கும் மனதை, மோக இச்சைகளை, பொருளாசையை, அகங்காரத்தை மறித்து அடக்க யாதொரு முயற்சியும் பண்ணாமல், எத்தனை பேர் சிலசில வெளி ஆசாரங்கள்தான் புண்ணிய சீவியம் என்று எண்ணி மோசம் போகிறார்கள்! இவர்கள் வழக்கமான செபத்தை விடார்கள்; பூசையைப் பிரார்த்தனையை மறவார்கள்; வாடிக்கையான காலங்களில் ஒப்பாசாரமாய்ப் பாவசங்கீர்த்தனமும் பண்ணிச் சற்பிரசாதமும் பெற்றுக்கொள்ளுவார்கள்; ஆனால் தங்களுடைய துர்நாட்டங்களையோ எதிர்த்து போராடுவதில்லை. தன்மறுப்பு என்கிற சிலுவையையோ நாள்தோறும் சுமக்கிறதில்லை. அதினால், அடிக்கடி மீண்டும் மீண்டும் அதே பாவத்தில் விழுவார்கள். பாவப் பழக்கங்களை முற்றாக அகற்றிப் புண்ணிய சீவியத்தை தொடங்கவோ ஒருபோதும் மனம் ஒத்த பிரயத்தனம் செய்வதில்லை. இப்படிப்பட்டவர்களுடைய வேத அனுசரிப்புக்கள் எல்லாம் புண்ணியந்தானா? ஒரு போதும் இல்லை. அடித்தளத்திலே பாவ முள்ளுப் படர்ந்திருக்கும்போது புண்ணியங்கள் வளர்ந்து சவிகொள்ள இடம் ஏது? தன்மறுப்பு என்கிற மண்வெட்டியால் பாவமுள்ளுப் பற்றையை வெட்டிப் பிரித்தால் ஒழிய புண்ணிய விதை முளைப்பதும் இல்லை, வளர்வதும் இல்லை.

கிறீஸ்தவர்களே, நாம் சிலுவையைச் சுமந்துகொண்டு போய் சிலுவையில் அறையுண்ட நாதருடைய சிலுவையின் வேதத்தை அனுசரிக்கிறவர்கள். ஆதலால், நம்முடைய நாதரின் சொற்படி நமது சிலுவையை நாள்தோறும் சுமந்துகொண்டு அவரைப் பின்பற்ற வேண்டியவர்கள்: அதாவது நாள்தோறும் நம்மை நாமே மறுத்து, நம்மை நாமே அடக்கி, பாவ இச்சைகளை ஒறுத்து புண்ணிய வழியிலே நடப்பது நமக்குக் கடமை. இந்தத் தன்மறுப்புதான் நமது சீவியத்துக்கு அச்சாணி போல இருக்க வேண்டியது. நமது புண்ணியப் பழக்கம் எல்லாம் அதிலே நின்று ஆடவேண்டியது. கடின தபசுகள் ஒருசந்தி ஒறுத்தல்கள் எப்போதும் அவசியமாயிராது. இதுவோ எப்போதும் அவசியம். இது இல்

லாமல் புண்ணியமில்லை; மோட்சமில்லை. ஆதலால், இன்று, நாம் இனிமேல் நம்முடைய பஞ்ச புலன்களை அடக்கி நடக்க நல்ல பிரதிக்கினை செய்துகொள்ளக்கடவோம். விசேஷமாய், இந்த ஞான ஒடுக்க நாட்களில் கண்களை, காதுகளை, எல்லாத்திலும் அதிகமாய் வாயை அடக்குவோமாக. மிதமிஞ்சிய நித்திரையை, தீனிலே அதிக ஆசையை, சரீரச் சொகுசை மட்டுப்படுத்தி, நமது தேகத்தையும் சற்றே ஒறுப்போமாக. அப்போது ஞான ஒடுக்கத்துக்கு வேண்டிய அடக்கமும் ஒடுக்கமும் நம்மிடத்தில் காணப்படும். சருவேசுரனும் நமக்கு வேண்டிய விசேஷ வரப்பிரசாதங்களையெல்லாம் ஏராளமாய் நமக்குப் பொழிந்தருளுவார். இப்படியே நாம் தேவ உதவியினால் முற்றாக மனந்திரும்பி, ஆண்டவருக்கு ஏற்ற உத்தம கிறீஸ்த சீவியத்தை நடத்தி, ஒரு நாள் அவருடைய பேரின்ப திருமுக தரிசனத்தையும் அடைந்து கொள்ளுவோம்—ஆமென்.

SERMON :

On the day of Reconning

மாலைப் பிரசங்கம்

தனித் தீர்வையின் கணக்கு வரையறை

" Redde rationem villicationis tuae "
(Luke XVI 2)

" உன் உக்கிராணக் கணக்கை ஒப்புவி " (லூக். 16, 2).

மரணம் எவ்வளவு நிச்சயமோ, மரணத்தின்பின் நடக்கப்போகிற தனித்தீர்வையும் அவ்வளவு நிச்சயம். யாராவது தான் என்றுகூடியும் ஒருநாட் சாகவேணும் என்றதை மறுக்கக் கூடுமா? பித்துப் பிடித்தவர்கள் ஒழிய, வேறு ஒருவரும் தாங்கள் ஒருநாட் சாகவே சாகவேணும் என்பதைத் தட்டிப் பேசமாட்டார்கள். இனி, சாவு என்றது என்ன? ஆத்துமமானது சரீரத்தை விட்டுப் பிரிந்து போவது தானே. பிரிந்த ஆத்துமம் தன்னைப் படைத்தவரிடத்திலே தனது சீவியத்தின் கணக்கைக் கொடுக்கப் போகாமல் விட முடியாது. இவ்வித கணக்குக் கேட்டலுக்குத் தான் தனித்தீர்வை என்ற பெயர் திருச்சபையில் வழங்கும். இதைச் சும்மா தீர்வை என்று சொல்லாமல், தனித்தீர்வை என்று சொல்லுவது என்னத்திற்காக என்றால், அவரவர் செத்த உடனே சொல்லப்படுகிற தீர்வையைத் தவிர, உலக முடிவிலே சகல மனுஷருக்கும் பொதுவான ஒரு தீர்வையும் நடப்பதாகும். ஆதலால், உடனுக்குடனே அவரவருக்கு நடக்குந் தீர்வைக்கு தனித்தீர்வை என்றும், கடைசி நாளிலே சகலருக்கும் ஒருங்கே வரப் போகிற பயங்கரமான நடுவுக்கு பொதுத்தீர்வை என்றும் பெயர் சொல்லப்படும். மனுஷனை உண்டாக்கிக் காப்பாற்றி அவனுக்குக் கணக்கில்லாத நன்மைகளைச் செய்துகொண்டுவருகிற அளவில்லாத வல்லமை உள்ள கர்த்தாவாகிய சருவேசுரன், தாம் உலகத்திலே தமக்குப் பணிவிடை செய்ய வைத்த ஊழியனாகிய மனுஷனிடம் கணக்குக் கேளாமல் விடமாட்டார். " உன் உக்கிராணக் கணக்கை ஒப்புவி " என்ற வேத வாக்கியம் இறந்து போகிற ஒவ்வொரு ஆத்துமத்துக்கும் சொல்லப்படாமற் போகாது. நாம் ஒவ்வொரு

வரும் பிந்தியோ முந்தியோ நமது சீவிய காலத்தின் கணக்கை ஆண்டவரிடம் ஒப்பிக்கப் போகவே போகவேண்டும்.

இந்தக் கணக்கு ஒப்பிப்போ (1) தப்பாமல் ஒரு நாள் நடக்கப் போகிறது. (2) இனிமேல் இல்லை என்ற வரையறையோடு நடக்கப் போகிறது. இப்போது நான் எடுத்துச் சொன்ன இந்த இரண்டு பிரிவிலேயும் அல்லது துறையிலேயும் இன்றையில் மாலைப் பிரசங்கம் அடங்கும். தனித்தீர்வையைப் பற்றிய தியானம், பிரியமான கிறீஸ்தவர்களே, உங்களுடைய ஆத்துமங்களுக்கு மிகவும் பிரயோசனமானது; உங்கள் ஈடேற்ற அலுவலுக்கு எவ்வளவோ உதவியானது. நேரத்தோடு உங்களை நீங்களே நியாயந் தீர்த்துக் கொண்டால், நீங்கள் ஆண்டவருடைய நீதியாசனத்தின் முன் போய் நிற்க வேண்டிய அந்தத் திகில் உறுத்துகிற நேரத்திலே மனச் சமாதானம் நிறைந்த நம்பிக்கையோடு கணக்குக் கொடுக்கத் தக்கவர்கள் ஆவீர்கள். உங்கள் கணக்கைப் பார்த்து வைக்கிற அலுவலைப் பின்போட்டுப் பின்போட்டுக்கொண்டு வந்தாலோ, முழுக் கணக்கையும் தப்பாமல் ஆதியோடு அந்தமாய், கடைசித் தரமாய்த் தீர்க்க வேண்டிய அந்த நேரத்தில், சொல்லமுடியாத கவலைகொண்டு ஊழியுள்ள காலத் துயரத்தை அடையவேண்டி வரும். ஆதலால் உங்களால் இயன்ற முழு ஊக்கத்தோடும் தாழ்மையான செபகுணத்தோடும் இந்தப் பிரசங்கத்தைத் தயவாய்க் கேளுங்கள். சருவேசுரனும் அவருடைய திருமாதாவும் இந்தப் பிரசங்க வேளையில் உங்களுக்கும் எனக்கும் வேண்டிய சகல அனுக்கிரக உதவிகளையும் பண்ணுவார்களாக! (பிரியதத்தம்).

I

சரீரத்தை விட்டுப் பிரிந்த ஆத்துமம் தன்னைப் படைத்தவருக்குக் கணக்குக் கொடாமல் தப்பிப் போய்விட முடியுமோ? “சாவுக்குப்பின் நடக்கிறதை யார் அறிவார்? அதை யார் கண்டது?” என்று நாம் சொல்லிக் கொண்டு கவலையற்று இருக்க முடியுமோ? ஒருபோதும் முடியாது. ஏனென்றால், செத்தவுடன் தனித்தீர்வை என்றது எடுத்து வைத்துச் சொல்லுகிற ஒரு உவகதையல்ல; அது சருவேசுரன் தாமே நியமித்தருளின ஏற்பாடு; வேத புத்தகத்திலே வெளிப்படையாய்க் காட்டியிருக்கிற ஒரு சம்பவம். “மனிதர் ஒரே தரம் மரிக்க வேண்டும் என்றும் அதற்குப் பின் நடுத்தீர்வை என்றும் நியமிக்கப்பட்டிருக்கிறது” (எபிரே. 9; 27). நியமிக்கப்பட்டிருக்கிறது—இது ஒரு தேவ நியமிப்பு. எவராலுங் கடக்க முடியாத, ஒருபோதும் மாறாத ஒரு நியமிப்பு. “சரீரத்

தில் அவனவன் செய்த நன்மைக்கும் தின்மைக்கும் தக்க பலனை அடையும்படிக்கு நாமெல்லாரும் கிறீஸ்து நாதருடைய நியாயாசனத்துக்கு முன்பாக வெளிப்படவேண்டும்” என்றதும் வேத வாக்கியம் (2 கொரி. 5; 10. ரோ. 14; 10). வெளிப்படவேண்டும்—இதற்கு வேறு போக்கில்லை. மோட்ச சம்பாவனைக்குரிய சுத்தவாளரும் அந்த நீதியாசனத்துக்கு முன்பாக வெளிப்பட வேண்டும்; நரக தண்டனையை அடையப்போகிற நிர்ப்பாக்கிய பாவிகளும் அதே நீதியாசனத்துக்கு முன்பாக வெளிப்பட வேண்டும்.

வேத வாக்கியமானது சந்தேக விபரீதத்துக்கு இடமில்லாமல், தெட்டத் தெளிவாய்க் காட்டுகிற இந்த உண்மைக்கு, நம்முடைய புத்தியும் சாட்சி சொல்லும். அளவில்லாத கருணையோடு நம்மைப் படைத்து, மட்டில்லாத உதார குணத்தோடு நமக்கு வேண்டியது வேண்டியது எல்லாந் தந்து காப்பாற்றி, நமக்காகத் தமது திரு உதிரத்தையுஞ் சிந்தின சருவேசுரன், இத்தனை மகத்தான நன்மைகளுக்கு எல்லாம் யாதொரு கணக்கும் கேளாமல் விட்டுவிடுவாரோ? “ஆற்றிலே போடுகிலும் அளந்து போடு” என்றபடி, புத்தியுள்ளவன் எவனும் தான் யாதொரு அலுவலுக்காகக் கொடுப்பதைக் கணக்கோடு கொடுப்பான்; கொடுத்ததற்கு வகையும் கேட்பான். உங்களில் ஒரு ஆள் தனக்குக் கீழ்ப்பட்ட ஒருவனிடம்: “இந்தா இந்தக் காசு பத்துப் பவுணையுங் கொண்டுபோய் எனக்கு இன்ன இன்ன வேலை செய்து முடித்துவிடு”, அல்லது “இன்ன இன்ன சாமான் வாங்கிக்கொண்டு வா” என்று கொடுத்துவிட்டு, பிறகு, தான் கொடுத்த காசைப்பற்றி, வேலையாள் செய்த வேலையைப்பற்றி, வாங்கின சாமானைப் பற்றி நினையாமலும் கணக்குக் கேளாமலும் விடுவது உண்டோ? ஒருபோதும் இல்லை. நியமித்துக்கொண்ட கெடு முடிந்த உடனே வேலை செய்து நிறைவேற்றா விட்டால், சாமான் வராவிட்டால் உடனே ஆளைத் தேடிப் பிடித்து “என் காசை வை அல்லது வேலையை முடி; சாமானைத் தா” என்று நெருக்காமல் விடுவது உண்டோ? சித்தப்பிரமை கொண்ட ஒருவன்—மண்டைக் கலக்கமுள்ள ஒருவன்—மாத்திரம் தன் பணத்தைக் கணக்கு வழக்கில்லாமல் எறிந்து போட்டு இருப்பான். சருவேசுரனோ அனந்த ஞானம் உள்ளவர். மனத்தடுமாற்றத்தின் நிழல் தானும் அவரிடத்தில் வராது. அவர் நமக்குத் தந்ததை எல்லாம் கணக்கோடு தந்திருக்கிறார். ஆதலால், தந்த கொடைகளுக்குத் தக்கபடி கணக்குங் கேட்பார். இது கொஞ்சமும் ஐயப்பாட்டுக்கு இடம் இல்லாத ஒரு நிச்சயம். “மனுஷன் பேசும் வீணான சகல வார்த்தைகளைக் குறித்தும் நடுத்தீர்ப்பு நாளிலே கணக்கு ஒப்பு

விக்க வேண்டும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று ஆண்டவர் தாமே திருவுளம் பற்றவில்லையா? (மத். 12; 36) அவர் தந்த நாவைக்கொண்டு நாம் பேசுகிற வீண் வார்த்தைகளுக்குமே கணக்கு ஒப்புவிக்க வேண்டுமானால், மற்றக் கொடைகளைப் பற்றி என்ன சொல்லுவோம்! எவ்வளவு கட்டாயமான ஒரு நடுத்தீர்ப்பு! எவனாவது அந்தத் தீர்ப்புக்கு உட்படாமற் தப்புவது எப்படி?

உலக சுக போகங்களிலே கருத்து வைத்து நடக்கிறவர்களுக்கு நடுத் தீர்ப்பைப் பற்றி நினைக்க மனம் இல்லை. நடுத்தீர்ப்பும் இல்லை, நடுவரும் இல்லை, நம்மை மீட்க வந்த யேசு நாதரும் இல்லை என்று தங்களைத் தாங்களே நம்பப் பண்ணிக்கொள்ள அவர்கள் வெகு பிரயாசப் படுவார்கள். இப்படிப்பட்டவர்களை நோக்கி வேத வாக்கியம் சொல்லுவதாவது: "வாலிபனே, உன் இளமையிலே சந்தோஷப்படு; உன் வாலிப நாட்களிலே உன் இருதயம் உன்னைப் பூரிப்பாக்கட்டும்; உன் நெஞ்சின் வழிகளிலும் உன் கண்களின் காட்சிகளிலும் நட. ஆனாலும், இவை எல்லாவற்றினும் நிமித்தம் சருவேசுரன் உன்னை நியாயத் தீர்ப்பிலே கொண்டுவந்து நிறுத்தாமல் விடார்" (எக்கிளி. 11; 9). உன்னை நீயே ஏமாற்றிக் கொண்டு உனக்கு நடுத்தீர்வை இல்லை என்றது போல நீ நடந்து கொண்டாலும் என்ன? அது ஒரு நாள் வரவே வரும் என்றது தான் இவ் வாக்கியத்தின் கருத்து. ஆதலால், பிரியமானவர்களே, நான் நன்மை தின்மை பகுத்தறியக் கூடிய ஒரு உத்தரவாதமுள்ள மனுஷனாய் இருக்கிறேன் என்பது எவ்வளவு நிச்சயமோ, நான் செய்த நன்மை தின்மைக்கு ஒருநாட் கணக்குக் கொடுக்கவேணும் என்பதும் அவ்வளவு நிச்சயம். எனக்குப் புத்தியும் தன்னிட்டமும் உள்ள ஒரு ஆத்துமம் இருக்கிற படியால் நடுத்தீர்ப்பும் உண்டு; சந்தேகமில்லாமல் உண்டு.

சாவு வந்த உடனே மனுஷனுக்கு இவ் உலகமும் அதின் சகல பொருள் பண்டங்களும், தன் சரீரமும் கூட, மறைந்து போம். "இவ்வுலகத்தின் வேஷம் கடந்து போகிறதே" என்ற வேத வாக்கியத்தின் உண்மையை அப்போதே பூரணமாக உணரலாம் (1 கொரிந். 7; 31). ஆத்துமம் சரீரத்தை விட்டுப் பிரிதலும், முகத்தை மூடிக்கொண்டிருந்த ஒரு முகமூடி விழுந்தது போல, அதின் கதி அப்போது தான் தெரியும். காசநீரால் மறைந்திருந்த கண் திடீரென வெளித்தது போல, உலக மாய்கையும் பாவ மயக்கமும் அப்போது தான் துலையும். அவ்வேளை, பாவவாளனுடைய ஆத்துமமானது தன்னை நடுத்தீர்க்கிறவருக்குத் தப்பி ஓட நினைத்து, எப்பக்

கம் பார்த்தாலும் தப்புவதற்கு வகையில்லாமல் திகைத்து நிற்கும். கூட்டை விட்டு வெளிப்பட்ட கிளிப்பிள்ளை போல் இருக்கிற ஆத்துமம் எங்கே பறந்து தப்பியோடும்? இதோ! உயரப் பறந்தாலும் அங்கே சருவேசுரன் இருக்கிறார்; பாதாளத்தை ஊடறுத்து ஓடிப் பார்த்தாலும் அங்கே அனந்த வல்லமையுள்ளவர் இருக்கிறார்; கிழக்கு முகமாய்ப் பார்த்தாலும் அங்கே சகலத்தையும் அறிகிறவர் இருக்கிறார்; மேற்கு முகமாய், வடக்காய் தெற்காய் விரைந்து போனாலும் எங்கெங்கும் சர்வ வியாபியான அனாதி நித்தியர் இருக்கிறார். "எவனாகிலும் தன்னை நாம் காணாதபடிக்கு மறைவிடத்தில் ஒளித்துக் கொள்ளக் கூடுமோ என்று கர்த்தர் சொல்லுகிறார். நாம் வானத்தையும் பூமியையும் நிரப்புகிறவர் அல்லவோ என்று கர்த்தர் வசனிக்கிறார்" (யெரேமி. 23; 24.). செத்தவனுடைய ஆத்துமம் எங்கும் நிறைந்தவருடைய சமுகத்தை விட்டு நீங்க முடியாது.

இவ்விடத்தில், கிறீஸ்தவர்களே, ஆத்துமத்தை நடுத்தீர்க்கிறவர் பிதாவாகிய சருவேசுரனுமல்ல, இஸ்பிரீத்துசாந்து சருவேசுரனுமல்ல, நமக்காக மனித சுபாவத்தைத் தரித்த சுதனாகிய யேசு நாதர்தாமே என்றதை மனதிலே வைத்துக் கொள்ளுங்கள். "பிதாவானவர்தாமே ஒருவருக்கும் நடுத்தீர்வை சொல்லாமல் தீர்வை சொல்லும் அதிகாரம் முழுமையையும் சுதனிடத்தில் ஒப்புவித்திருக்கிறார். அவர் மனுஷ குமாரனாய் இருக்கிறபடியால் நடுத்தீர்வை சொல்லும் அதிகாரத்தையும் அவருக்குக் கொடுத்திருக்கிறார்" என்பது வேத வாக்கியம் (அருளப். 5; 22—3). மனுஷ குமாரனாகிய அவரும், வேத சாத்திரிகளுடைய ஒரு அபிப்பிராயத்தின்படி, பரலோகத்திலே அல்ல, வேறொரு தூரமான தலத்திலேயும் அல்ல, அவனவன் மரித்த இடத்திலே தானே, ஒரு நொடிப் பொழுதுக்குள்ளே அந்தப் பாரதூரமான தீர்வையைச் சொல்லி முடித்துப் போடுவார் என்று நம்பவேண்டி இருக்கிறது. செத்தவன் செத்துப் போனான்தானோ என்று சூழ நிற்போருக்கு இன்னும் நிச்சயமாகவில்லை. அவர்கள் சவத்தின் கண்களை இன்னும் பிடித்து மூடவில்லை. பிரேதத்திலே இன்னும் சூடு காணப்படுகிறது. இதற்கிடையில், உடலை விட்டுப் பிரிந்த ஆத்துமத்தின் கணக்கு இதோ! கேட்கப்பட்டாயிற்று. பாக்கியமான நித்தியமோ நிர்ப்பாக்கியமான நரகக் கிடங்கோ நியமிக்கப்படுகிற மகா விளக்கம் இதோ! நடந்து முடிந்தது. சவத்தைப் புடை சூழ்ந்து கோவென்று அழுகிறவர்களுக்கு, பந்தல் போட, பாடை கட்ட, இழவு சொல்ல ஓடியாடித் திரிவோருக்கு இந்தத் தீர்வையைப்பற்றி ஒன்றும் தெரிய வராது.

செய்து கொண்டு வருகிறீர். இந்தப் பாவியோ தனக்காகச் சிலுவையிலே தொங்கின தேவரீரைப் புறக்கணித்துப் போட்டு, தனக்கு தேவரீர் பொழிந்தருளின உபகாரங்களை எல்லாம் மறந்துவிட்டு, தன்னைக் கெடுக்கிறதற்கே உள்ள நாளெல்லாம் உத்தியோகமாய்த் திரிந்த என்னைத்தான் வேணுமென்று நடந்திருக்கிறான். உம்முடைய சுத்தமான கற்பனைகளையெல்லாம் முரட்டுத்தனமாய் மீறிப் போட்டு, என்னுடைய துட்ட ஏவுதல்களுக்குத்தான் செவிகொடுத்திருக்கிறான். இவன் தேவரீருடைய பிள்ளை என்று சொல்லப்படுகிறதற்கு எள்ளளவும் பாத்திரம் இல்லாதவன்; எனக்குத்தான் என்றும் உரிமையான அடிமை. ஆனபடியால், நீதியுள்ள சருவேசுரனே, இவனை என் கையிலே தந்துவிடும் தந்துவிடும்" என்று சொல்லுவதாகும்.

அந்தப் பாவியுடைய துன்மாதிரிகையினால், துர்ப்புத்திகளினால், அசட்டைத்தனத்தினால், ஏவுதலினால் கெட்டு நரகத்தில் விழுந்த நிர்ப்பாக்கிய ஆத்துமாக்கள் அந்நேரம் ஆண்டவருடைய நீதியாசனத்தின் முன் வந்துநின்று முறைப்பாடு சொல்ல இடங்கிடைக்குமானால், அப்படிப்பட்டவர்கள் மகா புலம்பலோடு கூக்குரலிட்டு: "நீதியுள்ளவரே, முகம் பாராத நித்திய கடவுளே, சத்திய சுரூபியே, இவன்தான் எங்களைப் பாவஞ் செய்ய ஏவிவிட்டவன்; எங்களைப் பாவத்திலே விழுத்தினவன். இவனுடைய நடக்கையைக் கண்டுதான் நாங்கள் தீய வழியில் நடக்கத் தொடங்கினோம்; செங்குத்தான நரகப் பாதையில் இறங்கினோம். இவனுடைய சொல்லைக் கேட்டுத்தான், நாங்கள் தேவ துரோகம்பண்ணத் துணிந்தோம். இவன் எங்கள் ஆத்துமத்தைக் கெடுத்தான். மாசில்லாததாய் இஸ்பிரீத்து சாந்து சருவேசுரனின் பரிசுத்த ஆலயமாய் இருந்த எங்கள் இருதயத்தை இவன்தான் பிசாசின் இருப்பிடம் ஆக்கினான். பாவம் அறியாத எங்களுக்கு இவன்தான் பாவத்தைப் பழக்கினான். எங்கள் இரத்தப்பழி இவன் தலைமேல் விழுந்திருக்கிறது. ஆனபடியால், எங்களுக்குக் கிடைத்திருக்கிற தாங்க முடியாத அகோர நரகத் தண்டனையை இவனுக்குங் கொடுக்கவேணும். நாங்கள் விழுந்திருக்கிற அவியாத நெருப்புக் கிடங்கிலே இவனும் விழ உத்தரவு பண்ண வேணும், பண்ண வேணும்" என்று கேட்டுநிற்பார்கள்.

மாடு ஆடு, நாய் குதிரை முதலிய வாய்விடாச் சாதிகளுக்கு அவ்வேளை வாய் திறந்து பேச வல்லமையும் புத்தியும் கொடுக்கப்படுமானால், அதுகளும் கறுமுதல் உறுமுதல்களோடு முறைப்பட்டு: "எங்களையெல்லாம் மனுஷனுடைய பாவிப்புக்காகப் படைத்துக் கொடுத்தருளின சருவ தயாபரமுள்ள கடவுளே, இவன் எங்களைக்கொண்டு நன்றாக வேலை செய்வித்து, எங்களுடைய புரோசனத்தை எல்லாம் எடுத்து அனுபவித்துக்கொண்டு, தேவரீர் செய்த உபகாரங்களுக்கு எவ்விதத்திலாவது நன்றி பாராட்டாமல், தேவரீருக்கு தன் வாழ் நாளெல்லாம் துரோகமே பண்ணியிருக்கிறான். இவனை எங்கள் கண் காணாத இடத்திலே தள்ளிவிட்டு, நீதிப்படியே சகல உலகமும் கேட்டுக் கிடுகிடுக்கத்தக்க தண்டனையை இவனுக்குக் கொடும் கொடும்" என்று கதறும்.

சூரியனும் சந்திரனும், நிலமும் நீரும், காற்றும் நெருப்பும் வாய்விட்டுப் பேசக் கூடுமானால், இந்த உயிரற்ற பொருட்களும் சருவலோக நாயகருக்கு முன் வந்து தண்டன் இட்டு நின்று: "அகில சராசரங்களுக்கும் கர்த்தாவே, தேவரீருடைய சித்தத்தின்படியே நாங்கள் இவனுக்கு வெயிலைக் கொடுத்தோம்; குளிர் நிலவை எறித்தோம்; இவனைத் தாங்கி, பயிர்களை, தவசதானியங்களை, கனிவர்க்கங்களை இவனுக்கு உதவினோம். இவனுக்கு வேண்டிய வேண்டிய போது எல்லாம் போசனமும் பானமும் ஆனோம். அனலும் குளிர்ச்சியும் அளித்தோம். இவைகளைப் பெற்றுக்கொண்டு, எங்கள் கண்முன்பாகவும் எங்களை அநியாயமாய்ப் பாவித்துக்கொண்டும், இவன் தேவரீருக்குச் செய்த சுவாமித் துரோகங்களின் பேரிலே தேவரீர் பழி வாங்குவதுதான் நீதி நீதி" என்று ஓலமிடுவதாகும்.

இப்படியே படைப்புண்ட வஸ்துக்களெல்லாம் தனக்கு எதிராக எழுந்து சாட்சி சொல்லுவதுபோலிருக்கச்சே, பாவியின் மனச்சாட்சிதானே அவனை இடித்திடித்துக் கண்டித்துக் கொண்டிருக்கும். "இருளில் மறைந்திருக்கிறவைகளையும் அவர் பகிரங்கமாக்கி இருதயங்களின் யோசனைகளையும் வெளிப்படுத்துவார்" (1 கொரிந். 4; 5) என்று வேத புத்தகத்திலே அறிவிக்கப்பட்ட பயங்கரமான நேரம் அவ்வேளைதான் அல்லவோ! அப்போது பாவியுடைய நன்றிகெட்ட இருதயத்தின் யோசனைகளும் வெளியரங்கமாகும்; அளவில்லாத அன்புமயமான ஆண்டவருடைய திருவிருதயத்தின் யோசனைகளும் வெளியரங்கமாகும். பாவி தன்னுடைய முழுச்சீவிய காலத்தினும் சகல பழி பாதகங்களையும் அக்கிரமங்களையும் ஒருமிக்கக் காண்பான். தன்னுடைய இருதயத்திலே இதுவரைக்கும் தனக்குங்கூட முழுதும் எட்டாமல் இருந்தவைகளாகிய வஞ்சகங்களை கபடுகளை, காய்மகாரங்களை எரிச்சல்களை, கோபக் குரோதங்களை வன்ம வயிரங்களை, ஆங்கார இறுமாப்புகளை பொருள் வாஞ்சைகளை, மோக துர்க்கந்த இச்சைகளை கல்நெஞ்சுத்தனங்களை

இறந்துபோனவனை முன் நிறுத்தி யேசுநாதசுவாமி நடத்துகிற விசாரணையைச் சூழ நிற்போர் கண்டார்களானால், கேட்டார்களானால், திடுக்கிட்டு, திக்குமுக்காடி, விறைத்து, சமித்து, சீவனற்று விழுந்து போவார்கள். அவர்கள் கண்ணுக்கும் காதுக்கும் அது மறைத்து வைக்கப்படுவதும் ஓர் தேவ தயவுதான்.

II

ஆத்துமம் யேசுநாத சுவாமியுடைய சமுகத்தில் நிற்கவே, அவருடைய திருமுக மண்டலத்திலிருந்து வீசுகிற ஆயிரம் கோடி சூரியப் பிரகாசம் உள்ள பரம வெளிச்சத்திலே அது தன்னுடைய சீவியம் முழுவதையும் ஒரு கணப் பொழுதிலே கண்டு கொள்ளும். “அக்காலத்தில் நாம் எருசலேமை விளக்குக் கொண்டு சோதிப்போம்” (சொப்போ. 1; 12) என்று எழுதப்பட்டபடியே, கர்த்தர் தமது வெளிச்சத்திலே ஆத்துமம் என்கிற எருசலேமின் சகல மூலை முடுக்குகளும் வெளிப்படச் செய்வார். நாம் இவ்வுலக பராக்கு கவலைகளிலே அமிழ்ந்தி இருக்கும் மட்டும், நமது ஆத்துமத்தின் உண்மையான நிலைபரத்தை அறிந்துகொள்ள மாட்டாமல் இருக்கிறோம். ஆத்துமத்தின் முகத்தை உற்றுப் பார்க்க நமக்கு அவகாசமும் இல்லை, மனமும் இல்லை. பாவசங்கீர்த்தனத்துக்கு ஆயத்தம் பண்ணும் வேளைகளிலுங்கூட, ஆசாபாசங்களின் மொய்ப்பினால், முற்றாக மனந்திரும்பிவிட வேணும் என்று ஆவல் கொள்ளாததினால், நம்முடைய கணக்கில்லாத மீறுதல்களை எல்லாம் நாம் கண்டு பிடிப்பதும் இல்லை; கண்டு பிடித்தாலும் பாவத்தின் பயங்கரமான அவலட்சணத்தை, நன்றி கேட்டை, பாரப் பழியை ஆயிரத்தில் ஒரு பங்குதானும் உணர்வதும் இல்லை. ஆனால், நடுத்தீர்க்க எழுந்தருளியிருக்கிற நம் ஆண்டவருடைய உண்டாக்கப்படாத பரம சோதியான வெளிச்சம் நம்முடைய ஆத்துமத்தின் மூலை முடுக்குகள் எல்லாவற்றிலும் ஊடுருவிப் பாய்ந்து பிரகாசித்து இருதயத்தின் அந்தரங்கங்களை எல்லாம் வெளியாக்கும்போது, சகலமும் வெட்ட வெளிச்சம் ஆகிவிடும். நாம் ஒரு முன்னிருட்டு இரவிலே வீதியிற் போகும் வேளையில், எதிரே போவோர் வருவோரைக் கூடத் தெரியாமல், ஒரு உன்னிப்பைப் பிடித்து நடந்துகொண்டிருக்கிறோம். இதோ சடுதியாய் ஒரு மோட்டர்க்கார் வருகிறது. அதின் வெளிச்சம் பக்கென்று தெரு முழுவதையும் மூட, தெருவோ திண்ணையோ வேலியோ விராயோ மரங்களோ தடிகளோ எல்லாம் வெளிப்பட, தெருவின் சிறு கற்கள் தானும் எவ்வளவு துலக்கமாய்த் தெரிகிறது! அதுபோலவே, ஆண்டவருடைய திரு-

முகப் பிரகாசமும், முன் நமக்கு மறைந்திருந்த சகலத்தையும் ஒரு கணப் பொழுதிலே வெளியாக்கிவிடும். அந்த வெளிச்சத்தின்முன் ஒன்றும் மறைவாயிருக்க முடியாது. பழைய ஏற்பாட்டிலே சருவேசுரன் திருவுளம்பற்றியிருக்கிறபடி: “இருதயமோ சகலத்திலும் துட்டத்தனமுள்ளதும் திருக்கு முருக்குள்ளதும் ஆனது. அதின் உள்ளாந்தரத்தை அறிய யாராலே முடியும்? கர்த்தராகிய நாமே இருதயங்களை ஆராய்ந்து உள் இந்திரியங்களைப் பரிசோதிக்கிறவர்; நாமே ஒவ்வொருவனுக்கும் அவனவன் நடப்புக்கும் அவனவன் கிரியைகளின் பலனுக்குந் தக்கதைக் கொடுக்கிறவர்” (யெரே. 17; 9-10). ஆகையால் அவருடைய சுயஞ் சோதியான பிரகாசத்தில் எல்லாம் மறைவில்லாமற் காட்டப்படும்.

பாவவாளனின் ஆத்துமமானது தன்னைத் தானே உள்ளபடி காணும் போது,—தனது உலக சீவியம் முழுவதையும் ஒரு கண்ணாடியிற் பார்ப்பது போலத் தெரிசிக்கும் போது,—அந்தப் பாவியை, எல்லாம் அறிந்தவரான நடுவர் முன்னே குற்றஞ் சாட்ட வழக்காளியும் தேவையில்லை, சாட்சியுந் தேவையில்லை. அங்கு தரணிமாருக்கும் இடமில்லை, சனுப் பேசுவோருக்கும் இடமில்லை. பாவியுடைய விளக்கமும் தீர்ப்பும் வேறு எவருடையவும் உதவியில்லாமல், ஆண்டவர் முன்னிலையிலே, ஒரு கைநொடிப் பொழுதுக்குள்ளே, இமை கொட்டி விழிக்கிற நேரத்துக்குள்ளே நடந்து முடிந்துபோம். ஆனாலும் அந்த விளக்கத்தின் நுணுக்கமான, வரையறைவான விபரத்தை நாம் உணர்ந்துகொள்ளத் தக்கதாக, மனுஷனுடைய சன்ம சத்துருவான பிசாசு, தான் சீவிய காலமெல்லாம் ஏமாற்றி தன்னுடைய வழியிலே நடப்பித்த பாவியை அந்தக் கடைசி நேரத்திலேயும் கைவிடாமற் பின் சென்று, தன்னோடு தீக் கிடங்கில் இழுத்துக்கொண்டு போய்விட ஆயத்தமாய் வந்து நிற்கும் என்று வைத்துக்கொள்ளலாம். பிசாசுக்கு அந்நேரம் வாய் திறந்து பேச உத்தரவு கிடைக்குமானால், அது ஆண்டவரை நோக்கி: “சருவேசுரனே எழுந்தருளும் உம்முடைய வியாச்சியத்தை நடுக்கேட்டுத் தீர்த்தருளும்” (சங். 73; 22). தேவரீர் சம்மனசுகளாய் இருந்த எங்களை ஒரே ஒரு ஆங்காரத்தின் பாவத்துக்காக நித்திய நரகத்திலே தள்ளிவிட்டீர். தேவரீர் எங்களுடைய பாவத்தைப் போக்க ஒன்று செய்ததும் அல்ல; எங்களை மனந்திரும்பிவர அழைத்ததும் அல்ல. ஆனால் எத்தனையோ தோஷ துரோகங்களைச் செய்த மனுஷனுக்காக தேவரீரும் மனுஷனாகிக் கணக்கில்லாத பாடு பட்டதும் அல்லாமல், அவன் குணப்பட எத்தனையோ வழிகளையும் உண்டுபண்ணி, அவனுக்கு ஒரு முடிவில்லாமல் நன்மையின் மேல் நன்மையும்

எல்லாம் கண்டு அஞ்சுவான். அவன் வாக்கினாற் கிரியையினாற் செய்த சகல பாவ நிஷ்டூரங்களும், சூழ்ச்சமாய் இரகசியமாய்ப் பண்ணின சகல வெட்கக் கேடுகளும், பிறருக்கு இழைத்த சகல அநியாயங்கள் தீராமைகள் ஆத்தும நட்டங்களும் எல்லாம் வரிசை வரிசையாய் அவன் கண்முன்பே, சித்திரக்காரன் வரைந்து துலாம்பரமாய்க் காட்டிய படங்கள் போல, வடிவெடுத்து நிற்கக் கண்டு நெஞ்சு உட்குவான்.

தான் எட்டிலே தப்பிலே செய்த புண்ணியங்கள் என்று எண்ணிவைத்துக்கொண்ட கிருத்தியங்களும் அவ்வேளையே தங்கள் தங்கள் சுய சாயலோடு தோற்றுவதாகும். அந்தக் கிருத்தியங்கள் உண்மையான புண்ணியங்கள் அல்ல, உலக ஒப்பாசாரத்துக்காக புகழ்ச்சிக்காகப் பண்ணின, தேவ சிநேக முகாந்தரமில்லாத, சுபாவத்துக்கு மேலான பலன் ஒன்றும் அற்ற, வீண் கிருத்தியங்களாம், போலிப் புண்ணியங்களாம் என்றது அப்போதுதான் வெளிவரும். ஐயோ! என் புண்ணியம் எல்லாம் கனவிற் கைப்பற்றின கருந்தனம் போல ஆச்சுதே. நான் முழுதும் வெறுவிலியாய், பாவக் குஷ்டம் என்கிற அருவருப்பினாலே தான் மூடப்பட்டவனாய்ப் போனேனே! என்னுடைய மீட்பர் இதுவரையும் எனக்குக் காட்டி வந்த அன்பையும் ஆதரவையும் பார்த்தால், ஏங்கித் திகைக்கிறேனே. அவருடைய "அன்பின் அகலமும் நீளமும் உயரமும் ஆழமும் இன்னதென்று" (எபே. 3; 18) இதுவரையும் உணராமற்போனேனே என்று கலங்கி மலங்கி உணர்வழிந்து நிற்பான்.

நிற்கிறவேளையிலே, நீதிபரராய் எழுந்தருளியிருக்கிற ஆண்டவரும் தனக்குத் தீர்வை சொல்லப் போகிறதைக் கண்டு: ஐயோ என்னைப் படைத்தவரின் திருவாயால் புறப்படப்போகிற நடுத்தீர்வை வசனத்தை நான் எப்படிச் சகிப்பேன்! வானமே, நீ முகடு இடிந்து கொட்டுண்டு என்னை நிருமூலம் ஆக்கிவிடாயோ? பருவதங்களே, நீங்கள் என் பேரில் விழுந்து என்னை நசுக்கி அரைத்து இல்லாமற் பண்ணிவிட மாட்டீர்களோ? சமுத்திரங்களே, நீங்கள் அலை மோதிப் புரண்டு உங்கள் வெள்ளத்திலே என்னை மூழ்கடித்து விழுங்கிவிட மாட்டீர்களோ? என்று பாவி அங்கலாய்த்துப் பதகளிக்கிற நேரத்திலே, யூதா கோத்திரத்தின் சிங்கம் என்கிற தேவ நடுவர் அவனைப் பார்த்து வசனிப்பார்:—நன்றி கெட்ட பாவீ, சதிமானத் துரோகீ, உன்னை நாம் ஒன்றும் இல்லாமையிலிருந்து அனந்த கருணையால் உண்டாக்கினோம். உனக்கென்று எல்லாச் செல்வ வளங்களும் நிறைந்த ஒரு பூலோகத்தை ஆயத்தப்படுத்தி, அதில் உன்னை சீராய்ச் சிறப்பாய் இருத்தி, உன்னை எமது கண் மணி போலப்

005699

பாவித்துக் காத்து நடத்திவந்தோம். உன்னை நித்தியமான மோட்ச பேரின்பத்திலே பங்கு பற்றப் பண்ண என்று, உனக்கு நமது தேவ சாயலான ஒரு அழியாத ஆத்துமத்தைக் கட்டளையிட்டோம். உனக்கு நல்ல முன்மாதிரிகை காட்டவும் உன் பாவப் பொறுத்தலுக்கு வழி திறந்துவிடவும் என்று, நாமே பூலோகத்தில் மனுஷ சுபாவம் எடுத்து எழுந்தருளிவந்து மனுஷருள் ஒரு மனுஷனாய்ச் சீவித்தோம். உனக்காகச் சொல்லி முடியாத வேதனைகளையும் நிந்தை அவமானங்களையும் பட்டோம். நம்முடைய பாடுகளுக்கு அடையாளமாக இன்றைக்கும் நாம் தரித்திருக்கிற ஐந்து திருக்காயத் தழும்புகளையும் இதோ! பார். உனக்காக நாம் சீவனையும் விட்டு உயிர்த்தெழுந்தருளி, உன்னை ஈடேற்ற வழியிலே நடத்தும்படியாக சத்திய திருச்சபையையும் உண்டாக்கி, அதில் உன் பாவப் பொறுதிக்கும் புண்ணிய விருத்திக்கும் ஆக தேவதிரவிய அனுமானங்களையும் திவ்விய போதகம் பண்ணும் அதிகாரத்தையும் வைத்தருளினோம். நீயோ, பாவீ, உன்னை உண்டுபண்ணின சகல நன்மைச் சொரூபியான சருவேசுரனை மதியாமற்போனாய். அவருக்கு ஓயாமற் தோத்திர நமஸ்காரங்களைப் பண்ணுங் கடமையைக் கைவிட்டாய். உலகம் சரீரம் பிசாசு என்னும் மூன்றையுமே உன் கடவுளாகப் போற்றினாய். நீயே உனக்கு எசமான் என்றது போல நமது கற்பனைகளைப் பறுவாய் பண்ணாமல் இருந்தாய். திருச்சபையின் ஏற்பாடுகளையுங் கடந்தாய். சிந்தனை வாக்கு கிரியை மூன்றாலும் நம்மை எதிர்த்தாய். நம்முடைய அளவில்லாத இரக்கத்தின் அடையாளமான பச்சாத்தாப தேவதிரவிய அனுமானத்தினால் நீ பயன் அடையாமற் போனாய். பாவப் பற்றுதலோடே இருந்துகொண்டு, பாவச் சமயங்களை விலக்க மனமில்லாத நிலைபரத்திலே கள்ளப் பாவசங்கீர்த்தனஞ் செய்து நம்மை அவமதித்தாய். நம்முடைய இணையில்லாத அன்பின் தேவதிரவிய அனுமானமாகிய சற்பிரசாதத்தையும் சுத்தமில்லாத மனதோடு பெற்று உன்னுடைய தீர்வையை நீயே விழுங்கிக் கொண்டாய். உனக்கு ஓயாமல் நன்மைகளுக்கு மேல் நன்மை செய்துகொண்டுவந்த நம்மை உன் இருதயத்துக்குள்ளே மீண்டும் மீண்டும் சிலுவையில் அறைவதையே சீவிய காலம் எல்லாம் உனது தொழிலாகக் கொண்டு நடந்தாய். எத்தனையோ முறை என் குருமாருடைய புத்தி போதகங்கள் வழியாய், நல்ல வாசிப்புக்கள் வழியாய், உன் மனதிலே ஸ்பிரீத்துசாந்துவானவர் எழுப்பின நல்ல ஏவுதல்களின் வழியாய் நாம் உன்னை நோக்கிக் கைகளை விரித்தோம். நீ நம்முடைய விரித்த கைகளைத் தட்டிவிட்டு, பிசாசின் ஏவுதல்களுக்கும் உன் சரீர இச்சைகளுக்

குமே இடங்கொடுத்தாய். நாம் உனக்குச் செய்ய வேண்டியதாய் இருந்தும் செய்யாமல் விட்டது என்ன? நீயோ, பாவீ, நமக்குச் செய்யாத நிஷ்டூரங்களை எல்லாம் செய்தாய். உன்னுடைய நித்திய கேட்டின் தீர்ப்பை நீயே எழுதிக்கொண்டாய். ஆகையால் சபிக்கப்பட்டவனே, நம்மை விட்டு அகன்று, பிசாசுக்கும் அவன் தூதர்களுக்கும் என்று ஆயத்தம் பண்ணியிருக்கிற நித்திய நரக அக்கினியிற் போய் விழக் கடவாய்!

சருவ வல்லமை உள்ள தேவாதி தேவனும் கர்த்தாதி கர்த்தருமானவர் திருவுளம்பற்றின இத் தீர்வை பாவியின் செவியில் விழும்போது உண்டாகும் திகிலை என்னென்று வருணிப்போம்! ஆயிரம் வானங்கள் ஒருமிக்கக் கோடை இடி இடித்துக் காது செவிடுபடச் சப்தித்த திடுக்காட்டம் என்போமோ? சந்திர சூரியர்களும் நட்சத்திரங்களும் தங்கள் தங்கள் இடம் பெயர்ந்து கொலுகொலுத்து அல்லோல கல்லோலமாய் ஒன்றுடன் ஒன்று மோதி உடைந்து உகாந்த கால அக்கினியாய் முழாசிய பயங்கரம் என்போமோ? பாவி படும் திகில் எவ்வித வருணிப்புக்கும் எட்டாததாய் இருக்கும். அவ்வேளை இதோ! நரக பாதாளம் வாய் திறந்து அவனை விழுங்கிக்கொள்ளப் போகிறது. தேவ நடுவருடைய தீர்ப்பின்மேல் இனி வேறு தீர்ப்பு இல்லை. தீர்ப்புச் சொன்ன நொடிக்குள்ளே தண்டனை ஆரம்பம் ஆகிவிடும். பாவியானவன் யாரை நோக்கிக் கையெடுப்பான்? யாருடைய அடைக்கலத்தைத் தேடி அடைவான்? தன்னைத் தானே சபித்துத் திட்டிக்கொண்டு: ஐயோ கெட்டேன். என் தேவ நடுவரே, சுயஞ் சீவியான கடவுளே "தேவரீர் நீதிபர், உமது நியாயத் தீர்ப்புக்கள் நீதியானவைகள்" (சங். 118; 137). என் ஆங்காரத்தினால், என் நன்றி கெட்ட தனத்தினால், என் மிருகத்துக்கு ஒப்பான நடையினால் நானே என் கதியை ஆபத்தப் படுத்திக்கொண்டேன். ஆனந்த மோட்ச வீடே, சுத்தமானவர்கள் பேரின்பத்தில் மூழ்கி இருக்கும் வாசஸ்தலமே, உன்னை அடையும்படி உண்டாக்கப்பட்ட நான் என் கெறுவத்தால் உன்னை என்றென்றைக்கும் எனக்கு இல்லாமற் பண்ணிக் கொண்டேனே. உன் பளிங்கு மயமான புறச் சுவர்களையாவது, மாணிக்க கசிதமான வாசற்படியையாவது என் கண்ணால் ஒருக்கால் பார்க்கப் பெற்றேனில்லையே. ஆள நீளம் அறியாத நரக பாதாளமே, அவியாத அக்கினிக் கிடங்கே, ஓயாமற் பிசாசுகள் ஊளையிட்டுக் குரைத்துக்கொண்டு இருக்கும் பாழ்பட்ட தலமே, நீயே ஊழியுள்ள காலமும் எனக்கு இருப்பிடம் ஆகப்போகிறாய்! என்று கதறி உதறி பதறிக்கொண்டு தீ நரகிற் போய் விழுவான்.

பிரியமான கிறீஸ்தவர்களே, நீங்கள் ஒவ்வொருவரும் இப்படியே ஒருநாள் சருவேசுரனுக்குக் கணக்குக் கொடுக்கவேண்டி வரும். நீங்கள் பாவத்தில் மூர்க்கராய் மரித்தால், தேவ இஷ்டப் பிரசாதம் இல்லாத நிலைபரத்தில் மரணத்திரை உங்கள் மேல் விழுந்தால், இப்படியே ஒருநாள் உங்களை நீங்களே திட்டிக்கொண்டு நித்தியமான அக்கினிக் கிடங்கிலே போய் விழவேண்டி வரும். எல்லாக் கேடுகளிலும் கொடியதான இந்த மகா கேட்டை, எல்லா நிர்ப்பாக்கியங்களிலும் அதிகப் பயங்கரமான இந்த நிர்ப்பாக்கியத்தை எது விதத்திலும் நீங்கள் விலக்கிக்கொள்ள வேணும். அதெப்படி? இப்போது நீங்களே உங்களைக் கணக்குக் கேட்டுக்கொண்டால், அப்போது நல்ல கணக்கு ஒப்பிக்கத் தக்கவர்கள் ஆவீர்கள். இப்போது உங்களுக்கு நீங்களே கண்டிமையாய் நடுத்தீர்த்துக்கொண்டால், அப்போது ஆண்டவர் உங்களுக்குச் சனுவான நடுச் சொல்வார். நினைவினால், பேச்சினால், செய்கையினால் நீங்கள் கட்டிக்கொண்ட சகலபாவங்களையும் தேவ உதவியோடே யோசித்துக் கண்டுபிடித்து, அவைகளுக்காக மெய்யான மனஸ்தாபப்பட்டு, அதாவது அவைகளை முற்றாக வெறுத்து, அவைகளில் உங்களை விழுத்தாட்டிய பாவச் சமயங்களை விலக்கி, நல்ல பாவ சங்கீர்த்தனம் பண்ணுங்கள். இதுதான் மரணங் கிட்டின நேரம் பண்ணுகிற கடைசிப் பாவ சங்கீர்த்தனம் என்று சொல்லத் தக்கதான ஒரு உத்தமமான பாவ சங்கீர்த்தனத்தைப் பண்ணிவிடுங்கள். இனிமேல் நடுத் தீர்வையைப் பற்றிய "பயத்தோடே இங்கே பரதேசிகளாய்ச் சஞ்சரிக்குமளவும் நடந்துகொண்டுவாருங்கள்" (1 பேதுரு. 1; 17). நடுத்தீர்வையின் நினைவு, அதின் பயம் உங்கள் மனதின் அடித்தளத்திலே எப்போதும் தங்குமானால், ஒரு போதும் மனம் பொருந்திப் பாவத்தில் விழ மாட்டீர்கள். தவறி விழுந்தாலும், அதில் நிலைக்க மாட்டீர்கள். எப்போதும் சுத்த மனச் சாட்சியோடு இருப்பீர்கள். உங்களைச் சருவேசுரன் தமது நடுத்தீர்வைக்கு அழைக்கும் போது பயத்தோடு அல்ல தளராத நம்பிக்கையோடு அவர் சமுகத்திற் போவீர்கள். நீதிபரராகிய அவரும் உங்களை "என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவனே, ஆசீர்வதிக்கப்பட்டவளே, உலகம் உண்டானது முதல் உனக்காக ஆயத்தம் பண்ணியிருக்கிற மோட்ச ராச்சியத்தைச் சுதந்தரித்துக்கொள்ள வருவாயாக" என்று உளங் குளிர, பேரின்பம் பொழியத் திருவாய் மலர்ந்தருளுவார்.—ஆமென்.

Nallur Swami Gnanapragasar Library
OBLATE FATHERS
" THODARBAHAM "
657/1, HOSPITAL ROAD, JAFFNA

மூன்றாம் நாள்

Instruction :
On the Duties of Husband and Wife
காலைப் போதனை :

இல்லறக் கடமைகள்—புருஷனும் பெண்சாதியும்

பிரியமான கிறீஸ்தவர்களே, நாம் எல்லாம் ஆண்டவருடைய நீதியாசனத்தின் முன்னே "அவரவர் சரீரத்தால் செய்த நன்மைக்கும் தின்மைக்கும் தக்க பலனை அடையும்படிக்கு வெளிப்பட வேண்டிய" (2 கொரிந். 5; 10) அந்த மகா கலக்கடியான நாளிலே நல்ல கணக்குக் கொடுத்து தேவ ஆசீர்வாதம் பெற வேணுமானால், இப்போது நம்மை நாம்தாமே நடுத் தீர்த்துக்கொள்ளவேணும் என்றேனே. இதற்காக அவரவர் தங்கள் பல பல கடமைகளையும் ஆராய்ந்து அறிந்து, இன்ன இன்ன காரியத்தில் தவறினோம் என்று கண்டு, மெய்யான மனஸ்தாபப்பட்டு, இனித் தவறாமல் நடப்போம் என்று கெட்டியான தீர்மானம் பண்ணிக்கொள்ள வேண்டியது. இன்றைக்கு, இல்லறத்தவர்கள் அதாவது புருஷன் பெண்சாதியாய் இருக்கிறவர்கள் நிறைவேற்றவேண்டிய காரியங்களை, அநுசரிக்கவேண்டிய புண்ணியங்களைச் சுருக்கமாய் விசாரிப்போம்.

1. புருஷனுடைய கடமைகளை வேதாகமத்திலே அர்ச். சின்னப்பர் ஒரே ஒரு வாக்கியத்தில் அடக்கிக் காட்டியிருக்கிறார். அதாவது : "புருஷர்களே உங்கள் மனைவிகளில் அன்பு கூருங்கள்" (எபே. 5; 25). இந்த அன்பின் தன்மையைத் தான் அவர் மேலும் விபரித்து : "புருஷர்கள் தங்கள் மனைவிகளைத் தங்கள் சொந்தச் சரீரங்களாகப் பாவித்து அவர்களில் அன்பு கூர வேண்டும். தன் மனை

வியில் அன்பு கூருகிறவன் தன்னில் தான் அன்பு கூருகிறான். ஏனெனில் மனுஷன் தன் தகப்பனையும் தாயையும் விட்டு மனைவியுடன் இசைந்து இருவரும் ஒரே மாமிசமாயிருப்பார்கள்" என்பனவாக வசனிக்கிறார் (28, 31-ம் வச.). பெண்சாதி மேல் மெய்யான அன்பு, சத்திய வேதத்துக்கு அடுத்த அன்பு, கிறீஸ்துநாதர் நிமித்தமாய் உள்ள அன்பு தான் புருஷனுடைய கடமை. இது மிருகங்களுட்போல ஆசாபாசத்தினால் உண்டாகிற ஒரு அன்பாய் இருப்பது போதாது ; வெறும் மனக் கிளர்ச்சியால், உருக்கத்தால் மாத்திரம் வெளிப்படுகிற ஒரு அன்பாய் இருப்பதும் போதாது. இந்த அன்பு, விசேஷமாய், பெண்சாதியை மதித்துச் சங்கை பண்ணுவதிலே, அவளுக்கு வேண்டிய சகல உதவி ஒத்தாசைகளையும் செய்வதிலே, அவள் குறைகளைச் சகிப்பதிலே காட்டப்படவேண்டியது.

புருஷன் தன் பெண்சாதியை மதித்துச் சங்கிக்கவேணும். "பெண்சாதியானவள் புருஷனின் ஆட்சியின் கீழ் இருப்பாள்" என்றது (சனிப். 3; 16) தேவ நியமனமே ஆனாலும், அவள் இவனுக்கு அடிமையல்ல. எல்லாத்திலும் சரிசமானம் ஆனவள்; இளைய சகோதரம் போன்ற கூட்டாளி ஆனவள். அர்ச். அம்புறோசியார் வசனித்திருக்கிற பிரகாரம், ஆதியிலே ஆதாமுக்குக் கொடுக்கப்பட்ட ஏவாள் என்னும் மனைவி "அவருக்கு ஆண்டவளாயல்ல, அடிமையாயல்ல, துணைவியாகவே" கொடுக்கப்பட்டாள். ஆனாலும் பெண்சாதியோ சரீர இயற்கையினாலே பெலவீனமுள்ளவள். இதனாலே தான் தலைமை அப்போஸ்தலரான சம்பேதுருவானவர் : "புருஷர்களே மனைவியானவள் பெலவீனப் பாண்டமாயிருக்கிறபடியால்... அவளுக்குச் செய்ய வேண்டிய சங்கையைச் செய்யுங்கள்" என்று புத்தி கூறுகிறார் (1 பேது. 3; 7). இதற்கு மாறாக, பெண்சாதியை வேலைகாரிபோல் நடத்தி, எடி பிடி என்று அவமதித்துப் பேசி, அடித்து உதைத்து மிதித்து, "எதிரி ஏழையென்றால் கோபஞ் சண்டாளன்" என்றதற்கு இணங்க, தன் கோபத்துக்கு இடங் கொடுக்கிற கணவனும் சத்தியவேத போதகத்துக்கு ஒத்து நடப்பவனோ? இப்படிப்பட்ட நடையுள்ளவனுடைய குடும்ப வாழ்க்கை "அன்றிலும் பேடையும் போல" என்று தமிழிற் சொல்லுகிற அந்நியோன்னிய சமாதான வாழ்க்கையோ? அல்ல அல்ல. "காடையும் புழுதியும் போல", "நாயும் பூனையும் போல" என்று குறிக்கப்படுகிற நரக வீட்டு வாழ்க்கைதானே. பெண்சாதியை அடித்து உதைக்கிறவன் ஆண்பிள்ளை அல்ல. அவளைப் புத்தியாலும் நட்பாலும் கைக்குள் விழுத்தி வசப்படுத்தி ஆளுகிறவனே ஆண்பிள்ளை.

"நல்ல மாட்டுக்கு ஒரு சூடு, நற்பெண்டாட்டிக்கு ஒரு வார்த்தை". பெண்சாதியை நல்லவள் ஆக்குகிறவனும் பொல்லாதவள் ஆக்குகிறவனும் புருஷன் தான். "இருக்கிறவன் சரியாய் இருந்தால் சிரைக்கிறவன் சரியாய்ச் சிரைப்பான்". பெண்சாதியின் குணத்தை அறிந்து அதற்கு ஏற்றபடி நடத்தினால், அவளைத் தன்வசம் ஆக்கிப்போடலாம். அப்படிச் செய்யாமல், சீறிச் சினந்து ஆக்கினை பண்ணினால் நட்புக் கெட்டுப்போம். நட்புக் கெட்டால் எவ்விதத் தாறுமாறுகளுக்கும் வழி திறந்துவிட்டது ஆகிவிடும்; குடும்பத்திற் பிரிவு, விசுவாசக துரோகம் முதலான பல கேடுகளுக்குக் காரணம் ஆகிவிடும். உத்தம புருஷனானவன் பெண்சாதியைத் தனக்குக் கீழ்ப்பட்டவளாய்ப் பாவிக்கிறதற்கு மாறாய், அவளைத் தன்னுடைய மதிமந்திரியாக வைத்து, அவளோடு அளவளாவி யோசித்துக்கொண்டு தான் என்ன கருமத்தையுஞ் செய்வான். மதிப்பு மதிப்பைப் பிறப்பிக்கும். சங்கைக்குப் பதில் சங்கை கிடைக்கும். பெண்சாதியை நீ மதித்து நடத்தினால், அவளும் உன்னை மேலாக மதிப்பாள். அவளுக்கு நீ பண்ணுகிற சங்கையை அவள் மூவிரட்டியாய் உனக்குப் பண்ணுவாள். இது அனுபவத்திலே கண்ட காரியம்.

பெண்சாதியிடத்தில் மெய்யான அன்புள்ள புருஷன் அவளை மதித்துச் சங்கிப்பான். மேலும் அவளுக்கு வேண்டிய சகல உதவி ஒத்தாசைகளையுஞ் செய்து, அவளை ஆதரித்துக் காப்பாற்றுவான். பெண்சாதிக்கு அவசியமானவைகளை மாத்திரமல்ல, அவள் நிலைபரத்துக்குத் தகுதியானவைகளையுந் தேடிக் கொடுப்பது புருஷனுடைய கடமை. ஊணும் நடபடியான உடையும் கொடுத்தாற் போதாது. இவைகள்தான் அவசியமானவைகள். இவைகளோடு தன் தன் அந்தஸ்துக்குத் தகுந்த நல்ல ஆடை ஆபரணங்களையும் இயன்றவரையிற் சம்பாதித்துக் கொடுக்கவேண்டியது. இதிலே மிதமிஞ்சினசெலவும் ஆகாது; ஈப்பிணித்தனமும் ஆகாது. வருவாய்க்கு மேலாகச் செலவு பண்ணி, தன் நிலைபரத்துக்கு மேற்பட்ட தீன் வகைகளை, உடுப்புக்களை, நகை நட்டுக்களை வாங்கி ஆராதுரித்தனமாய் நடப்பதும் தவறு. உண்ணாமல் உடாமல் பெண்சாதிக்குப் படி போட்டுக் கசவஞ்சித்தனம் பண்ணுவதும் தவறு. சில புருஷன்மார், தாங்கள் வெளியே பெருந் தீனிக்காரராய் குடிவெறியராய்த் திரிந்து, வீட்டிலே மனையாளைப் பட்டினி கிடத்திவிடுவார்கள். வேறு சிலர், பெண்சாதி சரீரத்தைப் பிழிந்து பாடுபட்டு உழைத்து வரப்பண்ணி, தாங்கள் படுத்திருந்துகொள்ளுவார்கள். இவையெல்லாம் படுபாதகமான அநியாயங்கள். பெண்சாதியும் சில தடவைகளில் கூட உழைப்பது கடமையாகலாம். ஆனால், புருஷன் சும்மா

இருக்க அவளே புருஷனுக்கு உழைத்துக் கொடுப்பது என்ற முறை ஒருபோதும் இல்லை. புருஷன்தான் பெண்சாதிக்கு உழைத்துக் கொடுத்து அவளைச் சீராய்ச் சிறப்பாய் வைக்கவேண்டியவன். அவளைத் தன் சொந்தச் சரீரம் போற் பார்க்க வேண்டும் என்று சம்பாவுலுவானவர் வசனித்தாரே. இப்படி நடத்துகிற புருஷன் அவளை எவ்விதத்திலும் வருத்தமாட்டான். தன்னையே வருத்தி அவளைச் சுகமாய் இருக்கப்பண்ணுவான். அவள் நோய்வாய்ப்பட்டிருக்கும் வேளைகளில் விசேஷமாய் அவளுக்குத் தனது உள் அன்பைக் காண்பிப்பான். எதிரிடையான நேரங்களிலேதான் அல்லவோ அவரவருடைய உண்மையான நேசப் பற்றுதல் வெளிப்படுவதாகும்!

துன்பதுரிதவேளைகளிலேபோல, பெண்சாதி தன் பெலவீனத்தால் குற்றங் குறை செய்கிற வேளைகளிலேயும் புருஷனுடைய உண்மையான நேசம் வெளிப்பட வேணும். அதெப்படியென்றால், அக் குறை குற்றங்களைச் சகித்து நடப்பதினாலேதான். வேலை மிகுதியால், அல்லது வருத்தத்தால், அல்லது சுபாவமான வெடுவெடுப்புக் குணத்தினால், அல்லது காரிய பாகம் அறியாமையினால் அவள் சில வேளைகளில் சொல்லுகிற புத்தியீனமான சொற்களை, செய்கிற தவறுகளை புருஷன் கண்சாய்த்து நடத்திக்கொள்ளவேணும். எல்லாத்திலும் ஒருவகையான போக்கும் அபிப்பிராயமும் உள்ள இரண்டு பேர் வந்து சந்திப்பது அருமையில் அருமை. அவளுடைய குணம் உனக்குப் பிடியாவிட்டால், பல காரியங்களில் உன்னுடைய குணமும் அவளுக்குப் பிடியாது. அவளிடத்தில் உள்ளது போலவே உன்னிடத்திலும் நீ அறியாத குறை குற்றங்கள் எத்தனையோ உண்டு. உன் மனைவியிடத்தில் மெய்யான அன்பு உனக்கு உண்டானால், அவளுடைய பெலவீனத்தை ஒருபோதும் எடுத்துப் பிடிக்கமாட்டாய்; பாராட்டமாட்டாய். அன்பு உண்டானால் எல்லாத்தையும் சகித்துக்கொள்வாய். வேதாகமத்திலே எழுதியிருக்கிறபடி: "அன்பு நீடிய சாந்தமும் தயவும் உள்ளது. அன்பு சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும்" (1 கொரிந். 13, 4-7). சத்திய வேத புருஷன்மாரே, நீங்கள் உங்கள் மனைவிகளில் உண்மையான அன்பு கூர்ந்தீர்களானால் உங்கள் கடமைகளெல்லாம் நிறைவேறியதாகும்.

2. இனி, பெண்சாதியுடைய கடமைகளையும் சம்பாவுலுவானவர் சுருங்கச் சொல்லி விளங்கவைத்திருக்கிறார். அவர் வசனிப்பது: "பெண்சாதிமார் வீட்டைப் பராபரிக்கிறவர்களும் மதுரகுண

முள்ளவர்களும் புருஷன்மாருக்குக் கீழ்ப்படிகிறவர்களுமாய் இருக்கவேண்டும்" என்கிறார் (தீத்து. 2; 5). இந்த மூன்று லட்சணங்களும் ஒன்றைவிட ஒன்று அதிக முக்கியமானதாகிக் கடைசியில் நிற்பது பிரதானமானதாய் இருக்கிறபடியால், அதைத்தான் முதல் எடுத்து விரிப்பது தகுதி. பெண்சாதி புருஷனுக்குக் கீழ்ப்பட வேண்டியது. இந்தப் போதகத்தை அர்ச். சின்னப்பர் வேறோர் இடத்திலும் சொல்லுகிறவராகி: "மனைவிகளே கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறதுபோல உங்கள் சொந்தப் புருஷருக்குங் கீழ்ப்படியுங்கள்" (எபே 5; 22) என்றார். கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறது போல:—இதிலே பெண்சாதிமாரே, உங்களுடைய அமைச்சலின் விசேஷ இலட்சணம் காட்டியிருக்கிறது. ஆண்டவருடைய வார்த்தைகளுக்குக் காட்டுகிற சிரவணத்தை நீங்கள் உங்கள் புருஷன்மாருடைய கட்டளைகளுக்குக் காட்டவேண்டியது! அவருடைய சந்நிதியில் செப்ப வேண்டிய ஆசாரத்தைப் புருஷன்மாருக்குச் செய்ய வேண்டியது. மனைவி புருஷனோடு சமத்துவமுள்ளவள், அவனோடு ஏக சரீரம் போல உள்ளவள் என்றது மெய். ஆனாலும் அவனே தலைவன். தலைக்கு உரிய மேல் இடத்தை, தலைக்கு உரிய ஆசாரத்தை சரீரம் கொடுக்க வேண்டியது. சருவேசுரனுடைய திருக் கற்பனைகளுக்கு மாறான காரியங்களில் அல்லாமல், மற்று எல்லாவற்றிலும் பெண்சாதி புருஷனுடைய சொல்லுக்கு அடங்கி, வேண்டாவெறுப்போடு அல்ல முழு மனதோடும் உண்மையான அன்போடும், ஆண்டவருக்கு அமைவது போல, அவனுக்கு அமைய வேண்டியது.

இந்த உண்மையான அன்பு மதுரகுணத்தைப் பிறப்பிக்கும். புருஷன் பெண்சாதிமாருடைய கடமைகளைப்பற்றி வேத வாக்கியமாய் எழுதிய அர்ச். சின்னப்பர் கணவனுக்கு அன்பையும் மனைவிக்கு மதுரகுணத்தையும் கடமையாக வைத்த காரணம் என்ன? மனைவிக்கு அன்பு வேண்டாமா? கணவனுக்கு மதுரகுணம் அவசியமில்லையா? இந்தக் கேள்விக்கு மறுமொழி என்னவென்றால், பெண்பாலார் அன்பிலே வாரப்பாடு உள்ளவர்கள். புருஷனில் அன்பு கூருங்குணம்,—கொடியானது மரத்தைத் தாவுவது போல அவனைத் தாவிச் சார்ந்திருக்குங் குணம், மனைவியிடத்திலே இயல்பாக உதித்துவிடும். ஆனால், இயல்பிலேதானே பெண்கள் நாக்கு வளைப்பிலே கூடினவர்கள். ஆனபடியால், சொல்லுவதையும் சொல்லும் இடத்தையும் அறிந்து சொல்லாமல், கதை வளர்த்துக்கொண்டிருப்பார்கள். இதினாலேதான் மனைவி புருஷனை பலமுறையும், தன் வகைப்பிழையான வார்த்தைகளால் கோபம் மூட்டுகிறவள் ஆகிறாள். அவன் முற்கோபியாய், துட்டனாய் இருக்கிறபடியால், தான்

கடுகடுத்துப் பேசுகிறது என்ற நியாயம் பொருந்தாது. எவ்வளவு கடுங்கோபக்காரனான புருஷனும், எவ்வளவு கல் நெஞ்சத் துட்டனான புருஷனும் பெண்சாதி மதுரமாய்ப் பேசினால் இளகிவிடுவான். "மெதுமையான பிரத்தி உத்தரம் உக்கிரத்தை மாற்றும்; கடுஞ்சொற்களோ கோபத்தை எழுப்பிவிடும்" என்றது வேத வாக்கியம் (நீதிமொ. 15; 1). நல்ல மனைவியானவள் எவ்வித சண்டாளனான கணவனையும் தன் மதுர குணத்தினால் மாற்றி, சற்குணனாய், புனிதமுள்ளவனாய் வரப்பண்ணிப்போடுவாள். அர்ச். அகுஸ்தினாரின் தாயாகிய சுத்தமான மோனிக்கம்மாள் இப்படியே செய்தாள் என்று சரித்திரத்தில் வாசிக்கிறோம். அவளுடைய புருஷனான பத்திறீக்கு நெறி கெட்ட ஒரு துட்டன். மிருகத்தன்மை கொண்டவன். மோனிக்கம்மாள் ஒருபோதும் அவனை வாயினாற் கடிந்துகொள்ளாமல், தனது உத்தமமான, அமைச்சலான நல் நடக்கையே அவனைக் கண்டிக்கும்படி விட்டுவிடுவாள். அவனைக் கோபம் மூட்டத்தக்க வார்த்தை ஒன்றையும் சொல்லாமல், எப்போதும் மதுரமாய்ப் பேசி, அவனுடைய மனந்திரும்புதலுக்காக ஓயாமல் கண்ணீரோடும் பிரார்த்தித்துக்கொண்டு வருவாள். அவன் அநியாயமாய்க் கோபித்துக்கொள்ளும் வேளைகளில் மறுத்து ஒரு நியாயமுஞ் சொல்லாமல், அவன் ஆறியிருக்கும்போது தான் உள்ள நியாயத்தை எடுத்துக் காட்டுவாள். இதனால் சிங்கம்போல் இருந்தவனைப் பிற்காலம் செம்மறி போல வரப்பண்ணுகிறவள் ஆனாள்.

புருஷன் சொற்கேட்டு நடக்கவேண்டியவளான மனைவி, வீட்டுக் கருமங்களை எல்லாம் தானே தலைவியாக நின்று பார்க்கக் கடமை பூண்டிருக்கிறாள். தமிழிலே "மனைவி" என்ற சொல்லுக்கு: மனைக்கு அதாவது வீட்டுக்கு உரியவள் என்று கருத்து. இல்லாள் என்றதும் அதே கருத்து உள்ள சொல். இல் என்றால் வீடு. இல்லாள் வீட்டுக்காரி, வீட்டைப் பராமரிக்கிறவள். இல்லத்தைத் துப்புரவாக வைக்கிறது, தட்டு முட்டுகள் பானை சட்டிகளைக் கவனமாய்ப் பாவிக்கிறது, வாய்க்கு இதமான சோறு கறி ஆக்குகிறது, தீன்பண்டங்களுக்கு உரிய வரவு செலவுகளைக் கராக்கியாய்ப் பார்க்கிறது—இவை எல்லாம் மனைவியுடைய கடமைகள். பொருள் பண்டங்களைச் சிதறவிட்டு, வீண் செலவுகளால் வரும்படியை அழித்து, வீட்டை, அடுக்களையை, முற்றத்தை குப்பை கூளங்களால் அழுக்குப்பட வைத்துக்கொண்டிருக்கும் பெண்சாதியால் குடும்பத்திலே ஓயாமல் சச்சரவுகள் அடிபிடிகள் நடந்துகொண்டிருக்கும். பெண்சாதி வீட்டிலே இருந்து, வீட்டுக் கருமங்களை நன்றாய்ப் பார்த்துக்கொண்டுவந்தால் புருஷனோடு தேனும் பாலும்

போல வாழலாம். வீட்டிலே இருப்பதைப்பற்றிச் சொன்னேன். அயல் வீட்டுக்கு ஓடி ஓடிப்போய்க் கதைத்துக்கொண்டிருக்கும் பெண் நல்ல பெண்சாதியாய் இருக்கமாட்டாள். "தாய்வீடு ஓடிய பெண்" ணைப் பற்றித் தமிழ்ப் பழமொழி சொல்லுகிற குறையை அறிவீர்கள். உத்தம பெணசாதி தாய் வீட்டுக்குத்தானும் ஓடித் திரியாள். தன் வீட்டிலிருந்து, தன் வீட்டைப் பராமரித்து, தன் புருஷனை நேசித்து, அவனுக்கு ஊழியம் பண்ணுவதையே சகல பாக்கியமும் ஆகக் கொண்டு நடப்பாள்.

தங்கள் கடமைகளைச் சரியாய் அறிந்து, சரியாய் அனுசரிக்கிற புருஷனும் பெண்சாதியும் சருவேசுரனுக்கு ஏற்ற உத்தம குடும்பமாக வாழ்வார்கள். அவர்களுடைய வீடு பரலோக வீட்டின் சங்கடப்படலைபோல் இருக்கும். அவர்கள் அன்னியோன்னியமான அன்போடு ஒன்றித்திருந்து, ஒருங்கு கூடிச் சருவேசுரனைத் துதித்து, சரீரப் பாதுகாப்பிலும் ஆத்தும அலுவல்களிலும் ஒருவருக்கு ஒருவர் துணையாக நடந்து பரலோகவாழ்வு அடைவார்கள்,—ஆமென்.

SERMON :

On the Eternal Regrets of the Damned

மாலைப் பிரசங்கம் :

காலாதி காலமும் தீராத கவலை

"Nolite errare ; Deus non irridetur ; quae enim seminaverit homo, haec et metet" (Gal. VI 7, 8)

"மோசம் போகாதேயுங்கள் ; சருவேசுரன் பரிசாசத்துக்கு இடமானவர் அல்ல. மனுஷன் எதை விதைத்திருப்பானோ அதையே அறுப்பான்" (கலாத். 6; 7, 8).

மனுஷர் தங்களைப் படைத்த சருவேசுரனை மறந்து, அவருடைய திருக் கற்பனைகளைப் பொருட்படுத்தாமல், பாவ அக்கிரமச் சேற்றிலே புரண்டு அவருக்குத் துரோகிகளாய்ச் சீவிக்கவுந் துணிகிறார்களே. இது எப்படி ஆகும்? இதற்குக் காரணம் என்ன? ஒரு முக்கியமான காரணம் என்னவானால், அவர்கள் தங்களுக்கு வரப்போகிற கெடுதிகளை எதிர்முகப்படுத்திக் கண்டுகொள்ளாதது தான் ; பாவத்தின் சம்பளமாகிய (ரோம. 6; 23) மரணமும், அதைப்பற்றிய நடுத்தீர்வையும், அதற்குக் கிடைக்கப்போகிற தண்டனையாகிய நரக கதியும் தப்பாமல் வருகிற காரியங்கள் என்கிற நிச்சய உணர்வு அவர்களுக்குப் பிறவாததுதான். பின் கட்டாயம் நடக்கப்போகிற செய்திகளை அவர்கள் யோசிப்பதும் இல்லை ; மனதினால் கண்டு உணர்வதும் இல்லை. அதினாலேதான் இவ்வளவு பயங்கரமான அசட்டைத்தனத்தோடு சீவிக்கிறார்கள் ; திடாரிக்கத்தோடு தேவ கற்பனைகளை மீறுகிறார்கள். ஏன்? சிலர் நரகத்தைக் கண்டதார்? மோட்சத்தைக் கண்டதார்? என்றும் வாய் கூசாமற் சொல்வார்களே. பாவ மயக்கம் அவர்களுடைய மனக் கண்ணை மறைத்துப்போடுகிறது. தாங்கள் சொல்லுவது இன்னது என்று தானும் அவர்களுக்குத் தெரிகிறது இல்லை. இப்படியே, சாராய வெறிகொண்டவன், கோப வெறிகொண்டவன் தனக்குத் தூக்கு வரப்போகிறதை யோசியாமல் என்ன வந்தாலும் வரட்டும் என்று சொல்லிக்கொண்டு கொலை பாதகத்தைச் செய்வான். பின்பு பிடிபட்டு நீதித்தலத்தில் தனக்கு மரணத் தீர்வை கிடைக்கும் போது

தான் அவனுக்குப் புத்தி திரும்பிவரும். கொலைத் தீர்ப்புச் சொன்னவுடனே சில கொலைகாரர்,—முன்னே அவ்வளவு வீரத்தோடு, வருகிறது எல்லாம் வரட்டும் என்று சபதஞ் சொன்னவர்கள்—அறிவு கெட்டு விழுகிறதைக் கண்டிருக்கிறோம். தூக்கைக் கண்டதார்? என்றது போல விண் மண் ஒன்றையும் பாராமல் படுபாதகம் செய்தவர்கள், கொலைத் தீர்ப்புப் பெற்று மறியற் கூடத்திலே இருக்கும்போது, இரவு பகலாய்க் கண்ணீர் சொரிந்து உண்ணவும் உறங்கவும் மனம் இல்லாமல் தீராக் கவலையினால் சரீரம் உருகி உருகி வாடிக்கொண்டுவரக் கண்டிருக்கிறோம். எல்லாம் யோசனை இல்லாமையினால் வருகிற கேடு. பிரியமான கிறீஸ்தவர்களே, நாம் பாவிகளுடைய தண்டனைத்தலமாகிய நரகம் என்னும் ஒரு பாதாளம் உண்டு என்ற உண்மையைக் கண்முன்பாக வைத்துக்கொள்ளவேணும். அர்ச். கிறிசோஸ்தம் அருளப்பர் சொல்லியிருக்கிறபடி: "நரகத்தைக் கண்முன் வைத்துக்கொள்ளுகிறவர்கள் எவர்களோ அவர்கள் அந்த அக்கினிக் கிடங்கில் விழுவது இல்லை. நரகத்தைப் பறுவாய் பண்ணாதவர்கள் எவர்களோ அவர்கள் அந்தத் தீர்வைக்குத் தப்பிக்கொள்வது இல்லை".

ஆகையால், இன்றைப் பிரசங்கத்தில் நாம் 1-வது பாவிகள் ஒருபோதும் நரகத்துக்குத் தப்பிக்கொள்ளமாட்டார்கள் என்றும், 2-வது அவர்கள் அந்த அக்கினித் தலத்திலே அடையப் போகிற கவலை ஊழியுள்ள காலமுந் தீராக் கவலை என்றும் தேவகிருபையால் தெளிவிப்போம். உங்களால் இயன்ற முழுக் கவனத்தோடும் இந்தப் பிரசங்கத்தைக் கேளுங்கள். உங்களுக்கும் எனக்கும் மனத்தெளிவையும் ஞான வெளிச்சத்தையும் தந்தருளவேணும் என்று சருவேசுரனைப் பிரார்த்தியுங்கள். (பிரியதத்தம்).

I

சருவேசுரன் அநாதியான கருணையோடு நம்மை உண்டாக்கி நமக்கு சுபாவத்துக்கு உரிய சகல உபகாரங்களையும் தெய்வீக உதார குணத்தோடு செய்து வருகிறார். ஒரு தயாள குணமுள்ள தனவந்தனான தகப்பன் தன் மகனுக்கு என்று ஒரு விசாலமான காணியை வாங்கி, அதிலே விதம் விதமான கனிவர்க்கம் கொடுக்கிற தோட்டங்களையும், விதம் விதமான நெல் வகைகள் தவசதானியங்கள் விளைகிற வயல்களையும் வகுத்து ; நடுவிலுள்ள சோலைகளின் மத்தியிலே அழகான மாளிகை ஒன்றைக் கட்டி ; அம்மாளிகையின் பலபல அறைகளிலே விரும்பத்தக்க சகல உடுப்பு வகைகள், விளையாட்டுக்கு உரிய சகல அணி அடுக்குகள், ஆயுதங்கள்,

ஒருக்காலும் வற்றாத ஊறணியான திரவியங்கள் எல்லாம் சேமித்து வைத்து ; மேலும், வேண்டிய வேண்டிய விளையாட்டுத் தோழர்கள், வேலையாட்கள், மாடு கன்றுகள், குதிரைகள், வண்டில்கள் எல்லாம் ஆயத்தம் பண்ணிய பின் மகனை அழைத்து : என் நேச புத்திரனே நீ சுகமாய் வாழ்ந்து இன்பு உற்று இருக்கும்படியாக உனக்கு இந்தப் பெரிய ஆஸ்தியையும் அதில் அடங்கிய சகலத்தையும் தந்தேன் என்று சொல்லியது போலவே, அளவில்லாத தயாளமும் அன்பும் பொருந்திய சருவேசுரனும் மனுமக்களின் பொருட்டாய் இந்தப் பெரிய பூமியை உண்டாக்கி, அதில் நம்முடைய சரீர பாதுகாப்புக்கும் இவ் உலக இன்ப வாழ்வுக்கும் வேண்டிய சகலத்தையும் அளவுக்கு மிச்சமாய்த் தந்திருக்கிறார். அழிந்து போகிற இவ்வுலகத்தின் சொற்ப கால இன்பத்தை மாத்திரம் அல்ல, அழியாத பரலோகத்தையும் நாம் அடையவேண்டும் என்றே நமக்குத் தம்முடைய திருச்சாயலான ஒரு ஆத்துமத்தையுந் தந்தபடியால், அந்த ஆத்துமத்துக்கு உரிய சுபாவத்துக்கு மேலான உபகாரங்களையும் அளவுகடந்து நமக்குப் பண்ணிக்கொண்டுவருகிறார். ஒருவன் வேண்டாம் வேண்டாம் என்று சொல்ல, பூவராகன்களை வழிய வழியக்கொட்டி அளந்து, அவன் கொண்டு போகக்கூடியமட்டும் தலையிற் சுமத்திவிட்டது போல, ஆண்டவரும் தாமே எம்மைத் துரந்து துரந்து நமக்கு நன்மை செய்வதோடு, தாம் மனுஷவேஷத்தோடேயும் வந்து தம்முடைய வரப்பிரசாதங்களை வாரி அள்ளி அள்ளி எமக்குச் சுமத்திவிடுகிறார். இவ்வளவு நன்மைத்தனம் எல்லாம் மனுஷனுக்குக் காட்டி வருகிறவர், மனுஷன் தாம் கொடுத்தவைகளை வாங்கிக் காலுக்குக் கீழே போட்டு மிதித்தது போல, தம்மை அவமதிக்க விட்டுவிடுவாரோ? படைத்தவர், தாம் படைத்த மனுஷனை ஓர் ஆயிரம் நேச வார்த்தைகளால் ஏவி ஏவி, ஓர் ஆயிரம் உபகாரங்களோடு கூடிய திருக்கண் நோக்குகளால் தூண்டித் தூண்டி அழைத்துக்கொண்டிருக்க, அவன் மேலும் மேலும் மிஞ்சி மிஞ்சித் திமிறி அவர் முகத்திலே மீண்டும் மீண்டும் கரி பூச, மீண்டும் மீண்டும் அவரை நையாண்டிபண்ணிக்கொண்டிருக்கத் தலைப்படுவானானால், சருவ லோகமும் கிடுகிடுத்துக் கொண்டு தமக்கு ஊழியஞ் செய்யப் பெறுகிறவரான அனந்த நித்தியர் அவனைச் சும்மா விடுவாரோ? தாம் எவ்வளவு அருமையாகத் தமது சிருட்டியை நேசித்தாரோ, அந்தச் சிருட்டி தம்மை வேண்டாம் என்று தட்டி உதறிப்போட்டுப் போகும்பொழுது அவ்வளவு உத்தண்ட வேகத்தோடே அதைத் தண்டிக்கவுந் தூண்டப்படுவார் அல்லவோ? நீதியுள்ள ஒரு எசமான் தன் ஊழியர்கள்

தன்னிடத்தில் பெற்றுக்கொண்ட உபகாரத்துக்கு நன்றி காட்டி நடக்கும்போது மேலும் அதிக உபகாரங்களைச் செய்வதும், உபகாரத்துக்கு அபகாரம் பண்ணும்பொழுது அந்த அவலட்சண நன்றிகேட்டுக்குத் தகுதியான ஆக்கினை இடுவதும் இயல்பு அல்லவோ? அப்படி இருக்க, அளவற்ற நீதியும் குறைவற்ற வல்லமையும் உடைய கர்த்தாதி கர்த்தரானவர், தம்மிடத்திற் பெற்றுக்கொண்ட கணக்கிடக் கூடாத நன்றி எல்லாம் மறந்து தமக்குத் தேவ துரோகம் பண்ணுவதிலே மூர்க்கனாய் நிலைகொண்ட மனுஷனுக்கு தேவ நீதிக்கு ஏற்ற பாரதூர தண்டனை விதியாமல் விடுவாரோ?

ஆனால் நம்மைப் படைத்தவராகிய சருவேசுரன் கருணை சமுத்திரமான ஒரு பிதா அல்லவா? அவர் "நீடிய சாந்தமும் மிகுந்த இரக்கமும் உள்ளவர்" (சங். 144; 8) என்று வேதாகமம் சொல்லவில்லையா? சமுத்திரத்துக்குக் கரை உண்டானாலும் அவருடைய இரக்கத்துக்கு முடிவில்லை அல்லவா?—இது முக்காலும் மெய். சருவேசுரன் அளவில்லாத இரக்கம் உள்ளவர். அவர் இந்த அளவில்லாத இரக்கத்தோடு மீண்டும் மீண்டும் பாவியானவனை நல்வழிப்படுத்தத் தேடிக்கொண்டுவர, அவனோ இந்த அளவில்லாத இரக்கத்தின் அழைத்தல்களையும் தட்டிப்போட்டபடியாற்தான் நித்திய நரகத் தண்டனைக்கு ஆளாகிறான். சருவேசுரன் அளவில்லாத இரக்கம் உள்ளவர் என்று சொல்லும்போது, அவர் அளவில்லாத நீதியும் உள்ளவர் என்றதை நாம் மறந்துபோக ஒண்ணாது. அவருடைய இரக்கம் கோழை நெஞ்சுள்ள ஒரு தாயுடைய மனங்கேளாத இரக்கம்போல அல்ல. அது அளவில்லாத தேவ ஞானத்தோடு, அளவில்லாத பெலத்தோடு, அளவில்லாத உறுதியோடு கூடின ஒரு இரக்கம். சருவேசுரன் உண்மையாய் மனந்திரும்பி பாவத்தை விட்டு வருவோருக்குக் கங்கு கரை இல்லாமல் இரக்கமும் உருக்கமும் தயவும் தாட்சணியமும் காண்பிக்கிறார். பாவத்தில் மூர்க்கனாய் நிற்கிறவன் பேரிலோ தமது நீதியைச் செலுத்துகிறார். ஒரே ஒரு சூரியன்தான் மெழுகு உருகுகிறதற்கும் கழிமண் இறுகுகிறதற்கும் காரணம் ஆகிறதைக் காணவில்லையா? வெயிலிலே மெழுகை வைத்தால் இளகுகிறது. கழிமண்ணை வைத்தால் இறுகுகிறது. இப்படியே, மென்மையான இருதயம் உள்ளவர்கள் சருவேசுரனுடைய தயவைக் கண்டு இளகி மனந்திரும்பிப் பொறுதி அடைவார்கள். கடின இருதயம் உடையவர்கள் அத்தயவைக் கண்டு கண்டு மேலும் கடினமாகிக் கெடுவார்கள். ஆண்டவர் நல்லவர், நீடிய பொறுமை உடையவர், ஆதலால் பாவத்தில் நிலைப்பேன் என்று சொல்லுகிறது எதற்குச் சரி என்றால்:

நெருப்பு நல்லது; ஆனபடியால் அதற்குள்ளே கையை வைப்பேன் என்று சொல்லுவதற்குச் சரி. நெருப்பானது நமக்கு அனலைத் தருகிறது; வெளிச்சத்தைத் தருகிறது, தீன் பண்டங்களைப் பாகம் பண்ண உதவுகிறது. சூரியனிலோ அடுப்பிலோ உள்ள நெருப்பைப்போல மனுஷனுக்கு உபகாரமான பொருள் உலகத்தில் வேறொன்றும் இல்லை. இவ்வளவு உபகாரமான நெருப்பு அல்லவோ என்று சொல்லிக்கொண்டு அதற்குள் கையை வைத்தால், கை வேகாமல் இருக்குமா? அள்ளி மடியிற் கட்டினால் மடி எரிந்துபோகாமல் இருக்குமா? அதுபோலவே "பட்சிக்கிற அக்கினி" என்றும் (உபாக. 4; 24) "நீதியின் சூரியன்" என்றும் (மலக். 4; 2) வேதாகமங் கூறுகின்ற சருவேசுரனும் இணையில்லாத நன்மைத்தனம் உள்ளவர். ஆனால் அவரிற் கை வைத்தது போல அவரை எதிர்த்து மூர்க்கமாய்ச் சாகும் பாவியோ அவருடைய நீதி என்னும் அக்கினியாற் சுடப்படாமல் இருக்க முடியாது. நீதி செலுத்தும்போது அவர் முகம் பார்க்கமாட்டார். "அவர் பட்சவாதம் உள்ளவர் அல்ல" (அப். நட. 10; 34). நீதியாசனத்தில் வீற்றிருக்கிற "சுப்பிறீங் கோட்டு" இராசா, தமக்கு முன்பாக தமது பிராண சிநேகிதன் ஒருவன் கொலைக் குற்றஞ் சுமந்து நின்றால் அவனைச் சிநேகிதன் என்று பார்ப்பாரோ? ஒருபோதும் பாரார். அன்பனுக்கு உரிய இருதய பாசத்தை அடக்கிக்கொண்டு தம்முடைய நீதிராசாவின் உத்தியோகத்தின்படியே அவனுக்குக் கொலைத் தீர்ப்புச் சொல்லவேண்டியிருந்தாலும் சொல்லுவார். அப்படியே, பிரியமானவர்களே, நீங்கள் தேவத் துரோகிகளாய் நீதிபரரான சருவேசுரன் முன் போய் நின்றால், அவர் உங்களைத் திருச்சபையின் மக்கள் என்றும் பாரார், முன்னொரு நாள் பத்தியுள்ளவர்களாய் நடந்தவர்கள் என்றும் பாரார். பாவிகளுக்கு என்று நியமிக்கப்பட்ட ஒழியாத துக்கத் தலத்திலேயே தள்ளிவிடுவார் என்பது திண்ணம்.

இந்தத் தலம் மெய்மெய்யாய் இருக்கிற ஒரு தலம் என்பதற்கு நம்முடைய தெளிந்த புத்தி சொல்லுகிற சாட்சியோடு, உலகம் முழுதும், உலகத்திலுள்ள பல பல பொய்ச் சமயங்களுங் கூட ஒருவாக்காய்ச் சொல்லுகிற சாட்சியோடு,—இவைகளுக்கு மேற்பட்ட வேறொரு சாட்சியும் இருக்கிறது. அது தேவ வாக்கியம் ஆகிய சத்தியவேத ஆகமங்களின் சாட்சி. பழைய ஏற்பாட்டிலே நரகத் தலத்தின் விபரிப்பு பல இடங்களிலே காணப்படுகிறது. பாவிகளுக்காக ஏற்படுத்தியிருக்கிற அந்த மறியல் வீடு "ஆழமும் விசாலமுமானது. அங்கு வேகும்படி அக்கினியும் மிகுந்த விறகும்

உண்டு. கர்த்தரின் சுவாசம் கெந்தகத் தீயைப் போல் அதைக் கொளுத்தும் " என்று இசையாஸ் தீர்க்கதரிசி வசனிக்கிறார் (30; 33). ஆங்காரிகளுடைய " உடலம் அழிக்கப்பட்டு எரிகிற அக்கினிக்கு ஒப்புக் கொடுக்கப்படும் " என்று தானியேல் தீர்க்கதரிசி வரைகிறார் (7; 11). " இதோ சூளையைப்போல் எரிகிற நாள் வரும் ; அப்பொழுது அகங்காரிகள் யாவரும், அக்கிரமஞ் செய்கிற யாவரும் துரும்பாய் இருப்பார்கள். வரப்போகிற அந்த நாள் அவர்களைச் சுட்டெரிக்கும். அது அவர்களுக்கு வேரையும் விடாது கொப்பையும் விடாது என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் " என்பதாக மலக்கியாஸ் தீர்க்கதரிசி வாக்குரைக்கிறார் (4; 1). இந்த அக்கினி நிலயத்தை யோபுவானவர் விபரித்துக் காட்டுவதாவது: அது " இருள் அடர்ந்து மரண அந்தகாரத்தினால் மூடுண்ட ஒரு தேசம். நிர்ப்பாக்கியமும் வெளிச்சம் இன்மையும் சாவின் பயங்கரமும் நிரம்பிய இடம். அங்கு நித்திய கலக்கமும் சதாகால திடுக்காட்டமும் குடிகொண்டிருக்கும். அங்கு போனவர்கள் மீண்டு வருவதில்லை " என்று கூறுகிறார் (10; 21, 22). புதிய ஏற்பாட்டிலே அர்ச். சின்னப்பர் பாவிகளுக்கு " நடுத்தீர்வையை எதிர்பார்த்திருக்கிற பயங்கரமும் பட்சிக்கிற நெருப்பின் கோபாக்கினையும் உண்டு " என்கிறார் (எபி. 10; 27). சருவேசுரன் " பாவஞ் செய்த தூதர்களைத் தப்ப விடாமல் அந்தகாரச் சங்கிலிகளாலே கட்டி நரகத்திலே தள்ளினார் " என்று அர்ச். இராயப்பர் வசனிக்கிறார் (2 பேது. 2; 4). " பாவிகளை மோசம் போக்கின பிசாசானவன், மிருகமும் கள்ளத் தீர்க்கதரிசியும் இருக்கிற இடமாகிய அக்கினியும் கெந்தகமுமான கடலிலே தள்ளப்பட்டான். பாவிகள் இரவு பகலாய்ச் சதாகாலமும் வாதிக்கப்படுவார்கள். பயங்காளிகளும் அவவிசுவாசிகளும் அருவருப்பானவர்களும் கொலைபாதகரும் விபசாரக்காரரும் பொய்யர் அனைவரும் அக்கினியோடு கந்தகம் எரிகிற கடலிலே பங்கடைவார்கள். இதுவே இரண்டாம் மரணம் " என்று அர்ச். அருளப்பர் எழுதி வைத்தார் (காட்சி. 20; 10—21; 8). தீர்க்கதரிசிகள் அப்போஸ்தலர்கள் வெளிப்படுத்தலாய்க் கேட்டு எழுதிய வாக்கியங்களை ஏன் ? தீர்க்கதரிசிகளுக்கு ஞானங் கொடுத்தவரும் அப்போஸ்தலர்களுக்குக் குருவும் ஆகிய தேவ சுதன் தாமே தமது தேவ திருவாய் மலர்ந்து சொல்லிய பிரசங்கங்களிலே தீயோர்களுடைய கதியை, அவர்கள் போய் விழும் அக்கினித் தலத்தைப் பற்றி எத்தனையோ முறை திருவுளம் பற்றியதாக சுவிசேஷங்களிலே வாசிக்கிறோமே. விசேஷமாய் அவர் உலக முடிவில் தாமே நடத்தப்போகிற பொதுத் தீர்வை

யைப் பற்றி எடுத்துச் சொல்லிய தருணத்திலே திருவுளம்பற்றுவது : " மனுஷ குமாரன் தமது மகிமை பொருந்தினவராய்ச் சகல பரிசுத்த தூதரோடுங் கூடவந்து தமது பிரதாபமுள்ள சிங்காசனத்தின்மேல் வீற்றிருப்பார். அப்பொழுது சகல சனங்களும் அவருக்கு முன்பாகச் சேர்க்கப்படுவார்கள். மேய்ப்பனானவன் செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளையும் வெவ்வேறாகப் பிரிக்கிறது போல அவர்களை அவர் பிரித்து, செம்மறி ஆடுகளைத் தமது வலது பக்கத்திலும் வெள்ளாடுகளைத் தமது இடது பக்கத்திலும் நிறுத்துவார். பின்பு தமது வலது பக்கத்தில் நிற்கிறவர்களைப் பார்த்து: வாருங்கள், என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்பட்ட இராச்சியத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுங்கள்...என்பார். இடது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து அவர்: சபிக்கப்பட்டவர்களே என்னைவிட்டு அகன்று பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணியிருக்கிற நித்திய அக்கினியிலே போய் விழுங்கள் ...என்பார். அந்தப்படி இவர்கள் நித்திய ஆக்கினையை அடையவும் புண்ணியவாளர்களோ நித்திய சீவனை அடையவும் போவார்கள் " (மத். 25; 31–46).

II

பிரியமானவர்களே, தேவ துரோகிகளாய்ச் சாகிறவர்கள் சருவத்துக்கும் வல்ல தேவாதி தேவனாகிய சருவேசுரனுடைய முனிவுக்கு ஒருபோதும் தப்பிக்கொள்ள முடியாது. தப்பாமல் அவருடைய, நடுத்தீர்வையிலே போய் நிற்கவும் வேணும். தப்பாமல், பிசாசுக்கும் தங்களுக்கும் என்று ஆயத்தம் பண்ணியிருக்கிற நரக பாதாளத்திலே அடைபடவும் வேணும். வேறு போக்கில்லை. இனி, அந்தப் பயங்கரமான சிறைக் கிடங்கிலே பாவிகள் படுகிற வேதனை என்ன ? அவதரித்த தேவ வார்த்தையான யேசுநாதர் தாமே சுவிசேஷத்தின் வேறு பல இடங்களில் அதை வெளிப்படுத்தியிருக்கிறார். அதாவது நரகக் கிடங்கிலே உட்பட்டவர்களைக் " குடைந்தரிக்கிற புழு ஒருபோதும் சாகாது ; அவர்களைப் பற்றி எரிகிற நெருப்பு ஒருக்காலும் அவியாது " என்று திருவுளம்பற்றினார் (மாற். 9; 43). அவியாத இந்த நெருப்போ இந்த உலகத்தின் நெருப்பைப் போல அல்ல அல்ல. இவ் உலகத்தில் உள்ள நெருப்பு நமது நன்மைக்காக உண்டாக்கப்பட்டது. அந்த நெருப்போ ஆத்துமத்தைக் கொளுத்திச் சுட்டு, சரீரத்தையும் வேகாமல் வேக வைக்கிற ஒரு நெருப்பு. அந்த நெருப்பின் முன்னே நமது நெருப்பு

பிரசாசமுள்ள சூரியனைக் கரியமையால் எழுதிவிட்ட படம் போலவே இருக்கும். அந்த நெருப்பின் ஒரு பொறியை பூலோகத்தின் சமுத்திரங்கள் நடுவே போட்டால், இவைகளின் தண்ணீர் எல்லாம் கொதித்து வற்றிச் சுவறிப் போய்விடும் என்று வேத பாரகர்கள் உவமையாய்ச் சொல்லுவார்கள். அந்த நெருப்பு தனக்குள்ளே இடப்பட்ட பாவியை உள்ளும் புறமும் ஊடுருவிப் பாய்ந்து பற்றி, கண்டதுண்டமாகப் பீறி, வாக்கினால் விபரிக்கக் கூடாத வேதனைப்படுத்திக்கொண்டிருக்கும். ஆண்டவர் திருவுளம்பற்றிய ஐசுவரியவானின் சரித்திரத்தை நினைந்து கொள்ளுங்கள். அந்தப் பணக்காரன் இரத்தாம்பரமும் விலையேறப்பெற்ற வஸ்திரமும் தரித்து அனுதினமும் சம்பிரமமான விருந்து நடப்பித்துக்கொண்டு வந்தான். அவன் வாசல் அருகே பிச்சைக்கு வந்து கிடக்கிற குட்டம் பிடித்த வறியவனான லாசறுவுக்கு தன் மேசையிலிருந்து விழுகிற எச்சில்களையுங் கொடுப்பியான். லாசறுவுடைய புண்களை நாய்கள் வந்து நக்கிக்கொண்டிருக்கும். ஆனால் இந்தப் பிச்சைக்காரன் கடவுளுக்கு ஏற்றவன். அதனால் இவன் இறந்தபோது இவனுடைய ஆத்துமத்தைத் தேவ தூதர்கள் இறங்கிவந்து மோட்ச ராச்சியத்திலே, ஆபிரகாமுடைய மடியிலே, கொண்டுபோய்ச் சேர்த்தார்கள். ஐசுவரியவானுஞ் செத்து நரக பாதாளத்திலே புதைக்கப்பட்டான். அங்கே அவன் தன் வேதனைகளின் நடுவே கண்களை ஏறெடுத்து, தூர அதி தூரத்திலே ஆபிரகாமையும் அவர் மடியிலே லாசறுவையுங் கண்டு உரத்த சத்தமாய்க் கூப்பிட்டுச் சொல்லுவான்: ஆபிரகாம் பிதாவே! நான் இந்த அக்கினிச் சுவாலையில் தாங்கமுடியாத வேதனை அனுபவிக்கிறேன். நீர் என்மேல் இரங்கி, லாசறு தன் விரல் நுனியில் கொஞ்சம் தண்ணீர் தோய்த்து என் நாவில் விட்டு அதைச் சற்றே குளிரப்பண்ணும்படி அவனை அனுப்பவேணும் என்று வேண்டிக்கொண்டான். அதற்கு ஆபிரகாம் பிதா: மகனே நீ பூமியிலே நன்மைகளை அனுபவித்துக்கொண்டாய். அதற்கு இப்போது வேதனைப்படுகிறாய் என்றதை நினைந்துகொள். அல்லாமலும், இவ்விடத்திற்கும் உவ்விடத்திற்கும் போக்கு வரவு இல்லாதபடிக்கு பெரும் பாதாளம் ஒன்று இடையிற் கிடக்கிறது என்றார். அப்போது அவன்: அப்படியானால் பிதாவே எனக்கு ஐந்து பேர் சகோதரர் உண்டு. அவர்களும் கடவுளை மறந்து நடந்து இந்த வேதனைத் தலத்துக்கு வராதபடி எச்சரிப்பதற்கு, ஒருக்கால் லாசறுவை என் தகப்பன் வீட்டுக்கு அனுப்பிவையும் என்று விண்ணப்பஞ் செய்ய: ஆபிரகாம் அவனை நோக்கி: அவர்களுக்கு மோசேசுவும் தீர்க்கதரிசிகளும் உண்டு. இவர்களுடைய சொல்லைக்

கேட்டு நடக்கட்டும் என்றார். மீண்டும் ஐசுவரியவான் கதறி: பிதாவே செத்தவன் ஒருவன் உயிர்த்தெழுந்துபோய்ச் சொன்னால் என் சகோதரர்கள் சீக்கிரமாய் நம்புவார்களே என்றான். அதற்கு ஆபிரகாம்: மோசேசுவும் தீர்க்கதரிசிகளும் சொல்வதைக் கேளாதவர்கள் மரித்து உயிர்த்தவனுக்கும் செவி கொடார்கள் என்றார் (லூக். 16-ம் அதி).

நரக நெருப்பின் கொடுமைக்கு அத்தாட்சியாக நூலாசிரியர்கள் ஒரு சம்பவத்தை எடுத்துச் சொல்லுவார்கள். சிஸ்ரேஷியன் என்ற சபைக்குச் சேர்ந்த சன்னியாசி ஒருவர், ஒரு இரவு, பித்தளை விளக்கு வெளிச்சத்தில் வாசித்துக்கொண்டிருக்கும்போது, தமக்கு முன்னே, சரீரம் எல்லாம் அக்கினிக் கொழுந்து விட்டு எரிகிற ஒரு ஆள் வந்து அனுங்கி அனுங்கி அழுதுகொண்டு நிற்கக் கண்டு திடுக்கிட்டு உளம் பதறி: நீ யார் நீ யார் என்று கேட்டார். வந்து நின்ற பயங்கரமான நெருப்பு உருவம்: நான் நரகத்தில் கிடந்து வேகிற ஒரு ஆத்துமம். என் ஆத்துமத்தை ஊடறுத்து சின்னபின்னமாய் வெட்டிப் பிளந்துகொண்டிருக்கிற நெருப்பின் வேதனை தாங்க முடியாது. நீ என் கூட்டாளியாய் இருந்ததினால் உனக்கு இதை அறிவிக்க வந்தேன். உன் மேசையில் இருக்கிற விளக்குத் தண்டை எடுத்து நீ முகங் கழுவுகிற வட்டிலின் தண்ணீருக்குள் வை என்று சொல்லிற்று. சன்னியாசி நடுநடுக்கத்தோடு விளக்கை எடுத்து தண்ணீருக்குள் நிறுத்திவைக்க, நரக நெருப்பு மயமாய் இருந்த அந்த ஆத்துமம், தன் கைவிரல் நுனியால் தண்ணீரைத் தொட்டது. தொடவே அது சுருசுரு என்று அதிக வேகமாய்க் கொதித்து பித்தளை விளக்கையும் மெழுகு போல உருக்கித் திராவகமாய்ப் பாய்ந்தோடப் பண்ணிவிட்டது. இந்தச் சரித்திரம் நரக நெருப்பின் ஊடுருவிப்பாய்கிற அகோரத்துக்கு சிறிதென்றாலும் ஒரு அத்தாட்சி ஆகுமே.

உள்ளும் புறம்பும் ஊடுருவி அந்தகாரகாலமாய்ப் பற்றி எரிகிற இந்த நுண்ணியவைகளிலும் அதிக நுண்ணியதான அக்கினியின் ஆக்கினை ஒரு புறம். மறுபுறத்தில், இதிலும் அதிக கொடூரமான அதிக நிர்ப்பந்தமான ஒரு வேதனை உண்டு. அது என்னவென்றால் ஓயாமற் குடைந்து அரிக்கிற புழு என்று சொல்லப்பட்ட மன ஏக்கமும் கலக்கடியுமாம். கிறீஸ்தவர்களே, உங்களில் ஒரு ஆளுக்கு உபகாரமாய்க் கிடைத்த ஒரு ஆயிரம் ரூபாவை அவன் போட்டுவிட்டால் எவ்வளவு துயரத்துக்கும் கவலைக்கும் உள்ளாவான். ஐயோ எவ்வளவு அருமையான ஒரு கைமுதலை இழந்து போனேன்! கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாமற் போனது போல ஆயிற்றே

என்று இரங்கி இரங்கி மனம் நோவானே. ஆனால்: நான் பூலோகத்தில் இருந்தபோது இலேசாய்ப் பெற்றுக்கொள்ளக் கூடிய நித்திய மோட்ச சம்பாவனையை, என்னைப் படைத்தவருடைய சகல அழகு சோபனமும் பொருந்திய திருமுகத்தைக் கண்டு களிகூருவதாகிய பேரின்பத்தை, என் புத்தி மோசத்தால், என் ஆங்காரத்தால், இழந்து போனேனே என்ற நினைவு பாவியுடைய மனதைக் குடைந்து குடைந்து அரிக்கப் போகிற தன்மையை நாம் இவ்வுலகத்திலே சரியாய் உணர்ந்துகொள்ள முடியாது. இங்கே யாதொரு நட்டம், இழவு, கவலை ஏற்படும்போது அந்த நினைவை மறப்பித்துக்கொள்ள எத்தனையோ வழிகள் உண்டு. மனத்துயரத்தை மாற்றும்படி அயலாரோடு பல கதைகளையும் பேசி ஆறுகிறோம். புத்தகங்களைப் பத்திரிகைகளை வாசித்து வேறு விஷயங்களிலே புலனைச் செலுத்துகிறோம். வேடிக்கை விநோதங்களைப் பார்த்து மனதைத் தேற்றிக் கொள்ளுகிறோம். இருந்த இடத்தை விட்டு வேற்றிடத்துக்குப் போய் பராக்கு தேடிக்கொள்ளுகிறோம். இந்த உபாயங்களினால் முன்னே மனதிற் பட்ட துக்கமான, கவலையான மன உருவங்கள் மறையும்படியாக, அவைகளுக்கு மேல் வேறு மன உருவங்கள் வந்து படிந்துகொள்ளுகிறது. புகையிலைப் பாடம் அடுக்கினது போல, பிரியமில்லாத நினைவுகளாகிய மன உருவங்களின் மேல் வேறு பிரியமுள்ள மன உருவங்களை அடுக்கி மூடிவைத்து விடுகிறோம். நாட் செல்லச் செல்ல, வேணுமென்று பாடம் பிரித்தது போல, அவைகளைக் கிளப்பினால் ஒழிய, தற்செயலாய் ஏற்பட்ட ஒரு தருணத்திலே பாடம் பிரிந்தால் ஒழிய,—அந்தப் பிரியமில்லாத நினைவுகள் வெளிக்கு வராது. நரக பாதாளத்திலேயோ இப்படி அல்ல. அங்கே போய் அடைந்த ஆத்துமாக்களுக்கு இனிப் புது மன உருவங்கள் உண்டாக வழியில்லை. காணப்படுகிற இந்த உலகத்திலேதான் புதுப் புதுக் காட்சிகளால் புதுப் புது மன உருவங்கள் உண்டாகும். நரக உலகத்திலே அப்படிப் பட்ட புது உருவங்களுக்கு இடம் இல்லை. ஆனதினால், ஆத்துமமானது தன் மனமாகிய ஒரே புத்தகத்திலே பதிந்திருக்கிறவைகளைத்தான் ஓயாமற் பார்த்துக்கொண்டிருக்க வேணும். தன்னுடைய பழஞ் சரித்திரத்தைத்தான் எப்போதும் ஒரே நிலையாக கண்முன்னே கண்டுகொண்டிருக்கவேணும். ஆ! இது எவ்வளவு அச்சம் வருத்துகிற ஒரு எண்ணம்! நான் வகைமோசமாய் மோட்ச தரிசனத்தை இழந்து போன ஏக்கம் என்னை விடாது. நான் செய்த பாவங்கள் ஒவ்வொன்றினும் நினைவு, அவைகள் ஒவ்வொன்றோடுங் கூடிய வெட்கக்கேடு, பிறரைப் பாவத்தில் விழுத்தின பழி, பிறரை நித்தியமாய்க் கெடுத்த கல் நெஞ்சத்தனம், புண்ணியஞ் செய்யத்

தக்க ஆயிரமாயிரந் தருணங்களை வீணாக்கிக்கொண்ட மதிகேடு—இவை எல்லாம் ஓயாமல் என் கண் முன்னால் நிற்குமே. என் சீவியத்தின் சம்பவங்களையெல்லாம் திட்ப நுட்பமாய் எழுதிய மனச்சாட்சி என்கிற புத்தகம் எனக்கு முன்பாக விரித்தபடியே இருக்குமே. இந்த நினைவுகளை விட்டு என் மனதைத் திருப்பிக்கொள்ளவோ முடியாது. வேறு நினைவுகளால் இவைகளை மறைக்கலாம் என்றால், வேறெந்த நினைவுக்கும் இடம் இல்லையே. எந்த வாதையைத் தாங்கினாலும் இந்த வாதையைத் தாங்கக் கூடுமோ?

நரகவாசிகளுக்கு, தங்கள் உலக சீவியத்தின் நினைவே அதிக கலக்கத்தைக் கொடுத்துக்கொண்டிருக்கும் என்பது வேதபுத்தகத்தின் ஞானாகமத்திலே எழுதப்பட்டிருக்கிற வாக்கியங்களாலும் விளங்குகிறது. நடுத்தீர்வை நாளிலே சுத்தமானவர்கள் மோட்ச சம்பாவனை அடைந்துகொள்ள, தாங்களோ நரகக் கிடங்கில் விழுத்தப்பட்டதை "பாவிகள் கண்டு கலங்கி மிகவும் பயந்து, தங்கள் எண்ணத்துக்கு மாறாய் நீதிமான்கள் இரட்சிக்கப்பட்டதைப் பார்த்து ஆச்சரியம் அடைந்து, மனஸ்தாபப்பட்டு மனம் நொந்து பெருமூச்சுவிட்டு தங்களுக்குள்ளே சொல்லுவார்கள்: இவர்களை அல்லவோ நாங்கள் பலமுறை நிந்தித்தோம்; சகல நிந்தைகளுக்கும் பாத்திரவான்கள் என்று எண்ணினோம். புத்தியீனராகிய நாங்கள் இவர்களுடைய சீவியம் பைத்தியம் என்றும், இவர்களுடைய மரணம் இழிவானது என்றும் நினைத்தோமே. இதோ இவர்கள் சருவேசுரனுடைய மக்களாகப் பாவிக்கப்பட்டுப் பரிசுத்தரோடு கூட்டப்பட்டிருக்கிறார்களே. நாங்கள் அல்லவோ, சத்தியத்தின் மார்க்கத்தை விட்டு அகன்று திரிந்தோம். நீதியின் ஒளி எங்களுக்கு அல்லவோ பிரகாசிக்கவில்லை? அறிவின் சூரியன் எங்களுக்கு அல்லவோ உதிக்கவில்லை? எங்கள் அக்கிரமப் பாவ வழியில் நடந்து தவித்தோம். கஷ்டமான வழிகளைக் கடந்தோம். ஆனால் கர்த்தருடைய வழியை நாங்கள் அறிந்ததில்லை. ஆங்காரத்தினால் எங்களுக்கு வந்த பலன் என்ன? ஆஸ்திகளின் மகத்துவத்தால் எங்களுக்கு உண்டான இலாபம் என்ன? சகலமும் நிழலைப் போலவும், ஓட்டமாய் ஓடும் தூதனைப் போலவும், அலைந்து ஆடுஞ் சமுத்திரத்தைக் கடக்கும் கப்பலைப் போலவுங் கடந்து போனதே... இதுபோலவே பிறந்த நாங்கள், தட்சணமே முடிவு அடைந்த பலத்தின் அடையாளம் ஒன்றுங் காண்பிக்க நம்மால் கூடுமாயில்லை. எங்கள் கெட்ட தன்மையினாலேயே நாங்கள் நிர்மூலமானோம்,—என்று பாவிகள் நரகத்திலே சொல்லிக்கொள்ளு

வார்கள்" என்பதாக வரைந்திருக்கிறது (ஞானாகமம் 5). பாவிகளுடைய பதற்றமும் பதகளிப்பும் எடுத்து வருணிக்குந் தரம் அல்ல.

நெருப்பின் கொடூர வேதனையும் மனக்கவலையின் மாறாத் துயரமும் என்ற இந்த உளம் பதறச் செய்கிற நரக தண்டனைக்குள்ளே, இந்த ஆருட்டமான பாடுகள் எல்லாம் ஒருநாள் தணியும் என்ற ஒரு எள்ளளவு நம்பிக்கையாவது இருக்குமானால், பாவிகளுக்கு இணையில்லாத ஆறுதல் உண்டாகிவிடும். இப்படிப்பட்ட நம்பிக்கை ஒன்று இருக்குமானால் அந்த காரிருள் மண்டின சிறைச்சாலைக்கு உள்ளேயும் ஒரு மனோகரமான வெளிச்சக் கதிர் புகுந்தது போல் இருக்கும். ஆனால், நரக வேதனைகளோ நித்தியமானவைகள்; எள்ளளவு ஆவது குறையத் தக்கவைகள் அல்ல; தணியத் தக்கவைகள் அல்ல; எப்போதும் இருந்தபடியே ஒரு மாற்றமும் இல்லாமல் ஊழியுள்ள காலமும் நிலைக்கவேண்டியவைகள். ஊழியுள்ள காலமும்...! நித்தியமும்...! என்ற இந்தச் சொற்களை நாம் கண் மூடி விழிக்குமுன் வாயினாற் சொல்லி முடித்துவிடுகிறோம். ஆனால், இவைகளுடைய உட் கருத்தை அறிவது இல்லை. நித்திய காலம் என்றால் என்ன? ஊழியுள்ள காலம் என்றால் என்ன? இதை சிற்றறிவு உள்ளவர்களாகிய மனுஷர் ஒருபோதும் சரிவரக் கண்டுபிடிக்க மாட்டார்கள். உவமைகளால் மாத்திரம் இதை ஒருவிதத்திலே ஊகித்து அறியலாம். அறிவாளிகள், முடிவில்லாத காலம் என்றதற்குப் பல உவமைகளை எடுத்துச் சொல்லுவார்கள். ஒரு கையினால் அள்ளி எடுத்த மணலை ஒவ்வொன்றாக எண்ணி முடிக்க எவ்வளவு நேரம் பிடிக்கும்? ஒரு ஆற்றங்கரையிலே உள்ள மணல்களைக் கணக்கெடுக்க எத்தனை காலம் செல்லும்? இனி, உலகத்தில் உள்ள சகல ஆற்றங்கரைகளிலும், சகல சமுத்திரக்கரைகளிலும், பூமி முழுதிலும், உள்ள சகல மணற் துகள்கள் மண் துகள்களை எல்லாம் எண்ணி முடிக்க எவ்வளவு காலாதிகாலஞ் செல்லும்! இப்படியே பூமியில் உள்ள சகல துகள்களையும் எண்ணி முடித்த காலத்திலும் நித்திய காலம் முடியாது. ஒருபோதும் முடியாது. இன்னும் ஒரு உவமை:—குருவிகளுக்குள்ளே சிறியதான பலாக்கொட்டைக் குருவி ஒன்று, நூறு வருஷத்துக்கு ஒருக்கால் சமுத்திரக் கரையிற் பறந்து வந்து அந்தச் சமுத்திரத்தின் தண்ணீரிலே தன் சின்னஞ் சிறிய சொண்டு கொண்ட அளவு அள்ளிக்கொண்டு போகிறது என்று வைத்துக் கொள்ளுவோம். அந்தக் குருவி அப்படியே வந்து நூறு வருஷத்துக்கு ஒருக்கால் சமுத்திரத்தில் தண்ணீர் அள்ளி அள்ளிக்கொண்டுபோய் சமுத்திரத் தண்ணீர் முழுதையும் வெளியே இறைத்துப் போட்ட

காலத்திலும் நித்திய காலம் முடியாது; ஊழியுள்ள காலம் ஒழியாது. உள்ளபடியே காலம் என்ற சொல்லு, நித்தியத்துக்குப் பொருந்துவது அல்ல. உலகம் முடிந்த பின் "இனிமேல் காலம் என்ற வரம்பு இல்லை" என்று வேதாகமமும் சொல்லுகிறது (காட்சி. 10; 6). நித்தியமானது மாற்றமில்லாமல், முன் பின் என்ற காலப் பிரிவு இல்லாமல் ஒருகண்ட சீராய் இருக்கும். இப்படியே முடிவில்லாமல், என்றென்றைக்கும் ஒருகண்ட சீராய், நரகவாசிகள் அகோர ஆக்கினை அனுபவிப்பார்கள்.

ஆ எனக்காகச் சிலுவையில் அறையுண்ட என் இரட்சகரே, தேவரீர் படுபாவியாகிய என்னை இதுவரையில் நடுத்தீர்த்து நரக பாதாளத்திற் தள்ளிவிடாமல், அடியேனோடு நீடிய பொறுமையும் தயவு தாட்சணியமும் சாதித்து வந்ததற்காகத் தேவரீருக்கு அத்தியந்த நன்றி அறிதலான தோத்திரஞ் சொல்லுகிறேன். என்னைப் போல பாவக்குரோதஞ் செய்திராத எத்தனை பேர் நித்திய தண்டனைக்கு உள்ளாகியிருக்கிறார்கள்! என்னையோ இதுவரையுந் தேவரீர் காத்து வைத்து இன்றைக்காவது நான் மனந் திரும்பும்படியான ஒரு நல்ல தருணந் தந்திருக்கிறதைப் பார்க்கும்போது, தேவரீர் எதுவிதத்திலும் என்னை இரட்சித்துப்போடவேணும் என்று கொண்டிருக்கிற தேவ தயவுள்ள திருச்சித்தத்தைக் கண்டுகொள்ளுகிறேன். ஆதலால், ஆண்டவரே, தயவின் கரை காணாத சமுத்திரமே, கல்லான என் இருதயத்தைத் தேவரீர் தாமே உமது சகல வல்லமையுள்ள வரப்பிரசாதத்தால் இளகப் பண்ணி, என் பாவங்களுக்காக மெய்யான மனஸ்தாபத்தை எனக்குக் கட்டளையிட்டருளும். என் இருதயம் நெக்குவிட்டு உருகவும், கண்களாற் கண்ணீர் ஆறாய் ஓடவும் செய்தருளும். இவ்வளவும் நான் செய்த அக்கிரமங்களுக்குத் தக்க தவம் பண்ணி, உமது கோப அக்கினிக்குத் தப்பிக்கொள்ளவும், எனக்கு மிஞ்சியிருக்கிற காலத்திலே புதுச் சீவியம் உள்ளவனாகி பயத்தோடும் நடுநடுக்கத்தோடும் என் இரட்சணிய அலுவலைப் பார்த்துவரவும் அனுக்கிரகம் செய்தருளும் ஆண்டவரே,—ஆமென்.

நாலாம் நாள்

Instruction :
On the Duties of Parents

காலைப் போதனை :

இல்லறக் கடமைகள்—தாயுந் தகப்பனும்

இன்று காலை, பெற்றோருக்கு, அதாவது தாயுந் தகப்பனுமாய் இருக்கிறவர்களுக்கு,—பிள்ளை குட்டி உள்ளவர்களுக்கு, சில புத்தி மதிகளைச் சொல்லுவோம். பெற்றோரே, புருஷனும் பெண்சாதியும் என்ற கணக்கிலே உங்களுக்குச் சில கடமைகள் உண்டு. அவைகளோடு, சருவேசுரன் உங்களுக்குச் சந்தானத்தைத் தரும்போது, அந்தப் பிள்ளைகள் மட்டிலேயும் உங்களுக்கு பாரமான கடமைகள் உண்டு. இல்லறத்தில் உள்ள உங்களுக்கு சகல பாக்கியங்களுக்கும் மேலானதாகிய பிள்ளைப் பாக்கியத்தைச் சிருட்டி கர்த்தாவானவர் தந்தருளும்போது, பார்வோன் ராசாவுடைய மகளானவள் மோசேசு முனிவராகிய குழந்தையின் தாய்க்குச் சொன்னது போல: " நீ இந்தப் பிள்ளையை எடுத்து வைத்து எனக்கு வளர்த்துத் தா " என்று சொல்லுகிறவர் போல ஆகிறார் (யாத். 2; 9). நீங்கள் பிள்ளைகளுக்குச் சருவேசுரனுடைய இடத்திலே இருக்கிறீர்கள். தம்முடைய பிதாவுக்கு உரிய அதிகாரத்தை அவர் உங்களுக்குத் தந்திருக்கிறார். இதைத்தான் நம்முடைய இனிய தமிழ்ப் பாஷையிலே " அன்னையும் பிதாவும் முன் அறி தெய்வம் " என்று சொல்லுவது. சருவேசுரனுக்குப் பதிலாகப் பிள்ளைகளின் கண் முன் நிற்பது அன்னையும் பிதாவுந்தான். சருவேசுரன் உங்களுக்குச் செய்திருக்கிறது ஒரு பெரிய சங்கை. அவர் உங்களுக்குத் தந்திருக்கிறது ஒரு பெரிய கொடை. இந்தப் பெரிய

சங்கைக்கும் இந்தப் பெரிய கொடைக்கும் ஒரு பெரிய கணக்கும் கேட்பார். அதாவது, நீங்கள் பிள்ளைகளை சருவேசுரனுக்கு உவந்தவர்களாய் வளர்த்து அவருக்கு ஒப்பிக்கவேணும். உங்கள் அசட்டைத்தனத்தினால் அந்தப் பிள்ளைகள் கெட்டுப் போனால், அதற்கு நீங்களே உத்தரவாதஞ் சொல்லவேண்டியவர்கள் ஆவீர்கள். பெற்றோர் பிள்ளைகள் மட்டிற் கொண்டிருக்கிற கடமைகளை வளர்ப்பு, கல்வி, காவல், கண்டனை, முன்மாதிரி என்று பிரித்துச் சொல்லலாம். இவைகள் ஒவ்வொன்றையும் பற்றி சிலது சுருக்கமாய்ச் சொல்லுவேன். தயவாய்க் கேளுங்கள்.

1. பெற்ற பிள்ளைகளை வளர்த்துவிட வேண்டிய கடமையைப் பற்றி அதிகம் விபரிக்கத் தேவையில்லை. பிறப்புக்குக் காரணமானவர்கள்தாமே வளர்ப்புக்கும் உதவியாக வேணும் என்றது வெளிப்படை. காய்த்த மரத்திலே கிடந்துதான் கனியானது முற்ற வேணும் என்றது இயற்கையான ஓர் ஏற்பாடு. பிள்ளைகளுக்கு, தாங்களாகத் தங்களைக் கவனித்து நடத்தத் தக்க வயது வருமட்டும், அவர்களை வளர்த்து ஆளாக்கி விடுவது பெற்றோருடைய கடமை. இதிலே பெரும்பாலும் தாயைக் குற்றஞ் சொல்ல வராது. குற்றஞ் சொல்லுகில், தாயிடத்திலே பிள்ளையை உணவு ஊட்டி வளர்க்கிற கவனம் கூடிப்போயிற்று என்று ஒழிய, குறைந்து போயிற்று என்று சொல்ல வராது. சில தாய்மார் கண்ட நேரம் எல்லாம் பிள்ளைகளுக்குத் தீன் கொடுத்து, ஏன் ? சொல்லவேணுமானால், தீனை மட்டுக்கு மிஞ்சிப் பிள்ளைகளுக்குத் தீற்றித் திணித்து, கணக்குக்கு மிஞ்சின நேசத்தால் அவர்களை நோய் வாய்ப் பட அல்லது சாப்பாட்டு ராமர்களாகி சோம்பேறிகளாகிக் கெடப் பண்ணிப் போடுகிறார்கள். நேரங் கட்டித் தீன் கொடுப்பதுதான் பிள்ளைகளுடைய சுகத்துக்கு ஏற்றது. கணக்க உரக்கத் தின்று தீர்க்கிறது அல்ல, சீரணித்துச் சரீரத்தோடு சேரத் தக்க அளவாய்ச் சாப்பிடுகிறதுதான் சரீர சுகத்துக்கும் வளர்ச்சிக்கும் ஏற்றது. பால்குடிக் குழந்தைகளுக்குங் கூட நேரங் கட்டிப் பால் கொடுப்பதுதான் உத்தமம்.

பிள்ளைகளை வளர்க்கிற அலுவலிலே, பலமுறையும், அதிக குறை கேட்கிறதற்கு ஆளாய்ப் போவது தகப்பன்தான். தகப்பன் இயன்ற அளவில் உழைத்துப் பிழைத்து, குடும்பத்துக்கு வேண்டிய அளவான, வேண்டிய தன்மையான, தீனுக்கு வழி பண்ணாவிட்டால், தாய் எப்படி பிள்ளைகளை வளர்ப்பாள் ? தகப்பனானவன் அன்றாடன்று உணவுக்கும் உடைக்கும் அவசியமானதை உழைப்

பது போதாது. வருத்தம், துன்பம், பிள்ளைப்பேறு முதலிய தருணங்களுக்கு உதவத் தக்கதாய் ஒரு தொகையை முன்னேறவே சேமித்து வைத்துக்கொள்ளவும் வேணும். எறும்பு தேனீ முதலிய பிராணிகள்கூட மழை காலத்துக்கு, வேலைசெய்ய இயலாத நாட்களுக்கு என்று இரை சேமித்து வைக்கக் காண்கிற மனுஷன், கஷ்ட காலத்துக்கு வேண்டியதை ஏலவே ஆயத்தப்பண்ணி வைத்துக்கொள்ளாமல் விடலாமா? இதற்கு மாறாக, வேலை செய்யாமற் சோம்பிக்கொண்டிருந்து, அல்லது, குடித்து வெறித்து வீட்டில் உள்ள நகை நட்டுகளையும் அழித்துக்கொண்டு திரிகிற தகப்பன், சருவேசுரனுக்கு என்ன கணக்குக் கொடுக்கப்போகிறான்?

2. பிள்ளைகளின் சரீரத்தை வளர்க்கும் குணம் சுபாவமான ஒரு நாட்டம். ஆனால் ஆத்துமத்தை வளர்ப்பது, அதாவது புத்தியைத் தீட்டி, மனதை நல் உணர்ச்சிகளால் நிரப்பி, சித்தத்தை பாவம் இல்லாத வழிகளில் நடத்தி வைப்பது பெற்றோர் நன்மனமாய், உற்சாகங்கொண்டு, பார்த்து முடிக்கவேண்டிய ஒரு கடமை. "உனக்குப் புத்திரர்கள் இருந்தால் அவர்களுக்கு நல்லுணர்ச்சி பயிற்றி இள வயது தொடங்கித்தானே அவர்களை அடக்கி நடத்து" என்று வேதாகமம் கற்பிக்கிறது (எக்கிளி. 7; 25). "தொட்டிலிற் பழக்கம் சுடலை மட்டும்" என்ற பழமொழியை நினைத்துக்கொள்ளுங்கள். குழந்தைப் பிராயத்திலே உங்கள் பிள்ளைகளுக்கு நீங்கள் பயிற்றுகிற பழக்கமே அவர்களுடைய சீவியகாலம் முழுதும் அவர்களை ஆட்கொள்ளும் என்றதை மறந்து போகாதேயுங்கள். அமைச்சல், சாந்தகுணம், பொறுதி, நேர்மை, ஈகை முதலிய நற்குணங்களைச் சிறுபிராயந் தொட்டே பிள்ளைகளுக்குப் பயிற்றவேண்டியது. விசேஷமாய் செபஞ் செய்ய, கோவிலிலே ஆசாரமாய் இருக்க, திருச்சுரூபங்கள் படங்களைச் சங்கிக்க அவர்களுக்குக் காட்டிக் கொடுக்க வேண்டியது. நல்ல தாய் தனது குழந்தை பேசத் தொடங்கும்போதே யேசுவே! மாதாவே! என்றது முதலான திரு வார்த்தைகளை அது சொல்லப் பழக்கி, அது திருச்சுரூபங்களை நோக்கிக் கையெடுக்கவும், தனக்குச் சிலுவை போட்டுக் கொள்ளவும் பண்ணி வைப்பாள். வளர வளர, விளையாட்டுக் கதைகள் சரித்திரங்களோடு ஆண்டவருடைய திருச் சரித்திரக் கதைகள் பழைய ஏற்பாட்டுச் சரித்திரங்களையும் சொல்லி, மந்திரங்களையும் படிப்பித்துவருவாள். தாய்தான் பிள்ளைக்கு முதல் உபாத்தியும் உபதேசியும் குருவும் என்ற உண்மையை, தாய்மாரே, நன்றாய் மனதில் வைத்துக்கொள்ளுங்கள்.

தகப்பனுக்கும் இதிலே சமமான கடமை உண்டு. தொபியாஸ் என்றவர் தம்முடைய மகன் "சிறுவந்தொட்டே சருவேசுரனுக்குப் பயப்படவும் சகல பாவத்துக்கும் விலகி நடக்கவும் படிப்பித்துக்கொண்டுவருவார்" (தொபி. 1; 10.) என்று வேதத்தில் வரைந்திருப்பது, தகப்பன்மாரே, உங்களுக்கு முன்மாதிரியாகத் தானே என்றதைக் கவனியுங்கள். விசேஷமாய், தகப்பன், பிள்ளைகளுக்கும் தனது நிலைபரத்துக்கும் ஏற்ற பள்ளிக்கூடக் கல்வியைப் பயிற்றுவிக்க முயற்சி செய்ய வேண்டியது. பள்ளிக்கூடம் என்று சொல்லும் போது எவ்வித பள்ளிக்கூடமும் அல்ல, கத்தோலிக்க பள்ளிக்கூடமே என்றதைக் குறிக்கத் தேவையில்லை. கத்தோலிக்கர் தங்கள் பிள்ளைகளைப் பிற சமயப் பள்ளிக்கூடங்களுக்கு விசேஷ உத்தரவின்றி விடக் கூடாது என்பது கனமான ஒரு திருச்சபைக் கட்டளை. கட்டளை மாத்திரமா? அது மனச்சாட்சிக்கு மாறான ஒரு செயலுமே என்பது வெளிப்படை. பிற சமயப் பள்ளிக்கூடங்களிலே, பிள்ளைகள், எல்லாக் கல்விக்கும் முன் தங்களுக்கு அவசியமான வேத கல்வியை எப்படி அடைந்துகொள்ளுவார்கள்? பிறசமயப் பள்ளிக்கூடங்களிலே, அவர்களுடைய வேத விசுவாசத்துக்கு அபாயமான எத்தனை துர்ப்போதகங்கள் துன்மாதிரிகள் உண்டு? அவசியமான ஒரே காரியமான (லூக். 10; 42) ஆத்துமரட்சணியத்தைக் கைபறியவிட்டுப் படிக்கும் கல்வியால் வருகிற பிரயோசனம் என்ன?

பிள்ளைகளுக்கு மேற் கல்வி படிப்பிக்க நிலைபரம் இல்லாவிட்டால், தொழிற் கல்வியைப் படிப்பிப்பது தகுதி. கைத்தொழில் ஆகாது, எல்லாரும் மேற் கல்வியே படிக்கவேணும் என்று சொல்ல வேண்டாம். என்ன தொழிலை ஆனாலும் பாவமற்ற தொழிலாய், தன் நிலைபரத்துக்கு ஏற்ற தொழிலாய் எடுத்துக் கொண்டால், அது உத்தமமானதுதான். "பறவைகள் பறக்கப் பிறந்திருக்கிறது போல மனுஷன் வேலை செய்யப் பிறந்திருக்கிறான்" என்பது வேத வாக்கியம் (யோபு 5; 7.). கைத்தொழில், தோட்ட வேலை, வர்த்தகம் முதலியவைகள் ஏதோ சங்கையினம் என்றும், இங்கிலிஷ் படித்து உத்தியோகம் பார்ப்பதுதான் மேன்மை என்றும் மதிமோசமாய் எண்ணி, சில வறிய பெற்றோர் தங்களுக்கு எட்டாத தண்ணீரில் இறங்குகிறார்கள். பிள்ளைகளை மேற் கல்வி படிப்பிக்கத் தொடங்கி, அதை முடித்துக்கொள்ள வழி இல்லாமல் இடையிலே கையை விட்டுவிடவே, அவர்கள் உத்தியோகமும் இல்லாமல் சுய தொழில்களிலும் கையிட வெட்கித்துத் தெருவழியே கழுதை மேய்த்துத் திரிவார்கள். இது எவ்வளவு பரிதாபம்! இவர்களு

டைய பெற்றோருக்கு இதைப் பற்றித் தேவ முன்னிலையிலே எவ்வளவு கனமான உத்தரவாதம்!

3. பிள்ளைகளுக்கு வேத கல்வியும் உலக கல்வியும் பயிற்றுவதோடு, அவர்களைக் கண்காணித்து காவல் பண்ணுவதும் அவசியம். எவ்வளவு உத்தமமான தோட்டமும் பண்படுத்திக்கொண்டு வராவிட்டால் களைகளை, முட்செடிகளைப் பிறப்பியாமற் போகாது. அதுபோல, நல்ல பிள்ளைகளிடத்திலேயும் கெட்ட சகவாசத்தினாலும் வேறு பல காரணங்களினாலும் சிறிது சிறிதாய்த் துர்க்குணங்கள் தலைகாட்டும். இந்தக் காரணங்களுக்கு எதிராய், பெற்றோர், விழித்திருந்து காவல் பண்ண வேணும். "என்னுடைய பிள்ளை ஒரு சம்மனசு, அது ஒரு துட்டாட்டமும் செய்யாது" என்று சொல்லிக்கொண்டு சில பெற்றோர் தங்கள் பிள்ளைகளை மனம் போனபடியே எவ்வித கூட்டாளிகளோடும் விளையாடித் திரிய விட்டுவிடுகிறார்கள். துர்ப்பழக்கம் பெரும்பாலும் கூட்டாளிகளாலேதான் வரும் என்றதை இவர்கள் யோசிக்கிறதில்லை. பொய், களவு, சண்டித்தனம், துர்நடை முதலிய இவைகளெல்லாம், தொற்று வியாதிபோல, ஒரு பிள்ளையிடத்திலிருந்து மற்றொரு பிள்ளையைப் பற்றிப் பிடிக்கிற துடியாட்டங்கள். வீட்டில் எவ்வளவு நற்பழக்கம் உள்ள பிள்ளையும், வெளியிற் காவாலிப் பிள்ளைகளோடு கூடி நாடித் திரியுமானால், காலகதியில் துட்ட பிள்ளையாகவே மாறிவிடும். "பன்றியோடு கூடிய கன்றும் மலந்தின்னும்" என்ற பழமொழி தெரியாதா? "ஆகாத சம்பாஷணைகள் நல்லொழுக்கத்தைக் கெடுக்கும்" என்று வேதாகமமும் விளம்புகிறது (1 கொரிந். 15; 33). தங்கள் பிள்ளை நாள் முழுதும் என்ன செய்துகொண்டிருக்கிறது என்றதைப் பெற்றோர் கவனித்துக்கொள்ள வேணும். இது, விசேஷமாய் எப்போதும் வீட்டில் இருக்கிற தாயுடைய கவலையாய் இருக்கத் தகும். அர்ச். கிறீசோஸ்தம் சில பெற்றோரைப் பற்றிச் சொல்லுகிறார்: "இவர்கள் தங்கள் பிள்ளைகள் மட்டிற் செலுத்துகிற கவனத்திலும் பார்க்க, தங்கள் மாடு குதிரை கழுதைகளைப் பற்றி அதிக கவனமாய் இருப்பார்கள். உங்கள் மாடு எங்கே குதிரை எங்கே என்று கேட்டால், இன்ன இடத்தில் கட்டி இருக்கிறது, இன்ன இடத்தில் மேய்ந்துகொண்டு நிற்கிறது என்பார்கள். பிள்ளை எங்கே என்றால் சொல்லத் தெரியாது". இப்படி, கண்ட மாடு கட்டி தெருத் திண்ணை எல்லாம் ஓடித் திரிய விடப்படுகிற பிள்ளை, ஊரார் பிள்ளைகளோடு தன்னாரவாரம் கலந்து விளையாடி, ஊரிற் பட்ட திரியாவரம் எல்லாம் பழகிக் கெட்டுப் போகும். பிரியப்பட்டதெல்லாம் வாசிக்க விடப்படுகிற பிள்ளைகளும், கூத்துகள்

வேடிக்கைகளுக்கு மூத்தவர்களோடு அல்லாமல் தங்கள் வயதானவர்களோடு போக விடப்படுகிறவர்களும் இப்படியே மெல்ல மெல்லப் பழுதாய்ப் போகிறார்கள். அல்லாமலும், வீட்டிலே தானும் வால வயதுப் பிள்ளைகளை ஆண் பெண் என்ற பேதம் இல்லாமல் ஒருமிக்க இருக்க, விளையாட, படுக்க விடப்படாது. சகோதரங்களைப் பற்றித்தானும் எச்சரிக்கையாய் இருப்பது கடந்துபோக மாட்டாது. இப்படி நான் சொல்லுவதைப் பற்றி குறை நினையாதிருங்கள். பெற்றோராகிய நீங்கள் மனுஷ சுபாவத்தின் தன்மையை மறந்துபோகப்படாது. பிள்ளைகள் நல்லவர்கள் என்றாலும், பிசாசு பொல்லாதது, சரீரம் துர்நாட்டம் உள்ளது. பஞ்சை நெருப்பின் கிட்ட வைத்தால் நெருப்புப் பற்றாமல் விடுமா? பற்றாமல் விடாது.

4. பிள்ளைகளைக் காவல் பண்ணுவதோடு, அவர்கள் குற்றஞ் செய்யும் வேளைகளிலே அவர்களைக் கண்டித்துத் திருத்துவதும், தாய் தகப்பன்மாரே, உங்கள் கடமை. இதைப் பற்றி வேதாகமம் சொல்லுகிறதைக் கேளுங்கள்: "உன் பிள்ளையை இளவயதிலே தலைவணங்கப் பண்ணு. குழந்தையாய் இருக்கும்போது தானே அதின் இடுப்புகளை ஒடுக்கி வை. அல்லாவிடில் அது உனக்கு மிஞ்சி உன் சொற்கேளாமற் போய்விடும். உன் மனதுக்குத் துயரத்தைத் தரும்" (எக்கிளி. 30; 12). பிள்ளைகள் நீங்கள் சொன்னதைச் செய்யப் பழக்க வேணும். அவர்கள் வயசுக்கும் பெலனுக்கும் மேற்பட்ட கட்டளைகளை இடப்படாது. புத்தியாய் இட்ட கட்டளைகளை அவர்கள் தட்டாதிருக்கப் பண்ணவேணும். அமையாத போது, அல்லது வேறு குற்றங்களை மனம் பொருந்திச் செய்யும் போது, தடியையும் ஒறுத்துப் பார்க்கப்படாது. "பிரம்பைக் கையாடாதவன் தன் மகனைப் பகைக்கிறான்" என்றது நீதிமொழி வாக்கியம் (13; 24). "ஐயோ எங்கள் பிள்ளை குழந்தைப் பிள்ளை! அதை எப்படி அடிக்கிறது?" என்று சொல்லி, சில தாய்மார், பெரிய பெரிய குற்றங்களுக்கும் தண்டனை பண்ணாமல் விடுவார்கள். இவர்களுக்கு, பிள்ளை சிறிதாய் இருக்கும் போது தண்டிக்க மனம் இல்லை. பெரிதாய் வந்தபின் தண்டிக்கப் பெலன் இல்லை. இனி பிள்ளையைத் திருத்துவதுதான் எப்போது? "அடித்து வளவாத பிள்ளையும் முறுக்கி வளவாத மீசையும்" என்றது போல, பிள்ளை பிற்காலம் ஒன்றுக்கும் உதவாமற் போகிறது! தன்னைச் சிறு வயதிலே கண்டித்துத் திருத்தாத பெற்றோரை அது, பெரிய ஆளான பின், தானே அடித்து ஆக்கினைப் படுத்துவதை எத்தனையோ முறை கண்டிருக்கிறோம்.

பிள்ளைகளைத் தண்டிக்கிறது என்றால், எப்போதும் சுணைக் கெட அடித்துக்கொண்டிருக்கிறது அல்ல; தங்கள் கோபத்தை அடக்கமாட்டாமல், சினம் மிஞ்சி கையாலே காலாலே, எடுத்த தடி தண்டாலே, அடித்து, உதைத்து, மோதி, எறிந்து பிள்ளையின் சரீரத்தை ஊறுபடுத்துவது அல்ல. அல்லது திட்டி சபித்துக் கொண்டிருப்பதும் அல்ல. குற்றஞ் செய்த பிள்ளையைச் சில வேளை அச்சுறுத்த வேணும்; சில வேளை கோப முகங் காட்டி உறுக்க வேணும்; சில வேளை குற்றத்துக்குத் தகுந்த விதமாக, வயசுக்கு ஏற்ற அளவாக, கையை நீட்டச்சொல்லி, கையிலே, அடி எண்ணி, மெல்லிய கம்பால், கழியால் பூசை கொடுக்க வேணும். சினத்தைத் தணித்துக் கொண்டு, பிள்ளையின் நன்மைக்காக என்று ஆலோசனையாய்த் தண்டிக்கிற பெற்றோர், ஒருபோதும் கணக்குக்கு மிஞ்ச மாட்டார்கள். பிள்ளைகளின் சுய குணத்தையும் நோக்கிக்கொள்ளுவது அவசியம். நன்றியறிதலும் சுணைப்பும் உள்ள சில பிள்ளைகளை அன்பான ஒரு வார்த்தையாற் திருத்திப்போடலாம். முரட்டுத்தனமும் பிடிவாதமுங் கொண்ட சில பிள்ளைகளோ அடிக்க அடிக்க அதிகமாய்ப் பழுதுபட்டுப் போவார்கள். இப்படிப்பட்டவர்களுடைய மனதை வேறு உபாயங்களாற் தூண்டி நல் வழிப் படுத்த வேண்டி வரும். விசேஷமாய், வளர்ந்த பிள்ளைகளைத் திருத்துவதிலே, பெற்றோர், செபத்தை அதிகமாய்க் கையாட வேண்டும் என்பதையும் கவனித்துக் கொள்ளுங்கள்.

5. கடைசியாய், பிரியமான தாய் தந்தையர்களே, உங்கள் பிள்ளைகள் மட்டில் நீங்கள் கொண்டிருக்கிற பெருங் கடமையாகிய நல்ல முன்மாதிரியைப் பற்றி ஒரு வார்த்தை சொல்லி முடிக்கக்கடவேன். “ சொற்கள் காற்றோடு பறந்துபோம், முன்மாதிரியோ தூண்டியிழுக்கும் ” என்று லத்தீன் பாஷையில் ஒரு பழமொழி உண்டு. அது போலவே நீங்கள் பிள்ளைகளுக்கு எவ்வளவு நல்ல போதகங்களை வாயினாற் சொல்லிக் கொடுத்தும், உங்கள் நடக்கையோ சொல்லுகிறபடி இராவிட்டால் அவர்கள் ஒருபோதும் திருந்தி நடக்கமாட்டார்கள். நீங்கள் வீட்டிற் செபஞ் செய்யாமல் இருந்துகொண்டு, ஞாயிற்றுக் கிழமைகளில் பூசை காணாமல் அசட்டை பண்ணிக்கொண்டு பிள்ளைகளைப் பார்த்து: செபஞ் சொல்லுங்கள், பூசைக்குப் போங்கள் என்றால், அவர்கள் இந்தக் கடமைகளைச் சரியாய் நிறைவேற்ற ஏவப்படுவார்களா? நீங்கள் நேர்மைக் குறைவாய் நடந்து, ஊத்தை வார்த்தைகளை அவலாதிகளைப் பேசி, பிறருக்கு நட்டங்களை வருவித்துக்கொண்டிருந்தால், பிள்ளைகள் உண்மை பேச, பிறர் சிநேகம் அனுசரிக்கப் பழகுவார்களா? “ தந்தை

எப்படி மைந்தன் அப்படி ”, “ தாயைப்போற் பிள்ளை நூலைப் போல் சீலை ” என்ற முதுமொழிகள் உண்மையான மொழிகள். சில தாய் தகப்பன்மார் பிள்ளைகளின்முன் பேசுகிற, நடக்கிற விதத்தைப் பார்த்தால், அவர்கள் இவர்களைக் கெடுத்து தீ நரகுக்கு ஆளாக்க வந்த சத்துருக்களே அல்லாமல் பிள்ளைப் பெற்ற பிதா மாதா அல்ல என்று துயரத்தோடே சொல்லவேண்டி இருக்கிறது. இவர்கள் பிள்ளைப் பெறாதிருந்தால் எவ்வளவோ நலமாய் இருந்திருக்கும். “ எவனாவது இந்தச் சிறுவரில் ஒருவனுக்கு இடறல் உண்டாக்குவதைப் பார்க்கிலும் அவன் தன் கழுத்தில் திரிகைக் கல்லைக் கட்டி சமுத்திரத்தில் தள்ளுண்டு போவது அவனுக்கு நலமாய் இருக்கும் ” என்று சத்திய சுருபியாகிய ஆண்டவர் திருவுளம்பற்றினாரே (லூக். 17; 2). பிரியமானவர்களே, பிள்ளைகளை அவமாக்கிப்போட்டு நீங்கள் ஈடேறலாம் என்று மனப் பால் குடியாதேயுங்கள். இயன்றளவு உங்கள் பிள்ளைகளைத் தேவபயத்தோடு வளர்த்து அவருக்கு ஒப்புவிப்பதிலேயே உங்கள் சொந்த இரட்சணியம் தங்கி இருக்கிறது. இஸ்திரியானவள் “ விசுவாசத்திலும் அன்பிலும் பரிசுத்தத்திலும் நிலைகொண்டிருந்தால் பிள்ளைப் பேற்றினாலே இரட்சிக்கப்படுவாள் ” என்று அர்ச். சின்னப்பர் வேதவாக்கியமாக எழுதிவைத்திருக்கிறார் (1 தீமோத். 2; 15). தாயானவள் தன் பிள்ளைகளை விசுவாசத்திலும் அன்பிலும் பரிசுத்தத்திலும் வளர்த்தால் இரட்சிக்கப்படுவாள். தாய்க்குச் சொன்னது தகப்பனுக்கும் பொருந்தும்.

பிரியமான தாய் தகப்பன்மாரே, உங்கள் செல்வப் பொக்கிஷங்களாய் இருக்கிற உங்கள் பிள்ளைகள் மட்டில் உங்களுக்கு உள்ள கடமைகளை எல்லாம் இந்த ஞான ஒடுக்க நாட்களில் நன்றாய் விசாரித்துப் பாருங்கள். எதிலே தவறி இருப்பீர்களோ அதை இனிமேற் திருத்தி நடவுங்கள். உங்கள் பிள்ளைகள் சருவேசுரனுக்கும் அவர் திருச்சபைக்கும் ஏற்க நடப்பதினால் அடைகிற புண்ணிய பலனில் நீங்களும் பங்குபற்றி, அவர்களை அர்ச்சிய சிட்டவர்களைப் போல வளர்த்ததற்காகச் சருவேசுரன் உங்களுக்குப் பொழிகிற வரப்பிரசாதங்களைப் பெற்று, அவர்களோடு நீங்களும் ஈடேறி, நித்திய பேரின்ப வாழ்வை அடைந்து கொள்ளுங்கள்,— ஆமென்.

SERMON:

On Confessions made without Conversion of Heart

மாலைப் பிரசங்கம்

மனம் மாருத பாவசங்கீர்த்தனம்

" Cor contritum et humiliatum Deus non despicies " (Ps. L, 17)

" மனஸ்தாபத்தினால் நொருங்கித் தாழ்த்தப்பட்ட இருதயத்தை, சருவேசுரா, தேவரீர் புறக்கணிக்கமாட்டீர் " (50-ம் சங். 17).

" கிறீஸ்தவர்களுக்குப் பாவசங்கீர்த்தனம் என்ற ஒரு நல்ல போக்கு இருக்கிறபடியால், அவர்கள் என்ன பாவத்தையும் செய்து போட்டுப் போய் குருவானவர் இடத்தில் சொல்லிவிட்டு பிரியம் போல நடக்கலாம் " என்று பிற சமயத்தவர்கள் சிலர் ஒரு அவதூறு சொல்லக் கேட்டிருக்கிறேன். இது முழுதும் அபாண்டமான ஒரு பேச்சு என்று, பிரியமான கிறீஸ்தவர்களே, நீங்கள் உடனே மறுப்புச் சொல்லுவீர்கள். ஆனாலும், எத்தனையோ முறை அடுத்தடுத்துப் பாவசங்கீர்த்தனம் பண்ணியும் யாதொரு திருத்தமும் இல்லாமல் மீண்டும் மீண்டும் அதே பாவங்களைச் செய்துகொண்டுவருகிறவர்களிலே யாதொரு பிசகும் இல்லையா? பாவப் பிணிக்குப் பரம அவுஷதமாய் சருவேசுரன் தந்த இந்த வழிபாட்டின் மூலமாய் அந்தப் பிணி கொஞ்சமாவது மாறிச் சுகங் காணமல் இருப்பது, மருந்தில் உள்ள பழுதா? அல்லது மருந்து உட்கொள்வோர் சரியான பத்தியத்தோடு அதை உட்கொள்ளாத பழுதா? அளவில்லாத வல்லமையுள்ள சருவேசுரன், வரம்பில்லாத தயாபர இரக்கத்தோடு, மனுஷருக்குக் கொடுத்த மருந்திலே ஒருபோதும் பழுது இராது. அதைத் தின்கிற முறையிலே தான் பழுது இருக்கவேணும் என்று உங்களுக்குத் தோற்றவில்லையா? சருவேசுரன் பாவிக்குக் காட்டியிருக்கிற இரக்கப் பெருக்கத்தை நோக்க நோக்க ஆச்சரியமாய் இருக்குமே. பாவிக்கு ஞானஸ்நானத்திலே ஒரு முறை மாத்திரம் தம்முடைய திரு இரத்தத்தினால் மன்னிப்பும் மோட்ச உரிமையும் கொடுப்போம் என்று அவர் தீர்த்துவிட்டால் யாராவது குறை சொல்ல இடம் உண்டா?

நரகபாதாளத்திலிருந்து பாவியை ஒருதரம் மீட்டுவிடுவது என்ன சின்னக் காரியமா? பாவியானவன் பின்னொருமுறை நித்திய பேரின்ப வாழ்வுக்கு உரிமை அடைவது என்ன அற்ப சிலாக்கியமா? ஆனால், அனந்த தயைச் சுரூபியான நம்முடைய கடவுள், ஞானஸ்நானத்தின்பின் நாம் தவறிச் செய்துகொண்ட பாவங்களை, மறுபடி ஒருமுறை மாத்திரம் அல்ல, நூறு முறை ஆயிரம் முறையும் பொறுத்து, நாம் அடுத்தடுத்துச் செய்யும் துரோகங்களை மன்னித்து நமக்குச் சமாதானத்தின் முத்தந் தர ஆயத்தமாய் இருக்கிறாரே. அல்லது, ஒருவன், தான் ஞானஸ்நானம் பெற்றபின் செய்த பாவங்களுக்கு மன்னிப்பு அடைய விரும்பினால், உலகத்தின் ஒரேயொரு இடத்தில் மாத்திரம் வீற்றிருக்கும் தம்முடைய ஒரேயொரு பதிலாளியிடத்தில்—அர்ச். பாப்பானவரிடத்தில்—போய் பாவசங்கீர்த்தனம் பண்ண வேணும் என்று நியமித்துவிட்டால், அந்த மகா கருணையைத்தானும் நாம் எவ்வளவு அருமை பெருமையாகப் போற்ற வேணும்? ஆனால், அப்படி தூர அதி தூரத்திலே இருக்கிற ஒருவரிடம் மாத்திரம் அல்ல, நமது வீட்டு அண்டையிலே, நமது கோயிலிலே இருக்கிற எந்தக் குருவானவரிடத்திலும் நாம் பாவசங்கீர்த்தனம் பண்ணிக்கொள்ளத் தக்கவிதமாய் " மீசாம் " பார்க்கிற எல்லாக் குருமாருக்கும் தமக்குப் பதிலாய் இருந்து பாவத்தைப் பொறுக்கும் வல்லமையை அளித்திருக்கிறாரே. அல்லது, பாவியானவன் தனது சாவான பாவத்துக்காக சீவிய காலம் எல்லாம் ஒரு சந்தி பிடித்து, தன் தேகத்தை இரத்தம் பீறிடுந்தனையும் கசைகளால் அடித்து வாதைபண்ணிக் கடுந் தவஞ் செய்யாவிட்டாற் பாவ மன்னிப்பு இல்லை என்று சருவேசுரன் கட்டளை பிறப்பித்துவிட்டாலும் முறைப்பட நியாயம் இராதே. நரக வாசிகளுக்கு தங்கள் பாவத்துக்காகப் பூலோகத்திலே வந்து தவம் பண்ணிப் பொறுதி அடைய இடங் கிடைக்குமானால், எவ்வளவு மனப் பூரிப்போடு அந்த அழற்கிடங்கில் நின்று குதித்து ஓடிவந்து, தங்கள் எலும்பு விறகாக இறைச்சி பலியாக அறுத்துப் போட்டுத்தானும் அகோர தவஞ் செய்வார்கள்! ஆனால், பாவசங்கீர்த்தனத்திலே பெரும்பாலும் எவ்வளவோ இலேசான அபராதந்தானே கிடைக்கிறது. சருவேசுரன் இவ்வளவு இரக்கப் பெருக்கத்தோடு, இவ்வளவு வருத்தம் இல்லாத ஒரு பாதையால், நாம் பாவ மன்னிப்பு அடைந்து பரிசுத்தராய்ச் சீவிக்க இடம் பண்ணியிருக்க, பாவசங்கீர்த்தனத்தினால் நாம் பலன் அடையாமற் போவது நமது பிழைபாட்டினாலேதான் என்பதிற் சந்தேகம் இல்லை. முன் பெரிய பாவிகளாகச் சீவித்திருந்த எத்தனை அர்ச்சிய சிஷ்டர்

கள், மனந்திரும்பிப் பாவசங்கீர்த்தனம் பண்ணியபின், இனி ஒருபோதும் பழையபடி நடவாமல், சாங்கோபாங்க சீவியத்திலே நாள் ஒரு வண்ணம் பொழுது ஒரு மேனியாய் ஏற்றம் அடைந்துவந்தார்கள்! நாமோ எத்தனையோ முறை பாவசங்கீர்த்தனம் பண்ணியபோதிலும், பாவச் சகதியை விட்டு வெளிக்கொள்ளாமல் கிடந்து உழலுகிற நியாயம் என்ன? என்னவென்றால், நம்முடைய பாவசங்கீர்த்தனத்திலே பெரும் பழுது ஒன்று இருக்கிறது. நாம் பாவத்திலே சென்ற மனதை மாற்றாமல் சாத்திரப்படிக்கு மாத்திரம் பாவசங்கீர்த்தனம் பண்ணிக்கொண்டுவருகிறோம். இதனாலேதான் நாம் இலேசாய் மீண்டும் மீண்டும் பாவத்தில் விழுகிறோம். இதனாலேதான் பல முறையும் நம்முடைய பாவசங்கீர்த்தனம் விழலாயும் போய்விடுகிறது.

பிரியமானவர்களே, நமது பாவசங்கீர்த்தனங்களினால் நமக்கு மெய்யான நன்மை உண்டாகவேண்டுமானால், நாம் முற்றாக மனம் மாறவேணும். இந்த மனமாற்றம் (1) நல்ல பாவசங்கீர்த்தனத்துக்கு அவசியம் தானா? (2) இந்த மன மாற்றம் என்னத்திலே அடங்கும்? (3) இந்த மன மாற்றத்தை அடைந்து கொள்வது எப்படி? என்ற மூன்று துறையையும் இப்போது விளக்கிக் காட்டப் பிரயாசப்படுவேன். தேவ அருட்பிரசாத உதவியை மன்றாடிக் கொண்டு சாவதானமாய்க் கேளுங்கள். (பிரியதத்தம்).

I

பாவசங்கீர்த்தனம் என்று சொல்லும்போது, பாவத்தைக் குருவிடத்திலே சங்கீர்த்தனம் பண்ணுகிறது அல்லது எடுத்துச் சொல்லுகிறதுதான் என்று அனைவருக்குந் தெரியும். செய்த சாவான பாவங்களை எல்லாம், ஞாபகம் உள்ள அளவில், வகை தொகையாய்—ஆனாலும் பிற ஆட்களின் பேரை உச்சரியாமல், பாவம் நடத்திய மாதிரியை அவசியமின்றி விபரித்துக் காட்டாமல்—சொல்ல வேணும் என்பது வெளிப்படை. "குளிக்கப் போய்ச் சேற்றைப் பூசிக்கொள்ளப்படாது" என்று எல்லாரும் அறிவீர்கள். சில நிர்ப்பாக்கியர்கள், விசேஷமாய் வாலரும் இளம் பெண்களும், கூச்சத்துக்கு, வெட்கத்துக்கு இடங்கொடுத்து, மதிகேடாய்ச் சில அந்தரங்கமான பாவங்களை வெளிப்படுத்தாமல் மறைத்து மகா தேவதுரோகமாய்ப் பாவசங்கீர்த்தனம் பண்ணக் கூடும். இவர்கள் மனுஷருடைய சன்ம சத்துருவாகிய பிசாசின் தடத்தில் அகப்பட்டுக் கெடுகிறார்கள். "சருவேசுரன் பாவத்திலே வெட்கத்தையும் பாவசங்கீர்த்தனத்திலே நம்பிக்கையையும் அமைத்

தருளினார். சத்துராதிப் பிசாசோ இந்த இயற்கையான முறையை மாற்றி, பாவத்திலே நம்பிக்கையையும் பாவசங்கீர்த்தனத்திலே வெட்கத்தையும் கொண்டுவந்து விடுகிறது" என்று ஒரு அர்ச்சிய சிட்டவர் சொல்லியபடியே, பிசாசு கபட நாடகம் விளையாடி மனுஷரைக் கெடுக்க எத்தனிக்கும். கள்ளப் பாவசங்கீர்த்தனம் பண்ணும்போது முன்னிருந்த பாவங்களோடு மேலும் ஒரு மகா தேவ நிந்தையான பாவம் கூடிவிடும். நடை நடையே, என்றும் அவியாத அக்கினி இருப்பிடத்திற் சேருவதற்கு அதுதான் குறுக்குப் பாதை. இங்கு இதைக் கேட்டுக் கொண்டிருக்கிற கிறீஸ்தவர்களே, நீங்கள் இவ்விதமாய் உங்கள் ஆத்துமத்துக்கு வினையந் தேடிக் கொள்ள மாட்டீர்கள். தான் சாக மருந்து குடிப்பவன் பைத்தியகாரன் அல்லவா? நீங்கள் இந்த ஞான ஒடுக்கத்தோடு உங்கள் மனதிலுள்ள நஞ்சு எல்லாங் கக்கிப்போட்டுப் புதுச் சீவியந் தொடங்க ஆசையாயிருக்கிறீர்கள் அல்லவா? உங்கள் பாவங்களை, ஆத்தும குருவானவருக்கு, இரண்டாம் பேர் அறியாமல் அந்தரங்கத்திலே வெளிப்படுத்துவதற்கு மாத்திரமல்ல, அவசியமானால், முன் பாவியாய் இருந்த எகித்துதேச அர்ச். மரியம்மாள் தன் பாவ நடக்கைகளைப் பட்டணத்தின் தலைவாசல் அண்டையில் நின்றுகொண்டு சகல நகர வாசிகளும் கேட்க பிரசித்தம் பண்ணினது போல, நடுவயதில் மனந்திரும்பின அர்ச். அகுஸ்தினார் தமது முந்திய துர்ச்சீவியத்தின் விருத்தாந்தத்தை உலக முழுதும் எக்காலமும் வாசித்தறிய "அகுஸ்தினின் பாவ அறிக்கைகள்" என்று பேரிட்டு ஒரு புத்தகமாய் எழுதி வைத்தது போல—நீங்களும், வேண்டுமானால், உங்கள் பாவங்களை நாலு பேரும் தெரிந்து கொள்ள உரத்த சத்தமாய்ச் சொல்லி அறிக்கை பண்ணவும் பின்னிடமாட்டீர்கள்.

பாவசங்கீர்த்தனத்திலே பாவங்களை ஒளிப்பு மறைப்பில்லாமல் வெளிப்படுத்த வேண்டிய கடமையைப் பற்றி, இங்கு, நான் விஸ்தாரப் பிரசங்கம் பண்ண அவசியம் இல்லை. பாவத்தை ஒளிப்பதல்ல, மனம் மாறாமல், அதாவது மனஸ்தாபப்படாமல் இருந்து பாவத்தை அறிக்கையிட்டுப்போட்டுப் போவதுதான் அநேக பாவசங்கீர்த்தனங்களிலே உள்ள பெருங் குறை ஆகிறது. வழக்கமாய் ஞான உபதேச புத்தகங்களில், பிரசங்கங்களில் மனஸ்தாபம் என்று சொல்லுகிறதை, நான், இங்கு, மன மாற்றம் என்ற சொல்லாலே, வேணுமென்று மாற்றிச் சொல்லுகிறேன். இரண்டு சொல்லின் உட் கருத்தும் ஒன்றுதான். ஆனாலும் மன மாற்றம் என்ற இந்தப் புதுச் சொல், நான் இன்று உங்கள் மனதிற் பிறப்பிக்க விரும்

புகிற உணர்ச்சியை அதிக துலாம்பரமாய்க் காட்டும். மனமாற்றந்தான் பச்சாத்தாபம் என்கிற தேவதிரவிய அநுமானத்துக்கு இன்றியமையாத ஒரு பகுதி. அதாவது, வேறென்ன இல்லாவிட்டாலும் இது ஒன்று மாத்திரம் இருந்துவிட்டால், சில தடவைகளிலே பாவப் பொறுதி கிடைப்பதாகும். மற்றவை எல்லாம் இருந்தாலும் இது இல்லாவிட்டால், ஒருபோதும் பாவப் பொறுதி கைகூடாது. உதாரணமாய், வாய் பேசக்கூடாத வருத்தம் இருக்கும்போது, அல்லது நோயாளியை ஆட்கள் நெடுகப் பிடித்துக் கொண்டிருக்கவேண்டிய வலி முதலிய நேரங்களிலே, அல்லது கப்பல் தாழுதல், வீடு இடிந்து விழுதல் முதலிய பிரசித்த ஆபத்து வேளைகளிலே பாவங்களை வெளிப்படுத்தாமலும் குருவானவரிடம் பாவப் பொறுத்தல் ஆசீர்வாதம் பெற்று மன்னிப்பு அடைந்து கொள்ளலாம். மறதியினால் சொல்லாமல் விட்ட பாவங்களுக்கும் மன்னிப்பு உண்டு என்று உங்களுக்குத் தெரியுமே. இப்படியே, பாவ அறிக்கை இல்லாமலும் சிலசில தருணங்களிலே பாவப் பொறுதி அடையலாம் என்றாலும், மனமாறுதல் இல்லாமலோ, மெய்யான மனஸ்தாபம் இல்லாமலோ, ஒருக்காலும் என்ன என்ன ஆபத்தான வேளையிலேயுங்கூட, மன்னிப்பு அடைய முடியாது. ஞானஸ்நானத் தேவதிரவிய அநுமானத்துக்கு தண்ணீர் எவ்வளவு அவசியமோ, பச்சாத்தாப தேவதிரவிய அநுமானத்துக்கு மனமாறுதல் அவ்வளவு அவசியம். குழந்தையைக் கொண்டுவந்திருக்கிறார்கள். ஞானத்தாய் தகப்பனும் ஆயத்தம். குருவானவரும் உடுப்போடும் மற்றச் சகல அடுக்கு அணிகளோடும் வந்து நிற்கிறார். தண்ணீரோ ஒரு துளியும் இல்லை. ஞானஸ்நானங் கொடுக்க முடியுமா? முடியாது. ஏனென்றால் ஞானஸ்நானத்துக்கு இன்றியமையாதது ஆன தண்ணீர் இல்லை. எல்லாம் இருந்தாலும் தண்ணீர் இல்லாமல் முழுகுகிறது எப்படி? அல்லது நீங்கள் எப்போதும் கண்ணால் காண்கிற ஒரு உதாரணம்: உலையும் வைத்து, தண்ணீர் விட்டு அரிசியும் போட்டுக்கொண்டு, அடுப்பில் நெருப்பு இல்லாவிட்டால் சோறு ஆக்கலாமா? மற்ற அடுக்கு எல்லாம் சட்டவட்டமாய் இருந்தாலும் நெருப்பு இல்லாமல் சோறு சமைக்க முடியாது. அது போலவே, பாவசங்கீர்த்தனத்துக்குச் செய்யவேண்டிய ஆயத்தம் எல்லாம் செய்து, சகல பாவங்களையும் ஆதியோடு அந்தமாய்ச் சொல்லிவிட்டாலும், குருவானவர் பாவப் பொறுத்தல் ஆசீர்வாதம் கொடுத்தாலும், பாவி மனந் திரும்பாவிட்டால், அதாவது அவனிடத்தில் மனஸ்தாபம் இல்லாவிட்டால் ஒருபோதும் பாவம் தீராது. மனமாறுதல் என்கிற

தண்ணீராலேதான் பாவ அழுக்கைக் கழுவவேணும். மனஸ்தாபம் என்கிற நெருப்பினாலேதான் பாவக் கசடுகளைச் சுட்டு எரிக்கவேணும். மெய்யான உத்தம மனஸ்தாபம் இருக்கும்போது, ஆண்டவர் யூத ஆசாரியர்களிடத்துக்கு அனுப்பின குஷ்ட ரோகிகளின் தீராத நோய் அவர்கள் போகும் வழியிலே தானே நீங்கினதுபோல (லூக். 17; 14), பாவியானவன் குருவானவரிடம் பாவசங்கீர்த்தனம் பண்ணப் போகுமுன்னே தானே பாவம் பொறுக்கப்பட்டுவிடும் என்று உங்களுக்குத் தெரியும். இதினாலேதான் ஞானோபதேசத்திலே "நாம் செய்த பாவங்களைத் தொலைக்கிற வழிகள் எவை?" என்ற கேள்விக்கு: "உத்தம மனஸ்தாபமும் தேவதிரவிய அநுமானங்களுமாம்" என்ற விடை சொல்லியிருக்கிறது (7-ம் பிரிவு). குருவானவர் சமீபத்தில் இல்லாதபோது, கூடிய சீக்கிரத்திலே பாவசங்கீர்த்தனம் செய்வேன் என்ற மனதோடு, உத்தம மனஸ்தாபப்பட்டால், எவ்வித பாவமும் தீரும் என்பது நிச்சயம். ஆனால் பயம் பொருந்திய மனஸ்தாபமாவது இல்லாவிட்டால், உண்மையாக மனம் மாறாவிட்டால், எத்தனை விசை பாவசங்கீர்த்தனம் பண்ணினாலும் ஒருபோதும் பாவம் தொலையாது. இதினாலேதான் மனமாற்றமானது பச்சாத்தாப தேவதிரவிய அநுமானத்துக்கு இன்றியமையாத ஒரு பகுதி என்று சொல்லப்படும்.

பாவப்பொறுதிக்கு மனமாறுதல் இவ்வளவு அவசியமாய் இருக்கிறதற்கு நியாயம் என்ன? நாம் சற்றே யோசனை பண்ணினால் அந்த நியாயத்தை நன்றாய்க் கண்டு பிடித்துக்கொள்ளலாம். ஒருவன் தேவ கட்டளையை மீறிப் பாவஞ் செய்யும்போது என்ன நடக்கிறது? அவன் சருவேசுரனை முகம் மறுத்து தனக்கு பிரியமான ஒரு இவ்வுலகப் பொருளிலே, ஒரு சிற்றின்பத்திலே, மனதை வைக்கிறான். சருவேசுரனிடத்திலிருந்து மனதைத் திருப்பிக் கொண்டு, விலக்கப்பட்ட ஒரு காரியத்திலே அதை நிறுத்துகிறான். கட்டளையை மீறிப் பாவஞ் செய்தவன், இனி அந்தப் பாவத்துக்குப் பொறுதி அடையவேண்டுமானால், மறுபடி சருவேசுரன் பக்கமாய்த் திரும்பி வரவேணும். முன் அவரை விட்டுத் திரும்பின மனதை, இனி அவர் பக்கமாய்த் திருப்பவேணும். பாவத்துக்குச் சேர்ந்தது எல்லாத்தையும் கைவிடவேணும். இப்படிச் செய்யாமல், இன்னும் அவருக்கு முகத்தைத் திருப்பிக்கொண்டிருந்து பொறுதி அடைவது எப்படி? பாவத்திலே இன்னும் பற்று வைத்துக்கொண்டிருந்தால் அவரிடமாய்த் திரும்புவது எப்படி? ஐயோ சகல நன்மைச் சுரூபியான தேவரீரை மறுதலித்தேனே என்று மனம் உடைந்து, மெலிவு கொண்டு, இந்த மகா தேவ

துரோகத்துக்கு, என் பொல்லாத பொருளாசையே, மகிமைப் பிரியமே, உலக பற்றுதலே, சிற்றின்ப சுகங்களே நீங்கள் தான் காரணமாய் இருந்தீர்களே என்று அவைகளைச் சினந்து வெறுத்து விடாதிருந்தால், சருவேசுரன் எப்படி பாவியை மறுபடியும் ஏற்றுத் தமது சமாதானத்தின் முத்தத்தை அவனுக்குக் கொடுத்தருளுவார்?

II

மனம் மாறவேணும், மனந் திரும்பவேணும், மனம் உடையவேணும். இதுதான் பாவப்பொறுத்தல் அடைவதற்கு இன்றியமையாத காரியம். இது இருந்தால் எவ்வளவு பெரிய பாவிக்கும் மன்னிப்புக் கிடைக்கும். இதைப்பற்றித்தானே நான் இந்தப் பிரசங்கத்தின் முகப்பிலே எடுத்துக் காட்டிய வேத வாக்கியமும் "மனஸ்தாபத்தினுல் நொருங்கித் தாழ்த்தப்பட்ட இருதயத்தை, சருவேசுரா, தேவரீர் புறக்கணிக்கமாட்டீர்" என்று வசனிக்கிறது. இதைத்தானே யோவேல் தீர்க்கதரிசியும் சருவேசுரனுடைய வாக்கியமாய்ச் சொல்லி "நீங்கள், இப்பொழுதே, உபவாசத்தோடும் அழுகையோடும் புலம்பலோடும் உங்கள் முழு இருதயத்தோடும் என்னிடத்தில் திரும்புங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறுர். உங்கள் வஸ்திரங்களை அல்ல உங்கள் இருதயங்களைக் கிழித்துக்கொண்டு உங்கள் தேவனுகிய கர்த்தரிடத்தில் திரும்புங்கள்; அவர் இரக்கமும், மன உருக்கமும் நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையும் உள்ளவர்" என்றுர் (2, 12-3).

ஆனபடியால், மெய்யான மனமாறுதலுக்கு, வஞ்சகமில்லாத மனஸ்தாபத்துக்கு, அடையாளம் மூன்று என்று சொல்லலாம். முதல், சருவேசுரனுக்குக் காட்டிய நன்றி கேட்டுக்காகத் துக்கம். இரண்டாவது, அந்த நன்றி கேட்டுக்குக் காரணமான பாவப் பற்றுதலை அறுத்தெறிந்துவிடுவதிற் சண்டவேகம். மூன்றுவது, பின்னும் அதிலே விழுந்துவிடாதபடிக்குச் சருவ சாக்கிரதை. இந்த மூன்றும் மெய்யான மனந்திரும்புதலிலே காணப்படும். பாவத்தினுல் மோட்சத்தை இழந்தேனே, நரகத்துக்குப் பாத்திரமானேனே, என் பிதாவும் மீட்பரும் அன்பரும் ஆனவருக்குத் துரோகம் செய்தேனே என்று நினைந்து நினைந்து மனங் கசங்குவதுதான் துக்கம். ஐயோ என்னைப் படைத்தவருடைய சமுகத்தில் என்னென்று தோற்றுவேன். "பிதாவே பரலோகத்துக்கு விரோதமாகவும் உமக்கு முன்பாகவும் துரோகஞ் செய்தேனே. இனி உம்முடைய பிள்ளையென்று அழைக்கப்பட நான்

பாத்திரனல்லவே" (லூக். 15; 18, 19) என்று உருகி உருகி அங்கலாய்ப்பது தான் துக்கம். இந்தத் துக்கமானது மனதோடு மாத்திரம் நின்றுவிடாமல் சரீர உணர்ச்சிகளிலும் செறிந்து, கண்கள் கண்ணீர் ஆருய் ஓடுமானுல், அதுவும் நல்ல அடையாளந்தானே. பாவியானவன் மனஸ்தாப மிகுதியினுல் தாவீது ராசா சொன்னதுபோல்: "பிரலாபப்பட்டு மிகவும் மெலிந்தேன். இராத்திரி தோறும் என் கண்ணீரால் என் படுக்கையை நனைத்துக்கொண்டுவருகிறேன்" (6-ம் சங். 7) என்று சொல்லக் கூடுமானுல் உத்தமந்தானே. சம்பேதுருவானவர், தாம் தம்முடைய தேவ குருவானவரை மும்முறை மறுதலித்த நிர்ப்பாக்கியமான நேரத்தை நாள்தோறும் நினைந்து நினைந்து, விடியற்சாமந்தோறும் எழுந்து எழுந்து திரளாய்க் கண்ணீர் விட்டு அழுதுகொண்டுவந்ததினுல் அவர் கண்களும் கன்னங்களும் குழிவிழுந்துபோயிருந்தன என்று பாரம்பரியமாய்ச் சொல்லப்படுகிறது போல, பாவியானவன் தன் கண்களையும் அழுகையாற் குழியப்பண்ணினுல் அதுவும் மேலான மனஸ்தாப அடையாளந்தானே. ஆனுலும் இப்படிப்பட்ட அடையாளங்கள் இல்லாமலும் மெய்யான, உத்தமமான, சுபாவத்துக்கு மேலான துக்கம் மனதிலே இருக்கக் கூடும். வெளி அடையாளங்கள் நல்லவைகளே என்றுலும் எப்போதும் அவசியமானவைகள் அல்ல. சிலவேளை வெளி அடையாளங்கள் இருந்தும் உள் மனமாறுதல் இல்லாமற் போகவுங் கூடும். சிலருக்கு எடுத்தாற்போலக் கண்ணீர் வந்துவிடுவது உண்டு. அந்நேரத்தின் மனக் கிளர்ச்சியினுல் எவ்வளவு பெருமூச்சுவிட்டு அழுதாலும், சற்றுவது பாவப் பற்றுதலை விட மனமில்லாது இருப்பவர்களும் உண்டு. ஆகையால் கண்ணீர் விடுவது அல்ல, சருவேசுரனுக்கு பழிபாதகஞ் செய்ததற்காக முழு இருதயத்தோடும் பதைபதைத்து மனங் கலங்கி நிற்பதுதான் அவசியம்.

இந்த மெய்யான துக்கத்துக்கு கண்ணீர் பெருமூச்சுகளிலும் பார்க்க அதிக நிச்சயமான, சற்றுவது சந்தேகத்துக்கோ தன்னைத் தானே வஞ்சித்துக்கொள்ளுகிற சுய ஏமாற்றுக்கோ இடமில்லாத, ஒரு அடையாளம் உண்டு. அதுதான் பாவப்பற்றுதலை அறுத்து எறிந்து விடுவதிலே சண்டவேகமான ஊக்கம். தாயிஸ் என்ற பச்சாத்தாபியுடைய சரித்திரம் கேள்விப்பட்டிருப்பீர்கள். அவள் பிரசித்த சந்தைத் தெருவிலே வசித்த் ஒரு பொல்லாத பலஸ்திரி. தேவ ஆதீனமாய், ஒரு முனிவருடைய நற்புத்திமதியினுல் மனந் திரும்பினவள். திரும்பினவுடனே, இனி, தன் துர்ச்சீவியத்துக்காகத் தவம் பண்ண வேணுமென்று துணிந்துகொண்டாள். அத

னால் தபோதனரைப் பார்த்து: “ சுவாமி நான் வனவாசஞ் செய்யப் புறப்பட்டுவருகிறேன். எனக்குச் சற்று நேர உத்தரவு தரவேணும்” என்று கேட்டாள். சற்று நேரத்துக்குள்ளே சந்தை வீதியிலே ஒரு பெரிய நெருப்பு முளாசி எரிந்துகொண்டிருந்தது. அது என்ன நெருப்பு என்றால், தாயிஸ் என்கிற அந்தப் பாவி தன்னுடைய பாவங்களுக்கு உதவியாய் இருந்த சகல வஸ்திர ஆபரணங்களையும் போட்டுக் குவித்துக் கொளுத்திவிட்ட நெருப்பு. தன் பாவ நடக்கையிலே அவள் மனதிற் சனித்த சண்டவேகமான குரோதத்தை, அந்த நடக்கைக்கு உதவியாய் இருந்த பொருட்களிலே செலுத்திவிட்டாள். பாவப்பற்றுதலை வேரோடு அறுத்துவிட்டாள். இனி அவளுக்கும் முந்திய நடக்கைக்கும் ஒரு தொந்தபந்தமும் இல்லை. பின்பு சம்பவித்தது உங்களுக்குத் தெரிந்திருக்கக் கூடும். தாயிஸ் ஒற்றைத் துணியோடு புறப்பட்டுத் தவம் பண்ணப் போனாள். தான் என்ன மாதிரிச் சருவேசுரனைப் பிரார்த்தித்துக்கொள்ள வேணும் என்று முனிவரிடங் கேட்க, அவர் “ நீ ஒரு மகா சண்டாளப் பாவி. சருவேசுரனைப் பிதாவே என்று கூப்பிட்டுப் பிரார்த்திக்கப் பாத்திரம் இல்லாதவள். ஆனபடியால் என்னைப் படைத்தவரே, என்மேல் இரக்கமாயிரும் என்ற செபத்தைத் தவிர வேறு ஒரு செபமும் நீ செய்யத் தகாது” என்று கட்டளை பண்ணிவிட்டார். தாயிஸ் என்னைப் படைத்தவரே என் மேல் இரக்கமாயிரும் என்று இப்படியே சொல்லிச் சொல்லி பல வருஷமாய்க் கடின தபசு பண்ணிவந்தாள். பிறகு ஒரு நாள் அவளை மனந்திருப்பிய முனிவர் ஒரு காட்சியைக் கண்டார். வானலோகந் திறபட்டிருக்க, அங்கே மோட்சவாசிகளுக்குள்ளே ஆனந்த கொண்டாட்டம் ஒன்றுக்கு ஆயத்தங்கள் நடக்கிறது. முத்தர்களுடைய சிங்காசனங்கள் எல்லாம் சோதிமயமாய்ச் சொலிக்க, அவைகளின் நடுவிலே அதிக பிரபைகொண்ட நவரத்தின மயமான சிங்காசனம் ஒன்று ஆள் இல்லாமல் வெறுமையாய்க் கிடந்தது. முனிவர் இதைக் கண்டு ஆச்சரியப்பட்டு: “ இந்த அலங்கார ஆசனத்தில் வீற்றிருக்க எந்தப் பெரிய அர்ச்சிய சிட்டர் வருகிறாரோ” என்று விசாரித்த இடத்திலே, “ தாயிஸ் என்ற பலஸ்திரி இப்போதே மரணம் அடைகிறாள். அவளுடைய பரிசுத்தமான ஆத்துமத்துக்காக இந்தச் சிங்காசனம் தாபிக்கப்பட்டிருக்கிறது” என்று முனிவருக்கு அறிவித்தார்கள். இது அல்லவோ உண்மையான, ஆந்தரங்கமான, வஞ்சகம் இல்லாத மனந்திரும்புதல்! பாவத்தை விட்டுவிட்டோம் என்று சொல்லிக்கொண்டு பாவசங்கீர்த்தனத்துக்குப் போகிற நாம், இப்படித்தான் மனந்திரும்புகிறோமா? பிரியமான கிறீஸ்தவர்களே, எத்தனையோ முறை எம்மை நாமே

ஏமாற்றிக்கொள்ளுகிறோம். பாவசங்கீர்த்தனம் பண்ணப் போயும், அநேக முறை, நாம் பாவப் பற்றுதலை விட்ட பாடு இல்லை. கடமை ஒன்றைச் செய்துபோட்டோம், சுமை ஒன்று இறங்கிவிட்டது என்ற ஒரு சற்று வேளையில் மனச்சமாதானத்தை அனுபவிக்கிறதற்காகவே பாவசங்கீர்த்தனத்துக்குப் போகிறோம். பாவத்தை விட்டுவிட்டோம் என்ற தீர்மானத்தையும் எமது நெஞ்சின் மேற்தளத்திலே ஒரு வழியாய் ஆயத்தப்படுத்திக்கொள்ளுகிறோம். ஆனால், நெஞ்சின் அடித்தளத்திலே பழைய துர் ஆசைகள் பதுங்கிக்கொண்டே கிடக்கிறது. சாத்திரப்படிக்கு பாவசங்கீர்த்தனம் முடித்து, அடுத்தநாட் சற்பிரசாதமும் வாங்கிக்கொண்ட பின், பதுங்கிக் கிடந்த ஆசைகள் பழையபடி மாத்திரமல்ல, முன்னிலும் அதிக விசை கூட்டியும் பாயத் தொடங்குகிறது. வேறொரு வகையாய்ச் சொல்லுகில், பாவசங்கீர்த்தனம் பண்ணும்போது நம்முடைய இருதயத்திலே கட்டிநின்ற பொல்லாத மிருகங்களைப் பிடித்து வெளியே விடுகிறோம். விட்டாலும் கட்டிய கயிறுகளை அறுத்து விடவில்லை. கயிறுகள் இருதயத்திலே தொடுத்தபடியே, மிருகங்கள் வெளியில் வந்து நிற்கிறது. ஆனபடியால் அவைகள் நம்மை விட்டு விலகினபாடு இல்லை. நினைத்தவுடனே, அத் துஷ்ட மிருகங்கள் மறுபடியும் இருதயத்திலே வந்து உறைந்துகொள்ளும். இன்னும் வேறொரு உவமை எடுத்துச் சொல்லலாம். பாவம் என்கிற முட் செடிகளை மேலாலே முறித்து எறிந்துவிடுகிறோமே அல்லாமல், வேரோடே பிடுங்கிவிடுவதில்லை. பாவசங்கீர்த்தன வேளையிலே முறித்து எறிந்த முட் செடிகளின் வேர் முழுதும் இருதயத்திலே நன்றாய் ஊன்றிக் கிடக்கிறபடியால், மறுபடியும் கிளுமொளு என்று முளைத்துச் சவி கொள்ளுகிறது. நாம் சருவேசுரனுக்கு அவமானம் பண்ணினதற்கு மெய்யாகவே விசனப்பட்டால், பாவத்தை மெய்யாகவே பகைத்தால், நமது இருதயத்திலே அந்தப் பாவ ஆசைகள் கொஞ்சமாவது மறைந்து கிடக்க விடுவோமா? பாவத்தின் பாசக் கயிறுகளை ஒன்றும் விடாமல் அறுத்தெறியாமல் இருப்போமா? பாவ முட் செடிகளை வேரோடு பிடுங்கி எறியாமல் விடுவோமா? எத்தனை பேர் கோபத்தை, பகையைச் சங்கீர்த்தனம் பண்ணிய போதிலும், தருணம் வாய்க்கும் போது பழி வாங்குவோம் என்ற எண்ணத்தைக் கைவிடாமல் இருக்கிறார்கள்! எத்தனை பேர் களவை, கொள்ளையைச் சங்கீர்த்தனம் பண்ணின பின்னும், களவாடின பொருளை, அபகரித்த பொருளை உத்தரிக்கிற எண்ணம் இல்லாமல், பிறர் பொருளின் மேல் உள்ள பற்றை அகற்றாமல் இருக்கிறார்கள். எத்தனை பேர் மோக பாவத்தைச் சங்கீர்த்தனம் பண்ணின பின்பும், தங்கள் பாவக் கூட்

டாளிகளிலே உள்ள தகாத சிநேகப் பற்றுதலைப் பிடுங்கி எறிந்து போடாமல் இருக்கிறார்கள். இப்படி இருந்தால், நமது மனஸ்தாபத்தின் பாடு என்ன? பாவ ஆசைகள் பற்றுதல் எல்லாவற்றையும் அழித்துப்போடச் சண்டவேகங் கொள்ளாத இடத்திலே மெய்யான மனஸ்தாபம் இல்லை, மெய்யான, மனமாறுதல் இல்லை, மனந்திரும்புதல் இல்லை.

பாவப்பற்றுதல்களை அறுத்தெறிந்து விட்டவர்கள் மறுபடியும் தங்களைப் பாவத்திலே விழுத்தாட்டக் கூடிய சமயங்களைப் பற்றியும் சாக்கிரதையாய் இருப்பார்கள். ஒரு பத்தியுள்ள வாலிபர், உலக ஆசாபாசங்களுக்குத் தப்பி ஓடும்படியாக, சமுத்திரத்தின் நடுவில் இருந்த ஒரு கற்பாறையின் மேல் உள்ள ஒரு குகையில் போய்ச் சேர்ந்து அங்கு செபத்திலும் தவத்திலும் வெகு காலம் நாட் கழித்துக்கொண்டுவந்தார். அவருக்கு அறிமுகமான சிலர், அவசியம் தேவையான சாப்பாட்டுச் சாமான்களைத் தோணியிலே கொண்டு போய் இடையிடையே அவருக்குக் கொடுத்துவருவார்கள். இப்படி இருக்கையில், ஒரு நாள், அப்பாறைக்குச் சிறிது தூரத்தில் ஒரு கப்பல் அக்கப்பாடுபட்டுத் தாழ்ந்து போகவே, அதில் பயணம் பண்ணிக்கொண்டிருந்தவர்களுள் ஒரு இளம் பெண், தேவச் செயலாய், கப்பலிலே தனக்கு அகப்பட்ட ஒரு பலகையைப் பிடித்துக்கொண்டு மிதந்து மிதந்து வந்து, அந்தப் பாறையின் அருகில் சேர்ந்து, அங்கு இருக்கிற சன்னியாசியாரைக் கண்டு தன்னை இரட்சிக்கும் படியாகக் கதறினாள். சன்னியாசியார் ஒரு கயிற்றை எறிந்து அவளை இழுத்தெடுத்துப் பாறையின்மேல் விட்டபின் சொல்லுவார்: " மகளே நீ ஒரு பெண். நான் ஒரு சன்னியாசியாய் இருந்தும் ஒரு ஆண்பிறவி ஆனேன். ஆனபடியால், நாங்கள் இருவரும் ஒரு சண நேரமாவது தனித்து ஒரு இடத்தில் இருக்கத் தகாது. இதோ இந்தச் சிறு குகைக்குள் இருக்கிற தின்பண்டங்களைத் தின்றுகொண்டு இரு. சில நாட்களுக்குள் எனக்குத் தீன் கொண்டு வருகிறவர்கள் வந்து உன்னைக் கரையிற் சேர்ப்பார்கள். என் சீவன் போனாலும் போகட்டும், என் ஆத்துமத்தையும் உன் ஆத்துமத்தையும் கெடுக்கிற ஆபத்துக்கு என்னைக் கையளிக்கவோ மாட்டேன்" என்று சொல்லி, நீந்தத் தெரியாதவர், சருவேசுரனைப் பிரார்த்தித்துக்கொண்டு கடலுட் குதித்தார். என்ன அற்புதம்! சன்னியாசியார் விசேஷ தேவ உதவியால் கரை சேர்ந்தார். கன்னிகையும் பழுதில்லாமல் சிலநாட்களுக்குள் தன் தேசத்தில் கொண்டுபோய் விடப்பட்டாள். பிரியமானவர்களே, தேவபத்தியிலே முதிர்ந்திருந்த இந்த மனுஷன், எவ்வளவு சாக்கிரதையாகப்

பாவச் சமயத்தை விலக்கினாரென்று கண்டீர்களே. நெடுங்காலம் தவஞ் செய்து தம்மை அடக்கப் பழகியிருந்த இந்த வயோதிகர் இலேசிலே பாவத்தில் விழத்தக்கவர் அல்ல. ஆனாலும், ஆர் அறிவார்? ஒரு வேளை ஆசாபாசம் மீறித் தேவதுரோகஞ் செய்ய நேரிடுமே என்ற சந்தேகத்தினால், அவர் தமது சீவனுக்கு மோசம் வந்தாலும் ஆத்துமத்தை எவ்வித ஆபத்திலும் நின்று காத்துக்கொள்ள வேணும் என்று துணிந்தார். ஆனால் வாடிக்கைப் பாவக்காரரே, எத்தனையோ முறை உங்களை அடக்கி ஆளமாட்டாமல் இருக்கிறவர்களே, நீங்கள் சற்றேனும் யோசனை இல்லாமல், பயம் இல்லாமல், உங்களைக் கட்டாயம் பாவத்திலே விழுத்தத் தக்க இடங்களுக்குப் போகிறீர்களே. உங்களுடைய வாடிக்கையான பாவத்துக்குத் துணையான ஆட்களோடு கொடுக்கல் வாங்கல் கொண்டாட்டங்கள் செய்கிறீர்களே. " ஆபத்தை விரும்புகிறவன் அதிலேயே அழிவான்" (எக்கிளி. 3; 27) என்ற தேவ வாக்கியத்தைப் பொருட்படுத்தாமல் பாவச்சமயங்களில் உட்படுகிறீர்களே. சறுக்கல் நிலத்திலே மிதித்தவன் போல, சாவான பாவத்துக்கு வழியான பார்வைகள், சேட்டைகள், பரியாசங்களிலே அடிக்கடி கால் வைக்கிறீர்களே. அடாத புத்தக வாசிப்பு, குடிவெறி, இவைகள் உங்களுக்கு முன் வருவித்த கெடுதிகளை யோசியாமல், பின்னும் இவைகளை நாடுகிறீர்களே. இப்படியானால், உங்களுடைய மனமாறுதல் எங்கே? மனஸ்தாபம் எங்கே? பாவச் சமயத்தை விட்டு விலகாமல் இருப்பதற்கு நீங்கள் சொல்லிக்கொள்ளுகிற சாக்குப் போக்குகளோ உங்கள் கண்ணுக்குள்ளே நீங்களே மண்ணை அள்ளிப்போட்டுக்கொள்ளுகிற நியாயம் ஒழிய வேறு அல்ல. " இன்னாரோடு நான் சகவாசம் இல்லாமல் இருக்க முடியாது. இன்னார் என்னுடைய சீவியத்துக்கு, பிழைப்புக்கு மெத்த அவசியமான ஒரு பெயர்வழி. நான் எப்படி அந்த ஆளை விலகி நடக்கிறது?" என்கிறீர்கள். ஆனால் நீங்கள் உண்மையாகவே உங்கள் ஆத்துமத்தை நேசித்தால், உண்மையாகவே உங்கள் இரட்சணியத்தை விரும்பினால், எவ்வளவு அவசியமான ஆளையும் ஆத்தும நன்மைக்காகக் கைவிட்டுவிடத் துரிதப் படுவீர்கள். நம்மை மீட்டவர் சொல்லியிருக்கிறதைக் கேளுங்கள்: " உன் வலது கண் உனக்கு இடறல் உண்டாக்கினால், அதைப் பிடுங்கி எறிந்து போடு. உன் சரீரம் முழுதும் நரகத்தில் தள்ளப்படுவதைப் பார்க்கிலும் உன் அவயவங்களுள் ஒன்று கெட்டுப்போவது உனக்கு நலமாய் இருக்கும்" (மத். 5; 29) என்று திருவுளம்பற்றுகிறார். அதாவது, வலது கண்ணைப் போல நமக்கு அருமையானவர்கள், அவசியமானவர்கள் என்றாலும், மோட்சராச்சியத்தின் நிமித்தம்

அவர்களைக் கைவிட வேண்டி வந்தால் விடவேணும் என்றபடி. ஒரு கொடுக்கல் வாங்கலிலே வந்த கோபத்தின் நிமித்தம், ஒரு வாக்குவாதம் சண்டையின் நிமித்தம், எத்தனையோ முறை நீங்கள் உங்களுக்கு அருமையானவர்களை விட்டுப் பிரிகிறீர்கள். சுகப்பட்ட ஒரு பொல்லாத நோய் மறுதலித்து வராதபடிக்கு, உங்களுக்கு அதிக விருப்பமான தீன் வகைகளையும் விலக்குகிறீர்கள். அப்படியானால், ஆத்துமத்தின் பொல்லாத பாவ நோய் மறுதலியாதபடிக்கு நீங்கள் ஒரு பாவச் சமயத்தை விலக்காமல் வைத்துக் கொண்டு சாக்குப் போக்குச் சொல்வதற்கு நியாயம் என்ன? உங்கள் மனம் மாறாமலிருப்பது தான் நியாயம். பாவத்திலே இன்னமும் பாசமான பற்றுதல் உங்கள் இருதயத்திலே இருக்கிறது. நீங்கள் மனந்திரும்பவில்லை. இப்படியே, பாவச் சமயத்தை முற்றாகக் கைவிட மனமில்லாமலிருக்கிறவரையில் உங்கள் பாவசங்கீர்த்தனமும் ஒரு பெரிய பாசாங்குதான். பிரியமானவர்களே, பாவ சங்கீர்த்தனத்தினால் உங்கள் பாவம் மெய்யாகவே பொறுக்கப்பட வேணுமானால், முற்றாக மனம் மாறுங்கள். உண்மையாக மனந் திரும்புங்கள்.

III

மெய்யான மனமாற்றம் இல்லாவிட்டால் நம்முடைய பாவ சங்கீர்த்தனத்தால் நமக்கு நன்மை உண்டாகாது. இந்த மெய்யான மனமாறுதலை அடைவது எப்படி? பாவத்திலே படிந்திருக்கிற மனதை சருவேசுரனை நோக்கி எழும்பச் செய்கிறது எப்படி? ஆசாபாசங்களின் சங்கிலியிலே கட்டுண்டு இருக்கிற மனதை அவிழ்த்து விடுதலையாக்குகிறது எப்படி? துர்ப் பழக்கங்களினால் மரத்து இறுகிக் கருங்கல்லாய்ப் போயிருக்கிற மனதை இளகப் பண்ணுகிறது எப்படி? பிரியமான கிறீஸ்தவர்களே, மெய்யான மனமாறுதலுக்குத் தேவ வரப்பிரசாதம் அவசியத்தில் அவசியம். சருவேசுரனுடைய விசேஷ உதவி இல்லாமல் நாம் மனந்திரும்பக் கூடாது. அந்த விசேஷ உதவியை செப தப தான தருமங்களினாலேதான் அடையத் தேடவேணும். ஊக்கமான, தாழ்மையான செபம் இதற்கு அவசியம். "ஆண்டவரே நீர் என்னைத் திருப்பியருளும் அப்போது நான் மனந்திரும்புவேன், நீரே என் தேவனாகிய கர்த்தர்" (யேரேமியாஸ் 31; 18) என்று தீர்க்கதரிசியானவரோடு இரட்டித்து இரட்டித்துச் சொல்ல வேணும். "ஆண்டவரே தேவரீர் சிநேகிக்கிறவன் வியாதியாய்க் கிடக்கிறான்" அவனைக் குணப்படுத்தியருளும் (அருளப். 11; 3) என்று லாசறு

வின் சகோதரிகளோடு கூட அடிக்கடி தாழ்மையோடு மன்றாட வேணும். நம்முடைய இருதயம் துக்கத்தினால் உடைந்து, நொறுங்கி, இளகி, கனிந்து, உருகி முழுதும் மாற்றம் அடையத்தக்கதாக செபத்தோடு தவத்தையுஞ் சேர்க்கவேணும். "இவ்வகைப் பிசாசு செபத்தினாலும் உபவாசத்தினாலும் அல்லாமல் போகாது" என்று ஆண்டவர் வசனித்தபடியே (மாற்கு 9; 28), சருவேசுரனுக்கு முழு விரோதியாய் பிசாசுக்கு அடிமையாய் இருந்த ஆத்துமம் அந்த அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாகிறதற்கு செபத்தோடு தவமும், தான தருமமும் சேருவது அவசியம். யாதொரு உலக நன்மையை, சரீர சுகத்தை, பிள்ளை வரத்தை, உத்தியோக சம்பாத்தியத்தைப் பெற்றுக்கொள்ளும்படியாக நாம் எத்தனை தரம் ஒருசந்தி பிடிக்கிறோம்! எத்தனை தூரக் கோவில்களுக்கு யாத்திரை செய்கிறோம்! எத்தனை நேர்த்திகளை நேருகிறோம்! எத்தனை தருமங்களைத் தானங்களைக் கொடுக்கிறோம்! சகல நன்மைகளிலும் பெரிய நன்மையாகிய மனந்திரும்புதலை, சருவேசுரனோடு ஒற்றுமையாய்ப் போவதை, பாவத்தினால் இழந்துபோன மோட்சத்தின் உரிமையை—அடைந்து கொள்வதற்கு நாம் இவைகளைச் செய்யத் தகாதா? நம்முடைய பாவ மயக்க நோய் தீரும்படியாக என்னதான் செய்யவேண்டி வந்தாலும் நாம் ஆயத்தமாய் இருக்க வேண்டுமே. ஆதலால் பிரியமான கிறீஸ்தவர்களே, நாம் முற்றாக மனந்திரும்பி ஆண்டவர் பக்கமாய் வரத் தக்கதாக, அவரையே நோக்கி அனலான செபங்களைச் செய்து, ஒறுத்தல்களைப் பண்ணி, சுத்தவாளர்களை மன்றாடி, தருமக் கிருத்தியங்களை நிறைவேற்றி எதுவிதத்திலும் இந்தப் பரம நன்மையை அடைந்துகொள்ளப் பிரயாசப்படுவோமாக.

நாம் மனந்திரும்பும்படியாக செப தப தான தருமங்களைச் செய்வதோடு, பாவத்தின் சம்பளமாகிய பயங்கர மரணத்தை, நித்திய நரகத்தை, பாவத்தினாலே நாம் இழந்துபோகிற மோட்ச சுக பாக்கியத்தை, பாவத்தினால் சருவேசுரனுக்குக் காண்பிக்கப்படுகிற நீச நன்றிகேட்டை விசாரித்து யோசித்துத் தியானிப்பதும் நன்றாகும். இந்தப் பத்தியான தியானத்தினாலே, தேவ உதவியோடு, நம்முடைய மனதிலே உண்மையான பாவ அரோசிப்பும் துக்கமும் நல்ல பிரதிக்கினையும் உதிக்க ஏதுவாகும். இப்படியே ஒரு பரிசுத்த மேற்றிராணியார்—அடிக்கடி பாவசங்கீர்த்தனம் பண்ணுகிறவர்—தமது ஆத்துமத்திலே மெய்யான மனஸ்தாபத்தை எழுப்பிக்கொள்வதற்கு உதவியாக தியானித்த மாதிரியைக் கேளுங்கள்: அவர் மூன்று தலங்களை மனதினாலே ஒவ்வொன்றாய்ப் போய்த்

தரிசிப்பார். முதல், முத்தர்கள் வீற்றிருக்கிற மோட்சராச்சியத்தின் வாசலிலே தாம் போய் நிற்கிறது போலப் பாவித்து, சகல வித இரத்தினக்கற்களினாலும் அலங்கரிக்கப்பட்ட அதின் அத்திவாரங்களையும்; வச்சிரக்கல்லாற் கட்டி, தெளிந்த பளிங்குக்கு ஒப்பான சுத்த பொன்னால் சமைந்த அதின் சுவர்களையும்; ஒவ்வொன்றும் ஒவ்வொரு ஆணி முத்தால் ஆக்கப்பட்ட அதின் வாசல்களையும்; தெளிவுள்ள பளிங்குக்குச் சமானமாய் பிரகாசிக்கிற அதின் வீதிகளையும் ஒவ்வொன்றாய்ப் பார்ப்பார். அந்தப் பரிசுத்த நகரத்துக்குத் தேவாலயமும், பிரகாசமும், மணிவிளக்குமான தேவ மகத்துவத்தைத் தூதர்களும் அதிதூதர்களும், வேதசாட்சிகளும் கன்னியர்களும், இராச குருப்பிரசாதிகளும், ஸ்துதியர்களும் தங்கமயமான, மாணிக்கக் கசிதமான சிங்காசனங்களிலே வீற்றிருந்து ஓயாமற் புகழ்ந்து நவ கீர்த்தனங்களைப் பாடிக்கொண்டு தெவிட்டாத இன்ப வெள்ளத்திலே படிந்திருக்கிறதை உற்றுநோக்குவார். நோக்கி: ஐயோ மனதினாற் கருதவும் வாக்கினால் வருணிக்கவும் கூடாத அழகு சோபனம் பொருந்திய \ மோட்சமே, நான் என் பாவத்தினால் உனது மின்னலின் ஒளியையும் வென்ற சோதிமயமான மதில்களுக்கு அப்பாற் தள்ளப்பட்டேனே. ஆ! பேரின்பம் பூத்த மோட்சவாசிகளே, உங்களோடு ஒரு பொற் சிங்காசனத்தில் வீற்றிருந்து ஒழியாத பேரின்ப வாழ்வை அடையவென்று உண்டாக்கப்பட்ட நான், எனது மதிகேட்டினால் அந்த உன்னத பதவியைப் போக்கடித்துவிட்டேனே. அந்த மகா பெரிய சம்பாவனையைக் கைவிட்டு என்றென்றும் தணியாத கவலைக்கு ஆள் ஆனேனே என்று இப்படியே பலவிதமாய் யோசனை பண்ணுவார். இதன் பின் குபீர் குபீரென்று கந்தகமும் நெருப்பும் கக்குகிற வாசலை உடையதாகிய நரக பாதாளக் கிடங்கின் ஓரத்திலே மனதினாற் சென்று நின்றுகொண்டு, அந்த இருள் மண்டின நிர்ப்பாக்கிய இருப்பிடத்திலே நெருப்புக் கட்டில்களிலே கிடந்து புழுத் துடிப்பது போலத் துடித்து, ஓயாமல் அகோர வேதனை அனுபவிக்கிற பாவவாளரை நோக்கிப் பார்த்துக்கொண்டு சொல்லுவார்: ஆ! என் தயாபரமுள்ள சருவேசுரா! தேவரீர் என் பேரில் இது வரைக்கும் இரக்கங் காண்பித்து என்னோடு பொறுதியாயிராவிட்டால், இப்போது நானும் இந்த அக்கினிக் கட்டில்களுள் ஒன்றில் கிடந்து வெந்து, பொரிந்து, சாகாமற் சாகிறவன் ஆவேனே. இந்தப் பயங்கர வாசஸ்தலத்திலிருந்து எழும்புகிற பொறுக்கக் கூடாத துர்க் கந்தத்தினால் என் மூச்சு அடங்க, பாவிகள் பிசாசுகள் இடுகிற அபய சத்தமான அழுகைக் குரல்களால் என் காதுகள் விறைக்க, என் சரீரம் எல்லாம் நெருப்பிலே புதைபட்டு நெருப்பாய்

எரிய, என் ஆத்துமமானது தீராக் கவலையினாற் பிளந்து புண்ணாக, இந்தப் பாழுங் கிடங்கிலே தேவரீரையும் என்னையும் திட்டிச் சபித்துக்கொண்டிருப்பேனே. இந்தத் தீ நரகுக்கு என்னை ஆளாக்குகிற பாவமே, பாவப் பற்றுதல்களே, இனிமேல் நான் உங்களை ஒரு சணம் என்றாலும் என் இருதயத்திலே தங்கவிடக் கடவேன் அல்ல. ஒரு சணம் என்றாலும் இனி நான் பாவத்துக்கு ஏதுவான சமயங்களிலே கால் வைக்கக் கடவேன் அல்ல என்று ஒருமிப்பார். அப்பால், இந்தப் பரிசுத்த மேற்றிராணியார், கல்வாரி மேட்டின்மேல் மனோபாவனையால் ஏறி, அங்கே வானத்துக்கும் பூமிக்கும் இடையிலே ஒரு கழுமரத்தில் தொங்குகிற தேவசுதனைப் பார்த்து, சாஷ்டாங்கமாகத் தரையில் விழுந்து பிரார்த்திப்பார்: என் தேவனே, என் இரட்சகரே, சகல இன்பமும் வழிந்து ஓடுகிற சாகரமாகிய தேவரீரை இந்தவிதமான துன்ப வேதனைப்படச் செய்தது என் பாவந்தானே. தேவரீரை நானே என் அக்கிரமங்களினால் கன்னத்தில் அறைந்தேன், கற்றாணிற் கட்டி அடித்தேன், சிலுவையில் ஆணி அறைந்து வருத்தினேன். என் துர் நினைவுகளுக்காகத்தானே தேவரீர் திருத்தலையில் முள்முடி பொறுத்தீர். என் கெட்ட கிரியைகளுக்காகத்தானே தேவரீர் திருக் கரம் இரண்டும் கூரிய ஆணிகளாற் துளைக்கப்பெற்றீர். என் நன்றிகெட்ட நடைகளுக்காகத்தானே தேவரீர் திருப்பாதங்களிற் காயம் அடைந்தீர். என் சிற்றின்ப சுகபோகங்களுக்காகத்தானே தேவரீர் தேகம் எங்கும் ஏக காயம் ஆனீர். எனக்காக இந்த அகோர பாடுகளைத் தேவரீர் படக் கண்ட பின்னும், நான் மனம் பொருந்தித் தேவரீருக்குத் துரோகஞ் செய்வேனோ? இனிமேலும் பாவத்துக்கு உரிய அபத்துக்களில் இறங்குவேனோ?......என்று பலவாறாய்த் தியானித்தும், செபித்தும், மனஸ்தாபத்தைக் கிளரச் செய்து, பிரதிக்கினைகளை உறுதிப்படுத்திக்கொள்ளுவார்.

பிரியமானவர்களே, நீங்களும் இப்படிப்பட்ட தியானத்தால் ஆயத்தப்பட்டுக்கொண்டு, தேவ வரப்பிரசாதத்தின் உதவியால் மெய்யான மனமாறுதல் அடைந்துகொண்டு—பாவசங்கீர்த்தனம் பண்ணுங்கள். மனமாறுதல் இல்லாமல், மனந்திரும்பாமல், நீங்கள் பாவசங்கீர்த்தனஞ் செய்வதெல்லாம் பிசாசின் மாயக் கண்ணி என்று கண்டுகொள்ளுங்கள்; உங்களுக்கு ஒரு பொய்யான சமாதானத்தைத் தந்து, நீங்கள் மேலும் மேலும் பாவ அந்தஸ்திலே நிலைகொள்ளப் பண்ணுவதற்குச் சன்ம சத்துருவானது செய்கிற ஒரு சூழ்ச்சி என்று அறிந்துகொள்ளுங்கள். நீங்கள் ஈடேறுவதற்கு என்று அளவில்லாத இரக்கமுள்ளவர் தந்த இந்த பரம தேவ

Nallur Swami Gnanapragasar Library
OBLATE FATHERS
"THODARBAHAM"
657/1, HOSPITAL ROAD, JAFFNA

அமிர்தத்தை உங்களுக்கு நஞ்சு ஆக்கிக்கொள்ள வேண்டாம். இதற்கு மாறாக, நீங்கள் உங்களால் ஆன ஊக்கத்தோடும், நன் மனதோடும், செப தப தான தருமங்களாலும், தியான யோசனைகளாலும் மெய்யான மனஸ்தாபத்தை எழுப்பி, பாவச் சமயங்களை முற்றாகக் கைவிட்டு, நல்லபாவசங்கீர்த்தனம் பண்ணுங்கள். விசேஷமாய் இந்த ஞான ஒடுக்க காலத்திலே பண்ணுகிற பாவசங்கீர்த்தனந்தான் மரண நேரத்திலே பண்ணுகிற கடைசிப் பாவசங்கீர்த்தனம் என்று வைத்துக்கொண்டு இதை நல்ல ஆராய்வாய், ஆசறுதியாய், முழு ஊக்கத்தோடேயும் அவசியமான சகல மனப்பக்குவங்களோடேயும் பண்ணுங்கள். இந்த முறையாவது முற்றாக மனந்திரும்பி ஆண்டவருக்கு உவப்பான நல்ல பாவசங்கீர்த்தனம் பண்ணிப்போட்டீர்களானால் அளவில்லாத இரக்கமுள்ளவருடைய தேவ பொறுதியைப் பூரணமாய் அடைந்து, மேலும் மேலும் புண்ணிய பாதையிலே வழிகொண்டு நடந்து, நித்தியமான பரலோக சம்பாவனையை அடைந்துகொள்வீர்கள்.—ஆமென்.

ஐந்தாம் நாள்

Instruction :
On Forgiveness of Injuries

காலைப் போதனை :

பிறர் பிழை பொறுத்தல்

என்ன ஆச்சரியம்! நாம் மனந்திரும்பி நல்ல மனதோடு பாவசங்கீர்த்தனம் பண்ணும்போது, அனந்த கருணையுள்ள சருவேசுரன் நமது துரோகங்களை எல்லாம் பொறுத்துக்கொள்ள ஆயத்தமாய் இருக்கிறார். ஆனால், இந்தப் பாவப் பொறுதியை நாம் அடைந்துகொள்ளுவதற்கு ஒரு கட்டுப்பாடு உண்டு. அதாவது: சருவேசுரன் நமக்குப் பொறுதி தருகிறது என்றால், நாமும், நமக்குப் பிறர் செய்த துரோகங்களைப் பொறுத்துக்கொள்ள வேணும். ஆண்டவர் இந்தக் கட்டுப்பாட்டைச் செய்ய வேண்டிய நியாயம் என்ன? என்னவென்றால், பிரியமான கிறீஸ்தவர்களே, நாம் எவ்வளவு மனந்திரும்பினவர்களாய்க் காணப்பட்டபோதிலும், எவ்வளவு நல்ல கிறீஸ்தவர்களைப் போல் நடந்து கொண்டுவந்த போதிலும், நமக்குள்ளே, நம் அயலாராகிய பிறர் பேரில் பழிவாங்குகிற குணம், பிறர் நமக்குச் செய்த குறைகளைப்பற்றிக் கறுவியம் வைத்துக்கொள்ளுகிற குணம்—பலமுறையும் இருப்பது உண்டு. மனுச்சுபாவத்துக்கு உரிய இந்தத் துர்நாட்டத்தை, நமது மனந்திரும்புதலைப் போலி மனந் திரும்புதல் ஆக்குகிற இந்தப் பெரும் விக்கினத்தை—சருவேசுரன் நன்றாய் அறிந்திருக்கிறதினாலேதான்: "பொறுங்கள், உங்களுக்குப் பொறுக்கப்படும்" என்று சுவிசேஷத்திலே வசனித்திருக்கிறார் (லூக்கா 6; 37). இது ஒரு கண்டிப்பான நிபந்தனை. நாம் நம்முடைய சத்துருக்களுக்கு மன்னிப்புக் கொடாவிட்டால், நம்முடைய பாவங்கள் ஒருபோதும் மன்னிக்கப்பட

மாட்டாது. ஆகையால், நாம் வீண் சாக்குப்போக்குகளை விட்டு எதுவிதத்திலும் நம் அயலாருடைய துரோகங்களைப் பொறுத்துக் கொள்ளவே வேணும்.

1. பிரியமானவர்களே, சருவேசுரன் நம்முடைய பரம எசமான். அவருடைய கட்டளைக்கு நாம் பணியவேணும். ஆண்டவருடைய கட்டளையின் கருத்தைப் பற்றியோ சந்தேகம் இல்லை. அது வெட்ட வெளிச்சமாய் இருக்கிறது: "நானோ உங்களுக்குச் சொல்லுகிறேன்: உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும், உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் செபம் பண்ணுங்கள்" (மத். 5; 44). இந்தப் போதகத்தை, ஆண்டவர், உதாரணங்கள் உவமைகளினாலும் நன்றாக விளக்கிக் காட்டியருளினார்: "நீ பலிபீடத்தின் அருகே உன் காணிக்கையைச் செலுத்த வந்திருக்கும்போது, உன் பேரில் உன் சகோதரன் கோபமாய் இருக்கிறான் என்று நினைவு கூருவாயாகில், அங்கேதானே, பலிபீடத்தின்முன், உன் காணிக்கையை வைத்துவிட்டுப் போய், முன்பு உன் சகோதரனோடு உறவாகிக்கொண்டு வந்து, பின்பு உன் காணிக்கையைச் செலுத்து" (மத். 5; 23–4) என்கிறார். தான் கோபமாயிருக்கிறதை மாத்திரமல்ல, தன்னோடு பிறன் கோபமாயிருக்கிறதையும் சீர்ப்படுத்தத் தெண்டிக்க வேண்டும் என்று அல்லவோ இந்த உதாரணம் நமக்குக் காட்டுகிறது! நாம் பிறரோடு ஒப்புரவாகாவிட்டால், தம்மோடும் ஒப்புரவாகக் கூடாது என்றதைக் கர்த்தர் நல்ல ஒரு உவமையினாற் காட்டியருளினதைக் கேளுங்கள்: அர்ச். பேதுருவானவர் தம்முடைய குருவிடம் வந்து: ஆண்டவரே என் சகோதரன் எனக்கு மாறாகக் குற்றஞ் செய்தால், நான் எத்தனை தரம் அவனுக்கு மன்னிக்கவேண்டும், ஏழு தரம் மாத்திரம் மன்னித்தாற் போதுமோ? என்று கேட்டார். அதற்கு ஆண்டவர்: ஏழுதரம் மாத்திரமல்ல, ஏழு எழுபது தரம், அதாவது எப்போதும், மன்னிக்கவேண்டும் என்று திருவுளம்பற்றிப் பிறகு சொல்லுவார்: ஒரு இராசா தன் ஊழியக்காரருடைய கணக்கைப் பார்த்தபோது, அவர்களுக்குள்ளே, பதினாயிரம் பொன் நாணயம் கொடுக்குமதியாயிருந்த ஒருவன் காணப்பட்டான். அவன் அந்தக் கடனைத் தீர்க்க நிருவாகமில்லாமல் இருந்தபடியால், அவனையும், பெண்சாதி பிள்ளைகளையும், அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் விற்றுக் கடனுக்கு எடுத்துக் கொள்ளும்படியாக இராசா கட்டளையிட்டான். அவ்வேளை அந்த ஊழியக்காரன், தாழ விழுந்து வணங்கி: ஆண்டவனே, சொற்ப

005699

காலம் பொறுத்துக்கொள்ளும்; உழைத்துப் பட்டு எல்லாக் கடனையும் தீர்க்கிறேன் என்று மன்றாட, ஆண்டவன் மனம் இரங்கி அவனை விடுதலை பண்ணினதும் அல்லாமல், கடனையும் முற்றாக மன்னித்துவிட்டான். இந்த ஊழியக்காரன் புறப்பட்டுப் போகையில், தன்னிடம் நூறு வெள்ளிப் பணம் கடன்பட்டிருந்த தன் உடன் வேலைக்காரன் ஒருவனைக் கண்டு, அவனைப் பிடித்து தொண்டையை நெரித்து: இந்தச் சணமே என் காசை வை என்றான். அந்த உடன் வேலைக்காரன் அவன் காலிலே விழுந்து: ஐயா, சற்றே பொறுமையாயிரும், எல்லாக் கடனையும் உமக்குத் தந்து தீர்க்கிறேன் என்று அவனை வேண்டிக்கொள்ள, அவனோ சற்றும் இரங்காமல், அவனைக் கொண்டுபோய், பட்ட கடனைத் தீர்க்குமட்டும் காவலில் போடுவித்தான். இவ்விதம் நடந்ததைக் கண்ட மற்ற வேலைக்காரர் மிகவுந் துக்கித்து, ஆண்டவனிடத்திற் போய், முழு வரலாற்றையும் சொன்னார்கள். ஆண்டவன் அவனைக் கூப்பிடுவித்து: பொல்லாத ஊழியக்காரா, நீ என்னை மன்றாடினபடியால் உன் கடன் முழுதையும் பொறுத்துவிட்டேனே. நான் உனக்கு இரங்கினது போல, நீயும் உன் உடன் வேலைக்காரனுக்கு இரங்கவேண்டாமா? என்று கோபித்து, அவன் பட்ட பெருங் கடன் முழுதையும் தனக்குக் கொடுத்துத் தீர்க்குமட்டும், உபாதிக்கிறவர்கள் கையில் அவனை ஒப்புவித்தான். இந்த உவமையிலே, பதினாயிரம் பொன் இராசாவுக்குக் கடன்பட்டவன் என்றவர்கள் ஆர்? நம்மைப் படைத்தவருக்கு மகா துரோகங்களைச் செய்திருக்கிற நாம் அல்லவோ? உடன் வேலைக்காரனிடத்தில் நூறு வெள்ளி கடன் பட்டவன் என்கிறவர்கள் ஆர்? நமக்குச் சிறுச் சிறுக் குற்றங்களைச் செய்து உள்ள நம்முடைய அயலார்தானே. நம்முடைய அயலாரது குற்றத்தை நாம் பொறாமல் வைத்துக்கொண்டு வரும் மட்டும், ஆண்டவரும் நமது பாவத்தைப் பொறார். சருவேசுரன் பண்ணிய மாறாத நிபந்தனை இது. பொறுங்கள்; உங்களுக்குப் பொறுக்கப்படும் என்றது அவருடைய கட்டுப்பாடு. நாம் பிறர் குறைகளைப் பொறாவிட்டால் நமக்கும் பாவப்பொறுத்தல் இல்லை.

நம்முடைய சத்துருக்களுக்கு நாம் பொறுதி கொடுக்கவேணும் என்று சருவேசுரன் தந்திருக்கிற கட்டளை ஒரு புறம் இருக்க, அவர் தாமே காட்டியிருக்கிற, காட்டிக்கொண்டு வருகிற, முன்மாதிரிகையையும் பாருங்கள். மட்டில்லாத மகத்துவமும் அளவில்லாத வல்லமையும் உள்ள பரலோக பூலோக நாயகரானவர், நீசத் துரோகிகளாகிய நமக்குப் பொறுதி கொடுக்கும்படியாக தாமாகவே பூலோகத்துக்கு எழுந்தருளி வந்து, தமது சீவனையும் நமக்கா

கக் கைவிட்டாரே. "ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தனது சீவனைக் கொடுக்கிற அன்பிலும் மேலான அன்பு எவரிடத்திலாவது இல்லை" (அருளப். 15; 13) என்று திருவுளம்பற்றியவர், சிநேகிதர்களுக்காக அல்ல சத்துருக்களாகிய நமக்காகச் சீவனை விட்டாரே. பாவிகளுக்குப் பொறுதி கொடுக்க வந்தவர், அந்தப் பாவிகள் தம்மைப் பாடுபடுத்தி, அடித்து மிதித்து, ஆக்கினை பண்ணி, தமது பேரிற் காறி உமிழ்ந்து, செய்யாத அவமானமெல்லாம் செய்தவிடத்தில், எவ்வளவு நீடிய தேவ பொறுமையைக் காண்பித்தார்! தம்மை அளவில்லாத மானபங்கத்தோடும் நிட்டூரத்தோடும் சிலுவையில் அறைந்தவர்களுடைய பாவங்களையும் பொறுத்து: பிதாவே, இவர்கள் அறியாமற் செய்கிறார்கள்; இவர்கள் பாவங்களைப் பொறும் என்று மன்றாடினாரே (லூக். 23; 34). இதைக் கேட்டுக்கொண்டிருக்கிறவர்களே, எத்தனை எத்தனை விசை பாவசங்கீர்த்தனத் தட்டியிலே, நீங்கள், மீண்டும் மீண்டும் சருவேசுரனுடைய தயவுள்ள பொறுத்தலை அடைந்திருக்கிறீர்கள்! அவர் உங்களுக்கு இவ்வளவு நீடிய பொறுமையைக் காட்டிக்கொண்டுவர, உங்கள் மகா துஷ்ட துரோகங்களை எல்லாம் மறந்துகொண்டுவர — நீங்கள், உங்களோடு ஒத்த மனுஷர் உங்களுக்குச் செய்த குற்றங்களை மனதில் வைத்துச் சாதிப்பதே தொழிலாகக் கொள்ளலாமா? தேவ கட்டளையையும் தேவ முன்மாதிரிகையையும் கடந்து நடக்கிற நீங்கள், ஈடேறுவது எப்படி?

அதுமட்டுமல்ல, "பழிவாங்குதல் எனக்கு உரியது; நானே பதிற் செய்வேன்" என்று சருவ கர்த்தாதி கர்த்தர் வேதாகமத்தில் வசனிக்கிறார் (ரோம. 12; 19). பிறர் நமக்குச் செய்த குற்றத்துக்குப் பழிவாங்கும் உரித்து நமக்கு இல்லை. சருவேசுரன் தாமே சகலருக்கும் மேலான தேவ நீதிபரர். அவருடைய தேவ உரிமையை நாம் எடுத்தாண்டு, பிறரை நடுத்தீர்க்கவோ, தண்டிக்கவோ துணியலாமா? ஒருபோதும் துணியல் ஆகாது. பிறர் நமக்குக் குற்றஞ் செய்தால், அவர்களைத் தண்டிக்கிற உரிமையைச் சருவேசுரனோடு விட்டுவிட்டு, நாமோ அவர்களுக்கு இரக்கங் காண்பிக்கவேணும். அல்லாவிடில், நமக்கு இரக்கங் கிடைக்கமாட்டாது. "இரக்கஞ் செய்யாதவனுக்கு இரக்கமில்லாத தீர்ப்புக் கிடைக்கும். நியாயத் தீர்ப்புக்கு முன்பாக இரக்கம் மேன்மை பாராட்டும்" என்றது வேதவாக்கியம் (யாகப். 2; 13). பிரியமானவர்களே, யேசுநாதசுவாமி சகல பாவத்தையும் பொறுக்கும் வல்லமையைத் தம்முடைய தானபதிகளாகிய குருமாருக்குக் கொடுத்திருக்கிறார். ஆனால், தன் அயலாருக்குப் பொறுதி கொடாத

வனுடைய பாவத்தைப் பொறுக்க எந்தக் குருவானவராலும் முடியாது; சீவிய காலத்திலும் முடியாது; மரண நேரத்திலும் முடியாது. பொறுதி கொடாதவன் தனக்குத் தானே அகோர தீர்வை இட்டுக்கொள்ளுகிறான். பொறுதி கொடாதவன், தனக்கு எத்தனையோ பாவங்களைப் பொறுத்தவருடைய முன்மாதிரிகைக்கு எதிர் செய்கிறான். பொறுதி கொடாதவன், சகோதர அன்பையே தனது அத்திவாரமாகக் கொண்டிருக்கிற சத்தியவேதத்தின் மகா கட்டளைச் சட்டத்தை மீறுகிறான். "சகோதரனிடத்தில் அன்பு கூராதவன் மரணத்தில் நிலைகொண்டிருக்கிறான்" என்றும் (I அருளப். 3; 14), "தன் சகோதரனைப் பகைக்கிறவன் எவனோ, அவன் மனுஷ கொலைபாதகனாயிருக்கிறான்" என்றும் (I அருளப். 3; 15) வேதவாக்கியம் வசனிக்கும் அல்லவோ!

2. நம்முடைய சத்துருக்களுக்கு நல்ல மனதோடு பொறுதி கொடுப்பது நமது கடமை. இது சருவேசுரனுடைய கட்டளை. யேசுநாதருடைய முன்மாதிரிகை. நாம் பிறருக்குக் கொடுக்கிற பொறுதியைக் கண்டுதான், ஆண்டவரும் நமக்குப் பொறுதி கொடுப்பார். ஆனால், தங்கள் அயலார்களோடு மனத்தாங்கல்களை வளர்த்துக்கொண்டு வருகிறவர்கள், இவ்வித நடக்கைக்கு ஒரு சாக்குப் போக்காக, சில போலி நியாயங்களைச் சொல்லுவார்கள். அவைகளையும் ஒரு சிறிது பரிசோதித்து, இந்தப் போதகத்தை முடிப்போம்.

சிலர் சொல்லுவது: நாங்கள் இன்னின்னாரோடு சந்தோஷமாய் இருக்க முடியவில்லை. அவர்கள் பேரில் எங்கள் மனதில் கிடக்கிற வன்மத்தை, ஈறலை எப்படித் தணிக்கிறது? எவ்வளவாகப் பிரயாசப்பட்டாலும், மனதிலுள்ள வெறுப்பும் அவிகாயமும் பழிவாங்குகிற எண்ணமும் எங்களை விட்டு நீங்காதாமே என்பார்கள். இது ஒரு ஆதாரம் இல்லாத சாக்குப் போக்கு. கடின ஒரு சந்தியிருக்கிறது என்றால், நெடும் தூர யாத்திரை பண்ணுவது என்றால், தான தருமம் செய்வது என்றால் — அது எவரும் நினைத்த நினைத்த உடனே செய்யத்தக்க காரியமல்ல என்றது மெய். ஆனால், மனதிலே உள்ள பழிவாங்குங் குணத்தை அகற்றிவிடுவதும் இப்படியா? இதிலே "மனமுண்டானால் இடமுண்டு". வேறு பாவச் சோதனைகளைத் தள்ளுவதுபோலத்தான், பழிவாங்குகிற நினைவையும் தள்ளுகிறது. பிறரைப்பற்றி மனதிலே கிளம்புகிற வெறுப்பை அவ்வளவு லேசாக விலக்கிப்போடக் கூடாவிட்டாலும், செபத்தினாலும், பிறர் பேரிலே தயவான எண்ணங்களை வளர்ப்பதினாலும் அந்த வெறுப்பை மெல்ல மெல்லத் தள்ளிவிடலாம். விசே

ஷமாப், யார் யாரிலே மனவெறுப்பு இருக்கிறதோ, அவர்களுக்காக ஒரு செபத்தைச் சொல்லிவந்தால், அந்த வெறுப்பு சூரியனைக் கண்ட பனிபோல நீங்கிவிடும். மெய்யான தேவபத்தியுள்ளவர்கள் ஒருபோதும் பழிவாங்க நினையார்கள். இதற்கு அத்தாட்சியாக ஒரு சரித்திரம் சொல்லுகிறேன் கேளுங்கள்: ஒருமுறை, தெருவிலே விளையாடிக்கொண்டு நின்ற ஒரு பையனை வழிப்போக்கன் ஒருவன், யாதோ ஒரு காரணத்துக்காக, அடித்தபோது, அந்த அடி உயிர் நிலைபத்திற் பட்டுப் பையன் இறந்துபோனான். கொலைகாரன் அரசாட்சியாருக்குப் பயந்து ஓடிப்போய், அண்டையிலிருந்த ஒரு வீட்டில் புகுந்து, அவ் வீட்டின் எசமாட்டியிடத்தில் அடைக்கலம் கேட்டு: அம்மா தெரியாமற் செய்த ஒரு குற்றத்துக்காகப் பொலீசர் என்னைப் பிடிக்க வருவார்கள், என்னைக் காக்கவேணும் என்று கெஞ்சி மன்றாடினான். சத்தியவேதக்காரியாகிய அந்த அம்மாள், அவனை அடுக்களைப்புறத்தில் ஒளித்து வைத்திருக்கும் பொழுது, அவன் கொன்ற பிள்ளையின் சவத்தை அந்த வீட்டுக்குத்தானே கொண்டுவந்தார்கள். ஏனென்றால், அது அந்த அம்மாளுடைய ஏக குமாரன். இவ்வேளை, தாயின் மனம் எவ்வளவு பாடுபட்டிருக்கும்! தன் வீட்டிலேயே ஒளித்திருந்த கொலைபாதகனைப் பிடித்துப் பொலீசர் கையிலே ஒப்பிக்க வேணும் என்ற எண்ணம் ஆருக்கு வராது? ஆனால், அந்தப் பரிசுத்த தாய் பழிவாங்குகிற எண்ணம் கொஞ்சமும் இல்லாமல், கொலைகாரன் தன் வீட்டிலிருக்கிற சங்கதியையும் வெளிவிடாமல், தேவ சித்தத்துக்குக் கீழ்ப்படிந்த மனதோடே தனக்கு வந்த மகா துயரத்தைச் சகித்துக்கொண்டாள். அரசாங்க உத்தியோகத்தர்கள் போய்விட்டபின், ஒளித்திருந்த கொலைகாரனுக்குக் கொஞ்சம் காசு கொடுத்து: நீ எங்கேனும் ஓடித்தப்பு என்று அனுப்பிவிட்டாள். பல நாட்களின் பின், அவன் வேறோரிடத்திற் பிடிபட்டு, நீதிஸ்தலத்தில் நிறுத்தப்பட்டான். விளக்கத்திலே அவனைக் குற்றவாளியாகக் கண்டு, கொலைக்குத் தீர்ப்பிட்டார்கள். இதைக் கேள்விப்பட்ட அந்த வீரத் தாய் அக்கியானியாயிருந்த அவனைச் சத்திய வேதத்திற் சேரப்பண்ணி, அவனுக்கு ஞானஸ்நானங் கொடுக்கும் வேளையில், தானே அவனுக்கு ஞானத் தாயாகவும் நின்றாள். எவ்வளவு கிறீஸ்த சாயலான பொறுதி! எவ்வளவு உத்தமமான முன்மாதிரிகை!

வேறு சிலருடைய சாக்குப் போக்கு என்னவானால்: நாங்கள் எங்களுக்குக் குற்றஞ் செய்த இன்னாருக்குப் பொறுதி கொடுத்தால், உலகம் எங்களை நையாண்டி பண்ணும்; எங்களை கோழை

நெஞ்சர், சுணைமணையில்லாதவர்கள் என்று சொல்லும் என்பார்கள். அப்படியானால், கிறீஸ்தவர்களே, படுபாவிகளாயிருந்த எங்களுக்குப் பொறுதி தர வந்த சருவ வல்லமையுள்ள சருவேசுரனையும் பிழை சொல்ல வேண்டுமா? பொறுதி கொடுப்பது கோழைத்தனமா? அல்லது வீரத்தனமா? பாவ மயக்கத்தில் சிக்குப்பட்டிருக்கிற உலகத்தாருடைய முகத்தாட்சணியத்துக்காக, நாம், உள்ளபடி எவ்வளவோ மகிமையான ஒரு காரியத்தை, எவ்வளவோ பெருந்தன்மையாக விளங்குகிற ஒரு வீரச் செயலைச் செய்யாமல் விடலாமா? "சிறியோர் செய்த சிறு பிழையெல்லாம் பெரியோர் ஆயிற் பொறுப்பது கடனே" என்றது ஒரு தமிழ் வாக்கியம். பெரியோர் ஆயின்,—நாம் உண்மையிலே பெரியவர்கள் என்றால்,—பொறுப்போம், பொறுக்கிறவர்களே பெரியவர்கள். பிழை செய்கிறவர்கள் எப்போதும் சிறியவர்கள்தானே. வேறொரு தமிழ்வாக்கியத்திலே:

ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம்
பொறுத்தார்க்குப் பொன்றுந் தணையும் புகழ்.

அதாவது, கோபத்தைச் சாதிக்கிறவர்களுக்கு அந்நேர இன்பத்தோடும் கைகொட்டுதலோடும் எல்லாம் முடிந்துபோம். பொறுக்கிறவர்களுக்குச் சாகும் வரைக்கும் பெரிய பேரும் புகழும் ஆகும் என்று உலக வாக்கியமாகச் சொல்லியிருக்கிறது. ஆனபடியால், உலக சங்கையைத் தேடுகிற இடத்திலும், பொறுதி கொடுப்பது தான் நல்லது என்று வருகிறது. ஆண்டவருடைய வேத கட்டளையின்படி நாம் நமக்குக் குற்றஞ் செய்தவர்களுக்குப் பொறுதி கொடுப்பதினாலோ எவ்வளவோ புண்ணியமும் பரலோக புகழும் உண்டாகும்!

இன்னுஞ் சிலர் சொல்லுவது: எங்களோடு கோபமாயிருக்கிற இன்னின்னார் பாவசங்கீர்த்தனத்துக்குப் போகவில்லையா? அப்போது, நாங்களும் கோபமாயிருந்துகொண்டு பாவசங்கீர்த்தனம் பண்ணினால் என்ன? என்பார்கள். பிரியமானவர்களே, நீங்கள் பிறருடைய நன்மாதிரிகையைப் பின்பற்றுகிறதோ? துன்மாதிரிகையைப் பின்பற்றுகிறதோ? கோபக்காரர் மனத்தாங்கலை அகற்றிவிடாமல் பாவசங்கீர்த்தனத்துக்குப் போகிறார்கள், நாங்களும் அப்படிப் போனால் என்ன என்று போலி நியாயம் பேசுகிற நீங்கள், சில பேர் சாவானபாவத்தை ஒளித்துக் கள்ளப் பாவசங்கீர்த்தனம் பண்ணிக் கெடவில்லையா? அப்படி நாங்களும் கெட்டுப்போகிறோம் என்றும் சொல்லலாமே! பைத்தியகாரர்

ஒழிய வேறு யாராவது இப்படிச் சொல்லுவார்களா? பிறரைப் பற்றி எங்களுக்குத் தெரியாது. எங்களைப் பற்றியே நாங்கள் அறிவோம். அவர்கள், ஒருவேளை, அறியாமையினால், அல்லது தங்கள் மனதிலே மெய்யாகவே பகை வன்மம் ஒன்றும் இல்லாமையினால், பாவசங்கீர்த்தனத்துக்குப் போகக் கூடும். அது அவர்களுடைய அலுவல்; அவர்கள் மாத்திரம் அறிந்த இரகசியம். எங்கள் மனதிலே பிறர்பேரில் வன்மம் இருக்க, அவிகாயம் இருக்க, பழிவாங்கும் கருத்து இருக்க--நாங்கள் மனம் மாறாமல் பச்சாத்தாப தேவதிரவிய அநுமானத்தை அநாசாரப் படுத்தல் ஆகாது. எங்கள் ஆத்தும நன்மையை நாங்கள் விரும்புவது உண்டானால், பகை வன்மம் பழிவாங்கும் எண்ணம் இவைகளைத் துஞ்சற நீக்கிக்கொண்டுதான் பாவசங்கீர்த்தனம் பண்ணுவோம்.

வேறு சிலர் சொல்லுவது: நாங்கள் பட்டும் பட்டும் அறிவில்லாதவர்கள் போல, பொறுத்துப் பொறுத்துக்கொண்டு வந்தால், எல்லாரும் எங்களிலே இடங்கண்டுகொள்ளுவார்கள். "அடிக்க அடிக்கப் படுகிறவனும் மடையன், படப் பட அடிக்கிறவனும் மடையன்" என்றது போல, பிறர் செய்கிற அநியாய நிட்டூரங்களை எல்லாம் எப்போதும் சகித்துக்கொண்டு வருகிறதானால், உலகத்தில் நாங்கள் வாழுகிறதுதான் எப்படி? என்பார்கள். இதிலே ஒரு காரியம் நீங்கள் கவனிக்கவேணும். கிறீஸ்தவர்களுக்குரிய பொறுமை என்றால், பொல்லாதவர்களுடைய துர்க்கிருத்தியங்களை நாம் சரி என்று ஏற்றுக்கொள்ளுவது அல்ல. பொருளைப் பறிக்கிறவர்களை, அடித்து ஆக்கினை பண்ணுகிறவர்களை, அநியாயஞ் செய்கிறவர்களை நாம் தோள்தட்டிக் கொடுத்து, இன்னும் இப்படிச் செய்யுங்கள் என்று சொல்லுவது அல்ல. இப்படிச் செய்யக் கடமையும் இல்லை; செய்வது, பொதுவாகச் சொல்லுகில், சரியாயும் இராது. சிலவிசை, சுத்தவாளர்கள், துட்டர் தங்களை மேலும் மேலும் துன்பப்படுத்த விட்டுக்கொண்டிருந்ததும் உண்டு. அது வீரியமுள்ள புண்ணியம். அது நம் எல்லாருக்கும் கடமையான ஒரு ஒழுக்கம் அல்ல. துட்டருடைய துட்டாட்டங்களை அடக்குகிறதற்கு உரிய அதிகாரம் உள்ளவர்கள் திருச்சபையிலே, இராசாங்கத்திலே இருக்கிறார்கள் அல்லவா? இவர்களிடம், நாம், நம்மை மீண்டும் மீண்டும் துன்பப்படுத்துகிறவர்களைப்பற்றி முறைப்பட்டு, அடையவேண்டிய சுகத்தை அடைந்துகொள்ளலாம். பொருள் பறித்தவர்களையும் கோட்டில் நிறுத்தி, பொருளை அறவாக்கிக்கொள்ளலாம். இவை எல்லாம் பகையும் அல்ல, வன்மமும் அல்ல, பழிவாங்குதலும் அல்ல. தன் தன் உரிமைச் சுதந்தரங்

களைத் தான் தான் வாதாடி வழக்காடிப் பெற்றுக்கொள்ளுவதிலே ஒரு பிழையும் இல்லை. ஆனால், அதற்குமேல் மனதில் வைராக்கியத்தைப் பேணுவதும், தனக்கு நட்டஞ் செய்தவர்களுக்குக் கேடு நினைப்பதும், அவர்களுடைய வாழ்விலே வருந்துவதும், தாழ்விலே சந்தோஷப்படுவதும், தின்மைக்குத் தின்மை செய்ய வழி பார்த்திருப்பதும் இது முதலான நடைதான் ஆண்டவருடைய கட்டளைக்கு மாறானது. எவரோடாவது நாம் பகை சாதிக்கப்படாது. எவரையாவது சத்துராதிகளாகப் பாவிக்கப்படாது. எல்லாரையும் உற்ற சிநேகிதராக ஒருவிதமாக நடப்பிக்க முடியாது என்றது மெய்தான்; உற்ற சிநேகிதரோடு அளவளாவி, குழைந்து குலாவி நடக்கிறது போல, நம்மில் வெறுப்புக் கொண்டிருப்பாரோடு நடக்க முடியாது என்றது மெய்தான். ஆனாலும், நமக்கு இனிமேலில்லையென்ற தின்மை செய்கிறவர்களுக்குக் கூட, நாம், பொதுவாய்ச் சகலருக்கும் காண்பிக்கிற அன்பைக் காண்பிக்கக் கடன் உண்டு. குறைந்த பட்சத்தில், நாம் அவர்களோடு பகை சாதிக்கிறதில்லை என்றதை ஏதோ ஒருவகையாய்க் காட்டிவைக்கவாவது பிரயாசப்படவேண்டும்.

பிரியமான கிறீஸ்தவர்களே, "பொறுங்கள் உங்களுக்குப் பொறுக்கப்படும்" என்ற தேவ வாக்கியத்தை நீங்கள் எப்போதும் மனதில் இருத்திக்கொண்டு, உங்களுக்குக் குற்றஞ் செய்கிறவர்கள் எல்லாருக்கும் நிறைந்த மனதோடு, உதார குணத்தோடு, ஆண்டவருக்காக--பொறுதி கொடுங்கள். அவர்களோடு உங்களுக்குப் பகை வைராக்கியம் இல்லை என்பதை வெளிப்படையாயுங் காண்பியுங்கள். அப்போது, கருணை சமுத்திரமான உங்கள் பிதா உங்கள் பாவங்கள் சகலத்தையும் பொறுத்து, உங்களுக்குத் தமது தெய்வீக சமாதானத்தின் திருமுத்தந் தந்தருளுவார்,—ஆமென்.

SERMON :

On the Fatherhood of God

மாலைப் பிரசங்கம் :

சருவேசுரன் நமக்குப் பிதா

"Et patrem nolite vocare vobis super terram. Unus est enim Pater vester qui in caelis est"—Matth. 23. 9.

"பூமியிலே ஒருவரையும் உங்கள் பிதா என்று சொல்லாதிருங்கள். ஏனெனில் பரலோகத்தில் இருக்கிற ஒருவரே உங்களுக்குப் பிதாவாம்". (மத். 23; 9).

நம்முடைய திவ்விய மீட்பராகிய யேசுக்கிறீஸ்துநாதர் இவ்வுலகத்துக்கு எழுந்தருளிவருமுன், பூலோகத்தில் உள்ள அஞ்ஞான சாதிகள் மெய்யான சருவேசுரனை மறந்துபோனதினால், பல பல பொய்த் தெய்வங்களைத் தங்களுக்கு உண்டுபண்ணி வைத்துக் கொண்டு, அவைகளுக்குப் பயந்து வந்தார்கள். அஞ்ஞானிகள் யாராவது தங்கள் தெய்வத்தை: பிதாவே! என்று சொல்லித் தொழுதது உண்டா ? ஒரு பொழுதும் இல்லை. அஞ்ஞானிகள், பொய்த் தெய்வங்களை அடிக்கொரு எண்ணம் உள்ள கொடுங்கோல் மன்னர்களைப் போலப் பாவித்து, அவைகளாற் தங்களுக்கு எந்நேரத்தில் என்ன கெடுதி வருமோ என்று அஞ்சி, அவைகளுக்குப் பலி நைவேத்தியங்களாற் சாந்தி பண்ணவும் அவைகளைத் தங்களை விட்டு அகற்றிப்போடவும் பிரயாசப்படுவார்கள். தேவ மீட்பரானவர் எப்போது வருவாரோ வருவாரோ என்று காத்துக் கொண்டிருந்த யூத சாதியாருக்குள்ளேதான், சருவேசுரன் மனுமக்களுக்குப் பிதா என்ற எண்ணம் ஒருபடி இருந்தது. அந்த மங்குளமான எண்ணத்தை மீட்பரானவர் தமது திவ்விய பிரசங்கங்களினால் துலாம்பரம் ஆக்கி, சருவேசுரன் சகல மனுஷருக்கும் பரம பிதா என்றதை வெளிப்படுத்தியருளினார். உள்ளபடி, யேசுக்கிறீஸ்துநாதர் தாமே அந்த வெளிப்படுத்தல் ஆனார். அவராலே தான் சருவேசுரனுடைய பிதாத்தன்மை வெளிச்சமாய்ப் பிரகாசித்தது. அவர் பிதாவைப்பற்றி அடிக்கடி பிரசங்கித்துக்கொண்டு

வந்ததைக் கேட்ட பிலிப்பு என்னும் அப்போஸ்தலர் அவரைப் பார்த்து: "ஆண்டவரே எங்களுக்குப் பிதாவைக் காட்டியருளும் அதுவே எங்களுக்குப் போதும்" என்று விண்ணப்பஞ் செய்த இடத்திலே, ஆண்டவர்: "பிலிப்பூ, என்னைக் காண்கிறவன் பிதாவைக் காண்கிறான். அப்படி இருக்கப் பிதாவைக் காண்பியும் என்று நீ எப்படிக் கேட்கிறாய்" என்று திருவுளம்பற்றினார் (அருளப். 14; 9). நம் எல்லோருக்கும் உண்மையான பிதா ஒருவர் பரமண்டலங்களில் இருக்கிறார் என்றது யேசுக்கிறீஸ்துநாதருடைய மனுஷ அவதாரத்தினாலும் திருப் போதகத்தினாலுந்தான் பூரணமாக வெளி ஆயிற்று. சூரிய வெளிச்சம் இருக்கும்போது மின்மினிப்பூச்சியின் வெளிச்சத்தை வெளிச்சம் என்று சொல்லலாமா? இது போலவே, சகல மனுஷரையும் உண்டாக்கினவரும் வளர்க்கிறவரும் நடப்பிக்கிறவருமான பிதா ஒருவர் பரலோகத்திலே இருக்கும்பொழுது, உலகத்திலே எமது சரீரம் உற்பத்தியாவதற்கு ஒரு இடைக்காரணமாய் மாத்திரம் நிற்கிற தகப்பன்மாரை பூரண கருத்தின்படி பிதா என்று சொல்ல வராது. இதினாலே தான், ஆண்டவரும்: பூமியிலே ஒருவரையும் உங்கள் பிதா என்று சொல்லாதிருங்கள். பரலோகத்தில் இருக்கிற ஒருவரே உங்களுக்குப் பிதாவாம் என்று வசனித்தார். இவரையே நாம், எப்போதும், தமது பெயரைச் சொல்லி மன்றாடவேண்டும் என்றும் கற்பித்தார். அது எப்படியென்றால், அப்போஸ்தலர்கள் ஒருநாள் அவரைத் தெண்டனிட்டு: "ஆண்டவரே யுவானியார் தம்முடைய சீஷர்களுக்குச் செபம் பண்ணப் போதிக்கிறது போல தேவரீரும் எங்களுக்குச் செபம் பண்ணுகிற முறையைச் சொல்லித்தரவேணும்" என்று கேட்ட இடத்திலே, ஆண்டவர்: "நீங்கள் செபம் பண்ணும்போது பரமண்டலங்களிலே இருக்கிற எங்கள் பிதாவே" என்று மன்றாடி, உம்முடைய நாமம் அர்ச்சிக்கப்படுவதாக என்றது முதலாகச் சொல்லுங்கள் என்று, நாம் எல்லாரும் அறிந்திருக்கிற பரமண்டலமந்திரத்தைப் படிப்பித்தருளினார். பிரியமான கிறீஸ்தவர்களே, சருவேசுரன் நமக்குப் பிதாவாய் இருக்கிறபடியால் அவர் எமது மேற் கொள்ளுகிற அன்பு முதலாவது அளவில்லாத ஒரு அன்பு; இரண்டாவது நம்முடைய முழு நன்றியறிதலுக்கும் பாத்திரமான ஒரு அன்பு; மூன்றாவது நம்முடைய முழு நம்பிக்கையையும் கேட்கிற ஒரு அன்பு. இந்த மூன்று துறையிலேயும் இன்றைப் பிரசங்கம் அடங்கும். இதைத் தயவாய்க் கேட்டு, சாவதானமாய் யோசித்து, தேவ கிருபையால் பலன் அடைந்து கொள்ளுங்கள். (பிரியதத்தம்).

I

நம்மைப் படைத்துக் காப்பாற்றிக்கொண்டு வருகிற சருவேசுரன் அளவில்லாதவர். அவருடைய இருப்புக்கு ஒரு தொடக்கம் முடிவு இல்லை; அவருடைய அறிவுக்கு ஒரு கரை இல்லை; வல்லமைக்கு ஒரு தடை இல்லை; நீதிக்கு ஒரு மட்டு இல்லை; இரக்க உருக்கத்துக்கு ஒரு எல்லை இல்லை. இப்படிப்பட்டவர் நமக்குப் பிதாவாய் இருக்கும்போது, அவருடைய பிதாத் தன்மையான அன்புக்கு, அதாவது பெற்றவர் பிள்ளையிலே கொண்டிருக்கிற உள்ள நெகிழ்ச்சி என்கிற உருக்கத்துக்கு ஒரு அளவு இருக்க முடியுமோ? அர்ச். சின்னப்பர் வேதவாக்கியமாக வரைந்திருக்கிறபடியே, உலகத்திலே உள்ள சகல பிதாக்களுடைய இரக்கத்துக்கும் உருக்கத்துக்கும் சருவேசுரனுடைய இரக்க உருக்கந்தான் ஆதி ஊற்றுப்போல இருக்கிறது (எபேசி. 3; 15). உலகத்திலே நம்மைப் பெற்ற தகப்பனுடைய அன்பு நேற்று உண்டான ஒரு அன்பு. நாளைக்கு முற்றாக மாறிவிடக்கூடிய ஒரு அன்பு. ஆனால், நம்முடைய பரலோக பிதாவின் அன்போ அநாதி நித்திய காலமாய் உள்ள அன்பு. சருவேசுரன் வேத புத்தகத்திலே மனுமக்களைப் பார்த்து வசனிக்கிறதைக் கேளுங்கள்: "அநாதியான அன்போடு உன்னைச் சிநேகித்தேன், காருண்ணியத்தால் உன்னை இழுத்து எடுத்தேன்" (எரேமி. 31; 3). ஆமாம், இது என்ன புதுமை! இங்கு இருக்கிற பெரியவர்களே, சிறு குழந்தைகளே, உங்கள் ஒவ்வொருவரையும் அனந்த பலம் உள்ளவராகிய கடவுள் தனித்தனியே அநாதி காலமாக நேசித்து வருகிறார். வானமும் பூமியும் உண்டாக முன்னே, ஆகாயத்திலே சூரியன் சந்திரன் நட்சத்திரங்கள் தோற்ற முன்னே, பூமியிலே மலைகளும் சமுத்திரங்களும் உருவாக முன்னே—உங்கள் ஒவ்வொருவரையும், புறம்புறம்பான நேசத்தோடு, பரலோக பிதா நேசித்தார். இங்கே இருக்கிற உங்களை எத்தனை பேர் நினைக்கிறார்கள்? எத்தனை பேர் நேசிக்கிறார்கள்? உலகத்திற் பிறந்து தங்கள் கண்முன்பாக இருக்கிறபோது உங்களை நினையாதவர்கள் நேசியாதவர்கள், நீங்கள் பிறக்குமுன் உங்களை நினைத்திருப்பார்களா? நேசித்திருப்பார்களா? நீங்கள் பிறக்கிறதற்கு ஐம்பது நூறு வருஷங்களின் முன் உங்களை ஆராவது நினைத்து நேசித்திருப்பார்களா? இப்படிக் கேட்கிறது பைத்தியம் என்று சொல்லுவீர்களே. ஏன்? நீங்கள் பிறக்க ஒரு நிமிஷத்தின் முன் தானும் உங்களை நினைத்தவர்களும் நேசித்தவர்களும் இல்லையே. அப்படி இருக்க, மனுமக்கள் ஒவ்வொருவரையும், அளவில்லாத பரிபூரண வஸ்துவாகிய சருவேசுரன் தாம்

உள்ள நாள் அளவும், அதாவது, தொடக்கம் இல்லாத அநாதிகாலமாய், நினைத்து, திருவுளத்தில் வைத்து, அன்பால் அரவணைத்திருக்கிறார். என்னை ஒருவரும் தேடுகிறார்களில்லையே, எனக்கு அன்பு காட்டுகிறவர்கள் ஒருவரும் இல்லையே, நான் எல்லாராலும் அவமதிக்கப்படுகிறேனே என்று கவலைப்படுகிற, இதோ இங்கே இருக்கிற ஏழைப் பிள்ளாய், உன்னையும் அளவில்லாதவர் நித்தியமாக, இந்தப் பூலோகம் உண்டாக முதல், பரலோகம் உண்டாக முதல், யாதொரு படைப்பும் இல்லாத காலந்தொட்டு அறிந்து மனதில் வைத்து நேசித்திருக்கிறார். நீ கவலைப்படுவானேன்? எல்லாரும் கைவிட்டாலும், உன்னைக் கைவிடாத ஒருவர் பரலோகத்திலே இருக்கிறார்; எல்லாரும் வெறுத்தாலும் உன்னை வெறுக்காத ஒருவர் உன்னில் கரிசனையாயிருக்கிறார். எல்லாரும் பகைத்தாலும், உன்னை நேசிக்கிற ஒருவர் உனக்கு உண்டு.

அளவில்லாத சருவேசுரன் நீசப் புழுக்களாகிய எம்மிற் கொண்டிருக்கிற அன்பு அளவில்லாதது என்றேன். இதை, என் அற்ப புத்தியைக்கொண்டு, எப்படி அளவிட்டு உங்களுக்கு எடுத்துச் சொல்லுவேன்! அது என்னால் முடியாத காரியம். ஆனாலும், வேதாகமத்திலே சருவேசுரனுடைய அன்பின் தன்மையைப்பற்றி எத்தனையோ இடங்களில் எழுதியிருக்கிறவைகளிற் சிலதை எடுத்துக் காட்டுகிறேன். உலகத்திலே பெற்ற தாய் பிள்ளைக்குக் காட்டுகிற அன்புக்கு இணையான அன்பு இல்லை அல்லவா? இதிலும் பார்க்க அதிகமாக தாம் நம்மில் அன்பு கொள்ளுவதாக தேவபிதா திருவுளம்பற்றுகிறார். "இஸ்திரியானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல் இருப்பாளோ? தன் பால்குடிக் குழந்தையை மறப்பாளோ? அப்படி அவள் மறந்தாலும் நானோ உன்னை மறப்பதில்லை" என்று வாக்கு அளிக்கிறார் (இசையாஸ். 49; 15). என்ன உருக்கமான நேசம்! என்னைப் பெற்ற தாய் என்மேல் வைத்த நேசத்திலும் அதிகமாகப் பரலோக பிதா, அற்பனான என்னில், நேசம் வைக்கிறாரே. இது என்ன ஆச்சரியம்! இதுமட்டோ, கிறீஸ்தவர்களே, இந்த அன்புமயமான பரிபூரண கடவுள் உங்கள் ஒவ்வொருவரையும் பற்றிச் சொல்லுகிறதைக் கேளுங்கள்: "உங்களைத் தீண்டுகிறவன் நமது கண்ணின் கருமணியைத் தீண்டுகிறான்" (சக்கரி. 2; 8). மனிதர் பேரில் சருவேசுரனுக்கு எவ்வளவு உருக்கமான கரிசனை! ஆகக் கடைகெட்ட ஒரு ஏழைக்கும் அநியாயமாய்த் தீங்கு வர ஒட்டாராம் எம்முடைய கடவுள். யாராவது அவர்களைத் தீண்டினால், தம்முடைய கண்மணியைத் தீண்டினது போலப் பாவித்துக்கொள்ளுவாராம்! இதுமட்டோ!

“கழுகு தன் குஞ்சுகளின்மேல் அசைவாடி, தன் செட்டைகளை விரித்து, அவைகளை எடுத்து, அவைகளைத் தன் செட்டைகளின்மேற் சுமந்துகொண்டு போகிறதுபோல” (உபாகமம். 32; 11), கோழி தன் குஞ்சுகளுக்கு அபாயம் வராமல் அவைகளைத் தன் சிறகுகளுக்குள்ளே வைத்து மூடிக் காப்பதுபோல (மத். 23; 37), சருவேசுரனும் மனுமக்களைப் பாதுகாக்கிறாராம். அவர் இசையாஸ் தீர்க்கதரிசியின் வாயினாற் சொல்லுகிறதாவது: “தாயின் வயிற்றிற் தோன்றினதுமுதல் உங்களைத் தாங்கினேன்; உங்கள் முதிர் வயசு வரைக்கும் அப்படிச் செய்வேன்; அப்படிச் செய்து வந்தேன். இனிமேலும் நான் ஏந்துவேன், சுமப்பேன், தப்புவிப்பேன்” என்று வசனிக்கிறார் (இசை. 46; 3—4). இதுமட்டோ! நாம் பல துன்பங்களினாற் கலங்கி மலங்கும்போது, கலங்காத ஆனந்தத்தின் நிறைந்த சமுத்திரமாகிய சருவேசுரன், தாமும் நம்மோடு கூடிக் கலங்கித் துக்கிக்கிறவர் போலக் காணப்படச் சித்தமாகிறார். இசிறவேல் என்னும் யாக்கோபு அதிபிதாவின் மகனான யோசேப்புவுடைய இளைய மகன், எப்பிராயிம் என்பவன், தன் பிதாக்களுடைய உரிமைச் சுதந்திரத்தைப் பெற்றிருந்தவன். இவனுடைய சந்ததி துன்பப்பட்டபோது சருவேசுரன் யெரேமியாஸ் தீர்க்கதரிசியின் வாயினால் வசனிப்பது: “எப்பிராயீம் எனக்கு அருமையான குமாரன் அல்லவோ? அவன் எனக்குப் பிரியமான பிள்ளை அல்லவோ? அவனுக்கு விரோதமாய்ப் பேசினதுமுதல் அவனை நினைத்துக்கொண்டே இருக்கிறேன். அதினால் என் உள்ளம் அவனுக்காகக் கொதிக்கிறது. அவனுக்கு உருக்கமாக இரங்குவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் (யெரே. 31; 20). இப்படியே ஆயிரம் ஆயிரம் தாய்மாரிலும் மிக்க உருக்க இரக்கம் உள்ளவரான இந்த ஆச்சரிய பிதாவானவர் மனிதர் பேரிற் கொண்டிருக்கிற மட்டற்ற அன்பின் பராமரிப்பை நினைந்து நினைந்து தாவீது ராசா பாடுவார்: “ஆண்டவர் என்னை மேய்க்கிறார். எனக்கு ஒன்றும் குறைவு இராது. நான் மரண இருளின் நடுவில் நடந்தாலும் பொல்லாங்குகளுக்குப் பயப்படேன். ஏனெனில் தேவரீர் என்னோடு கூட இருக்கிறீர். உமது கோலும் உமது தடியும் என்னைத் தேற்றும்” (22-ம் சங்கீதம்) என்கிறார். இன்னும் ஒரு சங்கீதத்திலே அவர் தேவ வாக்கியமாய்ச் சொல்லுவது: “உன்னதமானவருடைய அடைக்கலத்திற் குடி கொண்டிருப்பவன் பரமண்டலத்தின் தேவனுடைய ஆதரவில் நிலைபெற்றிருப்பான். அவன் கர்த்தரை நோக்கி: நீரே எனக்கு அடைக்கலம், நீரே எனக்கு ஆதரவு என்று சொல்லுவான். உன் பக்கத்தில் ஓர் ஆயிரம் அம்

புகள் விழும்; உன் வலது புறங்களிலே பதினாயிரம் விழும். ஆனால் அவைகள் உன் மட்டும் அணுகாது; உனக்குப் பொல்லாங்கு நேரிடாது. சங்காரம் உன் கூடாரத்தைச் சேராது. ஏனெனில் உன் சகல பாதைகளிலும் உன்னைக் காக்கும்படி தம்முடைய தூதர்களுக்கு உன்னைப்பற்றிக் கட்டளை இட்டிருக்கிறார். அவர்கள் உன் பாதம் கல்லில் இடறாதபடிக்கு உன்னைத் தங்கள் கைகளில் ஏந்திக்கொண்டு போவார்கள்” (90 ம் சங்கீதம்). பிதாவானவர் மனுஷர் பேரில் வைத்திருக்கும் அன்பைக் காட்ட இந்த ஒப்பனைகள் எல்லாவற்றையும் ஏன்? அவர், தம்மோடு ஏக சுபாவம் உடையவராகிய தம்முடைய திருக்குமாரனை எமது நிமித்தம் இந்தப் பூலோகத்துக்கு அனுப்பி, இவர் எமக்காகத் தமது உதிரம் எல்லாஞ் சிந்தி மரிக்க விட்டதைப் போல அவருடைய நேசத்துக்கு வேறு ஒரு அத்தாட்சியும் வேணுமோ? மனிதனுப் அவதரித்த அந்தச் சுதனானவர் தாமே திருவாய்மலர்ந்தபடி: “சருவேசுரன் மனுமக்களை எவ்வளவாக நேசித்தார் என்றால், அவர்கள் நித்திய சீவனை அடையும்பொருட்டு தம்முடைய ஏக குமாரனையே அவர்களுக்குத் தந்தருளினார்” (அருளப். 3; 16) என்றார். இதற்கு மேலான நேசத்தின் அடையாளத்தை சருவ வல்லவரான அவர் தாமும் கொடுக்க முடியுமா? ஒருபோதும் முடியாது முடியாது.

II

சருவேசுரன் நம்மிற் கொண்டிருக்கிற அன்பு அளவில்லாதது என்று கண்டோம். அந்த அன்பு அளவில்லாதது என்றபடியால், நம்முடைய முழு நன்றியறிதலுக்கும் பாத்திரமான ஒரு அன்பு. அற்ப படைப்புக்களாகிய நம்மில் பிதாவானவர் இவ்வளவு கரிசனை கொள்ளுகிறாரே; தம்முடைய கண்மணி போல நம்மைக் காத்து நமது நன்மையை எப்போதும் விரும்பி, துன்ப வேளையிலும் நம்மைக் கைதூக்குகிறாரே என்று காணும்போது, நாம் அவருக்கு இனிமேல் இல்லை என்ற நன்றியறிதல் உள்ளவர்களாய் இருக்க வேண்டாமா? இந்த நன்றி என்னத்திலே அடங்கும் என்றால்: முதல், அவரைப் புகழ்ந்து பாராட்டி, சகலரும் அவரை இவ்விதமே அறிய வேணும், புகழ வேணும், பாராட்ட வேணும் என்று ஆசைப்படுவதிலே அடங்கும். இரண்டாவது, அவருக்கு உவப்பானது எது எது என்று தேடித் தேடிச் செய்வதிலே அடங்கும். மூன்றாவது அவருக்கு உவப்பில்லாதது, பிரியமில்லாதது, எதையும் செய்துபோடாமல் சாக்கிரதையாய் இருப்பதிலே அடங்கும்.

பிரியமானவர்களே, நம்மிடத்தில் அளவில்லாத நேசம் கொண்டிருக்கிற தேவ பிதாவை நம்மால் இயன்றளவு ஓயாமல் புகழ்ந்து பாராட்டிக்கொண்டுவரக் கடவோம். அது நமக்கு ஆனந்தமாய் இருக்கவேண்டியது. காலை மாலைச் செப நேரத்தில் மாத்திரம் அல்ல, நாள் வட்டத்திலும் அடிக்கடி சருவேசுரனை நினைத்து, அர்ச். சின்னப்பர் நமக்கு ஏவித்தருகிறபடியே "ஒன்றுக்கும் கவலைப்படாமல், ஸ்தோத்திரத்தோடு கூடிய செபத்தினாலும் வேண்டுதலினாலும் நமது விண்ணப்பங்களை அவருக்குத் தெரியப்படுத்திவரக்கடவோம் (பிலிப். 4; 6). எத்தனை ஆயிரம் ஆயிரம் பேர் அன்பு மயமான எங்கள் பிதாவை அறியாமலிருக்கிறார்கள்! அவரைப் பற்றி நினையாமலும் அவரைத் தோத்திரியாமலும் நாள் விடுகிறார்கள்! "உப்பிட்டாரை உள்ளளவும் நினை" என்று தமிழிலே பழமொழி சொல்லிக்கொள்ளுகிறோம். கொஞ்சம் உப்புத் தந்தவர்களை ஒருக்காலும் மறக்கப்படாது என்றால், நமக்கு உள்ள எல்லாத்தையும் தந்துகொண்டுவருகிறவரை நினையாமல், தோத்திரியாமல் இருக்கலாமா? அவரை நினையாமலும் தோத்திரியாமலும் வருவது சருவேசுரனுக்கு எவ்வளவோ அவமானமும் துரோகமும் அல்லவா? பழைய ஏற்பாட்டிலே அவர் வசனிப்பது: "மாடு தன் எசமானையும் கழுதை தன்னை உடையவனின் முன்னிட்டியையும் அறியும். நமது சனமோ அறிவில்லாமலும் உணர்வில்லாமலும் இருக்கிறது" (இசையாஸ் 1; 3) என்கிறார். புத்தியுள்ள படைப்புக்கள் தங்களைப் படைத்தவரை அறியாமல், அவர் தங்களுக்குச் செய்துவருகிற கணக்கில்லாத உபகாரங்களை உணராமல் இருக்கிறது எவ்வளவு முறைகேடு! அவரை அறிந்திருக்கிற நாம், அறியாத சகலரும் அவரை அறியப் பண்ண, அவருடைய உபகாரங்களை உணரப் பண்ண ஆசைப்பட வேண்டாமா? இனி, நாம் அவருக்குப் பிரியமானது என்ன என்ன என்று தேடித் தேடிச் செய்ய வேணும். சருவேசுரனுக்குப் பிரியமானது என்ன? புண்ணிய நடக்கைதானே. மனத் தாழ்ச்சி, சாந்தம், பொறுமை, தயவு, தாட்சணியம், மனத் தூய்மை, உதாரகுணம் முதலான நற்குணங்களை நாம் நாளுக்கு நாள் நம்மிலே அதிகம் அதிகமாய் வளர்த்துக்கொண்டுவரவேணும். அத்தோடு, சருவேசுரனுக்கு உவப்பில்லாதது, பிரியமில்லாதது, எதையும் விலக்க வேணும். அதாவது: மனம் பொருந்தி எவ்வித பாவத்தையும் செய்யாதபடிக்கு விழிப்பாய் இருக்கவேணும்.

•

சருவேசுரன் நம்மிற் கொண்டிருக்கிற அளவில்லாத அன்பைத் தியானிப்போமேயானால், அவர் நமக்கு இடைவிடாமற் செய்துவருகிற உபகாரங்களை நினைந்துகொள்ளுவோமேயானால்,—வேணுமென்று எந்தப் பாவத்தையுஞ் செய்யத் துணியமாட்டோம்.

யாக்கோபு அதிபிதாவின் பிரிய குமாரனான யோசேப்பு என்கிறவர், தன் சகோதரர்களுடைய காய்மகாரத்தினால், எகித்து தேசத்திலே அடிமையாய் விற்கப்பட்டு புத்திபார் என்னும் பிரதானியுடைய வீட்டிலே இருந்தபோது, அந்தப் புத்திபார் என்கிறவன் இவருடைய சுத்தமான நடக்கையையும் நேர்மையையுங் கண்டு இவரில் அன்பு வைத்து, தன் வீட்டின் சகல பணிவிடைகளுக்கும் இவரையே முதலாளி ஆக்கியிருந்தான். அப்படியிருக்க, அந்தப் பிரதானியின் மனைவி இவருடைய அழகு சவுந்தரியத்தில் மயங்கி, இவரைக் கேளாத கேள்வி ஒன்று கேட்டாள். அப்போது யோசேப்பு சொல்லுவார்: அம்மணீ உன்னுடைய பத்தா இந்த வீட்டிலே என்னைப் பெரியவன் ஆக்கிவைத்தார். அவருடைய மனைவியாகிய உன்னைத் தவிர அவர் எனக்கு ஒன்றையும் விலக்கிவைக்கவில்லை. அவர் ஒரு அடிமையாகிய எனக்கு இவ்வளவு உபகாரஞ் செய்திருக்க, நான் இந்தப் பெரிய துரோகத்துக்கு உடன்பட்டு கடவுளுக்கு விரோதமாய்ப் பாவஞ் செய்வது எப்படி? அதற்கும் மனம் ஏவுமா? என்றாராம் (சனிப்பா. 39- ம் அதி). கிறீஸ்தவர்களே, நமக்குப் பாவச் சோதனை வரும்போது நாமும், இவ்விதமே, சருவேசுரன் நமக்குச் செய்த நன்றிகளை நினைந்து அப்படிப்பட்ட சோதனையை உடனே விலக்கிவிட வேணும். என் பிதா எனக்குக் கையைத் தந்தார், காலைத் தந்தார், கண்ணைத் தந்தார், வாயைத் தந்தார், மனதைத் தந்தார், புத்தியைத் தந்தார். இந்தக் கையாலே நான் எப்படி அவருக்கு மாறான காரியங்களைச் செய்வேன்? இந்தக் காலாலே நான் எப்படி அவருக்குப் பொருந்தாத வழிகளிலே நடப்பேன்? இந்தக் கண்ணாலே, வாயாலே, நான் எப்படி அவருக்கு உவப்பில்லாத பார்வையைப் பார்ப்பேன், வார்த்தையைச் சொல்லுவேன்? இந்த மனதாலே, புத்தியாலே, நான் எப்படி அவருக்கு ஏராத எண்ணங்களை எண்ணுவேன், வழி துறைகளை யோசிப்பேன்? என்று இப்படியே நினைத்து நினைத்து, நாம் சருவேசுரனுக்கு விரோதமான எந்தக் கிரியையையும் நினைவையுங் கூடத் தள்ளிவைத்துக்கொண்டு வரவேணும். இதுதான் அவர் நமக்குச் செய்த, ஓயாமற் செய்து வருகிற, உபகாரங்களுக்கு நன்றி காட்டுகிற மாதிரி.

சருவேசுரனுக்கு நன்றியில்லாமல் மனம் பொருந்தித் துரோகஞ் செய்வோமானால் மிருகங்களிலும் கடைகெட்டவர்களாய்ப் போய்விடுவோம். நீங்கள் எல்லாரும் ஒரு சிங்கத்தினுடைய கதை

யைக் கேள்விப்பட்டிருப்பீர்கள். ஒரு கொலைக் குற்றவாளி அரசாட்சியாருக்கு ஒளித்து காட்டுக்குள்ளால் ஓடிப் போனபோது, ஒரு சிங்கம் கர்ச்சித்துக்கொண்டு வந்தது. அவன் திக்குக்கெட்டுத் திசைகெட்டு குப்புற விழுந்து படுத்துக்கொண்டான். வந்த சிங்கம் அவனை இதோ முடுகிவிட்டது. இனி என்ன? நான் செத்தேன், என்று அவன் கிடந்து கொண்டு பார்க்கும் பொழுது, அந்தச் சிங்கம் நொண்டி நொண்டி வந்து அவன் கிட்ட நிற்கிறது. காலில் ஒரு முள்ளுக் கட்டை கடாவிக் கிடக்கிறது. இவன்: இனியென்ன, நான் செத்தவன் தானே என்று எண்ணிக்கொண்டு, மெல்ல அந்தக் கட்டையை இழுத்து எடுத்துவிட்டான். சிங்கம் நன்றியறிதல் காட்டுவது போல பின்வாங்கிப் பின்வாங்கி வாலை ஒதுக்கிக்கொண்டு போய்விட்டது. அநேக மாசஞ் சென்று அந்தக் குற்றவாளி பிடிபட்டபோது, அவனை மிருகங்களுக்கு இரையாகப் போடவேணுமென்று தீர்ப்பாயிற்று. குற்றவாளியைச் சிங்கக் கெபியிலே போட்டார்கள். அந்தக் கெபியிலே பிடித்து அடைத்திருந்த சிங்கம் கெபிக்குள்ளே போட்டவனைத் தாமதமில்லாமல் பிடித்து விழுங்கும்படியாக, அதைப் பல நாள் பசியோடு விட்டிருந்தார்கள். ஆனபடியால், குற்றவாளியைக் கெபிக்குள் போட்டவுடனே சிங்கம் பாய்ந்து விழுந்து வந்தது. ஆனால் என்ன அதிசயம்! தனக்கு முன்னாலே விழுந்தவனை விழுங்கவென்று கறுமி உறுமிக்கொண்டு வந்த மிருகம், அவனுடைய முகத்தைப் பார்த்தவுடனே பிறகிட்டுப் பதுங்கி ஒரு நாயைப் போல அவனை நக்கித் துள்ளிக் குதித்துக்கொண்டு நின்றது! நியாயம் என்ன? அந்தச் சிங்கத்தின் காலிலே தைத்திருந்த முள்ளுக் கட்டையைத் தான் இவன் ஒரு நாள் பிடுங்கி விட்டவன். தனக்கு உபகாரஞ் செய்தவனுடைய முகத்தைக் கண்டவுடனே, அந்தத் துஷ்ட விலங்கினுடைய மனதில் கூட நன்றியறிதலான ஒரு எண்ணம் பிறந்துவிட்டது. எனக்கு அந்தப் பெரிய உபகாரஞ் செய்தவனை நான் தின்னலாமோ? பசியால் எனக்குச் சீவன் போனாலும் உபகாரத்துக்கு அபகாரஞ் செய்யலாமோ? என்ற எண்ணத்தினால், மனுஷ இறைச்சியிலே பிரியங் கொண்ட அந்தக் காட்டு மிருகம் அவனைத் தின்னாமல் விட்டுவிட்டது. மிருகம் இவ்வளவு நன்றியறிதல் காட்ட, நாம் நன்றி கெட்டுப் போகலாமோ? பிரியமானவர்களே, காட்டு மிருகம் தனக்கு ஒரு சிறு உதவி செய்த மனுஷனுக்குத் துரோகஞ் செய்ய மனம் இல்லாமற் போய்விட்டது. நமக்கு இணையில்லாமல் உபகாரங்களைச் செய்துகொண்டு வருகிறவருக்கு நாம் எப்படித் துரோகஞ் செய்யத் துணிவோம்? அவருடைய உபகாரங்

கள் என்கிறேன். அவர் இல்லாமல் நாம் இருக்கவே முடியாது. நம்முடைய புத்தி, மனது, கை, கால், ஆத்துமம், சரீரம் எல்லாம் அவர் தந்தது. அவர் தருகிற சோற்றைத் தின்கிறோம்; அவர் தருகிற தண்ணீரைக் குடிக்கிறோம்; அவருடைய பூமியிலே நிற்கிறோம்; அவருடைய காற்றைச் சுவாசிக்கிறோம். உலகத்திலே "அன்னம் இட்ட வீட்டுக்குக் கன்னம் இடலாமா?" என்கிறோம். அதாவது நமக்குச் சோறு தந்தவனுடைய வீட்டிலே களவு எடுக்கத் துணியலாமா? என்றது கருத்து. அப்படியானால், நமக்கு எல்லாந் தந்து, ஒவ்வொரு நிமிஷமும் நம்மைக் காப்பாற்றிக்கொண்டு வருகிறவருக்குத் துரோகம் பண்ணுகிறது எப்படி? "நக்கினார் நாவிழந்தார்" என்று இன்னும் ஒரு பழமொழி சொல்லுகிறோம். ஒருவன் தந்த தீனைத் தின்றுவிட்டால் இனி அவனுக்கு மாறாய் ஒன்றும் பேசப்படாது; இனி அவனுக்கு அவமானஞ் சொல்ல நமக்கு நாவில்லை என்கிறோம். அப்படியானால், நம்மை கையாக்கி காலாக்கி, ஆளாக்கி, உணவூட்டி உடுப்பாட்டி, ஓயாமல் நமக்கு எத்தனையோ தயவுகள் பண்ணிக்கொண்டு வருகிற நம்முடைய நேச பிதாவுக்கு அவமானம் பண்ண எப்படித் துணிவோம்!

III

பரம பிதா நம்மிற் கொண்டிருக்கிற அன்பானது நம்முடைய முழு நன்றியறிதலுக்கும் பாத்திரமான ஒரு அன்பு என்று கண்டுகொண்டோம். இனி, அது நம்முடைய முழு நம்பிக்கையையும் கேட்கிற ஒரு அன்பு என்ற துறையையும் உங்களுக்கு அத்தாட்சிப்படுத்திக் காட்ட வேணுமா? நம்மை இவ்வளவாக நேசித்து நம்மைத் தம்முடைய தோளிலே சுமக்கிறது போலக் காக்கிறவரிடத்தில் நம்பிக்கை வையாமல் வேறு ஆரிடத்தில் நம்பிக்கை வைப்போம்! உலகத்தில் உள்ள தாயோ, தகப்பனோ, சகோதரமோ, புருஷன் பெண்சாதியோ, எல்லாரிலும் நமக்கு அருமையான தேவ பிதா நம்மைக் காவாமற் போனால் இனி நம்மைக் காப்பவர் ஆர்? அவருடைய தேவ பராமரிப்பைப் பற்றி ஒரு சண நேரம் என்றாலும் நாம் சந்தேகம் கொள்ளலாமா? ஒரு சண நேரம் என்றாலும் நாம் தத்தளிக்கலாமா?

ஆனாலும், பிரியமானவர்களே, மனுச் சுபாவத்துக்கு உரிய அற்பத்தனம் எப்படிப்பட்டது என்றால்,—சின்னப் புத்தி எவ்வளவென்றால்,—யாதாம் ஒரு பாவச் சோதனை நெடு நாளாய் நம்மை அலைக்கழித்துக்கொண்டு வரும் போது, ஒரு துன்ப துரிதம் கேடுபாடு நம்மை வருத்திக்கொண்டு இருக்கும் போது, நாம் மனஞ்

சோர்ந்து திடன் அழிந்து போகிறோம். சருவேசுரன் நம்மை கைவிட்டுவிட்டார் என்றது போல, அவநம்பிக்கைக்கு உள்ளாகிறோம். நம்முடைய விசுவாசத்துக்கும் இவ்விதமான நடைக்கும் எவ்வளவு வித்தியாசம்! சருவேசுரன் சில வேளைகளில் நம்மைக் கைவிட்டவர் போலக் காணப்படுவதும் உண்டுதான். அதற்கு நியாயம் என்ன? துர்ச் சோதனைகளிலே, வருத்தந் துன்பங்களிலே நாம் உழன்று சில காலம் இடர்ப்பட வேணும் என்று அவர் சித்தமாய் இருக்கிறதற்குக் காரணம் என்ன? பாவச் சோதனைகள் வருவது பாவமென்று எண்ணிக்கொள்ளாதேயுங்கள். சோதனைக்கு இடங் கொடுப்பது பாவந்தான். ஆனால், சோதனையை வெல்லுவது எவ்வளவோ பெரிய புண்ணியம் அல்லவா? சோதனை ஒன்றும் வராவிட்டால், நாம் வெற்றி அடைந்து புண்ணியஞ் சம்பாதிப்பது எப்படி? இதினாலேதான் "குயவனுடைய மட்பாத்திரத்தைச் சூளையிலே தெரியும்; சுத்தமான மனுஷரைத் துன்ப சோதனைகளிலே தெரியும்" என்று வேத ஆகமமும் சொல்லுகிறது" (எக்கிளே. 27; 6). ஆனபடியால், சோதனைப்படும்போது நாம் துக்கிக்கிறதற்குப் பதிலாய் சந்தோஷப்பட வேண்டியது அல்லவோ நியாயம்! உள்ளபடி: "சோதனையைச் சகிக்கிறவன் பாக்கியவான். அவன் உத்தமன் என்று விளங்கின பின்பு, ஆண்டவர் தம்மை நேசிக்கிறவர்களுக்கு என்று ஆபத்தம் பண்ணியிருக்கிற சீவிய கிரீடத்தைப் பெறுவான்" என்றது வேத வாக்கியம் (யாகப். 1; 12). கிறீஸ்தவர்களே, எவ்வளவு பெலமான சோதனை வந்தாலும் நாம் கலங்கத் தக்கதல்ல. கலங்குகிறதற்கு மாறாக, தேவ பிதாவிலே தணியாத நம்பிக்கை வைத்து, அவரை ஓயாமல் மன்றாடிச் செயம் அடையக் கடவோம். அவர் நம்முடைய பெலனுக்கு மேற்பட்ட சோதனையை ஒருபோதும் நமக்கு வர இடங் கொடுக்கமாட்டார். அர்ச். சின்னப்பர் வேதவாக்கியமாக எழுதியிருக்கிறதுபோல: "சருவேசுரன் உண்மையுள்ளவர். உங்கள் பெலனுக்கு மேலாக நீங்கள் சோதனைப்பட அவர் ஒட்டார். சோதனையைத் தாங்கத்தக்கதாக, அந்தச் சோதனையோடே, அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்" (1 கொரிந். 10; 13). பிசாசின் தந்திரங்கள் மலைபோல எழுந்து வந்தாலும், துர் ஆசைகள் புகைப் படலம் போல உங்களை மொய்த்துக் கொண்டாலும், நீங்களாக பாவச் சமயத்திலே உட்படாமல் இருந்துகொண்டு, சற்றேனும் தத்தளியாமல் செபம் பண்ணுங்கள்; நம்பிக்கையைக் கைவிடாமல் போராடுங்கள். தப்பாமல் வெற்றிகொண்டு மகிழ்ச்சி அடைவீர்கள்.

சில பேருக்கு, பாவச் சோதனைகளினால் வருகிற கலக்கடியிலும் பார்க்க, நோய் நொடிகளினால், வருத்தந் துன்பங்களினால், பிழைப்புக் கெடுதி பொருள் நட்டங்களினால் அதிக மனச் சோர்வும் அங்கலாய்ப்பும் வருகிறது உண்டு. இப்படிப்பட்ட தொந்தரவுகள் நமக்கு மெய்யான நட்டத்தை வருவிக்கும் என்றால், தேவ பிதா ஒருபோதும் இவைகள் நமக்குச் சம்பவிக்க விடமாட்டார். ஆனால், நாம் அந்தந்த நேரத்திலே அறியாமல் இருக்கிற பெரிய நன்மைகள் நமக்குக் கிடைக்கத் தக்கதாகத் தான், இவைகள் நமக்கு அனுப்பப்படுகிறது. "தாம் நேசிக்கிறவர்களைச் சருவேசுரன் தண்டிக்கிறார்" (எபி. 12; 6) என்றது வேதவாக்கியம். இன்னமும், நீதிமொழி ஆகமத்திலே சொல்லியிருக்கிறதைக் கேளுங்கள்: "என் மகனே, நீ கர்த்தருடைய சிட்சையைப் புறக்கணியாதே. அவர் தண்டிக்கும்போது சோர்ந்துபோகாதே. தகப்பன், தான் நேசிக்கிற புத்திரனைச் சிட்சிக்கிறதுபோல, சருவேசுரனும், தாம் எவனிடத்தில் அன்பு கூருகிறாரோ அவனைத் தண்டிக்கிறார்" (நீதிமொழி. 3; 11–12). எந்தத் தகப்பனாவது தெருவாலே போகிற ஒரு பையனைப் பிடித்துத் தண்டிப்பானா? இல்லை. தன் மகனைத்தான் தண்டிப்பான். ஏன் இப்படி? மகனைத் திருத்துகிறதற்காகத்தான். ஏன் வேறு பையன்களைத் திருத்த நினையாமல் மகனைத் திருத்தப் பிரயாசப்படுகிறான்? மகனில் உள்ள நேசத்தினாலேதான். அதுபோல, தேவ பிதாவும் நேசத்தினாலே நம்மைத் திருத்துகிறார் ஒழிய; எவ்வித வெறுப்பினாலும் அல்ல. ஆனபடியால், துன்ப துரிதங்கள் நேரிடும்போது நாம் மனம் இடைந்து வருந்துவதற்குப் பதிலாக, மேலும் மேலும், அளவில்லாத இரக்கம் உள்ளவரிடத்திலே அதிகம் அதிகமாய் நம்பிக்கை கொள்ள வேண்டியது! ஆண்டவர் "என்னைக் கொன்று போட்டாலும் அவரிலே நம்பிக்கை வைப்பேன்" (யோபு 13; 15) என்று யோபு மகாத்துமா தமது மகா கண்ணராவியான துயரங்களின் நடுவே சொன்னதுபோல, நாமும் சொல்ல வேண்டியது. அதுமட்டோ, நமக்கு இனிமேல் இல்லையென்ற வருத்தங்கள் கேடுபாடுகள் வந்திருக்கும் வேளைகளிலே: இப்போதுதான் சருவேசுரன் என்னை அதிகமாக நேசிக்கிறார் என்று அறிகிறேன். இந்தத் துயரத்தைப் பட என்னைப் பாத்திரவான் ஆக்கினவருக்குத் தோத்திரம்! என்று சொல்லி ஆனந்தம் கொள்ளவும் வேண்டியது. இதைப் பற்றித்தான் அர்ச். யாகப்பர் வேத வாக்கியமாய் எழுதுகிறார்: "சகோதரரே, நீங்கள் பல விதமான சோதனைகளில் அகப்படும் போது, உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்கும் என்று

அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள்" என்கிறார் (யாகப். 1;2).

சருவேசுரனுடைய மட்டில்லாத தயாளம் பொருந்திய அன்பையும் தேவ பராமரிப்பையும் நினையாமல், சில நிர்ப்பாக்கிய மனுஷர், துன்ப துரித வேளைகளிலே அவநம்பிக்கைப்பட்டு, அஞ்ஞானிகளிடத்தில் சாத்திரங் கேட்கவும், பிசாசுக்கு உரிய வேறு ஆசார உபசாரங்களைச் செய்யவும் தலைப்படுகிறார்களே. ஐயோ! இவர்களைக் குறித்து என்ன சொல்லுவோம்! இவர்கள் தங்களைப் படைத்துக் காப்பாற்றிக்கொண்டு வருகிற தேவ மகத்துவத்துக்கு எவ்வளவு பாரதூரமான அவமானம் பண்ணுகிறார்கள்! தங்களுக்குத்தானே எவ்வளவு பயங்கரமான தேவ தண்டனையைத் தேடிக்கொள்ளுகிறார்கள்! இதற்கு அத்தாட்சியாகப் பழைய ஏற்பாட்டிலே ஒரு சரித்திரம் வரைந்து காட்டியிருக்கிறது. இசிரவேல் சனங்களுக்கு இராசாவாகச் சமாரியா தேசத்தில் இருந்து ஆண்டுகொண்டு வந்த ஒக்கோசியாஸ் என்பவன், தன்னுடைய அரண்மனையின் மேல்மாடத்தால் சாளரத்தின் வழியாய்த் தவறி விழுந்து வியாதிப்பட்டுப் படுக்கையாய்க் கிடந்து வருந்தினபோது: இந்த வியாதி மாறிப் பிழைப்பேனோ பிழைக்கமாட்டேனோ என்று சாத்திரங் கேட்டு வாருங்கள் என்று, தன்னுடைய சேவகர்களை, அக்கரோன் எனுமிடத்திலேயுள்ள பெயேல்செபுப் என்னும் தெய்வத்தின் தலத்துக்கு அனுப்பினான். அவ்வேளை சருவேசுரனுடைய சம்மனசானவர் எலியாசு தீர்க்கதரிசிக்குக் காணப்பட்டு: நீ எழுந்து சமாரியா இராசாவின் ஆட்களை எதிர்கொண்டு போய்: இசிரவேலிலே சருவேசுரன் இல்லையென்றோ நீங்கள் அக்கரோனின் தெய்வமாகிய பெயேல்செபுப்பிடம் சாத்திரங் கேட்கப் போகிறீர்கள்? இதின் நிமித்தம், நீ ஏறின கட்டிலிலிருந்து இறங்காமல் சாகவே சாவாய் என்று உங்கள் இராசாவுக்குப் போய் அறிவியுங்கள் என்று சொல்லக் கற்பித்தார். அப்படியே எலியாசு தீர்க்கதரிசி சொல்லி இராசாவுடைய ஏவலாட்களைத் திருப்பி அனுப்பிவிட, அந்த வாக்கின்படியே இராசா அவலமாய்ச் செத்தான் (4. இராசாக். 1 ம் அதி). சாத்திரம் கேட்கிறது முதலான அஞ்ஞான ஆசாரங்களைச் செய்கிறவர்கள் தேவ கோபத்தையும் தப்பாத பயங்கர தண்டனையையும் தேடிக் கொள்ளுகிறதோடு பேய்ப்பட்டமும் கட்டிக்கொள்ளுகிறார்கள். அது எப்படியென்றால், மெய்மெய்யாகப் பிசாசைக் கொண்டு ஒரு காரியம் செய்விக்கிறதானால், அது மனுஷருக்கு ஒருபோதும் நன்மையான காரியமாய் இராது என்றது எல்லாருக்கும் விளங்கும். தனக்கு அடிமைச் சீட்டு எழுதினாற்

போலத் தன்னைச் சேவிக்கிறவர்களுக்கு மாத்திரம் அது ஏதாவது மாயமான உபகாரம் செய்யும். அவ்விதமாய் உபகாரம் பெறுகிறவர்கள், பிசாசின் அடிமைத் தனத்திலே சிக்குண்டு, நடை நடையே நரகக் கிடங்கில் விழுகிறதே முடிவாகும். மற்றப்படி, எடுத்ததற்கு எல்லாம் பிசாசு உதவி செய்யும் உதவி செய்யும் என்று எண்ணுகிறது பெரிய பிழை. பேய் அவ்வளவு ஒரு பேயன் அல்ல. பேயென்றாலும், அது மனுஷரிலும் பார்க்க எவ்வளவோ கூடின புத்தி உள்ளது. சரியாய் ஒருவனைத் தனது ஆணைக்குக் கீழ்ப்படுத்திக்கொள்ளாமல், அவனுக்கு அது ஒரு நயமுஞ் செய்யாது. பின்னை, சாத்திரங் கேட்கிறோம், பேய்க்காரியம் செய்விக்கிறோம், தடை வெட்டுவிக்கிறோம், அழிகட்டுப் பண்ணுவிக்கிறோம் என்று போகிறவர்களுக்கு நடக்கிறது என்ன? அவர்களைச் சாத்திரஞ் சொல்லுகிறவர்களும், வித்தைக்காரரும், சூத்திரமாய் ஏமாற்றிப் போடுகிறார்கள் என்றதுதான் உண்மை. சாத்திரஞ் சொல்லுகிறோம் என்றவர்களுக்கு வருங் காரியமுந் தெரியாது போன காரியமுந் தெரியாது; தங்களிடம் போகிற வெள்ளறிவாளர்களை எத்தி ஏமாற்றி நல்லாய்ப் பொருள் பறிக்கத்தான் தெரியும். ஒரு சாத்திரி "பசியாமல் இருக்க மருந்து தருகிறேன், தாயே, எள்ளுப் போலே பழந் தண்ணீர் தா" என்றானும். தன்னுடைய பசியைத் தீர்த்துக்கொள்ள முடியாதவன், பிறருக்குப் பசியாமல் இருக்க மருந்து கொடுக்கிறது எப்படி? காணாமற் போனதைக் காட்டித் தருகிறோம் காசு தா, பின் வருங் காரியங்களைச் சொல்லித் தருகிறோம் காசு தா என்கிறவர்களும் இப்படித்தான். அவர்களுக்கு அவ்வளவு கெட்டித்தனம் இருந்தால், உங்களிடம் காசு கேட்டு அலைய மாட்டார்கள். மறைந்திருக்கிற பொன்னையோ வெள்ளியையோ திரவியங்களையோ கண்டு எடுத்துக்கொண்டு, பின் தங்களுக்கு வரும் அபாயங்களை எல்லாம் சூழ்ச்சமாய் விலக்கிக்கொண்டு, கோட்டையுங் கட்டிக் குபேரராய் வாழ்வார்கள்! அழிகட்டுப் பண்ணுகிறோம், தடை வெட்டுகிறோம் என்று சொல்லுகிற எத்தர்களும் நீங்கள் பாடுபட்டுத் தேடின பொருளைப் பறிக்கிறதிலேதான் சமர்த்தர். யாழ்ப்பாணத்திலே சிலகாலம் பேய் வித்தைக்காரன் என்று சொல்லி, பேரும் புள்ளியுமாய்த் திரிந்த கோண்டாவில் நன்னியன் செய்த விகடங்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். அவன், ஒரு இரவு, ஒரு வீட்டில் சூனியம் எடுக்கிறேன் என்று சொல்லி மடைக்கும் தனக்கும் கன காசு கொளுவிக் கொண்டு வந்திருந்தான். வீட்டுக்குள் போகுமுன் படலைக்கு வெளியிலே ஒரு சிறு கிடங்கு தோண்டி, அதிலே, தான் கொண்டுவந்த ஒரு தகட்டை வைத்து

மூடி விட்டு உள்ளுக்குப் போனான். ஒருவரும் தான் செய்ததைக் காணவில்லை என்றிருந்தான். ஆனால், அணடையிலே நின்ற ஒரு வண்டிலுக்குள்ளே படுத்திருந்த ஒரு விவேகி, இவன் ஏதோ புதைக்கிறதைக் கண்டு விட்டு, இவன் வீட்டுக்குள் போனவுடனே இறங்கி வந்து, புதைத்த தகட்டைக் கிளறி எடுத்துக் கொண்டுபோய் வண்டிலிலே படுத்துக் கொண்டான். சற்று நேரத்துக்குள்ளே வீட்டிலே பெரிய ஆரவாரம். நன்னியன் மடை பரவி, கர்ப்பூரங் கொளுத்தி, மந்திரங்கள் முணுமுணுத்து, பிறகு, ஊகுகுகு ஊகுகுகு என்று சன்னதங்கொண்டு கர்ப்பூர விளக்குகளோடே, வீட்டார் புடைசூழ, ஆடிக்கொண்டு படலையைத் திறந்து வெளியே வந்து இதிலே வெட்டடா, இதிலே வெட்டடா என்று சொல்ல, மண் வெட்டி கொண்டுவந்தவன் பழைய கிடங்கை வெட்டிவிட்டான். நன்னியன் இருந்து, தடவு தடவென்று தடவிப் பார்த்தும் தகடு அகப்படவில்லை. அவன் வேர்த்துக் களைத்து மேலும் மண்ணைக் கிளறிக்கொண்டிருக்க, வண்டிலிலே படுத்திருந்த விவேகி இறங்கி ஓடிவந்து, அவன் கன்னத்தில் நல்ல ஒரு அறை கொடுத்து: இந்தா, நீ புதைத்து வைத்துப் போன தகடு இதுதான் என்றான். சூனியம் எடுப்பிக்க நன்னியனைக் கூப்பிட்டிருந்தவர்கள் எல்லாரும் வெட்கி விடிந்து, தாங்களும் அவனுக்கு நல்ல பூசை போட்டுத் துரத்திவிட்டார்கள். இப்படித்தான் மூடச் சனங்கள் செய்விக்கிற பேய்க் காரியமெல்லாம்! "புளித்த மாங்காயும் தின்று இழித்தவாய்ப் பட்டமுங் கட்டிக்கொள்ளுகிறது" என்ற பழமொழி இவர்களுக்குத்தான் நல்லாய்ப் பொருந்தும். இவர்கள் கடவுளுக்கு ஏராத பாவத் துரோக நினைவையும் மனதில் ஏற்று, கைப்பொருளையும் பறிகொடுத்து, பச்சைப் பேயர் என்ற பட்டத்தையும் சூடிக் கொள்ளுகிறார்கள்.

பிரியமான கிறீஸ்தவர்களே, பாரப் பழியான இந்த அவநம்பிக்கைக்கு நீங்கள் ஒருபோதும் இடங் கொடுக்கவேண்டாம். உங்களுடைய பரம பிதா உங்களிலே அளவில்லாத அன்பும் ஆதரவும், தாயிலும் மேலான அனந்த இரக்கமும் கரிசனையும் உள்ளவர். உங்களைப் படைத்து உங்களுக்கு வேண்டிய சகலத்தையும் நிமிஷந் தோறும் தந்து, கண்ணை இமை காக்கிறது போல உங்களை ஓயாமற் காத்துக்கொண்டு வருகிறதும் அல்லாமல், உங்களுக்காகத் தம்முடைய ஏக பேறான திருக்குமாரனையும் கையளித்தவர். இப்படிப்பட்ட அன்புள்ள பிதாவை முழு மனதோடும் நேசித்து, அவருக்கு முழு மனதோடும் நன்றிகாட்டி, அவரிலே முழு மனதோடும் நம்பிக்கை வையுங்கள். விசேஷமாய் தம்முடைய திருக்குமா

ரனாகிய யேசுநாத சுவாமியின் மூலமாய், கிறீஸ்தவர்களாகிய உங்களுக்கு, அவர் எக்காலத்திலும் இல்லாத அருமையான பிதா ஆகிவிட்டார். அர்ச். சின்னப்பர் சொல்லியிருக்கிற பிரகாரம் நீங்கள் யேசுக்கிறீஸ்துநாதர் வழியாய் பிதாவுடைய சுவீகாரப் பிள்ளைகளாகி, அவரை அப்பு, பிதாவே, என்று கூப்பிடத் தக்கவர்களாய் இருக்கிறீர்கள் (ரோமர் 8; 15). இது எவ்வளவு மனோவாக்குக்கு எட்டாத சிலாக்கியம்! இதைத் தானே வேதவாக்கியமானது பாராட்டி: "நாம் சருவேசுரனுடைய பிள்ளைகள் என்று பேர்ப்படவும், பிள்ளைகளாய் இருக்கவும் தந்த தேவ தயவு எவ்வளவு என்று பாருங்கள்" என்று பிரமித்துச் சொல்லுகிறது (1-ம் அருளப். 3; 1)! ஆனபடியால் எந்தெந்த இலம்பையிலும், எந்தெந்தக் கேடுபாட்டிலும் அவரை நம்பிக்கையோடு மன்றாடி, அவருடைய நன்றியறிதலுள்ள நேச பிள்ளைகளாய் நடந்துகொண்டு வாருங்கள். கருணையுள்ள பிதா உங்களுக்கு மேலும் மேலும் ஆசீர்வாதங்களைக் கூட்டி, ஒரு நாள், உங்களுக்குத் தம்முடைய நித்திய ஆனந்த மோட்சமுக தரிசனத்தையுந் தந்தருளுவார்,—ஆமென்.

ஆறும் நாள்

Instruction : On Sins of the Tongue.

காலைப் போதனை :

வாய்ப் பாவ வகை

தாவீது ராசா சருவேசுரனைப் பார்த்து: " ஆண்டவரே என் வாய்க்குக் காவல் வையும்; என் உதடுகளின் வாசலைக் காத்துக்கொள்ளும் " என்று மன்றாடினார் (சங். 140; 3). ஏனென்றால், நம்முடைய நாளாந்த பாவங்களில் அதிகப்பற்றானவைகள் வாயினால், அதாவது, நாக்கினால் விளைகிறது. நாக்கானது சருவேசுரன் நமக்குத் தந்தருளிய ஒரு அருமையான அவயவம். அதைக்கொண்டு நம்முடைய எண்ணங்களை அதிக தெளிவாக வெளியிடுகிறோம்; சருவேசுரனைப் பிரசித்தமாய்ப் புகழ்ந்து போற்றுகிறோம்; நம்முடைய அயலாருக்கு நன்மை செய்கிறோம். இந்த அவயவத்தின் மூலமாய் நம்முடைய தேவைகளைப் பிறருக்கு அறிவிக்கலாம். பிறர் நம்மேல் இரங்கத்தக்க உருக்கமான வார்த்தைகளைச் சொல்லலாம். பிறருக்கு நமது அநுதாபத்தைக் காட்டி, நல்ல புத்தி ஊட்டி, ஆறுதல் கூறி, சந்தோஷிப்பித்து எவ்வளவோ உதவி செய்யலாம். நாக்குத்தான் நமது அயலாரோடு நம்மை எல்லாத்திலும் அதிகமாய் நெருங்கிவரப் பண்ணுகிற ஒரு கருவி. நம்மையும் அவர்களையும் ஒன்றுபடுத்துகிறதற்கு அது வாய்ப்பான ஒரு வழியைத் திறந்துவிடுகிறது. ஆனால் நம் சரீரத்தின் மறு அவயவங்களைத் தீங்குக்கு வழியாகப் பாவிக்கிறது போல, இதையும் பாவித்துப்போடுகிறோம். அர்ச். யாகப்பர் வசனித்திருக்கிற பிரகாரம்: " நாவானது சிறிய அவயவமாயிருந்தும் பெருமையானவைகளைப் பேசும். சிறிய நெருப்பு எவ்வளவு பெரிய காட்டைக் கொளுத்திப் போடுகிறது. நாவினாலே நாம் பிதாவானவரைத் துதிக்கிறோம். அவருடைய சாயலாய் உண்டாக்கப்பட்ட மனுஷரை அதினாலேயே சபிக்கிறோம். ஒரே வாயிலிருந்துதான் தோத்திரமும் சாபமும் புறப்படுகிறது " (யாகப். 3; 5-10). ஆனபடியால் வாயினால் பாவம் நேரிடாதபடி நாம் கவனமாய் இருக்கவேணும். பிரியமான கிறீஸ்தவர்களே, இன்று காலை வாய்ப் பாவங்களில் பிரதானமான சிலதை எடுத்துச் சொல்லி, அவைகளை விலக்குகிறதற்கு ஏற்ற உபாயத்தையும் சுருக்கமாய்க் காட்ட விரும்புகிறேன்.

1. வாய்ப் பாவங்களை மூன்று பிரிவாக வகுத்துச் சொல்லலாம். முதலாவது உண்மைக்கு விரோதமான வார்த்தைகள். இரண்டாவது சருவேசுரனுடைய பரிசுத்தத்துக்கும் நம்முடைய பரிசுத்தத்துக்கும் மாறான பேச்சுகள். மூன்றாவது பிறர் சிநேகத்துக்குப் பொருந்தாத கதை கண்ணிகள்.

சருவேசுரன், பேசும் வல்லமையை நமக்குத் தந்தது என்னத்திற்காகவென்றால் நம்முடைய மனதில் உள்ள எண்ணங்களைச் சரியாக வெளிப்படுத்துவதற்காகத் தான். நமது உள் மனதின் நிலைபரத்தை, வெளியே, படத்தைப்போல, சித்திரித்துக் காட்டுவதற்கு நாக்கானது நமக்கு ஒரு நல்ல தூவல்போல அமைந்திருக்கிறது. உள்ளதை உள்ளபடி காட்டுகிறதற்சென்று இந்தக் கருவி நமக்குத் தரப்பட்டிருக்கிறதே அல்லாமல், மனமொன்று வாக்கொன்றாய்ப் பேசுவதற்கு அல்ல; பிறரை அநியாயமாய் அனுப்பி மோசஞ் செய்வதற்கு அல்ல. சருவேசுரன் நன்மைக்கு என்று தந்த நாக்கைத் தின்மைக்கு வழி ஆக்குவோமானால், அதாவது உள்ளதைச் சொல்லத் தந்த நாக்கால் பொய்யைப் பேசுவோமானால், நாக்கைத் தந்தவருக்கு நாம் துரோகஞ் செய்கிறோம். இதினாலேதான் பொய்யானது தன் இயல்பின்படியே எப்போதும் பாவமாம் என்று வேத சாத்திரிகள் சொல்லுவார்கள். சிறு காரியங்களிற் சொல்லுகிற பொய், பிறருக்குச் சிறு நட்டத்தை மாத்திரம் விளைவிக்கிற பொய்—அற்ப பாவம் மாத்திரமாகும் என்றது உண்மைதான். அதுமட்டுமல்ல, பகிடிக்கு விளையாட்டுக்குச் சொல்லுகிற பொய்களிலே கொஞ்சமாவது பாவம் இல்லாமல் இருப்பதும் உண்டு. ஆனால், காரியம் கனமானதாய் இருக்கும்போது, விசேஷமாய்ப் பிறருக்குப் பெரும் நட்டம் செய்யும்போது, பொய் என்ற பாவம் கனமான துரோகமாம் என்றதிற் சந்தேகம் இல்லை. இதினாலேதான் " பொய் சொல்லுகிற வாய் ஆத்துமத்தைக் கொல்லுகிறது " என்று ஞானாகமத்தில் எழுதியிருக்கிறது (1; 11). இப்படியே " பொய் பேசுகிற யாவரையும் அழிப்பீர் " என்று சங்கீத ஆகமத்திலேயும்

வசனித்திருக்கிறது (5-ம் சங். 7). இதினாலேதான், கனமான காரியத்திலே பொய் சொன்ன அனானியாவும் சப்பீராள் என்கிற புருஷன் பெண்சாதி இருவரும் திடுக்கிடத்தக்க தண்டனையை அடைந்தார்கள் என்று அப்போஸ்தலர் நடபடி ஆகமத்தில் வாசிக்கிறோம். சம்பேதுருவானவர் எருசலேமிலிருந்து திருச்சபையை ஆண்டுகொண்டு வந்த நாட்களிலே, சில குடும்பங்கள், பூலோக பண்டங்களிலுள்ள பற்றுதலை வெறுத்து, தங்கள் நிலம் பொலங்களை விற்று வந்த பணத்தை திருச்சபையின் பொது நிதியிலே சேர்த்துவிட்டு, தங்களுக்கு அவசியமான ஊண் உடைகளை மாத்திரம் திருச்சபையிலிருந்து பெற்றுக்கொண்டு வருவார்கள். அனானியா என்கிறவன், தானும் இப்படியே காணி முழுவதையும் விற்று திருச்சபைப் பொதுப் பணத்திற் சேர்க்கிறது போலத் தன் பெண்சாதியோடு கூடப் பாசாங்கு பண்ணிக்கொண்டு, விற்ற தொகையின் ஒரு பங்கை மாத்திரம் சம்பேதுருவின் பாதத்திலே கொண்டு வந்து வைத்து: இவ்வளவுக்குந்தான் காணியை விற்றோம் என்றான். சம்பேதுருவானவர் அவனை நோக்கி: நீ மனுஷனுக்கு அல்ல சருவேசுரனுக்கே பொய் சொன்னாய் என்று வசனிக்க, அவன் உடனே செத்து விழுந்தான். அனானியாவுக்கு நடந்ததை அறியாமலிருந்த அவனுடைய மனைவி, ஏறக்குறைய மூன்று மணித்தியாலத்துக்குப் பின் வர, சம்பேதுருவானவர்: சப்பீராள், நிலத்தை இவ்வளவுக்குத்தான் விற்றீர்களா? என்று கேட்டார். அவள்: ஆம் சுவாமி இவ்வளவுக்குத்தான் விற்றோம் என்று படு பொய் சொன்னாள். பேதுருவானவர் அவளை நோக்கி: நீங்கள் இருவரும் ஒத்துச் சருவேசுரனை ஏமாற்றப் பார்த்தீர்களே. உன் புருஷனை அடக்கம் பண்ணப்போன வாலிபர்கள் இதோ திரும்பி வந்து வாசலில் சேர்ந்துவிட்டார்கள். மறுபடி உன்னையுங் கொண்டு போய் அடக்கஞ் செய்வார்கள் என்றவுடனே, அவளும் செத்து விழுந்தாள் (அப். நட. 5-ம் அதி). கனங்கொண்ட காரியத்திலே மனம் பொருந்திச் சொல்லுகிற பொய்யானது சருவேசுரனுக்கு எவ்வளவு துரோகம் என்றதை இந்தப் பயங்கர சம்பவம் காட்டுகிறது அல்லவா? சத்திய சுரூபியாகிய அவர் அசத்தியமாகிய பொய்யை எப்போதும் பகைக்கிறார். "பொய் சொன்ன வாய்க்குப் பொரியுங் கிடையாது" என்ற உலக வாக்கின்படி, பொய்யினால் இவ்வுலகத்திலும் நட்டம் மறு உலகத்திலும் நட்டம். ஒருவனைப் பார்த்து புரளிக்காரா என்று சொல்லுவதைப் போல பெரிய அவமானம் இல்லை. புரளிக்காரன் மனுஷருக்கு முன் அவமானப்படுகிறது எப்படியோ அப்படியே சருவேசுரன் முன்னும் துரோகியாய்ப் போகிறான்.

இனி, சருவேசுரனுடைய பரிசுத்தத்துக்கும் நம்முடைய பரிசுத்தத்துக்கும் மாறான பேச்சுக்களை ஆராய்வோம். சருவேசுரன் இணையில்லாத பரிசுத்தமானவர். "அவருடைய நாமம் பரிசுத்தமும் பயங்கரமுமானது" என்று வேதாகமம் சொல்லும் (சங். 110; 9). இதினாலேதான், பழைய ஏற்பாட்டிலே இசிறவேல் சனங்கள் ஒரு நாளும் தேவ நாமத்தை வாயினாற் சொல்லார்கள். இதினாலேதான், பத்தியுள்ள கிறீஸ்தவர்கள் தேவ நாமத்தை உச்சரிக்கும்போது தலையில் போட்ட பாகையை எடுத்துவிட்டும், சிரம் வணங்கிக்கொண்டும் உச்சரிப்பார்கள். ஏன்? பெரியோருடைய பெயரை அவர்கள் முன்னிலையிலே சொல்லாத ஒரு வழக்கம் நமக்குள்ளே இன்றைக்கும் உண்டு அல்லவா? அதுமட்டோ! நம்முடைய தமிழ்ச் சாதிப் பிள்ளைகள், பிதாவின் பெயரை மாதாவின் பெயரை எவ்விடத்திலாகிலும் எடுத்து வழங்கார்கள் அல்லவா? பெண்களிடம் புருஷன் பெயரைக் கேட்டால் அதை லேசிலே வாய்திறந்து சொல்லார்கள் அல்லவா? புருஷனைப் பற்றிப் பேசும்போது, பிள்ளையுடைய தகப்பன், வீட்டுக்காரன், காவலாளி என்ற இது முதலான வார்த்தைகளாலே மறைத்துத்தான் சொல்லுவார்கள் அல்லவா? இப்படியிருக்கும்போது, நம்முடைய தேவபிதாவும் அனந்த கருணையுள்ள காவலாளியுமான சருவேசுரனுடைய நாமத்தை நாம் சொல்லுவதானால் எவ்வளவு பயபத்தியோடே சொல்லவேணும்! பரலோகமும் பூலோகமும் பாதாளமும் முழந்தாளிட்டுப் பணிகிற நாமமாகிய (பிலிப். 2; 10) யேசு என்கிற பரிசுத்த அட்சரங்களை நாம் எவ்வளவு ஆசாரத்தோடே வழங்கவேணும்! இப்படியிருக்க, சருவ அதி கர்த்தராகிய உன்னத கடவுளுடைய திருநாமத்தை நீங்கள் விளையாட்டுக்கு எடுத்துச் சொன்னால் எவ்வளவு தேவநிந்தையாகும்! ஆனால், இதிலும் பார்க்க அதிக குருட்டுத்தனமாய், உங்கள் துன்பதுரிதங்கள் கேடுபாடுகளிலே, முன்பின் யோசியாமல் அந்த முக்காலும் பரிசுத்த நாமத்தை இழுத்துத் திட்டினால், அல்லது உங்கள் கல் நெஞ்சுத்தனமான பழிவாங்குதல்களுக்கு, சாபத்தீடுகளுக்கு, பொய் ஆணைகளுக்கு அந்தப் பரிசுத்த நாமத்தைச் சாட்சிக்குக் கூப்பிட்டால் இது எவ்வளவு பாரதூரமான அக்கிரமம்! சருவேசுரனுடைய திருநாமத்துக்கு ஆராதனை உரிமையானது. அவருடைய சுத்தவாளர், திருத்தொண்டர்களுடைய நாமத்துக்கும் அவரவருக்கு ஏற்ற சங்கை உரிமையானது. "சருவேசுரா தேவரீருடைய சிநேகிதர்கள் மிகவும் மகிமைக்கு உரியவர்கள் ஆனார்கள்" என்றது வேதவாக்கியம் (சங். 138; 17). ஆகையால், கிறீஸ்தவர்களே, மோட்ச பரம ஆனந்தத்திலே வாழுகிற அர்ச்சிய சிட்

டர்களே, யேசுக்கிறீஸ்து நாதரின் பதிலாளிகளாய் உங்கள் நடுவில் வந்திருக்கிற மேற்றிராணிமார் குருமாரை, உலகத்தை முற்றத் துறந்து சருவேசுரனுக்குத் தங்களைக் கையளித்து அவருடைய தொண்டர்களாய்ச் சீவிக்கிற சந்நியாசிகளை, கன்னியாஸ்திரிகளை— நீங்கள் உங்கள் பேச்சு வார்த்தைகளிலே, ஒன்றாய்ச் சேர்ந்திருந்து கதைக்கிற கூட்டங்களிலே ஆவலாதி சொல்லி, அவதூறு பேசி, அவர்களுடைய சங்கையை, நல்ல பெயரைத் தும்பு தும்பாய்க் கிழித்துவிடும்போது எவ்வளவு பாரப்பழிக்கு ஆளாகிறீர்கள் என்றதை நீங்கள் யோசிக்கிறதில்லை. தேவ திருத்தொண்டர்களை, விசேஷமாய், அவர் தமக்குப் பதிலாக வைத்திருக்கிற ஞான அதிகாரிகளைத் தூற்றுவது சருவேசுரனுக்கு எவ்வளவு அருவருப்பான பாவம் என்றதை மோசேசு முனிவருடைய சகோதரியாகிய மிரியாம் என்றவளுக்குக் கிடைத்த பயங்கரமான தண்டனையைக் கொண்டு அறிகிறோம். சருவேசுரன், இசிறவேல் சனத்தை தம்முடைய பேரால் விசாரிக்கிற தலைவனாக மோசேசுவை நியமித்திருக்க, மிரியாம், ஆரோனோடு கூடிக்கொண்டு, அவருக்கு அவசங்கையாகப் பேசி: ஆண்டவர் மோசேசுவைத்தான் ஒரு முக்கந்தராக வைத்துவிட்டாரோ என்றாள். உடனே தேவ கோப அக்கினி அவள்மேல் விழுந்தது. அவளுடைய தேகமெல்லாம் உறைந்த பனிபோல வெளுத்துப் பொல்லாத குஷ்டரோகம் பற்றிக்கொண்டது. அவள் " தாயின் கர்ப்பத்தில் பாதி மாமிசம் அழுகிச் செத்து விழுந்த பிள்ளையைப் போல " வந்துவிட்டாள் (எண்ணா. 12-ம் அதி). மோசேசு முனிவர் தம்முடைய மூடக்குணமுள்ள சகோதரிக்காகச் செய்த தாழ்மையான மன்றாட்டத்துக்குச் சருவேசுரன் இரங்கிச் சில நாட்களுக்குள்ளே அவளுக்கு ஆரோக்கியத்தை அருளச் சித்தமாகா விட்டால், மிரியாம் அப்படியே அழுகிச் செத்திருப்பாள். பரம கர்த்தருக்கு இவ்வளவு வெறுப்பான நாக்குவளைப்பைப் பற்றி நாம் எவ்வளவு சாக்கிரதையாய் இருக்கவேணும்!

கிறீஸ்தவர்களே, நீங்களும் பரிசுத்தராய் சீவிக்கவேண்டியவர்கள். புதிய ஏற்பாட்டிலே, அப்போஸ்தலர்கள் விசுவாசிகளுக்கு எழுதின நிருபங்களிலே, அந்த விசுவாசிகளை எப்படிச் சொல்லிக் கூப்பிடுகிறார்களென்று வாசித்திருப்பீர்கள். பரிசுத்தவான்கள் என்றும், பரிசுத்தர்களாயிருக்க அழைக்கப்பட்டவர்கள் என்றும் தான் சொல்லிக் கூப்பிடுகிறார்கள். ஆண்டவரும் நம் எல்லாரையும் பார்த்து: " உங்கள் பரம பிதா பரிசுத்தராயிருக்கிறது போல நீங்களும் பரிசுத்தராயிருங்கள் " என்று திருவுளம்பற்றினார் (மத். 5;

48). அர்ச். சின்னப்பர் வசனித்தபிரகாரம் " நீங்கள் சருவேசுரனுடைய ஆலயங்கள் (1 கொரிந். 3; 16). " உங்கள் சரீரங்கள் கிறீஸ்துநாதருடைய அவயவங்கள் " (1 கொரிந். 6; 15). உள்ளபடியே எத்தனையோ முறை அவரைச் சற்பிரசாதத்தில் வாங்கிக் கொள்ளுகிறீர்களே. சற்பிரசாத நாதர் அடிக்கடி வந்து வசிக்கிற வீடு கோயில் அல்லாமல் வேறென்ன ? அவரோடு நீங்கள் ஐக்கியமாய், ஒன்றாய், அவருடைய அவயவங்களாய்—அவருடைய கை கால் போல—இருக்க வேண்டியவர்கள். ஆனபடியால் பரிசுத்தராகிய உங்கள் வாயால்—ஆண்டவருடைய வாயென்று சொல்லப்பட வேண்டிய அந்த அவயவத்தினால்—அசுத்த தூர்க்கந்தமான வார்த்தைகள் புறப்படலாமோ ? இதினாலேதானே " பரிசுத்தவான்களுக்கு ஏற்றபடி உங்கள் மத்தியிலே மோக துராசையும், அசுத்த நடையும் என்ற பெயர் முதலாய் சொல்லப்படாதிருக்கவேணும் " என்று வேதாகமம் சொல்லுகிறது (எபே. 5; 3). நம்முடைய பரிசுத்ததனத்தின் நிமித்தம் மாத்திரம் அல்ல, பிறருடைய பரிசுத்ததனத்தின் நிமித்தமும் நாம் கெட்ட பேச்சுகளைத் தவிர்க்கவேணும். ஏனென்பீர்களா ? ஏன் ! நம்முடைய அயலாரிடத்திலும் சருவேசுரன் வாசம்பண்ணுகிறாரே; அவர்களும் பரிசுத்தராயிருக்க அழைக்கப்பட்டிருக்கிறார்களே. இதை நாம் யோசியாமல் அவர்களுடைய காது சலித்துப் புண்ணாகப்பண்ணுகிற, அவர்களுடைய ஆத்துமத்தை அசுசிப்படுத்துகிற—மானங் கெட்ட அழுகற் பேச்சுக்களைப் பேசுவோமானால், நமக்குள்ளேயும் அவர்களுக்குள்ளேயும் வாசம் பண்ணியருளுகிற இஸ்பிரீத்துசாந்து சருவேசுரனுக்கு எவ்வளவு அவமானமாகும் ! எவ்வளவு விதனமாகும் ! விசேஷமாய் பெண் புரசு நிற்கிறவிடத்திலே, இளங் கன்னியர்கள், சிறுவர்கள் கேட்டுக்கொண்டிருக்கத் தக்கதாக, நாம் இப்படிப்பட்ட புழுப் புழுவாய் நெளிந்து கொட்டுண்ணுகிற தூஷணங்களைக் கக்கினால், நமக்குத் தானே வருகிற மானக் கேட்டைப் பார்க்கவேண்டாமோ? அவர்களுக்குக் கொடுக்கிற பொல்லாத் துன்மாதிரியை நினைக்கவேண்டாமோ ? சின்னஞ்சிறுவர்கள், களங்கமற்ற கன்னியர்கள்—அறியாத பாவத்தை அறிவிக்கிற பெருங் கேடு ஒரு புறம் ; இல்லாத ஊத்தை நினைவுகளை மனதிலே கிளப்பிவிடுகிற படுபாதகம் ஒரு புறம்,—இதினால் விளைகிற தின்மைகளுக்கு ஒரு அளவு பிரமாணம் உண்டோ ? கேட்டுக்கொண்டு நிற்கிறவர்கள் பிறசமயத்தவர்களானால், இப்போது சொல்லிய துன்மாதிரிகைகளோடு நம்முடைய சத்திய வேதத்துக்கு எவ்வளவு மதிப்புக்கேடு ! நம்மை மீட்டவருக்கு, நாம் தொழுகிற மெய்யான கடவுளுக்கு எவ்வளவு அவசங்கை !

நம்முடைய பரிசுத்தத்தனத்துக்கும் பிறருடைய பரிசுத்தத்தனத்துக்கும் மாறான வார்த்தைகளைக் கண்டோம். அப்பால், பிறர் சிநேகத்துக்குப் பொருந்தாத பேச்சுக்களையும் சுருக்கமாய் ஆராய்வோம். சருவேசுரன், நாம் தமது பேரில் கொண்ட நேசத்தைக் காண்பித்து, அதினால் மோட்ச சம்பாவனையை அடைந்துகொள்ளுகிறதற்காக நம்மைப் பூலோகத்திலே படைத்துவிட்டிருக்கிறார். இது ஒரு சோதனைத் தலம். நம்மைப் படைத்துவைத்து, நமக்கு அளவில்லாத மகா பெரிய சம்பாவனையாக (சனிப். 15; 1) வரப்போகிற அவரையோ நாம் இப்போது கண்ணாலே கண்டு, அவரிடத்திலே நமக்குள்ள அன்பைக் காண்பிக்க முடியாது. ஒரு இராசா தூரதேசத்திலே இருக்கிற தன்னுடைய பிரசைகளுடைய இராச பத்தியையும் அமைச்சலையும் எப்படிச் சோதித்து அறிகிறான்? அந்தத் தூரதேசக் குடிகள் நடுவிலே தன்னுடைய தானபதியை அனுப்பி, அவர்கள் இவனுக்குச் செய்கிற மரியாதைகள் ஆசார உபசாரங்கள் எல்லாம் தனக்குச் செய்ததுபோலக் கண்டு உவந்துகொள்ளுகிறான். இதுபோலவே, நம்மோடு உள்ளும் புறமும் நிறைந்திருக்கிற சருவ வியாபியாகிய சருவேசுரன், நமது கண் காணாதபடி தூரத்தில் இருக்கிறது போல மறைந்துகொண்டு, நம்முடைய அயலாரைத்தான்—அதாவது, பெண்சாதியை, புருஷனை, தாயை, பிள்ளையை, சகோதரத்தை, அண்டை வீட்டாரை—தமது தானபதிகளாய் நம்மிடத்துக்கு அனுப்பியிருக்கிறார். தானபதிகளான இவர்களுக்கு நாம் பண்ணுகிற ஆசார உபசார மரியாதைகளெல்லாம் தமக்கே பண்ணினதாக ஏற்றுக்கொள்ளுவார். ஆனபடியால், பிரியமானவர்களே, பிறர் சிநேகந்தான் நமது ஈடேற்றத்துக்கு அச்சவாரம் என்றதை நல்லாக மனத்திற் பதித்துக் கொள்ளுங்கள். பிறர் சிநேகத்தைப் பங்கப் படுத்துவோமானால், நம்முடைய ஈடேற்றத்தையும் பங்கப்படுத்திக்கொள்ளுவோம். ஆனபடியால்தான் இந்தச் சிநேகத்துக்கு மாறான பேச்சுகளை எல்லாம் நாம் சாவதானமாய் விலக்கவேண்டியது.

முதன் முதல் பிறர் சிநேகத்தை அழிக்கிற வாய்ப்பாவம், அன்பில்லாத சுடுசொல்லு. பேச்சிலே எப்போதும் வெடு சுடு என்று சட சடத்துக் கடுகடுத்துக்கொண்டு நிற்கிறவர்களுடைய இருதயத்திலே பிறர் சிநேகம் எப்படி நிலைகொள்ளும்? நம்முடைய வீட்டார், அல்லது அயலாருடைய நெஞ்சிலே, இந்தக் குத்துவார்த்தைகள் என்கிற பாணங்கள் விழ விழ, அவர்கள் நம்மை வெறுக்கத் துவங்கி, தாங்களும் எதிர் வார்த்தைகள் சொல்லி எட்டிக்குப் போட்டி போட, இப்படியே, எரிகிற விறகின் மேல் எண்ணெயை ஊற்றிவிட்

டது போலக் கோபம் பளிச்சென்று பற்றி மூண்டு எத்தனை முறை இந்தத் “ நீராக் கோபம் போராய் முடிந்து போகிறது ”! விசேஷமாய், பிறரைத் துடி துடிக்கப் பண்ணுகிற நையாண்டிச் சொற்கள், வசைவக்கணைகள், பலமுறையும், சீவியகாலமெல்லாம் தீராத பகைக்கு, வன்மத்துக்குக் காரணமாகிறது. “ தீயினாற் சுட்ட புண் ஆறிடும், ஆறாதே நாவினாற் சுட்ட வடு ” என்ற உலகப் பேச்சின்படி, நெருப்புச் சுட்ட புண் சுறுக்கு மாறிப்போகிறது; நாக்காற் சுட்ட வடு ஒருக்காலும் மாறாமலும் இருக்குமே. “ வில்லம்பு சொல்லம்பை வெல்லாதாம் ” என்றதுபோல, வில்லாற் பொறித்த அம்பிலும் பார்க்க, பலமுறையும், சுடுசொல் என்கிற அம்பு அதிக ஆழமாய் மனதில் தைத்து உள்ள நாளெல்லாம் வேதனை செய்துகொண்டிருப்பதும் உண்டே.

பிறர் சிநேகம் கோட்சொல்லாலும் மோசமாய்ப் பங்கப்படும். கொண்டுபோய்ச் சொல்லுகிறதுதான் கோள். இதற்குச் சொண்டுச் சாடை மூட்டுகிறது என்றும் பெயர். சிலருக்கு ஆகப் பிரியமான அலுவல் என்னவென்றால், ஒட்டு விசளங் கேட்டு ஓடியோடிப் போய் பிறருக்குப் பற்றவைக்கிறதுதான். இவர்கள் தங்கள் தொல்லை துறட்டுகளோடே இருந்துவிடார்கள்; எப்போதும் பிறருடைய கருமங்களிலே தலைப்போட்டு, கதைவிட்டுக் கதைகேட்டு, அல்லது கோடிக்குள் ஒட்டி நின்று காதிலே விழுத்திக்கொண்டு பறந்து போய் அங்குஞ் சொல்லி இங்குஞ் சொல்லி இரண்டு பகுதியையும் பிடித்து முடிந்துவிடுகிறது தான் இவர்களுடைய உத்தியோகம். இதினால் நடக்கிறதென்ன? தேனும் பாலும் போல இருந்தவர்கள், ஆடும் கத்தியும் போல வந்துவிடுகிறார்கள். இதிலே ஒன்று கவனிக்க வேணும். நேரே ஒருவன் மற்றொருவனைப் பேசினால், பேச்சு வாங்கினவன் பேசினவன் சொன்னது எல்லாத்தையும் உள்ளபடி அறிந்துகொள்ளுகிறான். அவனுடைய குரலிலே, கை மெய்ச் சாடைகளிலே நின்று அவனுடைய உட்கருத்தையும் மட்டிட்டுக்கொள்ளுகிறான். அவ்வேளை, பேச்சு வாங்கினவன், தான் சொல்ல வேண்டியதையும் சொல்லி இரு பேரும் ஒப்புரவாகிப் போகிறதற்கும் வழியிருக்கும். ஆனால் கொண்டோடிப் போய்ச் சொண்டு மூட்டுகிறவன் எப்போதும் ஒன்றைப் பத்தாக்கிப் போடுவான். “ உள்ளதையும் கெடுத்தான் கொள்ளிக் கண்ணன் ” என்றது போல, இனி, வகை சொல்லித் தப்பவும் இடம் இல்லை. தீராத பகைக்கு இதுதான் நேரான பாதை. இதினாலேதான் “ கோட்செவிக் குறளை காற்றுடன் நெருப்பு ” என்று தமிழிலே சொல்லுகிறோம். கோட்காரன் கொண்டு வந்து சொல்லுகிற குறளைச்

சொல்லால், காற்றுக்கு நெருப்பு மூளுவது போல, பகையானது மூளாசி எரியும்.

இதைக் காட்டிலும் இன்னும் அதிகமாய்ப் பிறர்சிநேகத்தைக் கெடுத்து, பிறருக்குப் பெரும் நட்டத்தையும் வருவிக்கிற வாய்ப் பாவம் அவதூறு என்று சொல்லப்படும். அவதூறு என்றால், இல்லாத குறையை, செய்யாத செயலை எடுத்துவைத்துக் கட்டிப் பிறருடைய மானத்தை, சங்கையை, பிறருக்கு வரும் லாபத்தை, நயத்தை அழிக்கிற பொய்க் கதை. இப்படிப்பட்ட பாவத்துக்கு ஆளாகிறவர்கள் ஆதிதொட்டுப் பொய்யனும் பொய்க்குத் தகப்பனுமாகிய (அருளப். 8; 44) பிசாசின் தூதர்கள் ஒழிய வேறல்ல என்று சொல்ல வேணும். " அபத்தம் பேசும் பொய்ச்சாட்சியையும் சகோதரருக்குள்ளே விரோதத்தை உண்டுபண்ணுதலையும் கர்த்தர் வெறுக்கிறார் " (நீதி. 6; 16-19). அவதூறுகளினால் எத்தனையோ முறை சகோதரருக்குள்ளே விரோதம் உண்டுபடுகிறதோடு, இறுத்துத் தீர்க்கக் கூடாத நட்டமும் விளைகிறது. விவாகங்கள் குழம்பிப்போம்; உத்தியோகங்கள் இல்லாமற்போம்; பிழைப்புக் கெட்டுப்போம்; வியாபாரம், கொடுக்கல் வாங்கல் நின்றுபோம். இந்த நட்டங்களையெல்லாம் தீர்க்கவேண்டியது ஆர்? இவைகளுக்குக் காரணமான அவதூறு சொன்னவர்கள் தானே அல்லவா ?

2. பிரியமான கிறீஸ்தவர்களே, நம்முடைய ஈடேற்றத்துக்குப் பெரிய தடையாய் இருக்கக்கூடிய இவ்வகையான வாய்ப் பாவங்களை எல்லாம் நாம் இன்றே அரோசித்துத் தள்ளிவிடக் கடவோம். உண்மைக்கு மாறாய், தேவ நாமத்தின் ஆராதனைக்குரிய மகத்துவத்துக்கு மாறாய், நம்முடையவும் மற்றவர்களுடையவும் பரிசுத்தத்துக்கு மாறாய், பிறர்சிநேகத்துக்கு மாறாய் உள்ள சகல பேச்சு வார்த்தைகளையும் விட்டுப்போடக் கடவோம். ஆண்டவரே " எல்லாரும் பாவவாளிகளானோம்; பிழை செய்துபோட்டோம்; எல்லாத்திலும் தவறிப்போனோம் " (தானி. 3; 29). இனிமேல் இப்படிப்பட்ட பாவங்களை விலக்குகிறதற்கு வேண்டிய சாக்கிரதையை எல்லாம் எடுத்துக்கொள்ளக் கடவோம். பழக்கத்தைப் பழக்கத்தால் வெல்லவேணும். துர்ப்பழக்கத்துக்கு மாறாக நற்பழக்கத்தை நாட்டவேணும். இப்படியே, பொய் சொல்லுகிற பழக்கத்துக்குப் பதிலாக, எல்லாத்திலும் நிதார்த்தமாய்ப் பேசப் பழகிக்கொண்டு வரவேணும். ஆண்டவர் கற்பித்தது போல " உள்ளதை உள்ளதென்றும் இல்லதை இல்லதென்றும் " எப்போதும் சொல்லப் பிரயாசப்படக்கடவோம் (மத். 5; 37). சருவேசுரனு

டைய நாமத்தை வீணுக்கெடுத்து வழங்குகிற பழக்கத்தை வெல்ல, அந்த நாமத்தை உச்சரிக்கும் போதெல்லாம் தலை வணங்கப் பழகக் கடவோம். நம்முடைய இருதயத்திலே, அந்த அர்ச்சிக்கப்பட்ட நாமத்துக்குரிய வணக்கமும் பயபத்தியும் வேரூன்றியிருக்குமானால், அதைப் பகிடிக்கு, வீணுக்கு, கண்ட நின்றபடி சத்தியத்துக்கு ஒருபோதும் இழுக்கமாட்டோம். இப்படியே, சுத்தவாளர் தேவ திருத்தொண்டர்களையும் நாம் நமக்குள்ளே குன்றாத பயபத்தியோடு சங்கிக்கப் பழகிக்கொண்டு வரவேணும். நாம் இருதய அந்தரங்கத்திலே மதிக்கிறவர்களை வாயினால் ஒருபோதும் அவமதிக்கமாட்டோம். அசுத்தமான தூஷண வார்த்தைகள் பேசுகிற கெட்ட பழக்கம் நம்மிலிருந்தால், அதையும் திருத்த நாள்தோறும் பிரயாசப்படவேணும். காலைச் செப வேளையிலே அந்தத் துர்ப்பழக்கத்துக்கு இடங்கொடாதபடி பிரதிக்கினைபண்ணித் தேவ உதவியை மன்றாடிக்கொள்ள வேணும். அன்று தவறி விழுந்திருந்தால், மாலைச் செபவேளையிலே அதற்காக மனஸ்தாபப்படுகிறதோடு, தானே தனக்கு ஒரு அபராதமும் இட்டுக்கொள்ளலாம். உதாரணமாக: ஒரு தூஷணத்துக்கு ஒரு பிரியதத்த மந்திரம் சொல்லுகிறது. அல்லது, பிறர் காணாத இடமென்றால், நிலத்திலே நாக்காலே ஒரு குருசு போடுகிறது. இப்படி, நாள்தோறும் பிரயாசப்பட்டுக்கொண்டுவர, இந்தப் பழக்கத்தை மாத்திரமல்ல, இதைப் போல வேறெத்தனையோ கெட்ட பழக்கங்களையும் திருத்திப் போடலாம்.

பிறர் சிநேகத்துக்கு மாறான வார்த்தைகளை விலக்குகிறதும் நெடும் பழக்கத்தினாலேதான் வரவேணும். என்ன பழக்கம் தெரியுமா? வேணுமென்று, நல்ல, இனிமையான சொல்லுகளைத் தேடியெடுத்துச் சொல்லிவருகிற பழக்கம். முதன்முதல், பிறரிலே நாம் சருவேசுரனுடைய சாயலைக் கண்டுகொள்ளுகிறது அவசியம். நம்முடைய மனதைப் புண்படுத்தத் தக்க சொல்லு அவர்களையும் புண்படுத்தும் என்று அவதானித்துக்கொண்டு, ஒரு கடுமையான வார்த்தையை ஒரு முறை சொல்லுமுன், இரு முறை யோசித்துக்கொண்டு சொல்லப் பழகக்கடவோம். இனிமையான, ஆதரவான சொல்லுகளையே தேடி எடுத்து வழங்கி வருவோமானால், நமக்கும் பிறருக்கும் எவ்வளவு மனப்பாக்கியம்! " கீழோராயினும் தாழ உரை " என்று பள்ளிக்கூடத்திலே படித்தோமே. நமக்குக் கீழ்ப்பட்டவர்களுக்கும் நல்ல, கனிவான, சொல்லுகளைப் பாவித்தால், நம்மைச் சூழப் பரலோகம் இறங்கி வந்தது போல இருக்குமே.

இனிய உளவாக இன்னாத கூறல்
கனி இருக்கக் காய் கவர்ந்தற்று

என்று ஒரு உலக ஞானியும் சொல்லியிருக்கிறார். நல்ல, பழுத்த, பழமிருக்க, வெறுங் காயை யாராவது கடித்துப் பல்லுக்கூசுவார்களா? நல்ல சொல்லு எடுத்துச் சொல்லத்தக்க இடத்தில், தீய சொல்லை நமக்கு ஏன்? மேலும், கோள் குண்டணிகள் ஆவலாதி அவதூறுகளால் விளையும் கேடுகளை நல்லாய் மனதில் விசாரித்துக்கொண்டு, நாம் அப்படிப்பட்ட பேச்சுக்களிலே ஒருக்காலும் தலைப்போடாமல் இருக்கக்கடவோம். யாராவது பிறரைப் பற்றிக் கோள் கொண்டு வந்தால், அவர்களுக்குக் காது கொடுக்கப்படாது. "சொல்லுவார் சொன்னாலும் கேட்பார்க்கு மதியில்லையா?" நாம் மதியுள்ளவர்களென்றால், புத்தியுள்ளவர்களென்றால் — இன்னார் இப்படி உன்னைப் பேசினார்களென்று யாராவது சொல்ல வந்தால்: மெத்தப் பெரிய உபகாரம்! அவர்கள் என்னோடு ஏதாவது பேச இருந்தால் வந்து பேசட்டும். தம்பீ, தங்கைச்சீ, நீ மாத்திரம் சொண்டுச் சாடை சொல்ல இனிமேல் வராதே என்று சொல்லி, அப்படிப்பட்ட கோட்செவியருடைய வாயை அடைத்துப்போடுவோமாக. ஒரு நாளைக்கு இப்படி நல்ல அறிவு சூடு காட்டிவிட்டால், மறுநாளைக்குக் கோள் காவிக்கொண்டு திரிகிறவர்கள் வந்து நம்மைத் தொந்தரவு பண்ணமாட்டார்கள். நாமும் இரகசியமாய் அறியவந்த ஒன்றைப் பரகசியப்படுத்தாதபடி கவனஞ் செலுத்த வேணும். சங்கை என்றது மனுஷனுக்கு உயிரிலும் பார்க்க அருமையான ஒரு காரியம். மானம் அழிந்தால் உயிர் என்னத்துக்கு என்ற ஒரு மனத்தரிப்பு எல்லாருக்கும் இயல்பாகவே உண்டு. ஆனபடியால், இப்படிப்பட்ட அருமையான ஒரு உரிமையிலே நாம் பிறருக்கு நட்டஞ் செய்யப்படாது. நாம் நிச்சயமாய் அறிந்த பிறருடைய இரகசியமான குறைகளை, ஓர் வேளை, பெரியோருக்கு அல்லது அக்கறையுள்ள வேறொருவருக்குத் தெரிவிக்க வேண்டிய கடமையிருந்தால், தீர்க்க ஆலோசனையோடு, அதை அப்படிப்பட்டவர்களுக்கு அறிவிக்கலாம். ஆனால் அதைப் பாவசங்கீர்த்தன இரகசியத்தைப்போலப் பாவித்துக்கொள்ள வேணும். மற்றப்படி, நாம் அறிந்தவைகளை நம்மோடேயே வைத்துக்கொள்ள வேண்டியது.

பிரியமானவர்களே, பிறர் சிநேகம் அருமையான ஒரு திரவியம். நம்முடைய தேவ சிநேகத்துக்கு அத்தாட்சியாய், மோட்ச உரிமை எடுக்கிறதற்கு ஒரு கட்டாயமான நிபந்தனையாய் உள்ள ஒரு புண்ணியம். இதைக் காத்துக்கொள்ள வேணுமானால் — இதை

வர்த்திக்கப்பண்ண வேணுமானால்,—நம்முடைய நாக்கை அடக்கி நடத்துவது அவசியம். அப்படிச் செய்யாவிட்டால், நமது வேத ஆசாரமெல்லாம் வீண். அர்ச். யாகப்பர் எழுதியிருக்கிறபடியே "உங்களில் ஒருவன் தன் நாவை அடக்காமல், தன்னை வஞ்சித்துக்கொண்டு, தான் தேவ பத்தி உள்ளவனென்று எண்ணினால், அவனுடைய தேவபத்தி வீணாயிருக்கும்" (யாகப். 1; 26). நாக்கை அடக்கி ஆளுவதற்கு நம்முடைய பெலன் போதாது. ஆகையால் சருவேசுரனை அடிக்கடி பிரார்த்தித்து அவருடைய வரப்பிரசாத உதவியையும் அடைந்துகொள்ளுவோமாக. கடைசியாய், ஆண்டவர் திருவுளம்பற்றிய திகிலுறுத்துகிற வார்த்தைகளை அடிக்கடி தியானித்துக்கொள்ளக்கடவோம். "மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையுங் குறித்து நடுத்தீர்வை நாளிலே கணக்கு ஒப்புவிக்க வேணும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" (மத். 12; 36). இது இவ்வளவு காத்திரமான ஒரு காரியம்! நாம் பேசும் வீண் வார்த்தைக்கும் கணக்குக் கேட்கப்படுமானால், நம்முடைய பொய் புரளிகள், தேவ நாமத்துக்கு அவசங்கையான பேச்சுக்கள், தூஷண வார்த்தைகள், பிறர் சிநேகத்துக்கு மாறான வன்சொற்கள் கோள்கள் அவதூறுகளுக்கு எவ்வளவு கண்டிப்பாய் நியாயம் விசாரிக்கப்படும்! கிறீஸ்தவர்களே, இந்த ஞான ஒடுக்கத்தோடு நாம் எல்லாரும் முற்றாக மனந்திரும்பி, நம்முடைய நாவை அடக்கி நடந்து, "வாக்கிலே தவறாதவன் சாங்கோபாங்கனாம்" (யாகப். 3; 2) என்ற தேவ வாக்கியத்துக்கு ஏற்றபடியே பரிசுத்தவான்களாகி, ஒரு நாள் மோட்சமுக தரிசனத்தை அடைந்துகொள்ளக் கடவோம்.—ஆமென்.

SERMON :

On Building up a New Life

மாலைப் பிரசங்கம் :

எம் இரட்சணியமானவரைப் பின்பற்றுதல்

" Sicut ergo aecepistis Jesum Christum Dominum, in ipso ambulate,, radicati et superedificati in ipso " Col. II. 6.

" கர்த்தராகிய யேசுக்கிறீஸ்துவை நீங்கள் ஏற்றுக்கொண்டபடியே அவரிலே வேர் கொண்டவர்களாய், அவர் பேரில் கட்டப்பட்டவர்களாய், அவரைப் பின்பற்றி நடவுங்கள் " (கொலோ. 2; 6).

சருவேசுரன் உங்கள் மேற் கொண்டிருக்கிற அளவு கணக்கு இல்லாத அன்பையும், நீங்கள் அவருக்குக் காட்டிக்கொண்டு வந்திருக்கிற சின்னத்தனமான நன்றி கேட்டையும் இந்த நாட்களிலே தியானித்துத் தியானித்து மனம் வருந்தினீர்கள். உங்கள் சென்ற காலச் சீவியத்தைப் பார்க்கப் பார்க்க, எல்லாம் பாவ அக்கிரமமும் அறிவு கெட்ட தனமுமாய்க் கிடக்கிறது ; எல்லாம் வேர் இல்லாமல் விழுகிற ஒரு மரம் போல, இடிந்து கொட்டுண்ணுகிற ஒரு கட்டடம் போலக் காணப்படுகிறது. இந்தக் கிலிகோலத்தைப் பார்த்து நெடுக அழுதுகொண்டு இருக்கப்போகிறீர்களா ? அவநம்பிக்கையுள்ள துக்கக் கடலிலே அமிழ்ந்திக் கிடக்கப் போகிறீர்களா? சென்ற கால சீவியத்தைச் சோதித்துப் பார்க்கிறதிலும் செய்த பாவத்துக்காக மனம் வருந்திப் பாவசங்கீர்த்தனம் பண்ணுகிறதிலும் மாத்திரம் உங்கள் ஞான ஒடுக்க நாட்களைப் போக்கிவிட்டு, இந்த அருமையான, பரிசுத்தமான நாட்கள் முடிந்தவுடனே இனி யாதொரு இலக்கும் இல்லாமல், பிற்காலம் என்ன விதமாய் நடப்போம் என்ற ஒரு நிண்ணயம் இல்லாமல் போகப் போகிறீர்களா ? பிரியமான கிறீஸ்தவர்களே, அப்படிச் செய்கிறதானல் உங்களுடைய ஞான ஒடுக்கத்தினுல் பயனில்லை. துக்கித்துக்கொண்டு விழுந்து கிடக்கிறது போதாது, உற்சாகத்தோடு எழுந்து நடக்கவும் வேணும்; சென்ற காலச் சீவியத்தைத் துயரத்தோடு நோக்குகிறது போதாது, வருங்காலச் சீவியத்தை நம்பிக்கையோடு பார்க்கவும்

வேணும். ஆண்டவருடைய தயாளத்தைக் கண்டு மனம் உருகினீர்களே ; அவர் உங்களை ஆட்கொள்ள வந்த திரு உருவத்திலே அன்பு வைக்கத் தொடங்கிக்கொண்டீர்களே ; அந்தத் திரு உருவத்துக்குத் தான்—யேசுக்கிறீஸ்துநாதருக்குத்தான்—இனி ஆட்பட வேணும் என்று துணிந்துகொண்டீர்களே ; யேசுக்கிறீஸ்துநாதனை ஏற்றுக்கொண்ட நீங்கள், இனி அவரிலே வேர் கொண்டவர்களாய், அவர் பேரில் கட்டப்பட்டவர்களாய் அவரைப் பின்பற்றி நடக்க இப்போது முயற்சிப்பட வேணும்.

உங்களுடைய இரட்சணியமானவரை உங்கள் நடக்கைக்கு முன்மாதிரிகையாக வைத்து அவருடைய தேவ நடக்கையை ஆராய்வதினுல் அவரிலே வேர் ஊன்ற வேணும். அவருடைய புண்ணிய மாதிரிகையை உங்களால் கூடிய அளவில் கண்டு பாவிப்பதினுல் அவர் பேரில் கட்டப்பட்டவர்களாக வேணும். நம்முடைய திவ்விய குருவான அவருடைய உதவியோடேதானே இந்த இரண்டு துறையையும் இன்று பின்னேரம் என்னுல் இயன்றளவு எடுத்து விளங்கப்படுத்துவேன். தயவாகச் செவி சாயுங்கள். (பிரியதத்தம்).

I

யேசுநாத சுவாமி தாமே நமக்கு தேவ பிதாவுடைய கரை காணுத அன்பின் வெளிப்படுத்தலாய் விளங்குகிறவர். பிதாவுடைய நேசம் முழுவதையும், அவரோடு ஒரே சுபாவமாய் இருக்கிற சுதனுகிய இவர் தாமே நமக்குக் காண்பித்திருக்கிறுர். மனுஷர் காணத் தக்கதாய் மனுஷ அவதாரம் பண்ணி வந்த இந்தத் தேவ சுதனிலே,—ஒரு மனுஷ இருதயத்தோடு நம்மை மனுஷனுக்கு உரிய விதமாயும் தேவனுக்கு உரிய விதமாயும் நேசிக்கிற யேசுக்கிறீஸ்து நாதரிலே,—கிறீஸ்தவர்களே, உங்கள் முழு நேசத்தையும் வையுங்கள். நீங்கள் அவரில் வைக்கிற அன்பு மன்னிப்பு அடைந்த குற்றவாளியுடைய நன்றியறிந்த அன்பாய் இருக்கவேணும் ; மீட்டு விடப்பட்ட அடிமை தன்னை மீட்டவரிற் கொள்ளுகிற சீவபரியந்தமான அன்பாய் இருக்க வேணும்; அதுமட்டா! ஒரு சிநேகிதன் தன்னுடைய பிராண சிநேகிதனுக்குக் காட்டுகிற அன்பை ஒத்ததாகத் தானும் இருக்க வேணும். மரியமதலேனம்மாளைப் போல நீங்கள் அவருடைய திருப்பாத கமலங்களைக் கைப்பற்றிக் கொண்டு : ஆண்டவரே இனி தேவரீரை ஒருகாலும் விட்டுப் பிரியேன் என்று பிடிவாதமாய் நிற்கவேணும். அவர் அண்டையிலே அடிக்கடி போய் இருந்து, அவருடைய திவ்விய சாயலை

உற்று நோக்கிப் பார்த்து, அவருக்கு ஏற்ற மாதிரியாக உங்கள் சீவிய நடக்கையைத் திருத்தமாக்க வேணும். சிநேகிதம் என்றால் அந்தச் சிநேகிதத்துக்கு இடமான ஆளோடு நினைவு, பேச்சு வார்த்தை, நடக்கை இவைகளிலே ஒற்றுமையாய்ப் போகிறது தானே. சிநேகிதத்துக்கு உரியவருக்கு எது எது விருப்பமோ, அது அது நமக்கும் விருப்பமாய் வரவேணும். சிநேகிதத்துக்கு உரியவர் நம்மிடத்திலே எதை எதை வெறுக்கிறாரோ நாம் அதை அதை விலக்கிக் கொண்டு வரவேணும். ஒரு வார்த்தையிலே சொல்லுகில், அவருடைய சாயல் நம்மிலே பதிய வேணும். இந்த நம்முடைய சிநேகிதரோ நம்மைப் போல ஒரு வெற்று மனுஷன் அல்ல. அவர் ஒரு தேவ மனுஷன்; நித்தியமாய்த் தமக்கு உள்ள தேவ சுபாவத்தோடு, இடையிலே, நமக்காக, நமது மனுஷ சுபாவத்தையும் இணைத்துக் கொண்ட சுயஞ் சோதியான கடவுள். அவருடைய தெய்வீக மனுஷ சாயலை நாம் அவதானித்து, கண்டு பிடித்து, நம்முடைய சாயலை அதற்கு ஒத்ததாகச் செய்ய முயற்சி பண்ணும் போது, இப்படிப்பட்ட மேலான முயற்சியிலே அற்ப மனுஷராகிய நமக்கு அவசியமான பெலத்தை, தேவ வரப்பிரசாதத்தை—அவரே தந்தருளுவார்.

பிரியமானவர்களே, இந்த பரம முன்மாதிரிகையை நோக்கிப் பார்த்து அவதானியுங்கள். அவருடைய சாயலாய் நீங்கள் வரவேணுமானால், அவரை மெய் மெய்யாகச் சிநேகிக்க விரும்பினால், அவரைப் போல நடக்க விரும்பினால்—அவருடைய திவ்விய சாயலை அவதானிக்க வேணும். அவருடைய திவ்விய நடக்கையை ஆராய்ந்து அறிய வேணும். அவருடைய நடக்கையை மூன்று பிரிவாக எடுத்துச் சொல்லலாம். முதலாவது, சருவேசுரன் மட்டில், அதாவது தமது தேவ சுபாவத்தின் மட்டில், அவர் நிறைவேற்றின கடமைகள். இரண்டாவது, தமது மட்டில்,—தமது மனுஷ சுபாவத்தின் மட்டில்—நிறைவேற்றின கடமைகள். மூன்றாவது, பிறர் மட்டில் அவர் நிறைவேற்றின கடமைகள். இந்த மூன்றையும் சாவதானமாய் ஆராய்ந்து பாருங்கள்.

முதல், சருவேசுரன் மட்டில் அவர் நிறைவேற்றின கடமைகள்: ஆண்டவருடைய சீவியம் எல்லாம் பிதாவாகியவருடைய திருச்சித்தத்தைச் செய்வதிலே தானே செலவழிக்கப்பட்டது! "என் பிதாவின் கிரியைகளை நான் செய்யா விட்டால் நீங்கள் என்னை விசுவசிக்க வேண்டாம்" (அருளப். 10; 37); "என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து அவருடைய கிரியையை முடிப்ப

துதான் என்னுடைய போசனம்" (அருளப். 4; 34) என்றாரே. அவர் ஒருபோதும் தம்மைப் பிரியப்படுத்தி நடக்கவில்லை (ரோம. 15; 3). மனுஷருடைய முகத் தாட்சணியத்தைப் பார்க்கவும் இல்லை. பிதாவை மகிமைப்படுத்துவது தான் தம்முடைய ஒரே அலுவல் என்றபடி நடந்தருளினார். பிதாவுடைய திருச் சமுகத்திலே எவ்வளவு ஆசாரமும் அன்பும் காட்டுகிறார்! தேவ ஆலயத்தின் பரிசுத்தத்தைப் பற்றி எவ்வளவு அக்கறை! "உம்முடைய ஆலயத்தைக் குறித்து உண்டான அபிமானம் என்னைப் பட்சித்தது" (அருளப். 2; 17). அவரை நோக்கி எவ்வளவு பரவசமான பத்தியோடு செபம் பண்ணிக் கொண்டு வருகிறார். எத்தனை இராக்காலம் முழுதையும் கடவுளுடைய செபத்திற் போக்குகிறார். பரலோக ராச்சியத்தைத் தாபிப்பதே அவருடைய ஏக கவலையாகிறது. உண்மைக்குச் சாட்சி சொல்லுவதே அவருடைய நாளாந்த வேலையாகிறது. அந்த உண்மையைப் பரப்புவதிலே தமக்கு வரப்போகிற சீவ மோசத்தையும் பாராமல், பல விதமான துன்புறுத்துதல்களுக்கும், நன்றாக அறிந்துகொண்டு, உள்ளாகிறார். கடைசியாய், தாம் சாட்சி சொல்ல வந்த உண்மைக்காகச் சீவனையும் விடுகிறார்.

இனித் தமது மட்டில் அவர் நடந்துகொண்ட தன்மையைப் பாருங்கள். தம்முடைய சரீரத்துக்கு ஆக அவசியமான உணவு, நித்திரை இவைகளை மாத்திரம் கொடுக்கிறார். மிதமிஞ்சி ஒன்றும் கொடுக்கிறார் இல்லை. தமது தெய்வீக வேலையைச் செய்வதிலே மாத்திரம் கண்ணாயிருந்து, தமது சீவியத்தின் பாதுகாவலைப் பிதாவுடைய தேவ பராமரிப்புக்கு முற்றாகக் கையளித்து விடுகிறார். பிதாவின் கரங்களிலே தானே, தம்முடைய சங்கை மகிமையை, தம்முடைய தேக சவுக்கியத்தை, தம்முடைய பிற்கால நிலைபரத்தை வைத்து விடுகிறார். தமது மனுஷ சரீரத்துக்கு வேண்டிய சொற்ப அவசியங்களைப் பற்றி ஒரு கவலையும் கொள்ளுகிறார் இல்லை. செல்வத்தை அனுபவிக்கத் தக்கதாய் இருந்தும், வறுமையையே தேடிக்கொள்ளுகிறார். பாவம் இல்லாத சுகங்களை மன ஆறுதல்களைச் சகிக்கத் தக்கதாய் இருந்தும், இவைகளை எல்லாம் மட்டுப்படுத்தி, சிலுவையைத்தான் கையேற்றுக் கொள்ளுகிறார். "தமக்கு முன்னாக வைக்கப்பட்ட சந்தோஷத்துக்குப் பதிலாகச் சிலுவையை எடுத்துக் கொண்டார்" (எபி. 12; 2). சங்கை மகிமைகளை உவந்து கொள்ளாமல், அவைகளுக்குப் பயந்து ஓடுகிறவர் போல விலகிக் கொள்ளுகிறார். இப்படியே யேசுநாத சுவாமியுடைய சீவியம் முழுதும் தம்மை ஒறுக்கிற சீவியமாய், ஆத்துமத்தை எப்போ

தும் சரீரத்தின் மேல் வெற்றி கொள்ளப் பண்ணின சீவியமாய் இருந்ததைக் காண்பீர்கள்.

கடைசியாய், பிற மனுஷர் மட்டில் ஆண்டவர் நடந்துகொண்ட மாதிரியையும் கவனியுங்கள். முப்பது வருஷமாய் தம்முடைய தாயாருக்கும் தம்மை வளர்த்தவருக்கும் எவ்வளவு பூரணமான கீழ்ப்படிதல்! மூன்று வருஷமாய்ப் பிரசித்த சீவியம் செய்த பொழுது—தம்முடைய திரு வேதத்தைப் போதித்துக் கொண்டு திரிந்த பொழுது—மனுஷர் பேரில் எவ்வளவு கருணை! எவ்வளவு தயவு! ஏழை எளியவர்களுக்கு எவ்வளவு இரக்க உருக்கம்! பசித்து இருக்கிறவர்கள் பேரில் இரங்கி அவர்களுடைய பசியை ஆற்ற, கூன், குருடு, நொண்டி, சப்பாணிகளுக்குச் சுகம் கொடுக்க தமது தேவ வல்லமையையும் எடுத்து ஆளுகிறாரே. "அவர் நன்மை செய்து கொண்டு சுற்றித் திரிந்தார்" என்ற ஒரு வசனத்திலே அல்லவோ வேத புத்தகம் அவருடைய சரித்திரத்தைச் சுருக்கிச் சொல்லியிருக்கிறது (அப். நட. 10; 38). இனி, தம்மைப் பகைத்துத் தமக்குத் தின்மை செய்யத் தேடினவர்களோடு எவ்வளவு பொறுமை! கள்ள ஞானிகளை அதட்டிப் பேசி உண்மையை நிலைநாட்டின போதிலும், தம்மைப் பிடிக்க, கட்ட, ஆக்கினை பண்ண, அவமானப் படுத்த வந்தவர்கள் முன்பாகவோ மயிர் கத்தரிக்கும் போது வாய் விடாமல் நிற்கிற செம்மறிப் புருவை போல (இசை. 53; 7) நீடிய சாந்தகுணத்தோடு நின்றாரே. இதோ உங்கள் தேவ முன்மாதிரியைப் பாருங்கள். அன்போடு தியானியுங்கள். இந்த முன்மாதிரியின்படி நடக்கிறதற்கு வேண்டிய வரப்பிரசாத உதவியை இவரிடத்திலேதானே கேளுங்கள். ஆண்டவரே, எங்கள் வழியும் சத்தியமும் சீவியமும் ஆனவரே, தேவரீர் எங்கள் பாவங்களைப் போக்கும்படியாக மரணிக்க மாத்திரமல்ல, எங்கள் நடக்கைக்கு மாதிரி காட்டிச் சீவிக்கவும் என்று உலகத்தில் எழுந்தருளினீரே. நாங்கள் தேவரீருடைய முன்மாதிரிப்படி நடந்து, பாவ மரணத்துக்குத் தப்பி மோட்ச சீவியத்தை அடையும்படியாக தேவரீரே எங்களுக்கு வேண்டிய ஆத்தும பெலனைத் தந்தருளும்.

II

நாம் சருவேசுரனுக்கு உரிய கடமைகளை நிறைவேற்றுகிறதைத் தேவ பத்தி என்ற ஒரு சொல்லிலே சுருக்கிச் சொல்லி விடலாம். நாம் இனி உண்மையான தேவ பத்திக்காரராய் வரவேணும். தேவ பத்தியின் உண்மையான சாயலை அறியாதபடியால் பலர் அதை

ஏதோ இழிவான காரியம், இளம் பிள்ளைகள் பெண்டுகளுக்கு மாத்திரம் தகுதியான ஒரு காரியம், பிறர் அறியாமல் மறைத்து வைக்க வேண்டிய ஒரு காரியம்—என்று விளங்கிக் கொண்டு மயங்குகிறார்கள். தேவ பத்தி என்றால், தன்னைப் பிறர் பத்திக்காரன் என்று சொல்ல வேணும் என்பதற்காக உள்ளொன்று புறம்பொன்றாய் மாரிசம் பண்ணுவது அல்ல. தலையைக் கீழே போட்டுக் கொண்டு, அல்லது கண்ணை இடுக்கிக் கொண்டு திரிவது அல்ல. தான் செய்கிற செப தவங்களைப் பற்றிப் புளுகி கள்ள ஞானியாய் நடப்பது அல்ல. அல்லது, தன் தன் நிலைபரத்துக்கு மிஞ்சின பத்திக் கிருத்தியங்களைச் செய்து கொண்டு வருவதுதானும் அல்ல. பத்தி இருதயத்திலே இருந்து கிளம்புகிற ஒரு நற்குணம். வெளியிலே எத்தனை நற் கிருத்தியங்களை ஒப்பாசாரத்துக்குச் செய்தாலும், இருதயத்திலே நற் கருத்து இல்லாவிட்டால் அவைகள் புண்ணியமும் அல்ல, பத்திக் கிருத்தியங்களும் அல்ல. மெய்யான தேவ பத்திக்கு அத்திவாரம் என்னவென்றால்: சருவேசுரன் என்னை உண்டாக்கினவர்; யேசுநாதர் எனக்காகப் பாடுபட்டவர், என்னிலே அளவில்லாத நேசம் உள்ளவர்; இஸ்பிரீத்துசாந்து எனக்குள்ளே வாசம் பண்ணி என்னை நடப்பித்தருளுகிறவர். ஆனபடியால் நான் சருவேசுரனுக்காகச் சீவிக்கவேணும். அவர் என்னுடைய பிதா, நான் அவருடைய பிள்ளை. தேவ பிதாவுக்கு உரிய சங்கை மரியாதை ஸ்தோத்திரம் ஆராதனையைச் செலுத்துவது எனது கடமை என்று உணர்ந்து, குறித்த குறித்த நேரங்களிலே,—காலை மாலைகளிலே, ஞாயிற்றுக் கிழமைகளிலே—மாத்திரம் அல்ல, எல்லா வேளையிலும், ஒவ்வொரு நிமிஷமும், அவருடைய சமுகத்திலே நடக்கப் பிரயாசப்படுகிறதுதான் மெய்யான தேவபத்தி. சருவேசுரனுடைய சமுகத்திலே நடக்கப் பிரயாசப்படுகிறது என்ற இதை நன்றாக அவதானித்துக் கொள்ளுங்கள். இது சகல பாவங்களையும் விலக்குவதற்கும் புண்ணியத்திலே வர்த்திப்பதற்கும் வாய்ப்பான ஒரு வழி. சருவேசுரன் ஆபிரகாம் என்னும் ஆதி பிதாவுக்குச் சொல்லியருளிய புத்திமதியும் இதுதான்: "எனக்கு முன்பாக நடந்து கொண்டு உத்தமனாயிரு" (சனிப். 17; 1) என்றாரே. தாவீது ராசாவும் இந்தச் சூழ்ச்சமான சாங்கோபாங்க மார்க்கத்தைத் தானே பின்பற்றி: "எப்பொழுதும் நான் ஆண்டவரை என் கண் முன்பாக வைத்துக் கொண்டேன். அவர் என் வலது பாரிசத்தில் இருக்கிறபடியால் நான் அசைக்கப்படுவதில்லை" என்று பாடினார் (15-ம் சங். 8). சருவேசுரன் தூரத்தில் அல்ல, என் வலப் பக்கத்தில் நிற்கிறார்; எனக்குச் சகாயமாயிருக்கிறார் என்றதை அடிக்கடி நினைந்துகொண்

டால், பாவச் சோதனைகள் என்னை மோசப்படுத்துமா? இந்த எண்ணத்தோடு செய்கிற கிரியைகள் எல்லாம் தேவ தோத்திரத்துக்கு உரிய பத்திக் கிரியைகள் ஆகாமற் போகுமா? இது எனக்கு எவ்வளவு ஆனந்தம்! ஆனபடியாற் தான் இப்போது எடுத்துக் காட்டின வசனத்தைத் தாவீது ராசா சொன்ன பின்பு: "ஆகையால் என் இருதயம் பூரித்தது. என் நாக்கு அக மகிழ்ந்தது. என் மாமிசமும் நம்பிக்கையில் இளைப்பாறும்" என்று ஆர்ப்பரித்தார் (௸ 9). சுத்தமான ஆத்துமாக்கள் சருவேசுரனுடைய சந்நிதானத்தை அடிக்கடி நினைத்துக் கொள்ளும்படிக்கு மனவல்லயச் செபங்களை, அதாவது சிறுச்சிறு உருக்கமான மன்றாட்டங்களைத் தோத்திரங்களைச் சொல்லிக் கொண்டு வருவார்கள். "யேசுவே, இரட்சியும்", "ஆண்டவரே என் பாவங்களைப் பொறும்", "சருவேசுரனுக்குத் தோத்திரம்", "ஆண்டவருடைய திரு நாமம் வாழ்த்தப்படக் கடவது" என்று இது முதலான சின்னச் சின்ன மந்திரங்களை எழும்பும் போது, உட்காரும் போது, நடக்கும் போது, மணிச் சத்தம் கேட்கும் போது, யாதொரு சமாச்சாரம் காதில் விழும் போது,—மனதுக்குள்ளே சொல்லி வருவார்கள். இப்படியே நீங்களும் சருவேசுரனை அடிக்கடி மனதில் வருவித்து அவர் சமுகத்தில் இருந்து கொண்டு வந்தால்—அவர் சமுகத்தில் நடந்து கொண்டு வந்தால்—யேசுநாத சுவாமி காட்டியருளிய முன்மாதிரிகைப்படி நீங்களும் சருவேசுரனுக்குத் தோத்திரமான சீவியம் நடப்பிக்கத் தடையில்லை. சருவேசுரனுடைய சமுகத்தில் நடந்து கொண்டு வந்தால், நீங்கள் பாவப் பழக்கங்களை முற்றாய் அறுத்து எறிந்துபோட்டு, புண்ணியக் கிருத்தியங்களிலே பழக ஒருபோதும் பின் வாங்கமாட்டீர்கள். உதாரணமாய், பழி வாங்காமல் இருக்க வேண்டிய இடத்திலே, தின்மைக்கு நன்மை செய்ய வேண்டிய இடத்திலே, பகைகாருடைய நன்மை தின்மைகளுக்குப் போக வேண்டிய இடத்திலே, நாட் பூசைக்குப் போகிறது, அடிக்கடி சற்பிரசாதம் வாங்குகிறது, வீட்டிலே செபமாலை சொல்லுகிறது முதலான பத்திக் கிருத்தியங்களைச் செய்ய வேண்டிய இடத்திலே—உலகம் என்ன சொல்லும், இன்னார் இன்னார் என்ன நினைப்பார்கள் என்று ஒருபோதும் யோசிக்க மாட்டீர்கள். சருவேசுரனுடைய நேசத்துக்காக நான் இதைச் செய்கிறேன், அவருடைய சமுகத்திலே நான் இப்படி நடக்கிறேன், என்ற நினைவு முகத்தாட்சணியமான யோசனை எல்லாவற்றையும் தள்ளிப் போடும். இந்த நினைவு, உங்களை, கோயிலிலே ஆசாரமாய் இருக்கப் பண்ணும். செப வேளையிலே இன்பந் தரும். மனச் சாட்சியின் நல்ல ஏவுதல்களுக்கு எப்போதும் செவிசாய்த்து நடக்கப் பண்

ணும். இந்த நினைவு, மெய்யான, பாசாங்கு இல்லாத தேவ பத்தியை உண்டாக்கும். இவ்விதமான பத்தியோடு சருவேசுரனுக்காக இராப் பகல் சீவியம் பண்ண ஒருபோதும் வெட்கப்பட வேண்டாம். இந்த உண்மையான தேவ பத்தியைப் பரிகாசம் பண்ணுகிறவர்கள், தங்கள் பாவ நடக்கையை உங்களுடைய நல் நடக்கை கண்டிக்கிறது போல் இருக்கிறபடியாலே தான் அப்படிச் செய்வார்கள். மெய்யான பத்தியை நல்லவர்கள் எல்லாரும் மெச்சிக் கொள்ளுவார்கள். சுத்தமான, நேர்மையுள்ள, சமாதானத்தை நாடுகிற, மதுரமாய்ப் பேசுகிற ஒரு கிறீஸ்தவன் எல்லாராலும் சங்கிக்கப்படுவான் ஒழிய, எவராலும் இகழப்படான். அவனுக்கு ஒரு நட்டமும் வராது. வேத வாக்கியம் விளம்புகிறபடியே "ஆண்டவரைத் தேடுகிறவர்களுக்கு யாதொரு நன்மையும் குறைவுபடாது" (33-ம் சங். 11).

இனி, இரண்டாவதாக உங்கள் மட்டில் உள்ள கடமைகளையும் யேசுநாத சுவாமியுடைய திவ்விய மாதிரிகைப்படி நடப்பித்துக் கொண்டு வாருங்கள். இதற்கு ஒரு சுலோகம் மாதிரிச் சுருக்கமாய், ஒரு வார்த்தையிலே சொல்லித் தரத் தக்க புத்திமதி என்னவென்றால்: உங்கள் சென்று போன காலத்தின் பாவ நடக்கைக்காக பழஞ் சலிப்போடு இருக்க வேணும். பழஞ் சலிப்பு என்று நான் சொல்லுவதை நன்றாக விளங்கிக் கொள்ளுங்கள். செய்த பாவங்களை நினைத்துப் பார்த்துக்கொண்டு இருக்கிறது அல்ல. அப்படித் தனித் தனிப் பாவங்களை நினைப்பதாலே மோசமும் சம்பவிக்கக் கூடும். தனித் தனியே நினையாமல், பொதுவிலே: ஆண்டவர் இரட்சிக்க வந்த பாவிகளிலே பிரதானமான பாவி நான் என்று அர்ச். சின்னப்பரோடு (1 திமோ. 1; 15) இருதயத்தின் அடித்தளத்திலே நன்றாய் உணர்ந்து கொண்டு, நிலையான ஒரு துக்கத்தோடு இருக்க வேணும். இந்தத் துக்கம் யூதாஸ்கரியோத்து கொண்ட நம்பிக்கை இல்லாத துக்கமாக, மரணத்துக்கு உரிய துக்கமாக அல்ல (2 கொரிந். 7; 10), நம்பிக்கையோடு கூடிய, ஆண்டவருடைய தயவைக் கண்டுகொண்ட ஆனந்தத்தோடு கூடிய, சருவேசுரனுக்கு ஏற்ற—துக்கமாய் இருக்கவேண்டியது; சம் பேதுருவானவர் தமது பாவத்துக்காக நாள்தோறும் அழுதுகொண்டு வந்த துக்கத்தைப் போல இருக்கவேண்டியது. இவ்விதமான துக்கத்தை, பழஞ் சலிப்பை, நம்முடைய இருதயத்திலே எப்போதும் வளர்த்துக்கொண்டு வருவோமானால், நம்முடைய சரீரத்தை அடக்கி மட்டு மட்டாய் நடப்பித்துக்கொண்டு வரத் தப்பமாட்டோம்; சரீரமானது நம்மை மீறி நடக்க விட

மாட்டோம்; அதினுடைய ஆசாபாசங்களை எப்போதும் கீழ்ப்படுத்திக் கொள்ளுவோம்; வேண்டிய வேண்டியபோது ஒறுத்தல் உபவாசங்களையும் பண்ணிக்கொண்டு வருவோம். இந்தப் பழஞ் சலிப்பு, விசேஷமாய், நம்முடைய பஞ்ச புலன்களை அடக்கி ஆளுவதற்கு வெகு உதவியாய் இருக்கும். அபாயத்துக்கு உரிய காரியங்களை நோக்கிப் பாராமல் கண்ணை அடக்குவோம். நம்முடைய விசுவாசத்துக்கு, பரிசுத்த கற்புக்கு, மோசம் வராமற் காக்கும்பொருட்டு கண்ட நின்ற புத்தகங்களை, பத்திரிகைகளை எல்லாம் வாசியாதபடி கவனஞ் செலுத்துவோம். இதற்கு மாறாக, பரிசுத்த சுவிசேஷம், கிறீஸ்துநாதர் அநுசாரம், இல்லற உத்தியானம், பிள்ளை வளர்ப்பு, தெய்வீக விருந்து முதலான நல்ல புத்தகங்களை, சத்திய வேத பாதுகாவலன், திரு இருதயத் தூதன், நல்ல ஆயன் முதலான நல்ல பத்திரிகைகளை வாங்கி வாசித்து நல்ல எண்ணங்களை வளர்த்துக்கொண்டு வருவோம். பாவத்துக்கு உரிய, தேவ பயபத்தியை அழிக்கக் கூடிய, காரியங்களைக் கேளாதபடி காதை ஒறுப்போம். துன்மாதிரிகைக்கு வழி திறந்து விடாதபடி நாக்கை அடக்குவோம். அவசியத்துக்கு மேற்பட்ட ஊணை உறக்கத்தைக் கொடாதபடி, சரீரம் முழுதையும் அடக்குவோம். பழஞ் சலிப்பானது எல்லாவிதமான பாவச் சமயங்களிலும் நின்று நம்மைக் காப்பாற்றும். இன்ன இன்ன தீனைத் தின்றதினால் தனக்கு இன்ன பொல்லாத நோய் வந்தது என்ற உணர்வோடு இருக்கும் ஒருவன், மறுபடியும் அந்த அந்தத் தீனைத் தின்பானோ? தின்னான். அதுபோலவே, இன்ன பாவச் சமயத்திலே போய், இன்னாரோடு உறவாடி, நாம் பாவத்திலே விழுந்தோம் என்ற அறிவும், அந்தப் பாவத்திலே மறுபடி விழப் பயங்கரமும் இருக்குமானால், முன் நடந்தது போலப் பிறகும் நடக்க நினைப்போமா? பாவத்தின் பயங்கரத்தைக் காத்துக் கொள்ளுவதற்குப் பழஞ் சலிப்பு மெத்த உபயோகமானது. ஆனபடியால், கிறீஸ்தவர்களே, இப்படிப்பட்ட சலிப்பை நீங்கள் காப்பாற்றி "சருவேசுரனுடைய வல்லமை உள்ள கரத்தின் கீழ் உங்களைத் தாழ்த்திக் கொள்ளுங்கள்" (1 இராயப். 5; 6).

பிறர் மட்டில் நாம் நடந்து கொள்ளும் முறையை ஆண்டவருடைய திருச் சீவியம் எவ்வளவு நன்றாகக் காட்டி இருக்கிறது! இந்த மாதிரியைக் கொண்டு பெரியோரோடு, நமக்குச் சமமானவர்களோடு, கீழ்ப்பட்டோர் ஏழை எளியவர்களோடு—நாம் புழங்க வேண்டிய விதத்தைக் கற்றுக்கொள்ளக்கடவோம். பெரியோரிலே,—நம்முடைய தாய் தந்தையர், குருமார், உலக அதிகாரிக

ளிலே—நாம் சருவேசுரனுடைய அதிகாரத்தைக் கண்டுகொள்ள வேணும். "சருவேசுரனால் அன்றி ஒரு அதிகாரமும் இல்லை. உண்டாய் இருக்கிற அதிகாரங்கள் அவராலேயே நியமிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் அதிகாரத்துக்கு எதிர்த்து நிற்கிறவன் சருவேசுரனுடைய நியமத்துக்கு எதிர்த்து நிற்கிறான்" என்றது வேத வாக்கியம் (ரோ. 13; 1–2). அதிகாரம் வகித்திருக்கிறவர்கள் எப்படிப்பட்டவர்களாய் இருந்தாலும், அவர்களுக்கு ஏற்ற ஏற்ற சங்கை மரியாதையும் அமைச்சலும் உரியது. இதை வேதாகமம் தெளிவாக விபரித்துச் சொல்லுவதாவது: "உங்கள் எசமான்களுக்குப் பயபத்தியுடனே கீழ்ப்படிந்திருங்கள். நல்லவர்களுக்கும் சாந்தகுணம் உள்ளவர்களுக்கும் மாத்திரமல்ல, முரட்டுக்குணம் உள்ளவர்களுக்கும் கீழ்ப்படிந்திருங்கள்" (1 இராயப். 2; 18). நமக்கு மேற்பட்டோர் இடத்திலே அவரவருடைய முகத்தை அல்ல, சருவேசுரனுடைய தேவ அதிகாரத்தைக் காண்போமானால் அவர்களை எவ்வளவு மரியாதையோடு கனம்பண்ணுவோம்!

அப்பால், நமக்குச் சமமானவர்களிலேயும் சருவேசுரனுடைய சாயலைக் கண்டுகொள்ள வேணும். நாம் தமக்குக் காட்ட வேண்டிய சிநேகத்தை அவர்களுக்குக் காட்டும்படியாக, அவர்களையும் சருவேசுரன் தமது இடமாக நம் அண்டையில் வைத்திருக்கிறார். "பிறர் உங்களுக்கு எவைகளைச் செய்ய வேணும் என்று விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்" என்றது தான் நியாயப் பிரமாணமும் தீர்க்க தரிசனமுமாம், அதாவது, வேதத்தின் சாரமாம் என்று ஆண்டவர் திருவுளம் பற்றினார் (மத். 7; 12). இந்தப் பிரமாணத்தின்படி, எவருக்கும் தின்மையைச் செய்யாமல் நன்மையையே செய்யப் பிரயாசப்படக் கடவோம். பிறருக்கு நன்மை செய்ய எங்கே என்று இருக்கக்கடவோம். நமக்கு நன்மை செய்கிறவர்களுக்கு மாத்திரம் அல்ல, தின்மை செய்கிறவர்களுக்கும் நன்மையையே செய்ய வேணும் என்றது நம்முடைய திவ்விய குருவின் கட்டளை: "உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள். உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள். உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள். உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் செபம் பண்ணுங்கள்" (மத். 5; 44). பிறருக்கு நாம் செய்யத் தேடுகிற நன்மைகளுக்குள்ளே மேலானது, நல்ல முன்மாதிரிகை என்றதை எப்போதும் மனதில் வைத்துக் கொள்ளக் கடவோம். நல்ல மாதிரிகையினால் உலகம் சீர்ப்படுவது போல துன்மாதிரிகையினால் அது மேலும் மேலும் கெட்டுப் போகிறது. அதி

னாலேதான் " இடறல்களினால் உலகத்துக்கு ஐயோ கேடு...எந்த மனுஷனால் இடறல் வருகிறதோ அவனுக்கு ஐயோ கேடு" என்று திவ்விய மீட்பர் வசனித்தார் (மத். 18; 7). பிறருக்கு நாம் ஒருபோதும் பேச்சால், கிரியையால், தூண்டுதலால், உதவி ஒத்தாசையால் துன்மாதிரிகை கொடுக்கப்படாது. அதோடு துன்மாதிரிகைக்கு உரியவர்களை விலக்கவும் வேணும்.

இவ்விடத்தில், கிறீஸ்தவர்களே, உங்கள் சிநேகிதர் கூட்டாளிகள் எவ்விதமானவர்கள் என்றதை ஆராய்ந்து பார்த்துக் கொள்ளுங்கள். எந்த மனுஷனாலும், ஆரோ ஓர் சிநேகிதன், கூட்டாளி இல்லாமல் நெடுநாள் இருப்பது அருமை. நம்மோடு ஒத்த எண்ணங்கள் உள்ளவர்களை, நம்முடைய போக்கு வாக்கு உள்ளவர்களை மனதுக்குப் பிடித்தவர்களை—ஏன்? பல முறையும், நம்முடைய கண்ணுக்குப் பிடித்தவர்களை—நாம் அடிக்கடி கண்டு, அவர்களோடு அளவளாவி, சிநேகிதம் பிடித்துக் கொள்ளுகிறோம். சிநேகிதமாய், கூட்டாளித் தனமாய்த் திரியும் போது, ஒருவருடைய எண்ணங்கள் போக்குகள் வாக்குகள் ஒருவரிற் பற்றிக் கொள்ளுகிறது. தங்களை அறியாமலே சிநேகிதர்கள் எல்லாக் காரியங்களிலும் ஒரு மனப்பட்டு விடுகிறார்கள். நம்முடைய சிநேகிதன் நல்லவன் ஆனால், தேவ பக்தி உள்ளவன் ஆனால், சத்திய வேதவிசுவாசத்தில் தேர்ந்தவன் ஆனால் நம்மிலேயும் இந்தக் குணங்கள் சிறிது சிறிதாகத் தொற்றிக் கொள்ளுகிறது. ஆனால், அவன் கபடமான நெஞ்சு உள்ளவன் ஆனால், உலகப் பற்று நிறைந்தவன் ஆனால், வேதத்துக்கு திருச்சபைக்கு குருமாருக்கு விரோதம் பேசிக்கொண்டு விசுவாசத்திலே தத்தளித்து இருக்கிறவன் ஆனால்,—நாமும் நம்மை அறியாமலே இந்தத் துர்க்குணங்களுக்கு ஆளாய் விடுகிறோம். அநேக நல்ல கிறீஸ்தவர்கள் பத்தியற்றுப் போய், புண்ணிய நடக்கையைக் கை விட்டு, வேத விசுவாசத்திலும் ஈடாட்டமாய்க் காணப்படுகிறதற்குக் காரணம் இவ்வகையான கெட்ட தோழமை தான். நம்முடைய தேசத்திலே, விசேஷமாய் கிறீஸ்தவர்கள் கொஞ்சம் பேராயும் பிற சமயத்தவர்கள் அநேகராயும் இருக்கிற இடங்களிலே, கிறீஸ்தவர்கள் பிற சமயத்தவர்களோடு அதிக கூட்டாளித்தனம் பண்ணுவதினால் மெல்ல மெல்ல விசுவாசத்திலும் சன்மார்க்கத்திலும் பெலன் குன்றிப்போகிறார்கள். பல முறையும், பிற சமயத்தவர்களுடைய தமிழ்ப் படிப்பாலும் வாக்கலங்காரமான பேச்சாலும் மருண்டுபோய், சற்றுச் சற்றாக ஆத்தும கேட்டுக்கு உள்ளாகிறவர்களையும் காண்கிறோம். இதினால் அல்லவோ " உன் பலத்துக்குத் தக்கபடி உன் அயலானைப் பற்றிச் சாக்

கிரதையாய் இரு. ஞானிகளோடும் விவேகிகளோடுமே உறவாடு. நீதிமான்களோடே உண்டாட்டுச் செய். தேவ பயத்திலேயே மகிமை பாராட்டு" என்று வேதாகமம் புத்தி சொல்லுகிறது (எக்கிளி. 9; 21, 22). நாம் யாரோடு சிநேகங் கொள்ளுகிறோம் என்றதைத் தீர விசாரித்துக் கொள்ள வேணும். பல முறையும் நம்முடைய நித்திய ஈடேற்றத்தை ஆக்குகிறதும் சிநேகிதம், அழிக்கிறதும் சிநேகிதம் என்றதை மறந்து போகப்படாது. ஆனபடியால், நமது ஆத்துமத்துக்கு நட்டஞ் செய்யத் தக்கவர்களோடு சிநேகமாய் இருந்தால், அந்தச் சிநேகிதத்தை முன் பின் பாராமல் உடனே கை விட்டு விடக் கடவோம். " பாபிலோனிலிருந்து புறப்படுங்கள். கல்தேயரை விட்டு ஓடி வாருங்கள் " (இசை. 48; 20) என்ற வசனம் நமக்குச் சொல்லப்பட்டதாக எண்ணிக் கொள்ளக் கடவோம்.

கடைசியாய், நமக்குக் கீழ்ப்பட்டவர்களிலே, ஏழை எளியவர்களிலேயும், ஆண்டவருடைய சாயலை, அவருக்கு மிக அருமையானவர்களைக் கண்டு கொள்ளக்கடவோம். சிறியோருக்கு எப்போதும் தயவும் தாட்சணியமும் காண்பிக்க வேணும். சிறு பிள்ளைகளைச் சம்மனசுகள் போல் மதித்து, அவர்களைக் காவல் பண்ணுகிற சம்மனசுத் தோழர்கள் பரலோக பிதாவின் திருமுகத்தை ஓயாமல் தரிசித்துக் கொண்டு இருக்கிறது என்றதை (மத். 18; 10) நினைந்து கொள்ளக் கடவோம். அவர்களை ஆண்டவர் எவ்வளவாக நேசித்தார் என்றதைக் கண்டு கொண்டு, நாமும் அவர்களை நேசித்து, அவர்களுக்குத் துன் மாதிரிகை காட்டித் தடை செய்யாமல், நன்முன்மாதிரி காட்டி ஆண்டவரிடம் போக விடுவோமாக (மத். 19; 14). ஏழை எளியவர்கள் யேசுநாத சுவாமியுடைய துன்பப்படுகிற அவயவங்கள். அவர்களுக்கு இரங்குவதைப் போல் புண்ணியம் வேறில்லை. ஏழை எளியவர்களுக்கு நாம் எப்போதும் மரியாதை பண்ணி, அநுதாபம்காட்டி, இயன்ற உதவிகளையும் செய்யவேணும். " உன் பாவங்களைத் தான தருமத்தினால் போக்கு; உன் அக்கிரமங்களை வறியவர்களுக்கு இரக்கஞ் செய்வதினால் அழித்து விடு " என்று வேதவாக்கியம் சொல்லுகிறது (தானி. 4; 24). எளியவர்களுக்குச் செய்ததைத் தமக்குத் தானே செய்ததாக ஆண்டவர் எடுத்துக் கொள்ளுகிறார் என்றது கடைசி நாளில் அவர் வசனிக்கப் போகிற நடுத் தீர்வை வாக்கியங்களினால் விளங்குகிறதே:—" மிகவும் சிறியவர்களான என் சகோதரர்களில் ஒருவனுக்கு நீங்கள் செய்ததை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் " (மத். 25; 40).

இப்படியே, பாவ வழியை முற்றாகக் கைவிட்டு கர்த்தராகிய யேசுக் கிறீஸ்துவை ஏற்றுக் கொண்ட நீங்கள், இனி, அவரிலே வேர் கொண்டு, அவரிடத்தில் நிலை ஊன்றி, அவருடைய தேவ மாதிரிகைப்படி கட்டப்பட்டவர்களாய், அவருக்கு ஏற்ற புனித சீவியம் உள்ளவர்களாய் நடக்கத் தொடங்குங்கள். சருவேசுரனுடைய ஆராதனையையும் உங்கள் இரட்சணியத்தையுமே உங்கள் சீவியத்தின் ஒரே முக்கியமான அலுவலாக நினைத்து நடந்துகொண்டு வாருங்கள். உங்கள் சென்று போன சீவியத்துக்காகப் பழஞ் சலிப்பு உள்ளவர்களாய், பாவத்தை மரணத்திலும் பார்க்க அதிகமாய்ப் பகைத்து, அதிலே உங்களை மறுபடி விழுத்தக்கூடிய சகலத்துக்கும் பயந்து ஓடி, முன் செய்த துரோகங்களுக்குத் தக்கது சகல புண்ணியங்களையும் தேடிச் செய்யுங்கள். உங்கள் மத்தியிலே ஆண்டவருக்குப் பதிலாக இருக்கிற பெரியோருக்கும், சமமானவர்களுக்கும், இளையோருக்கும் உதாரமான சங்கை மரியாதையும் அன்பும் காட்டி, அவர்களிடத்தில் எப்போதும் ஆண்டவரைத் தானே கண்டுகொள்ளுங்கள். “சருவேசுரன் தன் தன் அயலானைப் பற்றி ஒவ்வொருவருக்கும் கட்டளை கொடுத்திருக்கிறார்” என்ற தேவ வாக்கியத்தை (எக்கிளி. 17; 12) நினைவுகூர்ந்துகொண்டு, பிறருக்கு என்னத்திலாவது துன்மாதிரிகையாய் இராமல், இயன்ற நன்மையை எல்லாஞ் செய்யுங்கள். கெட்ட கூட்டாளிகளைப் பற்றிக் கவனஞ் செலுத்துங்கள். சிறியோர் எளியோர்களுக்குக் கை உதவி மெய் உதவி செய்து, உங்களுடைய புண்ணியச் சம்பத்துக்களைப் பெருக்குங்கள். இப்படியே, நீங்கள் பூரணமாக மனம் மாறினவர்களாய், கிறீஸ்து நாதரிலே “புதுச் சிருட்டிகளாய்” (2 கொரி. 5; 17), பழைய பழக்கங்களை, வாடிக்கைகளை, கூட்டாளித்தனங்களை, மட்டுக்கு மிஞ்சின ஊண் உறக்கங்களை, அவசியமற்ற வேடிக்கை விநோதங்களை, சேட்டை சரசங்களை எல்லாம் சுழற்றி எறிந்துவிட்டவர்களாய், தேவ நேசத்திலும் பரலோக வாழ்விலுமே கண் உள்ளவர்களாய் சீவிக்கத் தொடங்க, அளவில்லாத கருணை நிதியான ஆண்டவரும் உங்களுக்கு மேலும் மேலும் அனுக்கிரகங்களைக் கூட்டி, ஒரு நாள் தமது திருச் சமுகத்திலே உங்களுக்கு மோட்ச பரமானந்த வெற்றியின் வாடாத கிரீடத்தையும் சூட்டியருளுவார்,—ஆமென்.

ஏழாம் நாள்

Instruction : On the Mother of God being the Mother of Men

காலைப் போதனை : தேவமாதா மானிடரின் மாதா

நம்முடைய இரட்சணிய அலுவலைச் சுலபமாய்ப் பார்த்து முடிக்கிறதற்கு உதவியாக, நமது புண்ணிய நடக்கைக்குத் துலக்கமான முன்மாதிரிகைகளாக, சருவேசுரன் நமக்குத் தம்முடைய அர்ச்சியசிட்டர்களைத் தந்திருக்கிறார். அவர்களுடைய உதவியை மன்றாடி, அவர்களுடைய புண்ணிய மாதிரிகையைப் பின்பற்றி, நாம் மேலும் மேலும் பாவத்தை விலக்கிப் புண்ணிய சாங்கோபாங்கத்திலே வளரவேண்டியது. சகல அர்ச்சியசிட்டர்களுக்கு உள்ளேயும் மேலான வல்லமையுள்ள ஒரு அர்ச்சியசிட்டர் உண்டு. சகலருக்கு உள்ளேயும் அதிகமாய்ப் புண்ணிய சாங்கோபாங்கத்துக்கு முன் மாதிரிகையான ஒரு சுத்தவாளர் உண்டு. நான் ஆரைக் குறித்து இப்படிச் சொல்லுகிறேன் என்றது, பிரியமான கிறீஸ்தவர்களே, உங்களுக்கு நன்றாய்த் தெரியும். ஆராதிஷ்ட கன்னிமரியம்மாள்தான் இந்த மகா வல்லமையுள்ள சலுகைக்காரி ; இந்த மகா பிரகாசமான முன்மாதிரிகை. கன்னிமரியம்மாள் சருவேசுரனுடைய தாயாராய் இருக்கும் இணையில்லாத பாக்கியத்தைப் பெற்றபடியால், சகல அர்ச்சியசிட்டர்களுக்கும் இராக்கினி ஆமே. இந்தப் பாக்கியவதியான தேவமாதா நம்முடைய மாதாவாகவும் இருக்கிறார். இதனால், அவர் நமது பேரில் குன்றாத கரிசனையும் உருக்கமான அன்புங் கொண்டு, தம்முடைய திருக்குமாரனுக்கும் நமக்கும் இடையில் மத்தியஸ்தியாக நின்று, நமது அவசியங்களில் எல்லாம் நமக்கு உதவி செய்வதற்குத் தடையில்லாத வல்லமை உள்ளவராய் விளங்குகிறார். இந்தப் பரம மாதாவை நாம் சங்

கித்து மன்றாடி, நம்முடைய பெலவீனம் எவ்வளவுக்கு இடந்தருமோ அவ்வளவுக்குக் கண்டு பாவிப்போமானால், நமக்கு இம்மையிலும் மறுமையிலும் கணக்கில்லாத நன்மைகளுக்கு வழியாகும்.

1. தேவமாதாவாகிய அர்ச். கன்னிமரியம்மாள் நம்முடைய மாதாவுமாம். அது எப்படியென்றால் அவர் புதிய ஏற்பாட்டிலே பழைய ஏவாளுக்குப் பதிலாய் எமக்குத் தரப்பட்ட புதிய ஏவாள் ஆனபடியாலாம். எம் ஆதித் தாயான பழைய ஏவாள் எமது சுபாவமான சீவியத்துக்குத் தாய். நாம் ஏவாளின் பிள்ளைகுட்டிகளாய்ப் பிறந்திருக்கிறோம். அதுபோல, கன்னிமரியம்மாள் எமது சுபாவத்துக்கு மேலான சீவியத்துக்குத் தாயாராய் இருக்கிறார். ஏவாள் இல்லாவிட்டால் நாம் சுபாவப் பிறப்பை அடைந்திருக்கக் கூடாது. கன்னிமரியம்மாள் இல்லாவிட்டால் நாம் யேசுக்கிறீஸ்துநாதர் மூலமாய் ஞானப் பிறப்பை அடைந்திருக்கக் கூடாது. அவர் கிறீஸ்துநாதரைத் தந்ததினாலேயே நாம் அவரிலே சருவேசுரனுக்குப் பிள்ளைகள் ஆனோம். இந்த நியாயத்தினாலேதான் அர்ச். சின்னப்பர் எங்கள் ஆண்டவரை “ அநேக சகோதரருக்குள்ளே முதற் பேறானவர் ” என்று போதித்திருக்கிறார் (ரோமர் 8; 29). ஞான முறையிலே கிறீஸ்துநாதர் மூத்த சகோதரரும், நாம் அவருக்கு இளைய சகோதரருமாய் இருக்கிறோம். இருக்கவே, கன்னிமரியம்மாள் கிறீஸ்துநாதர் வழியிலே நமது மெய்யான தாயார் ஆகிறார். இந்தத் தாய்முறையை அவர், முதன் முதல், தேவசுதன் தமது திருவுதரத்தில் மனுஷனாய் அவதரிக்கச் சம்மதங் கொடுத்தபோதே ஏற்றுக்கொண்டார். கிறீஸ்துநாதருக்குத் தாயாராகச் சம்மதித்தபோதே கிறீஸ்துநாதரின் சகோதரர்களுக்குந் தாயாகிவிட்டார். பின் ஒருகால், சிலுவையடியிலே நின்று எமது ஞானச் சீவியத்துக்கு ஓர் ஊற்றாகும்படி அச் சிலுவையில் நிறைவேறின திருப்பலிக்குச் சம்மதித்துத் தாமும் அதைக் கூட நின்று ஒப்புக்கொடுத்ததினால், அந்த ஞானத் தாய் முறையைச் சுமந்துகொள்ளுகிறவரானார். மூத்த சகோதரனின் தாய் இளைய சகோதரருக்குந் தாய் என்பதிற் சந்தேகமுண்டா ? ஞானத் தலையாகிய கிறீஸ்துவின் தாயார், அவரது ஞான அங்கங்களாகிய கிறீஸ்தவர்களுக்குந் தாயார் என்பதற்கு மாறுண்டா ?

சருவேசுரனுடைய மாதா மானிடரின் மாதாவுமாம் என்றால் இந்த மாதா நம்மில் கொண்டிருக்கிற வருணிக்கக்கூடாத அன்பை நான் எப்படி வருணிப்பேன் ! உலகத்திலுள்ள தாய்மார் எல்லாருள்ளும் ஒரு உத்தம தாய் தன் மக்களுக்குக் காட்டும் அன்பை இதற்கு இணையாக எடுத்துச் சொல்லுவோமோ ? இல்லை ; எமது

பரலோக தாயாரின் அன்புக்கு உலக தாய்மாரின் அன்பு ஒருபோதும் இணை ஆகமாட்டாது. அதற்கு ஒப்புமை சொல்ல வேண்டுமானால், தேவமாதா தம்முடைய “ முதற் பேறான ” திருச்சுதனுக்குக் காட்டின அன்பை மாத்திரம் எடுத்துச் சொல்லலாம். தேவமாதா நம்மில் கொண்டிருக்கிற அன்பு ஒரு வீண் உணர்ச்சி மாத்திரம் அல்ல. அது கிரியைகளால் வெளிப்படுகிற அன்பு ; அந்த மாதாவை எமக்காகத் தம்முடைய திருச்சுதனோடு மத்தியஸ்தியாஸ் நின்று என்றும் மனுப்பேசச் செய்கிற ஒரு அன்பு. அவர் எங்கள் ஆண்டவர் முன் நிலையில் செய்கிற இந்த மத்தியஸ்தம், அவர் நமக்குத் தாய்முறை என்றதினால் அவருக்கு உண்டாகிற ஒரு சுதந்தரம். இது சருவேசுரனுக்கும் சகல மனுஷருக்கும் இடையில் யேசுக்கிறீஸ்துநாதர் ஒருவரே ஏக மத்தியஸ்தர் (1 திமோத். 2; 5) என்ற உண்மைக்கு மாறு அல்ல. ஆண்டவருடைய மத்தியஸ்தம் இன்றியமையாத ஒரு மத்தியஸ்தம் ; மற்ற மத்தியஸ்தங்களையெல்லாம் தனக்குள்ளே அடக்கிய ஒரு மத்தியஸ்தம். ஆனால், யேசுநாதசுவாமிக்கும் நமக்கும் இடையில் நின்று துணைச் செய்கிறவர்கள் எவரெவர்களோ அவர்களெல்லாம் குறைந்த ஒரு கருத்தின்படி ஏற்பட்ட மத்தியஸ்தர்களேயாம். நமக்காக மன்றாடுகிற சுத்தவாளர்கள் எல்லாரும் இப்படிப்பட்டவர்கள். ஆனால், தேவமாதா இவர்கள் எல்லாரிலும் விசேஷித்த மத்தியஸ்தி. அவர் தேவ சுதனின் தாய் என்றபடியால், அந்த மூத்த பிள்ளையிடத்தில் தமது இளைய ஞானப் பிள்ளைகளாகிய நமக்காக மத்தியஸ்தம் பேசச் சகல உரிமையும் உள்ளவர். நாம் அவரிடம் “ எங்கள் மத்தியஸ்தியே ”, “ எங்களுக்காக வேண்டி மன்றாடுகிற தாயே ” என்று பயம் இல்லாமல் போகலாம்.

தேவமாதாவுடைய மத்தியஸ்தம் அவருடைய திருக்குமாரனோடு அளவில்லாத வல்லமை உள்ளது. இந்த மாதா நமக்காக மனுப்பேசிக் கேட்கிறதை உத்தம புத்திரனாகிய யேசுநாதசுவாமி ஒருபோதும் மறுக்கமாட்டார். இதை உங்களுக்கு அத்தாட்சிப்படுத்திக் காட்டவும் வேண்டுமோ ? அத்தாட்சி வேண்டுமானால் ஒன்றே போதும். அதுவும் கைம்மெய்யான அத்தாட்சி. அவதரித்த சருவேசுரனாகிய யேசுநாதர் இப்பூவுலகத்திலே செய்த புதுமைகளுள் எல்லாம் முதற் புதுமை, தம்முடைய தாயாருடைய முகத்துக்காகச் செய்த புதுமையல்லவா ? கானான் என்கிற ஊரிலே ஓர் கலியாணச் சபை நடந்தபோது, ஆண்டவரும் சீஷர்களும் அங்கு போயிருந்தார்கள். மாதாவும் அங்கு இருந்தார். சபை நடத்தினவர்கள் மாதாவுடைய ஆட்களாய் இருக்கவேணும். ஊர்

வழக்கத்தின்படி விருந்தாளிகளுக்குத் திராட்சரசம் பரிமாறிக் கொண்டுவந்தார்கள். காத்திரமற் பலர் வந்துவிட்டதினாற்போலும் இரசம் குறைந்துபோய் விட்டது. கலியாணவீட்டுக்காரருடைய மனக்கோட்டரவு எவ்வளவு ஆகியிருக்கும் என்றதை நாம் ஊகித்துக்கொள்ளலாம். மகா இரக்கமும் அனுதாபமும் உள்ள மாதாவுடைய மனமும் மெத்தப் பாடுபட்டிருக்கும். அவர், திருக்குமாரனுடைய தேவ வல்லமையை அறிந்தவர், ஆண்டவரை அணுகி: மகனே, கலியாணவீட்டில் இரசம் இல்லாமல்போய்விட்டது என்று ஒரு வார்த்தை மாத்திரம் சொல்லுகிறார். தாயுடைய மனக் குறிப்பை அறிந்த தேவ மகன் தமது தேவ பராக்கிரமத்தைக் காட்டி: அதைப்பற்றி உமக்கும் எனக்கும் என்ன ? எனது நேரமும் இன்னும் வரவில்லை என்று தட்டிவிடுகிறார். ஆனால் மகனுடைய குணம் மாதாவுக்குத் தெரியும். இவர் வேலைகாரரைக் கூப்பிட்டு: என் மகனார் சொல்லுகிறபடி செய்ய ஆயத்தமாய் இருந்துகொள்ளுங்கள் என்று அறிவித்துவைக்கிறார். கிறீஸ்தவர்களே, பின்பு நடக்கிற ஆச்சரியத்தைக் கவனமாய் இருந்து பாருங்கள். கலியாணவீட்டுக்காரருடைய முடையைத் தீர்க்கிறது மாதாவுடைய அலுவல் அல்ல, மகனாருடைய அலுவலும் அல்ல. மானிட கோலந் தாங்கி வந்த சருவேசுரன், தமது தேவ ஆலோசனைகளின்படியே புதுமைகள் செய்கிறதற்கு என்று குறித்து வைத்த நேரமும் இன்னும் வரவில்லை. ஆனாலும், மானிடரின் தாயான இந்தத் தயாபரமுள்ள மாதா ஒரு மனங்காட்டிப்போட்டதற்காக—கவனித்துக் கொள்ளுங்கள், மாதா புதுமை செய்யச் சொல்லி வெளிப்படையாகக் கேட்டவருமல்ல—அவர் ஒருமனங்காட்டிப் போட்டதற்காக, என்கிறேன், தம்முடைய மாதாவைத் திருப்தியாக்குகிறதற்காக ஆண்டவர் எவரும் ஒருபோதும் கண்டு கேட்டு அறியாத ஒரு மகா புதுமையைச் செய்கிறார். வேலைகாரரை அழைத்து, கிணற்றடியில் கை கால் கழுவும்படி நிறைத்துவைத்திருந்த ஆறு பெரிய சாடிகளையும் கொண்டுவரச் செய்து, அவைகள் அந்தப்படியே முதற்தரமான முந்திரிகை இரசம் நிறைந்தவைகளாய்ப் போகப்பண்ணுகிறார். இதைக் கண்ட பின்னும் மாதாவுடைய மனுப்பேசுதல் மகனாரின் சமுகத்திலே மட்டில்லாத வல்லமை உள்ளது என்றதற்கு அட்டிசொல்லுகிறவர்கள் இருக்கக்கூடுமோ ?

2. தேவமாதா எமது மட்டிற் கொண்டிருக்கிற தாய் முறையைப்பற்றிச் சந்தேகம் இல்லை. அவருக்கு எமது பேரில் இருக்கும் அன்பு ஆதரவும், அவர் எமக்காக அளவில்லா வல்லமையோடு மத்தியஸ்தியாக நிற்க ஆயத்தமாயிருக்குந் தன்மையும் எவ்

வளவோ ஆறுதல் தருகிற காரியங்கள். ஆனபடியால், நாம் அவருடைய சலுகையை நிறைவாய் அடைந்துகொள்ள வேணும். அதற்கு நாம், முதன்முதல், அவர் எவ்வளவு சங்கைக்குப் பாத்திரமாயிருக்கிறாரோ அவ்வளவாக அவரைச் சங்கிக்கவேணும். அவருடைய இணையில்லா மகிமைகளை அறிந்தவர்கள் அவரைச் சங்கியாமலிருக்கவும் முடியுமோ? தேவமாதா என்றால் படைக்கப்பட்ட சகல சிருட்டிகளுக்குள்ளேயும் மகா உந்தமான, மகா தேவ அலங்காரம் பொருந்திய சிருட்டி. சீவியராகிய தேவன் தங்கிய சீவியமுள்ள திருக்கோவில். அதினால், சகல தேவதூதர்களுக்கும் மேலாக உயர்த்திவைக்கப்பட்ட பரலோக பூலோக அரசி. இவ்வளவு மகிமைப் பிரதாபம் உள்ள உன்னத தேவ பீடத்தை, வானோர்க்கு அரசியை வணங்கிப் போற்றுவது மானிடராகிய எமக்கு மாத்திரமல்ல சம்மனசுகளுக்கும் கடமையாமே. உலக அரசன் ஒருவன் யாதொரு பட்டம் அளித்துக் கனம்பண்ணியவனை ஊரவர்களும் கனம்பண்ணக் கடன் என்றால், சருவேசுரன் சகல பட்டங்களுக்கும் மேலான ஒரு பட்டம் அளித்து, சகல மனுஷர் சம்மனசுகளுக்கும் மேலாகக் கனம்பண்ணியிருக்கிற தேவதாயாரை நாம் வணங்காதிருப்போமோ? இருந்தால் தேவபழி சூழாதோ? கிறீஸ்தவர்களே, நாம் தேவமாதாவுக்குச் செய்கிற வணக்கத்தின் தன்மையைப்பற்றி விசுவாசிகளாகிய உங்களுக்குப் பிரித்துக் காட்ட வேண்டியதில்லை. அது தேவஆராதனை அல்ல. மேலான ஒரு வணக்கம். தேவனுக்குச் செய்கிற இணையில்லாத ஆராதனை நமஸ்காரங்களை நாம் படைப்புண்ட எந்தச் சிருட்டிக்காவது செய்யப்படாது; செய்தால், அது விக்கிரக ஆராதனை என்னும் தேவதுரோகமாய்ப் போய்விடும். ஆனால், சிருட்டிக்கப்பட்டவர்களுக்குச் செய்யத் தக்க வணக்கங்களுளெல்லாம், சிருட்டிகளுள் அதி உந்நத சிருட்டியாய், எவர்க்குங் கிட்டாத மகிமைச் சிலாக்கியங்கள் உள்ளவராய் வைக்கப்பட்டிருக்கிற தேவமாதாவுக்கு மேலான வணக்கம் செலுத்துகிறோம். எமக்கு அவர் ஒரு தேவதை அல்ல. தேவன் ஒருவரே உண்டு. தேவதை வணக்கம் ஆகிய விக்கிரக ஆராதனை சத்தியவேதத்தில் இல்லை. அவர் நமக்கு அன்புள்ள மாதா; தேவனின் மாதா. அதினால், நாம் அவரை எம்முடைய முழு இருதயத்தோடும் முழுச் சவியோடும் வணங்கிப் புகழவேணும். அவருடைய சகல திருநாட்களையும் ஆன முழுச் சிறப்புகளோடும் கொண்டாடவேணும். அவருடைய மகிமைகளை நாவாலும் பாவாலும் எடுத்து ஓத வேணும். அவரைப் பிறரும் அறியும்படி வாயாலும், நமது எழுத்துக்கள், நாம் பரப்பும் புத்தகங்கள் முத

வியவைகளாலும் பிரயாசப்படவேணும். அவரை ஐயையோ அறியாமல் இகழுகிற பதிதருடைய வாயை அடக்கி அறிவுச்சுடர் கொளுத்தவேண்டும். பிள்ளைகளுக்குத் தங்கள் தாயைப்பற்றி எவ்வளவு ரோசம் உண்டோ அவ்வளவாக, அதிலும் மேலாக, நம்முடைய தாயாராகிய தேவதாயாரைப்பற்றி நமக்கு ரோசம் இருக்கவேணும்.

இவ்விதமாய் நாம் அவரைச் சங்கிப்பதிலே ரோசம் உள்ளவர்களாய் இருந்தால், அவரை எம்மால் ஆன அளவு பலனுள்ள விதமாய், அதாவது அவர் எமது விண்ணப்பங்களைக் கேட்டுத் தந்தருளத்தக்க மாதிரியாய் மன்றாடவுந் தூண்டப்படுவோம். மன்றாடும்போது, இரண்டு விதத்திலே மிதந் தப்பிப் போகாமல் பார்த்துக்கொள்ளவேணும். அதாவது மாதாவுடைய மன்றாட்ட உதவியிலே குருட்டு நம்பிக்கையும் ஆகாது; அவநம்பிக்கையும் ஆகாது. சில தடவைகளில் நாம் கேட்கிற மன்றாட்டுகள் சருவேசுரனுக்குத் துரோகமானவைகளாயிருக்கும். அதெப்படியென்றால்: நாம் சற்றேனும் மனந்திரும்பாமல் இருந்துகொண்டு, சருவேசுரன் நமக்குத் தண்டனையையே ஆயத்தம்பண்ணிவைத்திருக்கச் செய்துகொண்டு, மாதா நம்மை இரட்சிக்கவேணும் என்று கேட்கிறோம்; நமக்குப் பல பல உதவிகளைச் செய்யவேணும் என்று மன்றாடுகிறோம். தேவ கற்பனைகளை அனுசரிப்பதற்கு மகா "விசுவாசியாயிருக்கிற கன்னிகை"யாகிய தேவதாய், இப்படி நாம் தேவ கற்பனையை மீறி நடந்துகொண்டிருக்க உதவி செய்வாரோ? சில தடவையிலே நமது மன்றாட்டுகள் தேவதாயாருக்குத் துரோகமானவைகளாய் இருக்கும். அவருக்கு நாம் ஏற்ற பிள்ளைகளாய் இருக்கக் கொஞ்சமும் கவனியாமல், அவருடைய முகத்திலே கரி பூசுவதுபோல அசுத்த துர்க் கிரியைகளிலே புரண்டுகொண்டு அவரை மன்றாடினால், "மகா பரிசுத்த மாதா"வாகிய அவர் நமக்கு முகங்கொடுக்க மாட்டாமல் வெறுப்பு அடைந்துபோவார் ஒழிய, நமது மன்றாட்டைக் கேட்பார் அல்ல. கடைசியில் நமது மன்றாட்டுகள் சில தடவை நமக்கே மாறானவைகளாயிருக்கும். நாம் நமது நித்திய கேட்டுக்குக் காரணமான உலக செல்வம், மகிமை முதலியவைகளையும் சில தடவை கேட்டுப்போடுகிறோம். இவ்வித மதிமோசமான காரியங்களை "மகா புத்தியுடைத்தான கன்னிகை"யான தாயார் ஒருபோதும் நமக்குத் தரமாட்டார்.

நாம் இப்படியே மாதாவிலே குருட்டு நம்பிக்கை வைத்துக் கேட்கக்கூடாத விதமாய்க் கேட்டு, கேட்கத் தகாத காரியங்களைக் கேட்டு அவர் நமக்குத் தாய்முறை கொண்டிருக்கிற சிலாக்கியத்தைப் பழுதாக்கிப்போடாமல் இருப்பதோடு, அவருடைய மன்றாட்

டிலே அவநம்பிக்கையும் கொள்ளாமற் கவனமாயிருக்க வேணும். நாம் தக்கவிதமாய்ப் பண்ணுகிற மன்றாட்டை மாதா எப்போதும் கேட்டுத் தந்தருளுவார். "கேளுங்கள் கொடுக்கப்படும்" என்று தம்முடைய திருச் சுதன் சொல்லிய தேவ வாக்கை மாதாவும் தமக்குத் தக்கபடி தம்முடைய வாக்காக்கி: மக்களே நீங்கள் தாயாகிய என்னிடம் கேளுங்கள். அது என்னுடைய திருக்குமாரனாற் கொடுக்கப்படும் என்று சொல்லுகிறவர் போலிருக்கிறார். ஆனால், தேவ திருச்சுதனை நாம் மன்றாடும்போது சில தடவைகளில் அவர் நமது விசுவாசத்தையும் தாழ்மையையும் விடாப்பிடியையும் பரிசோதிப்பதற்காகவும், நமது பெறுபேறுகளை அதிகப்படுத்துவதற்காகவும் கேட்பதையெல்லாம் உடனே தந்தருளிவிடாமல் தாமதம்பண்ணுவதுபோல, தேவதாயும் நமது மன்றாட்டை உடனே தந்துவிடாமற் தாமதம்பண்ணக்கூடும். அவ்வேளைகளில், நாம் அவநம்பிக்கைப்பட்டு அவருடைய பாதத்தை விட்டு அகன்றுவிடப்படாது. எப்போதும் நிறைந்த நம்பிக்கையோடு கேட்டுக்கொண்டேயிருக்க, தாயார், நாம் நியாயமாய்க் கேட்பதையெல்லாம், நிச்சயமாய்த் தந்தருளுவார்.

இன்னும், மாதாவைச் சீக்கிரமாக நமக்கு உதவிசெய்யப்பண்ணுவதற்கு ஒரு உத்தமமான வழி உண்டு. அது நமது பெலவீனமானது நமக்கு எவ்வளவில் இடந்தருமோ அவ்வளவில் அவரைப் பின்பற்றுவதேயாம். அவரைப் பின்பற்றுவதே அவருக்கு உத்தமமான புகழ்ச்சி; நமக்கு உதவிசெய்ய அவர் தீவிரிக்கப்பண்ணுவதற்குத் தவறாத உபாயம். நாம் அவரைப் பின்பற்றவேண்டும். ஆனால், அவருடைய ஒப்பு உயர்வு இல்லாத சிலாக்கியங்களிலே, நினைக்கக் கருதக் கூடாத பட்டங்களிலே, நமக்கும் அவருக்கும் அளவில்லாத தூரம். இவைகளுக்காக நாம் அவரைப் புகழ்ந்து, அவருக்குச் சோபனங் கூறி, சருவேசுரனைத் தோத்திரிக்கலாமே ஒழிய, இவைகளிலே நாம் அவரைப் பின்பற்றுகிறதென்றது இல்லை. ஆனால், நாம் அவரை அவருடைய பரிசுத்ததனத்திலே, அந்தப் பரிசுத்த தனத்தின் நிறைவிலே, அந்தப் பரிசுத்ததனத்தின் கடைசி பரியந்தமான நிலைமையிலே பின்பற்றலாம்; பின்பற்றவும் வேணும். அவருடைய பரிசுத்ததனமென்றால் சகல சுத்தவாளர்களுடைய பரிசுத்ததனத்துக்கும் மேற்பட்டது அல்லவோ? அதை நாம் கண்டுபாவிப்பது எப்படி? அப்படியானால், சருவேசுரன் அளவில்லாப் பரிசுத்தராயிருக்க நாம் தம்மைக் கண்டு பாவிக்கவேணும் என்றாரே. "உங்கள் பிதா சாங்கோபாங்க பரிசுத்தராயிருக்கிறதுபோல நீங்களும் பரிசுத்தராயிருங்கள்" (மத். 5; 48) என்

றது வேதவாக்கியம் அல்லவோ? ஆமாம். நம்மால் இயன்றளவு நாம் மாதாவின் பரிசுத்ததனத்தைக் கண்டுபாவிக்கவே வேணும். அவர் சகல அந்தஸ்திலும் உள்ளவர்களுக்கு உத்தம முன்மாதிரிகை. அர்ச். அம்புறோஸ் வசனித்த பிரகாரம் "மரியம்மாள் தன்னுடைய ஒரு சீவியமானது சகலருக்கும் மேல்வரி ஆகும்படி விளங்குகிறார்". அவருடைய நடக்கையிலிருந்து நாம் சருவேசுரனுக்குச் சகலத்திலும் பிரமாணிக்கமாயும், நம் அயலார் மட்டில் நீதியும் பிறர்சிநேகமும் உள்ளவர்களாயும், நமது மட்டில் உலகப்பற்று இல்லாமல் நம்மைக் கட்டுமட்டாய் நடப்பிப்பவர்களாயும் இருக்கக் கற்றுக்கொள்ளுகிறோம். இளைஞர்கள், பாவச் சமயங்களை விட்டோடித் தங்கள் இருதயங்களைத் தூய்மையாய்க் காக்கக் கற்றுக்கொள்ளலாம். வயோதிகர்கள், தங்கள் குடும்பங்களையும் கீழ்ப்பட்டோரையும் செவ்வையாய் நடத்தித் தேவபயத்தில் ஒழுகப் படித்துக்கொள்ளலாம். நாம் துன்ப துரித வியாகுலப்படுகிற நேரங்களிலும் அவர் நமக்கு முன்மாதிரிகை. நமது மனங் களிகூர்ந்திருக்கிற வேளைகளிலும் முன்மாதிரிகை. ஆனந்த சந்தோஷந் தேங்குகிற கொண்டாட்டங்களிலும் முன்மாதிரிகை. நமது சீவியத்தின் எல்லாச் சந்தர்ப்பங்களிலுமே தேவமாதா எமக்கு நல்ல வழிகாட்டியாக எதிர்ப்படுகிறார். மாதாவுடைய பரிசுத்தத்தின் நிறைவிலேயும் நாம் அவரைப் பின்பற்ற வேணும். அது எப்படி? ஆ பிரியமானவர்களே, நாம் புண்ணிய வழியிலே பெலவீனமாய்த் தடக்கி விழுகிற பாலர்கள். மாதாவுடைய புண்ணிய சாங்கோபாங்கத்தைக் கண்டு நமது குறைகளைத் தெரிந்துகொண்டு, இயன்ற அளவிலேயாவது அவரை அணுக நம்மைத் தூண்டிக்கொள்ளுவதுதான் அவருடைய பூரண புண்ணிய நிலையை நாம் கண்டுபாவிக்கிறதற்கு வழி. அவருடைய செப தபங்கள் எவ்வளவு பத்திவேகம் உள்ளவைகள்! நமது செபங்களோ எவ்வளவு பராக்கும் வெதுவெதுப்பும் நிறைந்தவைகள்! அவருடைய தேவசிநேகம் எவ்வளவு மீசுரமானது! நமது தேவசிநேகத்துக்குச் சிநேகம் என்ற பெயர்தானும் செல்லுமா? அவருடைய பிறர் சிநேகம் எவ்வளவு உண்மையான, தயாபர இரக்கமுள்ள பிறர்சிநேகம்! நாமோ நம்மையே சிநேகித்து நமக்குள்ளே ஒடுங்கிக் கிடக்கிறோம். இந்த மகா வித்தியாசத்தைக் கண்டு, சலித்து, இனியாவது நாம் தேவமாதாவின் உன்னத முன்மாதிரிகையைக் கண்முன்பாக வைத்துக்கொண்டு, அவரை அதிகம் அதிகம் முடுகி முடுகி நடந்து, அவருக்கு ஏற்ற பிள்ளைகளாக, தாயைப் போன்ற பிள்ளைகளாக வரக்கடவோம். அதுவும் ஒரு நாள் இரு நாள் அல்ல, அவரை நாம் அவ

ருடைய பரிசுத்ததனத்தின் கடைசி பரியந்தமான நிலைமையிலேயும் கண்டுபாவிக்க வேணும். மாதாவும் தமது சீவியத்தின் முதல் க்ஷணம் தொடங்கி தமது பாக்கியமான மரணம் வரையும் நாள் ஒருவண்ணம் பொழுது ஒருமேனியாய்த் தேவசிநேகத்தில் வளர்ந்து வந்து, அன்பின் நிறைவினாலே மரித்து, அன்புமயமான தம்முடைய சுதன் பாதத்தை அடையப் போனாரே. நாமோ, நன்றாய்த் தொடங்கியும் பலமுறையும் தீதாய் முடித்துப்போடுகிறோம். ஏனெனில், நாம் மாதாவைக் கண்டுபாவித்து மாதாவுக்கு ஏற்ற பிள்ளைகளாய் நடக்கப் பிரயாசப்படுவதில்லை. அவரை வணங்க, அவரைப் பிரார்த்திக்க, நமக்கு மகா பிரியம். அவரைப் பின்பற்றவோ பிரியமில்லை. ஆனால், பின்பற்றுவதிலேதான் எல்லா நன்மையும் அடங்கியிருக்கிறது. அவரை அவருடைய மகிமைக்குத் தக்கபடி சங்கிப்பது போல, அவரை உத்தம விதமாய் மன்றாடி, விசேஷமாய் அவரை நம்மால் இயன்ற அளவு பின்பற்ற வருந்துவதற்கு இன்றைக்கே தொடங்கிக்கொள்ளக் கடவோம்.

ஆனால், பிரியமான கிறீஸ்தவர்களே, நாம் தேவமாதாவுடைய சொந்த மக்கள். அபாத்திரமானவர்களென்றாலும் அவரோடு கூட நின்றுகொள்ளுகிற மக்கள். நம்மைச் சூழ்ந்திருக்கிற ஆயிரமாயிரம் பிறசமயிகளோ அவருடைய தாய்க்குரிய அன்பை உணராமலும், அவருடைய நேச சுதனின் ஈடேற்றுகிற நாமத்தை அறியாமலும் அஞ்ஞான இருளிலே கிடக்கிறார்களே. நம்முடைய தாய்த் தேசமோ இன்றைக்கும் "அந்தகாரத்திலும் மரண நிழலிலும்" தங்குகிறதே. எங்கள் ஆண்டவர் மனுக்குலத்துக்காக மரித்து இப்போது இரண்டாயிர வருஷம் சென்றிருந்தும் இன்றைக்கும் நம்முடைய செல்வ நாடு அஞ்ஞானத்தில் அமிழ்ந்தியிருக்கிறதே. இரட்சகரின் தாயே, மானிடரின் மாதாவே, ஆராதிஷ்ட அமலோற்பவ அற்புத நேசக் கன்னிகையே, எங்களுடைய தேசத்தின் மேற் கருணையாகக் கண்ணோக்கிப் பாரும். இங்கே ஆயிரக் கணக்கானோர் பதினாயிரக் கணக்கானோர் உமக்கு அன்னியராய் இருக்கிறது மானிடரின் மாதா என்ற உமது திவ்வியமான அருமைப் பட்டத்துக்கு ஒரு பெருங் குறைச்சல் அல்லவோ? தாயே, எங்கள் நாடு சீக்கிரமாய் மனந்திரும்ப மன்றாடியருளும்.—ஆமென்.

HOMILY

On Preparation for Holy Communion

மாலை விரித்துரை:

தெய்வீக விருந்துக்கு ஆயத்தம்

"Venite ad me omnes qui laboratis et onerati estis et ego reficiam nos"—Matth. XI; 28.

"வருத்தப்பட்டுப் பாரஞ் சுமக்கிறவர்களே, நீங்கள் அனைவரும் நம்மிடத்தில் வாருங்கள்; நாம் உங்களுக்கு ஆறுதல் தருவோம்" (மத். 11; 28).

எவ்வளவு மனங் குளிரச் செய்கிற,—தேனிலும் அதிக மதுரமாய் இருக்கிற—ஒரு வாக்கியம் இது! கடைசி நாளிலே "என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே உங்களுக்கு என்று ஆதிமுதற் கொண்டு ஆயத்தம்பண்ணி இருக்கிற இராச்சியத்தைச் சுதந்தரித்துக் கொள்ள வாருங்கோ" என்று தம்முடைய தெரிந்து கொள்ளப்பட்டவர்களுக்குத் திருவுளம்பற்றப் போகிற அவர் தாமே, இப்போது, பிரியமான கிறீஸ்தவர்களே, உங்கள் ஒவ்வொருவரையும், இதோ சற்பிரசாதக்கூட்டிலே இருந்துகொண்டு, அன்புவழிகிற கண்களால் நோக்கி: "வருத்தப்பட்டுப் பாரஞ் சுமக்கிறவர்களே, நீங்கள் அனைவரும் நம்மிடத்தில் வாருங்கள்" என்று கூப்பிடுகிறார்.

1. வருத்தப்பட்டுப் பாரஞ் சுமக்கிறவர்கள் ஆர்? மனுமக்களாகிய நாம் எல்லாருந் தானே. நம்முடைய ஆத்துமக் கவலைகள் எவ்வளவு! சரீரக் கவலைகள் எவ்வளவு! எத்தனை பாவச் சோதனைகள் நம்மை அலைத்து உலைத்துக் கொண்டு இருக்கிறது! நமது புத்தி எவ்வளவு குருட்டாட்டம் உள்ளது! சித்தம் எவ்வளவு பெலவீனம் உள்ளது! மனம் அதோ இதோ என்று எவ்வளவாகத் தத்தளித்து அங்கலாய்த்துக் கொண்டு இருக்கிறது! நமது பழைய பாவங்களின் பாரம் எவ்வளவு ஒரு பளுவுள்ள சுமையாய்க் கிடக்கிறது! பொறுக்கப்பட்ட பாவங்களைப் பற்றியும் பயம் இல்லாமல் இருக்கப்படாது என்று வேத வாக்கியம் சொல்லுகிறதே (எக்கிளே. 5; 5), நமக்கு என்ன தீர்வை கிடைக்குமோ, இனிப் பாவ வழியை விட்டுத் தவஞ் செய்யக் காலந் தரப்படுமோ, புண்ணிய வழியில் திடமனதோடு நடப்பதற்கு வேண்டிய துணிவு வருமோ

என்று எவ்வளவாகப் பதக்ளிக்கிறோம்! நம்மை ஓயாமற் பாவத்துக்கு ஏவிக் கொண்டு இருக்கிற சரீரமானது நமக்கு எவ்வளவு பெருஞ் சுமை? நம்மை எப்போதும் மாமிசத்தின் அடிமைத்தனத்துக்குச் சிறையாக்கிக் கொண்டு வருகிற இந்த "மரண சரீரத்தில் நின்று யார் என்னை விடுதலையாக்குவார்" என்று, பலமுறையும், நாம் அர்ச். சின்னப்பரோடு (ரோம. 7; 24) கூச்சலிட வேண்டி வருகிறது அல்லவா? அல்லாமலும் "ஆத்துமத்துக்குப் பெருஞ் சுமையாய் இருக்கிற" (ஞானா. 9; 15) இந்தச் சரீரத்திலே எத்தனை நோய்கள் பிணிகள்! இந்தச் சரீரத்தை வளர்த்துக் கொள்ளுவதற்கு எவ்வளவு பாடுபட வேண்டி இருக்கிறது! எத்தனை முறை பசி பட்டினியால், பிழைப்பில்லாமையினால் வாடுகிறோம்! உலகம் நமக்கு எவ்வளவு கொடுமை உள்ள ஒரு அயலாகத் தோற்றுகிறது! யாரைப் பார்த்தாலும் நமக்குக் கேடு சூழ என்றே உருவெடுத்து இருக்கிறது போலக் காணப்படுகிறார்களே! நாம் தப்பிப் பிழைப்பது சாரையின் வாய்ப்பட்ட தேரை பிழைப்பதிலும் அருமை போலக் காணப்படுகிறதே! இப்படியே, ஒவ்வொருவருக்கும் அவரவருக்குப் பொருந்திய துன்பங்கள் துயரங்கள், கேடுகள் பாடுகள், முறைப்பாடுகள் உண்டு. எல்லாரையும் நம் இரட்சகராகிய ஆண்டவர், சருவ வல்லமை உள்ள கடவுளாகிய யேசுநாதர்—நீங்கள் அனைவரும் நம்மிடத்தில் வாருங்கள் என்று ஆதரவோடு அழைக்கிறார்.

2. தாம் படைத்த சகல கோடாதி கோடி படைப்புக்களுக்கும் அளவில்லாத தேவ இரக்கங் காண்பிக்கிற அதிசய அன்புள்ள கடவுளாகிய நம் ஆண்டவர், நம்மை ஏன் அழைக்கிறார்? நம்மைக் கண்டித்துப் பயமுறுத்தவோ? நம்முடைய நன்றிகேடுகளுக்குத் தக்க தண்டனையைத் தரவோ? இல்லை, இல்லை, இல்லை. நம்முடைய துன்ப துயரங்களைப் போக்கி நம்மைத் தேற்றிவிட. "நாம் உங்களுக்கு ஆறுதல் தருவோம்!" ஏழைச் சிருட்டிகளாகிய நாம் பாடுபடக் காண்பது அவருக்கு மனவருத்தம். முன் ஒரு நாள், ஆண்டவர் உலகத்திலே சஞ்சரித்த போது, தமது பிரசங்கத்தைக் கேட்க வந்தவர்கள் பசித்திருக்கிறதைக் கண்டு: "இந்தச் சனங்களுக்காகப் பரிதவிக்கிறோம்; இவர்களைப் பட்டினியாய் அனுப்பிவிட நமக்கு மனது இல்லை" என்று திருவுளம்பற்றி, ஐந்து அப்பத்தைக் கொண்டு ஐயாயிரம் பேரைப் புதுமையாய்ப் பசியாற்றி அனுப்பினாரே (மத். 16; 9). இந்தத் தேவ இரக்கத்தினால் அல்லவோ ஆண்டவர், நொண்டிகள், சப்பாணிகள், குருடர், செவிடர், ஊமைகளை யூதேயா நாட்டிலும் அதின் சுற்றுப்புறங்களிலும் ஆயி

ரக்கணக்காகச் சுகப்படுத்தினார். நாயீம் பட்டணத்து விதவை, தன் ஒரே குமாரன் செத்துப் போக, துயரம் பொறாமல் அழுது கொண்டு இருக்கிறதை அவ் வழியாய்ப் போன கர்த்தர் கண்டு, மனது உருகி, அழாதே என்று சொல்லி, பிரேதத்தைப் பாடையைச் சுமந்துகொண்டு போனவர்களை நிற்கச் சொல்லி: வாலிபனே எழுந்திரு என்று திருவுளம் பற்றிச் சவத்துக்கு உயிர் கொடுத்து வியாகுல சமுத்திரத்தில் அமிழ்ந்தி இருந்த தாயை மகிழச் செய்தாரே (லூக். 7; 11-15). மூன்று நாள் செத்துக் கிடந்த லாசறுவை நாலாம் நாள் உயிரோடு எழுப்பப் போனபோது லாசறுவின் சகோதரியும் மற்றோரும் அழ, ஆண்டவர் தாமும் " உள்ளத்திற் துடித்துக் கலங்கி " அழுதாரே (அருளப். 11; 33-35). நமக்காகத் தரித்துக்கொண்ட மனுஷ சரீரத்திலே இவ்வளவு இளகிய நெஞ்சு உள்ளவராய் இருக்கிற நம்முடைய கடவுள், அற்ப புழுக்களாகிய நம்மையும் ஒரு பொருட்டாக மதித்து நமக்கு ஆறுதல் தர அழைக்கிறார்.

3. இனி, பிரியமான கிறீஸ்தவர்களே, கர்த்தர் நமக்குத் தருவோம் என்கிற ஆறுதல் எப்படிப்பட்டது என்று தியானித்துப் பாருங்கள். மனுக்குலத்தைப் பிசாசின் அடிமைத்தனத்தில் இருந்து மீட்டு இரட்சிக்க அவர் மனுஷனாய் வந்ததுக்கு மேல் நமக்கு ஆறுதல் உண்டோ ? அவர் நம்முடைய கடவுளாய் இருக்க, இனி நமக்குப் பயம் என்ன ? சஞ்சலம் என்ன ? தத்தளிப்பு என்ன ? அவர் அல்லவோ நம்மைத் தமது உயிரிலும் அருமையாக நேசித்த சிநேகிதர் ? அவர் அல்லவோ நமக்கு மெய் அறிவைத் தருகிற தேவ குரு ? அவர் அல்லவோ நமது சீவியம் என்கிற கப்பலானது தன் துன்ப துயரங்களில் போய் அடைகிற சேமமான துறை ? அவர் அல்லவோ பாவிகளாகிய நாம் போய் ஒதுங்குகிற அடைக்கலம் ? அவர் அல்லவோ ஆத்தும நோய்கள் சகலத்தையும் ஓட்டுகிற ஞான வைத்தியர் ? அவர் அல்லவோ நம்முடைய தாயும் தகப்பனும் ஞானப் பத்தாவும் சகல சம்பத்தும் ? அவர் அல்லவோ நம்முடைய உயிருக்கு உயிரான அற்புதகடவுள் ? மெய்தான், ஆண்டவர் மனுஷனாய் அவதரித்து வந்து நம்முடைய பாவங்களைப் போக்கி நம்மைச் சகல பொல்லாப்புக்களிலும் இருந்து காக்கிறவராய், நம்மில் எப்போதும் அன்பு உள்ளவராய் இருக்கிறதுக்கு மேல் வேறு ஒரு ஆறுதலைத் தேட, வேறு ஒரு ஆறுதலைக் கேட்க, நன்றிகெட்ட பஞ்சைகளாய் இருக்கிற நமக்கு நாக்கு உண்டோ ? துணிவு உண்டோ ? உரித்து உண்டோ ? ஒருபோதும் இல்லையே. ஆனாலும் பிரியமானவர்களே, இதை என்னென்று

எடுத்துச் சொல்லுவேன் ? எங்கே துவங்கி எங்கே முடிப்பேன் ? மனுஷனாய் மண்ணின் மேல் வந்த கடவுள், மனுஷர் எவராவது எப்போதாவது கருத நினைக்கக் கூடாத ஒரு விதத்திலே—அதிசயமான, ஆச்சரியமான, வான அரூபிகளும் பார்த்துத் திகைத்துப் போய் நிற்கத் தக்க தன்மையான விதத்திலே—நமக்கு ஆறுதல் தரச் சித்தமானார். இந்தப் புதுமையை அர்ச். அருளப்பர் வேறு வகையாய் விரித்து எழுதமாட்டாமல் : யேசுநாதர் " இவ்வுலகத்தில் இருந்த தம்முடையவர்களை நேசித்திருந்தபடியே முடிவுபரியந்தம் அவர்களை நேசித்தார் " என்கிறார் (அருளப். 13; 1). முடிவு பரியந்தம் ! இனி, அப்பால் அந்த நேசத்துக்கு இடம் இல்லை. சருவேசுரன் அளவில்லாத வல்லமை உள்ளவராய் இருந்தும், இதற்குமேல் இனி இவ்வுலகத்திலே மனுஷனுக்கு ஒன்றும் செய்ய முடியாது. சருவேசுரன் மட்டுத்திட்டம் இல்லாத செல்வ பொக்கிஷங்களை எல்லாம் தம்மிடத்தில் கொண்டிருந்தும், இதற்கு மேல் ஒன்றை இவ்வுலகத்திலே மனுஷனுக்குக் கொடுக்கமுடியாது. அந்த அளவில்லாத வல்லமையின் செயல் தான் என்ன ? இனிமேல் இல்லை என்ற தேவ செல்வ சம்பத்தின் கொடைதான் என்ன ? நான் அதை எடுத்துச் சொல்லவும் வேண்டுமோ ? ஆண்டவர் திவ்விய சற்பிரசாதத்திலே நம்முடைய ஞானப் போசனமாய் வருகிற புதுமை தானே. ஆர் இதை நம்புவார் ? ஆண்டவர் தம்முடைய திருச் சரீரத்தையும் திரு இரத்தத்தையும் தானே மனுமக்களுக்குப் போசன பானமாகக் கொடுக்க வேணும் என்று தமக்கு இருந்த தேவ தயவுள்ள சித்தத்தை யூத சனங்களுக்கும் சீஷர்களுக்கும் முதன் முதல் அறிவித்த நாளிலே, அந்தச் சனங்கள் எல்லாம் கொந்தளித்து : இது என்ன பித்தலாட்டம் ? இப்படியும் இவர் தன்னை நாம் தின்னக் கொடுக்கலாமோ ? என்று மறுத்துப் பேசினார்களே. அவருடைய சீஷர்கள் கூட முறுமுறுத்து இது என்ன உபதேசம் ? யார் இதைக் கேட்பார் ? என்று சொல்லிக்கொண்டு அவர்களில் அநேகர் ஆண்டவரை விட்டுப் பிரிந்து போய் விட்டார்களே. அப்போது ஆண்டவர் அப்போஸ்தலர்களைப் பார்த்து : நீங்களும் போய்விடப் போகிறீர்களோ ? என்று கேட்டவிடத்திலே, திருச்சபைக்கு அத்திவாரக் கல்லாக நியமிக்கப்படப் போகிற சம்பேதுருவானவர் அவரைத் தெண்டனிட்டு வணங்கி : ஆண்டவரே, நாங்கள் வேறு ஆர் இடத்தில் போவோம் ? தேவரீர் தானே நித்திய சீவியத்துக்கு உரிய வார்த்தைகளைத் திருவுளம் பற்றுகிறவர் என்று சொல்லி அவர் செய்யப் போகிற மகா புதுமையை விசுவசித்தாரே. இந்தச் சம்பவம் நடந்த ஒரு வருஷத்துக்

குப் பிறகு, தாம் பாடுபடுகிறதற்கு முந்திய நாளாகிய பெரிய வியாழக்கிழமை இரவு, நம்முடைய அன்பான கர்த்தர் தாம் வாக்குப் பண்ணியபடியே தம்மைத் தாமே திவ்விய சற்பிரசாதத்தில் நமது ஆத்தும போசனமாகத் தந்தருளினார். " சம்மனசுகளுடைய அப்பத்தை மனுஷன் சாப்பிட்டான் " (77-ம் சங்; 25). வாலிபப் பலத்தை உண்டாக்குகிற கோதுமையையும் கன்னியரை விளைவிக்கும் முந்திரிகை இரசத்தையும் புசித்துப் பானம் பண்ணினான் (சக்கரி. 9; 17).

4. திவ்விய சற்பிரசாதத்திலே, யேசுநாதர் நம்மைத் தம்மிடம் அழைக்கிறது மாத்திரம் அல்ல ; தமது அருகில் விடுகிறது மாத்திரம் அல்ல;—தாம் தாமே நமக்குள்ளே வந்து, நமக்குள்ளே செறிந்திருந்து, நம்மைத் தேற்றியருளுகிறார். " நாம் உங்களுக்கு ஆறுதல் தருவோம் " என்றதை இதிலும் அதிக உதாரமான மாதிரியாய், அற்புதமான மாதிரியாய்—நிறைவேற்றக் கூடுமோ ? நமக்கு வெளியே நின்று ஆறுதலான வார்த்தைகள் சொல்லி அல்ல, ஆனால், நமக்குள்ளே தானே எழுந்தருளி, நமது ஆத்துமத்தோடே குழைந்து, அளவளாவி, நம்முடைய மனதைத் தம்முடைய மனதினால் துலக்கி, நம்முடைய சித்தத்தை தம்முடைய சித்தத்தினால் தாங்கி நடப்பிப்பதைப் போலும் ஒற்றுமை உண்டோ ? அன்பு உண்டோ ? ஆறுதல் உண்டோ ? முன் ஒரு காலம் பழைய ஏற்பாட்டின் நாட்களிலே, சலோமோன் இராசா கட்டின தேவ ஆலயத்தைப் பிரதிட்டை பண்ணின தினத்திலே, சருவேசுரன் தமது தயவைக் காட்டும்படியாக ஒரு பிரகாசமான முகிலானது அவ்வாலயத்தின் மூலத்தானத்தை மூடிக்கொண்டிருக்கச் செய்தாராம். அதைச் சலோமோன் கண்டு அதிசயித்து : " ஐயோ சருவேசுரா, தேவரீர் இந்தப் பூலோகத்தில் மனுஷர் மத்தியிலே வசிக்க வருவீர் என்று யார் நம்பி இருப்பார் ! வானங்களும் வானாதி வானங்களும் தேவரீரை அடக்கமாட்டாதபோது, அடியேன் கட்டின ஆலயம் அடக்குமோ " என்று கூவினாராம் (3-ம். இராசாக். 8; 27). இக்காலம், சருவேசுரனுடைய பிரசன்னத்துக்கு அடையாளமான ஒரு முகில் அல்ல, மனுஷனாய் அவதரித்த சருவேசுரன் தாமே தமது ஆத்தும சரீரங்களோடு, தேவசுபாவத்தோடு—நமது கோவிலில் அல்ல, வீட்டில் அல்ல—நமக்குள்ளே தானே வந்து வீற்றிருக்கிற ஆச்சரியத்தைக் கண்டு நாம் எவ்வளவு அதிகமாய் ஆனந்தக் கூச்சலிட வேணும் !

சற்பிரசாதத்தின் வழியாய் எழுந்தருளி நமக்குள்ளே வருகிறவர் ஆர் ? இசையாஸ் தீர்க்கதரிசி பரவசமாகி, ஆண்டவர் ஒரு மகத்துவமான உயர்ந்த சிங்காசனத்தில் வீற்றிருக்கக் கண்டார். அவருடைய வஸ்திரத் தொங்கலால் தேவாலயம் நிறைந்திருந்தது. சிங்காசனத்தின் மேலே பத்திச்சுவாலகர்கள் என்கிற சம்மனசுகள் நின்றது. ஒவ்வொன்றுக்கும் அவ்வாறு செட்டைகள். அதுகள் சருவேசுரனுடைய கதகதவென்று ஒளி வீசுகிற பிரகாசத்தைக் கண்கொண்டு பார்க்கமாட்டாமல், இரண்டு செட்டைகளால் முகத்தை மூடி, இரண்டு செட்டைகளால் பாதங்களை மறைத்துக்கொண்டு, இரண்டு செட்டைகளாற் பறந்து ஒன்றையொன்று நோக்கி : தளங்களின் கர்த்தரானவர் பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர் ; அவருடைய மகிமைப் பிரதாபத்தினால் பூமி முழுதும் நிறைந்திருக்கிறது என்று சத்தமிட்டது. அந்தச் சத்தத்தினால் வாசலின் நிலைப்படிகள் அசைந்து ஆலயம் புகையினால் நிறைந்தது (இசை. 6; 1-4). தானியேல் தீர்க்கதரிசி கண்ட காட்சியிலே, ஆண்டவருடைய சிங்காசனம் அக்கினிச் சுவாலையாயும், அதின் சக்கரங்கள் எரிகிற நெருப்புமாய் இருந்தது. அவருடைய சந்நிதியில் இருந்து அக்கினி நதி பாய்ந்து கொண்டிருந்தது. ஆயிரமாயிரம் பேர் அவரைச் சேவித்தார்கள் ; கோடா கோடி பேர் அவருக்கு முன்பாக நின்றார்கள் (தானி. 7; 9-10). சருவேசுரனுடைய, வாக்கினால் வருணிக்கக் கூடாத இந்த மகிமைப் பிரதாபத்தைப் பற்றித்தான் : " இசிறவேலின் ஒளியானவர் அக்கினியும் அதின் பரிசுத்தர் அக்கினிச் சுவாலையுமாம் " என்று இசையாஸ் தீர்க்கதரிசி செப்பினார் (இசை. 10; 17). அர்ச். சின்னப்பரும் இதினாலே தான் இராசாதி ராசாவும் கர்த்தாதி கர்த்தாவுமாகிய ஆண்டவர் அண்டக் கூடாத பிரகாசத்தில் வாசம் பண்ணுகிறவர் என்று வசனித்தார் (1 திமோத். 6; 16). பத்திச் சுவாலகரும் முகங் கொடுத்துப் பார்க்க முடியாத கோடி சூரியப் பிரகாசம் பொருந்திய ராசாதி ராசாவும் கர்த்தாதி கர்த்தாவுந் தானே, கிறீஸ்தவர்களே, உங்கள் ஆத்துமக் கோயிலிலே எழுந்தருளி, சற்பிரசாதச் சிங்காசனத்திலே வீற்றிருக்கிறவர். அவருடைய மகிமைப் பிரதாபத்தினால் உங்கள் ஆத்துமம் நிறைந்து போகிறது. தேவநற்கருணையிலே நம்முடைய ஆச்சரிய தேவன் தமது தேவ சுபாவத்தோடு மாத்திரம் அல்ல மனுஷ சுபாவத்தோடும், அதாவது தமது ஆத்துமத்தோடே, திருச் சரீரத்தோடே, திரு இரத்தத்தோடே, முழு மனுஷ தேவனாக அல்லவோ எழுந்தருளுகிறார் ! அவருடைய மனுஷீக ஆத்துமத்தின் சோபன சவுந்தரியங்களை என்னென்று சொல்லுவோம் ! ஒரு தேவ ஆளுடைய ஆத்துமம்,—தன்னைத் தாங்குகிறதற்கு வேறு ஆள் இல்லாமல், தேவன் தாமே தனக்கு உயிருக்கு

உயிராய் நிற்கிற ஆத்துமம்—தேவ ஆளோடு வஸ்துத் தன்மையாய் ஒன்றித்த ஆத்துமம்—தேவ அக்கினிச் சுவாலையால் அக்கினியாய்ச் சொலிக்கிற ஆத்துமம்—இந்த ஆத்துமம், ஆதிப் பெரிய வெள்ளிக்கிழமையன்று அதிபிதாக்கள் சிறைப்பட்டிருந்த பாதாளங்களிலே இறங்கின மகிமையை யோசித்துக் கொள்ளுங்கள். சிலுவை மரத்தில் சரீரத்தை விட்டுப் பிரிந்த தேவ ஆத்துமமானது ஆதி பிதாக்களுடைய வாசஸ்தானத்துக்குப் போகவே, அந்தப் பாதாளத்தின் கனத்த இருள் எல்லாம் பதினாயிரம் சூரியர்கள் ஒருமிக்கக் காலித்து வந்தது போல உக்கிரமான வெளிச்சத்தாற் தேங்கி வழிகிறது. ஆதாம் ஏவாள் முதற்கொண்டு அங்கு இருந்த அதிபிதாக்கள், இராசாக்கள், தீர்க்கதரிசிகள், நீதிமான்கள், பரிசுத்த விதவைகள், மாசில்லாத குழந்தைகள் முதலான புண்ணியவாளருடைய இருதயங்களில் எல்லாம் ஆனந்த வெள்ளம் பெருக்கு எடுக்கிறது. பரலோக ராச்சியத்திலே சூரியனும் சந்திரனும் இல்லாமல் தாமே அந்தப் பரிசுத்த தலம் முழுதுக்கும் ஒளி விளக்காகப் போகிற செம்மறிப் புருவையான (காட்சி. 21; 23) ஆண்டவருடைய ஆத்துமம், பாதாள லோகவாசிகளுக்கு அன்று மோட்ச பிரகாசத்தைக் கொடுத்து விட்டது. இந்தச் சோதிப் பிழம்பான திவ்விய ஆத்துமம், சற்பிரசாதத்திலே உங்கள் இருதயத் தலத்தில் ஞான ஒளி வீசிக் கொண்டு வருகிறது. இன்னும் ஆண்டவருடைய தெய்வீக சரீரத்தின் வல்லமையைப் பாருங்கள். அந்தச் சரீரந் தான் சற்பிரசாதத்தின் வழியாய் நமக்கு நேரிலே தரப்படுகிற ஞானப் போசனம். அந்தத் தேவ சரீரந் தான் நமது ஆத்துமத்தை ஞானவிதமாய்ப் போஷித்து வளர்ப்பது. பூலோகத்திலே ஆண்டவர் சஞ்சரித்திருந்த நாட்களிலே அவருடைய தேவ சரீரத்தின் வல்லமையைக் கண்டோமே. ஆண்டவருடைய திருக் கரந் தொட்ட நோயாளிகள் எல்லாம்—குருடர் செவிடர் சப்பாணிகள் எல்லாம்—சுகமடைந்தார்களே. அந்தச் சரீரத்திலே படிந்திருந்த வஸ்திரத்தின் விளிம்பைத் தொட்ட பன்னிரண்டு வருஷப் பெரும்பாடு நோய்கொண்ட ஸ்திரியும் உடனே சொஸ்தமானாளே. அவ்வேளை, ஆண்டவரும் தம்முடைய சரீரத்தில் இருந்து வல்லமை புறப்பட்டுப் போய் அவளைச் சுகமாக்கினது என்றாரே (லூக். 8; 44-6). எலிசெயு என்கிற தீர்க்கதரிசி இறந்த பின் அவருடைய சவக்கிடங்கிற்குள்ளிருந்த எலும்பின் மேல் விழுந்த ஒரு பிரேதம் உடனே உயிரடைந்து எழுந்து கால் ஊன்றி நின்றதானால் (4-ம் இராசாக். 13; 21), தீர்க்கதரிசிகளுக்கு ஞானங் கொடுக்கிறவருடைய—இனி, ஒரு நாளும் சாவை, அழிவை அறியமாட்டாத—(ரோம.

6; 9) திருச் சரீரம் பட்டால் எவ்வளவு ஆச்சரியங்கள் தாம் நடவாது? இந்த அதி வல்லமை பொருந்திய தேவ சரீரந் தான் தேவ நற்கருணையிலே உங்கள் ஆத்தும போசனம் ஆகிறது. கடைசியாய், உலகத்தின் பாவங்களைப் போக்குகிற தேவ செம்மறிப்புருவையானவரின் தேவ இரத்தமும் உங்கள் வசமாகிறது. இந்த விலைமதியாத இரத்தத்தைப் பற்றி வேத புத்தகம் சொல்லுகிறதைக் கேளுங்கள்: யேசுநாதர் வெள்ளாட்டுக் கடா இளங் காளை இவைகளுடைய இரத்தத்தை ஏந்திக் கொண்டு அல்ல, தம்முடைய சொந்த இரத்தத்தினாலே ஒரே தரம் ஆலயத்தின் மூலத் தானத்திலே பிரவேசித்து, நித்திய இரட்சணியத்தை ஏற்படுத்தினார். காளை, வெள்ளாட்டுக் கடாக்களின் இரத்தமும், ஆசௌசம் உள்ளவர்கள் மேல் தெளிக்கும் கடாவின் சாம்பலும் சரீரத்தைச் சுத்திகரிக்குமானால், தம்மைத் தாமே பலியாக ஒப்புக்கொடுத்த கிறீஸ்துவின் திரு இரத்தம் எவ்வளவாக உங்கள் மனச்சாட்சியைப் பாவக் கிரியைகள் அறச் சுத்திகரித்து விடாது! (எப். 9; 12-14). உங்கள் பாவங்களை எல்லாம் போக்கி உங்களைப் பரம பிதாவுக்கு ஏற்ற சாங்கோபாங்கர்களாக்குகிறதற்கு அவசியமான வரம் எல்லாம் இந்தத் திரு இரத்தத்திலே சம்பூரணமாய் அமைந்திருக்கிறது அல்லவோ !

5. தம்முடைய திருச் சரீரமும் திரு இரத்தமும் திரு ஆத்துமமும் தேவசுபாவமும் அடங்கிய சற்பிரசாத தேவதிரவிய அநுமானத்திலே தம்மை முழுமையாக உங்களுக்குத் தந்து தேவ ஆறுதல்களினால் உங்களைப் பூரிப்பிக்கிறதற்குத் தான் ஆண்டவர் உங்களை அழைக்கிறார்! "நீங்கள் அனைவரும் நம்மிடத்தில் வாருங்கள்; நாம் உங்களுக்கு ஆறுதல் தருவோம்"! இந்த அமிர்தமான வார்த்தையைக் கேட்ட பின்னும் ஆண்டவரிடத்தில் நம்பிக்கையோடு போகாமல் இருப்பீர்களோ? அடிக்கடி போகாமல் இருப்பீர்களோ? ஆனாலும், பிரியமானவர்களே, சற்பிரசாதத்தைப் பெற ஆபத்தப்படும் போது ஒரு சஞ்சலத்துக்குரிய நினைவு உங்களையும் என்னையும் மனம் பதறப் பண்ணுகிறது. பாவிகளுளெல்லாம் கடைகெட்ட பாவியாகிய என்னையும் தேவரீர் அழைக்கிறீரோ? "தேவரீர் ஆர் நான் ஆர்? தேவரீருடைய மகிமைக்கும் அடியேனுடைய நீசத்தனத்துக்கும் எத்தனையோ துலை. என் சரீரம் பார்த்தால் அசுத்தம் நிறைந்த பாத்திரமாய் இருக்கிறதே. ஆத்துமம் பார்த்தால் பாவத்தால் அவலக்ஷண கோலமாய் இருக்கிறதே. உமது அருகில் எப்படி முடுகி வருவேன்? முற்காலத்திலே ஓசா என்கிறவன் குருப்பட்டமும் பயபத்தியுமின்றி உம்முடைய பரிசுத்த உடன்படிக்கைப் பெட்டகத்தைக் கை தொட்டதினால் உடனே தானே

செத்து விழுந்தானே. அடியேன் உம்முடைய மெய்யான திவ்விய சரீரத்துக்குப் பயம் இல்லாமல் எப்படி முடிகுவேன்! மோயிசென்கிற தீர்க்கதரிசி உம்முடைய சமுகத்தில் இருந்து திருவாக்கைக் கேட்க நாற்பது நாள் ஒரு அன்னபானமுங் கொள்ளாமல் இருந்தாரே. அடியேன் உம்முடைய சந்நிதியில் உமது திருவசனங் கேட்க மாத்திரமல்ல, உம்மையே என் இருதயத்தில் உட்கொள்ள வருகிறவிடத்திலே, நான் அதுக்கு எத்தனையோ சுத்திபண்ணவேண்டுமே. செந்துரியோன் என்கிற சேர்வைக்காரன் வீட்டிலே வியாதிக்காரனைச் சுகமாக்கத் தேவரீர் எழுந்தருளின போது, அதுக்கு அவன்: என் விடுதியிலே தேவரீர் வர நான் பாத்திரம் அல்லவென்று மகா தாழ்ச்சியோடே ஒல்கி விண்ணப்பஞ் செய்தானே. இப்போது தேவரீர் என் வீட்டில் அல்ல, என் இருதயத்துக்குள்ளே எழுந்தருளுகிற போது அதற்கு என்ன புண்ணிய பேறுகளைக் கொண்டு உம்மைக் கையேற்கத் துணிவேன்.

“ பூலோகத்திலே யாதொரு இராசா ஒரு குடியானவனுடைய வீட்டுக்கு வரக் கிருபை செய்தால், அதற்கு அவன் அனந்த அக்களிப்போடும் பய பக்ஷத்தோடும் வழிகளைச் செம்மை செய்து, வீடு வாசலைத் துப்புரவாக்கிச் சோடித்து எத்தனையோ வணக்கத்தைக் காண்பிப்பான் அல்லோ? அப்படி இருக்கப் பரலோக இராயனை தேவரீரே அடியேன் அண்டையிலே வருகிறபோது நான் என் இருதயத்தில் உள்ள பாவ அழுக்கு எல்லாந் தள்ளி அதை நன்றாய்ச் சுத்தியாக்காமலுஞ் சுகந்த தர்மக் கிரியைகளால் அதைச் சோடிக்காமலும் இருக்கக் கூடுமோ? ஐயோ அநேக தர்ம ஆத்துமாக்கள் சீவியந் தருந் தேவரீருடைய திருச் சரீரத்தைப் பொசிக்கும் பாக்கியம் அனுபவிக்க நியமித்திருக்கும் போது, அதற்கு முன் அநேக நாள் தியானத்திலே இருந்து உம்முடைய மகிமையையுந் தங்களுடைய நீசத்தனத்தையும் நினைத்துத் தாழ்ச்சியில் மூழ்கிப் பத்தியால் மனது சுடர் போல எரிந்து இருப்பார்களே. ஆனால் நான் இந்தத் திவ்விய சரீரத்தோடு ஐக்கியமாகும் பாக்கியம் அனுபவிக்க வந்து, ஒரு நாழிகையுஞ் செவ்வையாய்த் தியானம் பண்ணவுமில்லை; தேவ பத்தியின் சுவாலை என் இருதயத்தில் இன்னம் பற்றி எரியவுமில்லையே.

“ ஆனால், உம்முடைய அண்டையிலே வாராமல் எனக்கு ஈடேற்றங் கிடையாததினால், உம்முடைய அன்புள்ள கிருபைப் பெருக்கத்தை நம்பி வியாதிக்காரனான அடியேன், திவ்விய பண்டிதனாய் இருக்கிற உம்முடைய அண்டையிலே சுகமாக வருகிறேன்; பசித்துத் தவித்திருக்கிற அடியேன், அமிர்தம் பாய்கிற ஊறணியாய்

இருக்கிற உம்முடைய அண்டையிலே திருத்தியடைய வருகிறேன்; இல்லாவாளனாய் இருக்கிற அடியேன், பரலோக இராசாவாகிய உம்முடைய இடத்திற் சம்பத்து அடைய வருகிறேன். தாசனான நான், என்னுடைய ஆண்டவராகிய தேவரீரிடத்திலே சகல சகாய ஆதாரமும் பெற வருகிறேன். இந்த நன்மைகள் எல்லாம் உம்முடைய இரக்கத்தினால் எனக்குக் கிடைக்கிறது அல்லாமல் மற்றப்படி அல்ல.

“ இப்படிப்பட்ட தயையைப் பார்த்து என்னுடைய இருதயம் நேசத்தால் எரிந்து ஆசையாற் துடித்து உம்மை என் ஆத்துமத்தில் வாங்குந் தனையும் ஒரு நாழிகை அநேக நாள் போலே காண்குதே. ஐயோ! என்னுடைய நேசமுள்ள இரட்சகரே, ஆராதனைக்குரிய ஆண்டவரே, எப்போது இந்தப் பாக்கியம் எனக்குக் கிடைக்குமோ? எந்த வேளை உம்முடைய திருப்பாத பங்கயங் கட்டி அணைத்து முத்தி செய்திருக்க எனக்குக் கிடைக்குமோ? எந்த வேளை உம்முடைய திரு ஆத்தும சரீரம் என்னுடைய ஆத்தும சரீரத்தோடே கூடி, என் மனது உம்முடைய சித்தத்தோடே ஒரு மனதாகி, உம்மை வணங்கிப் பூசித்து நேசித்து ஒன்றித்திருக்கக் கிடைக்குமோ? எழுந்தருளுஞ் சுவாமீ.

“ என்னுடைய மனதிற் சுத்தக் குறைச்சலையுந் தர்மக் குறைச்சலையுங் கண்டு அப்பிரசன்னமாய் இருக்க வேண்டாஞ் சுவாமீ. அது ஏதெனில், என்னிடத்திற் புண்ணிய பேறு போதாமைக்கு உம்முடைய திவ்விய மாதா தம்முடைய திரு உதரத்தில் உம்மை எழுந்தருளப் பண்ணின பரிசுத்ததனத்தை உமக்கு நான் ஒப்புக்கொடுக்கிறேன். இதல்லாமல், இவ்வுலோகத்திலே தர்ம ஆத்துமாக்கள் இந்தத் திவ்விய சற்பிரசாதத்தை வாங்கும் பாக்கியம் அனுபவிக்கச் செய்த அநுசுத்தியும், பரலோகத்தில் தேவ தூதர் உம்முடைய மனுஷீகத்துக்குச் செலுத்துகிற நமஸ்கார ஆராதனை பத்தி பக்ஷமுமாகிற இந்தச் சுகிர்தப் பேறு எல்லாத்தையும் நான் கேட்டு வாங்கி, அதுகளால் என்னுடைய ஆத்துமத்தை அலங்கரித்து, என் இருதயத்தில் உம்மை எழுந்தருளப் பண்ண அபேட்சையாய் இருக்கிறேன். எழுந்தருளுஞ் சுவாமீ, எழுந்தருளும்”.

CONCLUSION
A Call to Spiritual Combat

முடிவுரை
ஞானப் படையெழுச்சி

> " Qui non mecum est contra me est ; et qui non congregat mecum spargit ". Matth. XII, 30.

" என்னோடு நில்லாதவன் எனக்கு விரோதி ; என்னோடு சேர்க்காதவன் சிதறடிக்கிறான் " (மத். 12 ; 30).

நம்முடைய இரட்சணியமாகிய யேசுக்கிறீஸ்துநாதர், தமது தேவ சுபாவத்தின்படியே, படைக்கப்பட்ட சகல வஸ்துக்களுக்கும் இராசாவாம். நமக்காக எடுத்துக்கொண்ட மனுஷசுபாவத்தின்படியும் அவர் பரலோக பூலோக அதிபதி ராசாவாக இருந்து ஆளவேணும் என்பது பிதாவாகிய சருவேசுரனுடைய திருச் சித்தம். " பிதாவானவர் சகலத்தையும் அவருடைய பாதத்திற்குக் கீழ்ப்படுத்தினார் " (1 கொரிந். 15; 27). யேசுக்கிறீஸ்துநாதரிலே மனுஷசுபாவம் ஒரு தேவ ஆளோடு வஸ்துத் தன்மையாக ஒன்றுபட்டிருக்கிறபடியினால், இது அவருடைய மனுச் சுபாவத்திற்கு உரிய ஒரு சுதந்திரம். தேவனும் மனுஷனுமாகிய ஆண்டவருடைய இராசரிக்கம் பூமியின் ஓர் அந்தம் முதல் மற்ற அந்தம் வரையும் மாத்திரம் அல்ல, பரலோகத்தின் மேலும் பாதாளத்தின் மேலும் செல்லுவது. " பரலோகமும் பூலோகமும் பாதாளமும் யேசு என்ற திருநாமத்தைக் கேட்டுப் பயந்து முழந்தாள் மடிக்கும் " (பிலிப். 2; 10). " அவர் நித்தியமாய் அரசாளுவார். அவருடைய இராச்சியத்துக்கு முடிவோ இராது " (லூக். 1; 33). ஆனாலும், யேசுநாதசுவாமி உலக ராசாக்களைப் போல ஒரு இராசா அல்ல; அவர் இராசாக்களுக்கு எல்லாம் அதிபதி ராசாவான தேவ ராசா. அவருடைய இராச்சியம் இவ் உலகத்துக்கு உரிய அழிந்து போகிற இராச்சியம் அல்ல. அது ஊழியுள்ள காலமும் உள்ளது. இதை ஆண்டவர் தாமே பிலாத்து என்கிற ரோமை அதிபதிக்குத் திருவுளம்பற்றினார். நீர் ஒரு இராசாவோ என்று அவன் கேட்க : " உள்ளதைச் சொன்னாய்; ஆனாலும் நம்முடைய இராச்சியம் இந்த உலகத்துக்கு உரியது அல்ல. இந்த உலகத்துக்கு

உரியது என்றால், நம்முடைய சேவகர்கள் நம்மை யூதரிடத்தில் ஒப்புவிக்கப்படாதபடி போராடியிருப்பார்களே " என்றார் (அருளப். 18; 36). பிரியமான கிறீஸ்தவர்களே, இந்த மேலான, நித்தியமான தேவ ராச்சியத்திலேதான், விசுவாசத்தோடு கூடிய ஞானஸ்நானத்தின் வழியாய் நீங்களும் சேர்ந்திருக்கிறீர்கள். அர்ச். சின்னப்பர் வசனித்தபடியே, இருளின் அதிகாரத்தில் இருந்து உங்களை விடுதலையாக்கி தம்முடைய அன்புள்ள திருக்குமாரனின் இராச்சியத்தில் உட்படுத்தின பிதாவுக்கு—சுத்தவாளர்களுடைய சுதந்திரமாகிய பிரகாச வீட்டிற்கு உங்களை அழைத்திருக்கிற பிதாவுக்கு—நீங்கள் என்றும் ஸ்தோத்திரம்பண்ணக்கடவீர்கள் (கொலோ. 1; 12, 13).

நீங்கள் தேவகுமாரனுடைய தேவ ராச்சியத்தில் உட்பட்டவர்கள். இது எவ்வளவு பாக்கியம் ! எவ்வளவு சிலாக்கியம் ! இந்தப் பாக்கியத்துக்கும் சிலாக்கியத்துக்கும் ஒத்த கடமைகளும் உண்டு. ஆண்டவர் தம்முடைய இராச்சியத்துக்குச் சேர்ந்த பிரசைகள் தமக்கு இராச விசுவாசம் உள்ளவர்களாய் இருக்கவேணும் என்று காத்திருக்கிறார். பிரசைகள் எப்போதும் இராசா பக்கமாய் நின்றுகொள்ளவேணுமல்லவா ? இராசாவுடைய நயஞ் சுகம் பிரசைகளுடைய நயஞ் சுகமாக இருக்க வேணும் அல்லவா ? இராசாவுடைய ஆளுகையின் தேசப் பரப்பை அவர்கள் அகலமாக்க ஆவல் கொள்ள வேணும் அல்லவா ? இராசாவுடைய போர்களிலே அவர்கள் பங்குபற்றவேணும் அல்லவா ? இராசாவுடைய வெற்றிவிசயங்களிலே அவர்கள் ஆனந்தம் அடையவேணும் அல்லவா ? இதனால் தான், எங்கள் தேவ ராசாவும் : என்னோடு நில்லாதவன் எனக்கு விரோதி, என்னோடு சேர்க்காதவன் சிதறடிக்கிறான் என்று திருவுளம்பற்றினார். கிறீஸ்தவர்களே, நீங்கள் உறுதிப்பூசுதல் பெற்றபோது யேசுக்கிறீஸ்துநாதருடைய போர்ச் சேவகர்கள் என்ற பட்டத்தைச் சூடிக்கொண்டீர்கள். அவருடைய ஞானப் போரிலே நீங்கள் சேராமல் இருந்தால், அவரோடு நிற்கிறவர்கள் ஆகமாட்டீர்கள். அவருடைய வெற்றி விசயங்களிலே நீங்கள் பங்குபற்றாமலிருந்தால், அவரோடு சேர்க்கிறவர்கள் ஆகமாட்டீர்கள். ஆனபடியால் ஞான ஒடுக்கத்தினால் மனம் மாறி முழுதும் ஆண்டவர் பக்கமாகத் திரும்பியிருக்கிற நீங்கள், இனி ஆண்டவருக்காகப் போராடத் தொடங்கவும் வேணும். முன் பாவ நடக்கையினால் அவருக்கு விரோதியாக நின்று உங்கள் துன்மாதிரிகையினால் அநேகர் கெடும்படியாகச் சிதறடித்துக்கொண்டுவந்த நீங்கள், இனி ஆண்டவரோடு நின்று, அவரோடு அநேகரைச் சேர்த்து, அவருடைய

இராச்சியத்தின் எல்லைகளை விரியப்பண்ண வேணும். உங்கள் ஞான ஒடுக்கம் முடிந்த இந்த மங்கலமான நாளிலே, நீங்கள் அவரோடு கூட நிற்கிறது எப்படி, அவரோடு சேர்ந்து போராடுகிறது எப்படி, என்றதை ஆராய்ந்து பார்ப்பது நன்று. ஆண்டவரோடு நின்று ஞானப் போர் ஆடுவதானால், முதலாவது உங்கள் சத்துரு படையின் பெலத்தை அறியவேணும். இரண்டாவது உங்கள் படையின் பெலத்தை அறிய வேணும். மாற்றான் வலியையும் தன் வலியையும் அறியாமற் சமராடத் தொடங்கப்படாது.

I

அர்ச். சின்னப்பர் கிறீஸ்தவர்களுடைய ஞானப் போராட்டத்தைப்பற்றிப் பேசி, நாம் எதிர்த்துப் போராட வேண்டிய சத்துருக்கள் ஆர் என்றதை வெளிச்சமாக எடுத்துக் காட்டுகிறார்: "நம்முடைய போராட்டம் மாமிசத்தோடும் இரத்தத்தோடும் அல்ல, துரைத்தனங்களோடும் வல்லமைகளோடும், இந்த லோகத்தின் அந்தகார அதிகாரிகளோடும், வானமண்டலங்களிலுள்ள துட்ட அரூபிகளோடுமேயாம்" என்கிறார் (எபே. 6; 12). மனுஷரோடு அல்ல, பிசாசுகளோடுதான் நமக்குப் போராட்டம். இந்த அசுத்த ஆவிகள் ஓயாமல் கிறீஸ்துநாதருடைய இராச்சியத்துக்கு எதிராக முயற்சிபண்ணிக்கொண்டு இருக்கிறது. இந்த இருளின் தூதர்கள் ஆண்டவருடைய இராச்சியத்தை அழிக்க எப்படி வேலைசெய்கிறது? தங்களுடைய சொல்லுக்குக் கீழ்ப்பணிந்து நடக்கிற அடிமைகளாகிய துஷ்ட மனுஷர் மூலமாகத்தான் வேலைசெய்கிறது. பிசாசின் கண்ணியிலே குத்துண்டு நின்று ஆடுகிற துட்டருடைய கூட்டத்தை—பாவ அந்தகாரமாகிய இருளிலே கிடந்து தடவுகிற மனுஷருடைய தொகுதியைத்தான்—ஆண்டவரும் "உலகம்" என்று பெயரிட்டு அழைத்தார்; உலகமானது தம்மைப் பின்பற்றுகிறவர்களுக்கு எப்போதும் சத்துரு என்று காட்டினார். பிசாசுதான் இந்தப் பாவவாளருடைய "உலகத்தின் அதிபதி" என்றும் திருவுளம்பற்றினார் (அருளப். 12; 31).

கிறீஸ்துநாதருடைய அன்பின் இராசாங்கத்தில் இருந்து தங்களை அப்புறப்படுத்திக்கொண்டு நிற்கிற இந்தப் புறம்பான உலகத்திலே—பிசாசைத் தங்கள் அதிபதியாகக் கொண்டு நடக்கிற—பிசாசின் மாய வலையிலே சிக்குண்டு இருக்கிற—இந்தத் துட்டருடைய கூட்டத்திலே, என்னத்தைக் காண்கிறோம்? முதன்முதல், புத்திக் கர்வத்தினால் ஆங்காரங்கொண்டு நிற்கிறவர்களைக் காண்கிறோம். இயற்கைச் சாஸ்திரிகளென்று தங்களைச் சொல்லிக்கொள்ளுகிற

வர்கள், சருவேசுரனுடைய பூலோகம் நடக்கிற மாதிரியைத் தங்கள் அற்ப புத்திக்கு எட்டிய மட்டும் ஆராய்ந்து அறிந்துகொண்டு—சடப்பொருட்கள் ஒன்றிற்கு ஒன்று காரணமாய் நிற்கிற விதத்தை, ஒன்றில் நின்று ஒன்று பிறக்கிற முறையைத் தெரிந்துகொண்டு—நாங்கள் எல்லாம் அறிந்துவிட்டோம்; நாங்கள் அறிந்ததற்கு மேற்பட்ட பரம இரகசியம் இல்லை; பூமியின் ஒரு மூலையில் இருந்து மற்ற மூலைக்கு மின்சார சத்தியினால் பேச அறிந்துவிட்டோம்; முழுப் பட்டணங்களை இலெக்றிக் வெளிச்சத்தால் மூழ்கடித்து இராவைப் பகலாக்க அறிநதுவிட்டோம்; மோட்டார் இயந்திரத்தினால் தேசங்களுக்கு இடையிலே இனித் தூரம் இல்லை என்றபடி வாயுவேகமாய் ஓட அறிந்துவிட்டோம்; ஆகாயக்கப்பல்களால் அந்தரத்தையும் ஊடறுத்துப் பறக்க அறிந்துவிட்டோம். இவ்வளவு வீரவான்களாகிய எங்களுக்குக் கடவுளை ஏன்? இரட்சகரை ஏன்? எங்கள் புத்தி வல்லமையால் நாங்கள் எல்லாம் கண்டுபிடித்து, நாங்கள் சூழ்ச்சிக்கிற சூத்திரக் கருவிகளைக் கொண்டு இவ்வுலகத்தில் சுகமாய் வாழுவதற்கு மேலான சுகமும் உண்டோ? நாங்களே எங்களுக்கு முதலாளிகளொழிய வேறொருவர் இல்லை என்று ஆங்காரம் பேசுகிறார்கள். இப்படியே செல்வர்களும் சிற்றின்பப் பிரியர்களும் கடவுளை மறந்து, பிசாசின் கையில் நின்று ஆடுகிறார்கள். எங்களுக்கு என்ன குறைவு? தின்னக் குடிக்க, உடுக்கப் படுக்க, ஒய்யாரமாய்ச் சீவிக்க, வேண்டிய வசதியெல்லாம் கைவசம் இருக்கிறதே; மறு லோகத்தை ஏன்? இந்த லோகந்தான் கண்கண்ட மோட்சம்; எங்கள் பணமும் பண்டமுந்தான் கண்கண்ட தெய்வம்; எங்கள் இச்சைகளை எல்லாம் நிறைவேற்றுகிறதுதான் பேரின்ப பாக்கியம் என்று பிதற்றுகிறார்கள்.

வேறென்னத்தைக் காண்கிறோம்? இராச்சியங்களும் சனங்களும் ஆண்டவரை வேண்டாம் என்று மறுத்து நிற்கிறதைக் காண்கிறோம். கைத்தொழில்கள் நல்லாய்ப் பெருகி, பிறதேச வியாபாரங்கள் அதிகப்பட்டு, பொருள் வருவாய் மிஞ்சி இருக்கிற சில தேசங்கள், இனித் தங்களுக்கு வேறு ஒன்றும் வேண்டாம், கடவுளை என்னத்துக்கு? மறுமைப் பாக்கியத்தை ஏன் தேடுவான்? என்று கர்வம் பேசி நிற்கிறது. இந்தத் தேசங்கள் தங்கள் யுத்த ஆயத்தங்களிலே, சமாதானப் பேச்சுக்களிலே தளம்பாத நீதியின் ஊறணியாகிய—சமாதானத்தின் ராசாவாகிய—கிறீஸ்துநாதரைக் கணக்கில் வையாமற் புறக்கணித்துவிடுகிறது. மெக்சிக்கோவை, ரூஷியாவைப் பாரத்தால்: "சனங்கள் ஏன் மதங்கொண்டு துடித்தார்கள்? பிரசைகள் ஏன் வீண் காரியங்களைச் சிந்தித்தார்கள்?

பூமியின் அரசர்களும் அதிகாரிகளும் சருவேசுரனுக்கும் அவருடைய கிறீஸ்துவுக்கும் எதிராக ஒன்றுகூடி : நாம் அவர்களுடைய கட்டுக்களை அறுத்து, அவர்கள் சுமையை நம்மை விட்டு எறிந்து போடுவோம் என்றார்கள் " என்ற வேதவாக்கியம் (2-ம் சங். 1-3) எந்தக் காலத்திலும் பார்க்க இந்தக் காலந்தான் அதிக பூரணமாய் நிறைவேறுகிறதாகத் தோற்றுகிறது அல்லவா ? மெக்சிக்கோவிலே ஆண்டவருடைய திருத் தொண்டர்களாகிய குருமாரை, சந்நியாசிகளை, கன்னியாஸ்திரீகளைத் தேசத்தைவிட்டோட்டியும் கொன்றும் ஆலயங்களை அநாசாரப்படுத்தியும் கலகம் விளைக்கிறார்கள். ருஷியாவிலே, அதிகாரம் வேண்டாம், துரைத்தனம் வேண்டாம், சனங்களைச் சனங்கள்தானே ஆளவேணும் என்ற ஒரு கொள்கையைக் கைக்கொண்டு, எல்லாருக்கும் எல்லாம் சமமாய் இருக்கவேணும்; தேசத்திலே உயர்ந்தோர் தாழ்ந்தோர் இருக்கப்படாது; செல்வர்கள் தொழிலாளிகள் இருக்கப்படாது ; நிலத்தரசர்கள் வாரக்குடிகள் இருக்கப்படாது என்று கலகம்பண்ணி—ஆனபடியால் கடவுளையும் இல்லாமற் பண்ணவேணும், கடவுளுடைய பதிலாளிகளான திருச்சபை அதிகாரிகளையும் இல்லாமற் பண்ண வேணும் என்று ஒரு பெலத்த கட்சியார் கங்கணங்கட்டிக்கொண்டு நிற்கிறார்கள். ருஷியாவின் பொல்ஷெவிக் கட்சியாரைப் பார்த்து, புலியைக் கண்டு பூனை சூடுபோட்டுக் கொண்டதுபோல நம்முடைய தென் இந்தியாவின் தமிழருங்கூட சுயமரியாதை இயக்கம் என்ற ஒரு கட்சியை உண்டாக்கி வைத்திருக்கிறதை நீங்கள் அறிவீர்கள். சுயமரியாதைக்காரர் முதன்முதல் பிராமணருடைய ஆதிக்கத்துக்கு மாறாக வேலைசெய்ய எழுந்தவர்கள். பிராமணர் மேலான இடத்திலே இருக்கப்படாது, உத்தியோகங்களை எல்லாம் வைத்துக்கொள்ளப்படாது என்று தொடங்கினவர்கள், பிறகு சனங்களுக்குள்ளே எவரும் மேலாய் இருக்க ஒண்ணாது, குருக்கள் வேண்டாம், இராசாங்க அதிகாரிகள் வேண்டாம், கடவுளும் வேண்டாம் என்று தேவ தூஷணம் பேசிக் கொக்கரித்துக்கொண்டு நிற்கிறார்கள். மனுஷனுடைய சரீரத்திலே சகலத்தையும் நடப்பிக்கத் தலையும், வேலை செய்யக் கை கால்களும் இருக்கிறதுபோல, கூட்டமாய் வாழுகிற மனுஷ தொகுதிகளிலேயும் அதிகாரிகளும் தொழிலாளிகளும் இருப்பது சருவேசுரன் தாமே அமைத்த முறை என்ற உண்மையை இந்தப் பித்தர்கள் மறந்து, பேய் மயக்கிலே எடுபட்டுக் கூத்தாடுகிறார்கள்.

தேவ இராச்சியத்துக்கு மாறாகப் பிசாசின் வேலையைச் செய்கிற இந்தச் சத்துருபடை கையாளுகிற ஆயுதங்களைப் பார்த்தால்,

அவைகள் எல்லாம் சனங்களின் மனதை வசியப்படுத்துவதற்கு நல்ல வாய்ப்பான கருவிகள். முதன்முதல், அடக்கம் இல்லாத எவ்வித ஆங்காரப் பேச்சையும் பேசி மனம் போன போனபடி நடக்க இடங் கிடைக்கிறது. தானே தனக்கு முதலாளி, தனக்கு மேற்பட்ட தத்துவம் ஒன்று இல்லை என்று ஒருவன் நம்பிக்கொண்டால், அவன், பொலிசுமாருக்குப் பயந்தொழிய, மற்றப்படி செய்யாமல் விடக்கூடிய அட்டாதுட்டியந்தான் என்ன ? இனி, இந்தத் தேவ சத்துருக்கள் எவ்விதமான வெட்கங்கெட்ட நடையையும் சங்கை உள்ள காரியம் போல எடுத்துப் பேச, பேதைச் சனம் அவர்கள் பசப்புவார்த்தையிலே ஈடுபட்டுவிடுகிறது. கற்பத் தடை என்கிற மகா துட்ட அவலட்சண துரோகத்தை ஏதோ தேச நல்வாழ்வுக்கு உரிய கெட்டித்தனமென்று காட்டுவார்கள் ; விவாகத்தை ரத்துச் செய்து வேறு விவாகஞ் செய்கிற பாவத்தைப் புண்ணியம் என்பார்கள்; பயங்கரமான கொலைபாதகங்கள் சோரத்தனங்கள் விபசாரங்களைச் சூழ்ச்சமாய்ச் செய்து முடிக்கும் வழியைக் காட்டுகிற சினிமாப்படங்களை வாலர்களும் இளம் பெண்களுங்கூட இரவிரவாய்ப் பார்க்க வைப்பார்கள்; நிர்வாண கோலமான காட்சிகளைக் காட்டுவார்கள் ; விசேஷமாய் இன்றையில் இளம்பிள்ளை தானே நாளைக்கு மனுஷனாய் உலாவுகிறவன் என்றபடியால்—" சிறுமையிற் கல்வி சிலையி லெழுத்து " என்றபடியால்—சிறுவர்களையே நேரத்தோடு பழுதாக்கிப் பிசாசின் இராச்சியத்திற் சேர்த்துக்கொள்ளத் தக்கதாக, பள்ளிக்கூடங்களிலே கடவுளில்லாக் கல்வியை ஊட்டுவிப்பார்கள்; இன்னும் ஆண்டவருக்கும் திருச்சபைக்கும் அதிகாரத்துக்கும் துரைத்தனத்துக்கும் மாறான புத்தகங்களை, துண்டுகளை, பத்திரிகைகளை நாடெங்கும் பிரளயமாய்ப் பரப்பி, சாக்கிரதை இல்லாத மனுஷர் சற்றுச் சற்றாக தேவ பயம் அற்ற தன்மை என்கிற நஞ்சு தங்கள் ஆத்துமத்திலே சுவறிக்கொள்ள விடப்பண்ணுவார்கள். தற்கால பிறசமயப் பத்திரிகைகளிலெல்லாம், பொதுவாக, நாம் காண்கிறது என்ன ? கடவுளுக்கும் தேவ அதிகாரத்துக்கும் மாறான போக்குத்தானே.

பிரியமான கிறீஸ்தவர்களே, சாத்தானுடைய இராச்சியம்—ஆண்டவர் " உலகம் " என்று பெயரிட்டுச் சொன்ன அந்தச் சத்துரு படை—உங்களுக்குத் தூரத்திலே இல்லை. அது அந்நிய சீமைகளிலே மாத்திரம் உள்ளது அல்ல. அது உங்களுடைய அருகிலேதானே உண்டு. உங்களுக்குள்ளேயும் சிலர் அறிந்தும் அறியாமலும் அந்தப் படையோடு அனுதாபங் காட்டி, அந்தப் படையோடு இரகசியமாய்ச் சேர்ந்துதானும் இருப்பதுண்டு. உங்களுக்குள்ளே

யும் சில நிர்ப்பாக்கியர்கள், மதிகெட்டவர்கள், அந்தப் படையின் துர்ப்போதகங்களைப் புத்தகங்கள் பத்திரிகைகளிலே பார்த்து விசுவசித்துக் கொள்வது உண்டு. தாங்கள் உட்கொண்ட நஞ்சைப் பிறருக்கும் ஊட்டிவிடும்படியாக இவர்கள் அழுகற் கதைகளை, அடக்கமில்லாத ஆங்காரமான பேச்சுக்களை, குருமாருக்கு திருச்சபைக் கட்டுப்பாடுகளுக்கு மாறான அவதூறுகளை—அறிவில்லாதவர்களுக்குள்ளே, துடிதுடித்த வாலிபர்களுக்குள்ளே பரப்பிக்கொண்டு வருவது உண்டு. இவர்கள் எல்லாம் பிசாசின் வேலையைச் செய்கிறவர்கள். இவர்கள் எல்லாம் சத்துரு படையின் ஆட்கணக்கைப் பெருக்குகிறவர்கள். இதோ நம்முடைய ஞான யுத்தத்திலே எதிரி படையின் பெலத்தைக் கண்டுகொண்டோம்; மாற்றான் வலியை அறிந்துவிட்டோம். இனி, தன் வலியையும் அறியவேணும். நமது படையின் பெலத்தையும் ஆராயவேணும்.

II

பிசாசு தன் அந்தகார அதிகாரிகளோடு—வானமண்டலங்களில் உள்ள துட்ட அரூபிகளோடு—உலகத்தின் ஆங்காரம் தலைக்கேறிய சாத்திரிகளையும், வல்லரசுகளையும், சகல துட்டர்களையும் துராகிருதமுள்ளவர்களையும் துணைக்கொண்டு போராடுகிறது என்றது மெய்தான். ஆனால், பரலோக ராச்சியத்தின் மக்களாகிய நம்முடைய படையின் பெலமோ பிசாசின் பெலம் எல்லாத்தையும் முறிய அடிக்கத்தக்க ஒரு பெலம். நம்முடைய வலிமை பரலோகத்தில் நின்று வருகிற வலிமை. உலகத்துக்கு அதிபதியோ, மோட்சபாக்கியத்தை இழந்துபோன வெப்பசாரத்தினாலும் மனுஷர் பேரில் உள்ள அவிகாயத்தினாலும் எரிந்துகொண்டு ஓடித் திரிகிற பிசாசு. நமக்கு அதிபதியோ நம்மை இரட்சிக்க வந்த நம்முடைய கிறீஸ்து தேவராசா. இவருடைய சமுகத்திலே இராசாதிராசாக்கள் எல்லாம் வாய் புதைத்து நிற்கவேண்டியவர்கள் (இசை: 52; 15). நம்முடைய ஞான யுத்தத்தை இவர் திருக்கண் நோக்கிப் பார்த்துக்கொண்டு, நமக்கு வேண்டிய ஆத்தும பெலனைத் தந்துகொண்டு நிற்கிறார்: இருக்கிறார் என்று அல்ல, நிற்கிறார் என்று சொல்லுகிறேன்: ஏனென்றால், அப்படியே முடியப்பர் என்கிற ஆதிவேதசாட்சி ஆண்டவரைக் கண்டார். முடியப்பர், அப்போஸ்தலர்கள் காலத்திலே இருந்த ஒரு தியாக்கோன். இவரை யூதர்கள் வேதத்துக்காகப் பிடித்து ஆக்கினைப்படுத்திக் கொல்ல ஆயத்தம் பண்ணும் வேளையிலே, இவருடைய முகம் இதோ! ஒரு சம்மனசுவின் முகம்போல ஒளிருகிறது. வானத்தை அண்ணாந்து தேவ உதவியை மன்றாடுகிறார்: இதோ! பரமண்டலங்கள் திறந்திருக்கிற

தையும், அங்கே பிதாவுடைய வலது பாரிசத்திலே யேசுநாதர் எழுந்துநிற்கிறதையுங் காண்கிறார் (அப். நட. 6, 7 அதி.). பிதாவின் வலது பாரிசத்தில் நித்தியமாய் வீற்றிருக்கிறவர் அவ்வேளை எழுந்து நிற்கக் காரணம் என்ன? தம்முடைய வேதத்துக்காகப் போராடுகிற வீரனுக்கு உதவிசெய்கிற அடையாளம் தான் அல்லவோ? முடியப்பர் இந்தப் பரம உதவியினால் பூரித்து, தம்மைக் கல்லால் எறிந்து கொல்லுகிறவர்களுக்காகச் சருவேசுரனைப் பிரார்த்தித்துக்கொண்டே மரித்து, சத்திய திருச்சபையின் முதலாம் இரத்தச் சாட்சியாக மோட்சமுடி சூடுகிறார். இப்படியே, பிரியமானவர்களே, நமது ஞானப் போராட்டமும் நம்முடைய தேவ ராசாவின் முன்னிலையிலேதான் நடக்கிறது. சர்வ வல்லமை உடையவரான நம்முடைய கடவுள் பார்த்துக்கொண்டு இருக்கையிலே,—நமக்கு வேண்டிய சகல உதவியையும் அருளுகிறதற்கு எழுந்துநின்று கொண்டிருக்கையிலே, நாம் இந்தச் சங்கிராமத்திலே வெற்றி அடைவதற்கும் சந்தேகமா? நம்முடைய படையின் பெலத்துக்குமுன்னே சத்துரு படையின் பெலம் சூரியனுக்கு முற்பட்ட பனி போலவே ஆகும் என்று கண்டுகொண்டு, நாம் ஒருபுசம் இருபுசமாகத் துணிவு அடைந்து, சிங்கேறுகள்போலக் குதித்து வீரசூரத்தோடு போராட வேண்டாமோ?

நம்முடைய ஞானப்போர் ஒரு தனிப்போரும் அல்ல. நாம் தட்டத்தனியே நின்று சமராடுவதும் அல்ல. நம்மோடு கூட ஆயிரமாயிரம் பேர், இலட்சாதி லட்சம்பேர் படைத்துணையாய் பக்கத்துணையாய் நிற்கிறார்கள். முதன் முதல், "கிறீஸ்தவர்களுடைய சகாயம்" ஆகிய தேவதாயார் நமது பக்கம். சர்ப்ப வடிவங்கொண்டு மனுக்குலத்தைக் கெடுக்க வந்த தனது தலையை நசுக்கின இந்த ஆராதிஷ்ட அமலோற்பவ கன்னியின் திரு நாமத்தைக் கேட்டாலும், நரகக்கூளி இடி கேட்ட சர்ப்பம் போலத் திகைத்து எட்டுக் கட்டைக் கப்பால் பறந்துபோய்விடுமே. அம்மட்டோ! ஆண்டவருடைய ஞான யுத்தத்திற் பழகினவர்கள், அவரிடத்திலே தானே யுத்த முறையைப் படித்தவர்கள், அவருடைய படையின் திடவீர சேனாபதிகள் ஆன சம்பேதுரு, சம்பாவுலு, சந்தியோகுமையோர் முதலான அப்போஸ்தலர்களும் நமது பக்கம். அம்மட்டோ! நமக்குமுன் உலகத்தை வென்றவர்கள், தங்கள் இரத்தத்தினால் வேதத்தைச் செழிப்பித்து தேவ இராச்சியத்தை விஸ்தாரமாக்கினவர்கள் ஆன சகல வேதசாட்சிகளும் நமது பக்கம்! அம்மட்டோ! பரலோக ராச்சியத்திலே மோட்சானந்தம் பூத்திருக்கிற சகல ஸ்துதியர்கள், சகல கன்னியாஸ்திரிகள், சகல மாசில்லாத குழந்தை

கள், சகல தூதாதி தூதர்களும் நமது பக்கம். இவர்கள் எல்லாரும்—எப்படி மோசேசு முனிவர் மலையின் மேல் நின்று, கீழே பள்ளத்தாக்கிலே போராடிக்கொண்டிருந்த இசிறவேல் சனங்களுக்காகக் கைகளை உயர்த்திச் செபித்துக்கொண்டிருந்தாரோ (யாத். 17; 11)—அப்படியே வானலோகபர்வதங்களில் இருந்து பூலோகத்திற் போராடுகிற நமக்காகக் கைகளை உயர்த்திச் செபித்துக் கொண்டு இருக்கிறார்கள். ஆம்மட்டோ! நாம் பூலோகத்திலே போராட, நம்முடைய உதவிக்காரர் பரலோகத்தில் அல்லவோ இருக்கிறார்கள் என்று சொல்லிப் பின்னிட இடமில்லாதபடிக்கு, நம்முடைய அருகிலே, நமது வலப்பாரிசத்திலே, ஒவ்வொருவரோடும் நிற்கிற காவலான சம்மனசு நமது பக்கம். காவலான சம்மனசுகள் மாத்திரமோ சகல சம்மனசுகளுக்கும், தூதாதி தூதர்களுக்கும், சகல வான கணங்களுக்கும் அதிபதியான தளவாயாய், திருச்சபை முழுதுக்கும் விசேஷ காவற் தலைவராய், என்றும் பிரியாத் துணையாய் நிற்கிற சம்மிக்கேல் அதிதூதர்,—"உலகமெங்குஞ் சுற்றித் திரியும் சாத்தானையும் மற்றும் பிசாசுகளையும் தேவ வல்லமையைக்கொண்டு நரக பாதாளத்திலே தள்ளிவிடு"கிற அந்தத் தேவ சேனாபதி,—முன்னொரு திகில்மண்டிய நாளிலே: நான் அமையேன் என்று கெறுத்துவங் காட்டின லூசிப்பிசாசையும் அதனோடு கூடிக் கொக்கரித்த சகல பேய்க்கணங்களையும் அண்டகோளங்கள் எல்லாம் நிலை தப்பிக் கொலுகொலுத்ததோ என்று சொல்லும்படியான பயங்கர சண்டவேகத்தோடு ஒன்றடிமன்றடியாய் நித்திய அக்கினிச் சூளைக்குள்ளே கவிழ்த்துக் கொட்டிப்போட்டுச் சருவேசுரனுக்கு நிகரானவன் ஆர் என்று ஆர்ப்பரித்த அந்த அறுக்காஞ்சு—நம்முடைய பக்கம். இனிச் சோர்வு ஏன்? தியக்கம் ஏன்? பயப்பாடு ஏன்? எழும்புங்கள்! எழும்புங்கள்! பிசாசுக்கும் பிசாசுக்குத் தொழும்பு செய்கிற உலகத்துக்கும் எதிராகப் போர்தொடுக்க எழும்புங்கள்!

நமது போரோ ஞானப் போர். ஆனபடியால் நமது யுத்த உடுப்புக்கள் ஆயுதங்கள் எல்லாம் ஆத்துமத்துக்கு உரியவைகள் ஆக வேண்டியது. இதைப்பற்றி, இருளின் தூதர்களோடு ஆடுகிற ஞான யுத்தத்தில் கைபோனவரான அர்ச். சின்னப்பர் சொல்லுகிறதைக் கேளுங்கள்: "நீங்கள் வெற்றியடையத் தக்கதாகச் சருவேசுரனுடைய ஆயுதக் கூட்டத்தையே எடுத்து ஆளவேண்டியது. சத்தியத்தை அரைக்கச்சாகக் கட்டிக்கொள்ளுங்கள்; நீதி என்னும் மார்க்கவசத்தை அணிந்துகொள்ளுங்கள்; சமாதான சுவிசேஷத்திற்கு வேண்டிய சுறுசுறுப்பைப் பாதரட்சையாக மாட்டிக்கொள்ளுங்

கள்; துட்ட சாத்தான் எய்யும் அக்கினி அம்புகளை எல்லாம் அவித்துப்போடத் தக்கதாக, சகலத்திலும் விசுவாசம் என்னும் கேடயத்தைப் பிடித்துக்கொள்ளுங்கள்; இரட்சணியம் என்னும் தலைச்சீராவை அணிந்துகொண்டு, தேவவாக்கியம் என்கிற ஞான வாளைக் கையிலே எடுத்துக்கொள்ளுங்கள்; எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் பத்தியாய்ச் செபம் பண்ணுங்கள்" என்கிறார் (எபே. 6; 13-18). வேதவிசுவாசத்திலே, வேதசத்தியங்களை ஏற்றுக்கொள்ளுகிறதிலே தளம்பம் இல்லாமல் நின்றுகொண்டு, அந்த வேத போதனைக்குத் தக்கபடி நாம் சுறுசுறுப்பாய் நடக்கவேண்டியது முதற்கடமை. தாழ்மை, பொறுமை, கற்பு, பிறர்சிநேகம் முதலிய புண்ணியங்களால் நாம் நன்றாக உடுப்பாட்டிக்கொண்டவர்களாய் நிற்கவேண்டியது. பிசாசும் அதின் மக்களும் விடுகிற அக்கினிப் பாணங்களாகிற பொய்ப் போதகங்களால் துன்மாதிரிகைகளால் நாம் தாக்குண்டு கெடாமற் காக்கிற கைப்படல், நமது தளராத விசுவாசந்தான். இனி வலது கையில் எடுக்கவேண்டிய வாள் என்னவானால், தேவவாக்கியந்தான். அவரவர் வேதவாக்கியத்தை நன்றாய்ப் படித்துத் தியானித்து, அந்த வாக்கியத்தினால் பிசாசின் துர்ப்போதகங்களை அழித்துவிட வேணும். நமக்குத் தைரியந் தருகிற போசனமும் பானமும் என்னவென்றால், செபமும் தேவதிரவிய அநுமானங்களுந்தான். விழித்திருந்து செபம்பண்ணி, அடிக்கடி தேவதிரவிய அநுமானங்களைப் பெற்றுப் பிசாசின் சகல மாய்கைகளையும் வென்று செயத் தம்பம் நாட்டவேணும்.

பிரியமான கிறீஸ்தவர்களே, ஞான ஒடுக்கம் முடிந்த இந்தப் பரிசுத்தமான நாளிலே நாம் புது முயற்சியோடு, புது அபிமானத்தோடு, புது விசுவாசத்தோடு நம்முடைய தேவ ராசாவைச் சூழ்ந்து நெருங்கி வரக்கடவோம். அவரோடு எப்போதும் நின்று, வானமண்டலங்களிலுள்ள துட்ட அரூபிகளுக்கு எதிராய்ச் செபத்தினாலும் தேவ வாக்கியத்தினாலும் போராடக் கடவோம். நம்முடைய படை அணிகளில் நின்று ஆர் ஒருவர் என்றாலும் விலகிச் சத்துருவின் பாளையத்துக்குப் போகவிடப்படாது. தத்தளிக்கிற வீரர்களுக்கு,—பிசாசின் வேலையைச் செய்கிறவர்களுடைய பசப்பு வார்த்தைகளால் மயக்குண்டு நம்முடைய ஆண்டவரின் இராச விசுவாசத்துக்கு மாறான யோசனைபண்ணுகிறவர்களுக்கு—நற்புத்தி சொல்லி, அவர்களைத் திடப்படுத்தி வைக்க வேணும். விசேஷமாய் நல்ல புத்தகங்களை, நல்ல பத்திரிகைகளைப் பரப்பவேணும். தற்காலத்தில் சேனைபடைகளிலும் பார்க்க அச்சியந்திரந்தான் அதிக வல்லமையுள்ளது

என்பார்கள். கெட்ட புத்தகங்கள் பத்திரிகைகளால் உலகத்திலே விளைந்துகொண்டு வருகிற தீராத ஆத்தும சேதத்தை விலக்குகிறதற்கு, நாம் நல்ல புத்தகங்கள் பத்திரிகைகளைப் பரப்புவது அவசியம். நம்முடைய அணிகளைக் காத்துக்கொள்ளுகிறது மாத்திரம் போதும் என்று இராமல், சத்துருவுடைய அணிகளில் இருந்தும் சிறைபிடித்து நமது படையிற் சேர்க்கவேணும். நமக்குப் பிசாசின்மேல் எவ்வளவு வெட்டுப்பகையும் தீராத வன்மமும் இருக்கிறதோ, அவ்வளவிலே சருவேசுரனுடைய சாயலாய்ப் படைக்கப்பட்ட சகல மனுஷர் பேரிலும் அன்பும் அனுதாபமும் இருக்கவேண்டியது அல்லவா? ஆனபடியால் மனுக்குலத்தின் சன்மசத்துருவாகிய பிசாசின் மயக்கத்திலே கிடக்கிறவர்களின் பேரில் நாம் இரங்கி, அவர்களை ஆண்டவர் பக்கமாய் இழுத்து எடுத்துக்கொள்ள நம்மால் ஆன பிரயாசம் எல்லாம் படக்கடவோம்.

எங்களை மீட்ட ஆண்டவராகிய யேசுக்கிறீஸ்துவே, எங்கள் தேவ ராசாவே, இதுவரைக்கும் நாங்கள் தேவரீருக்கு விசுவாசக் குறைவு உள்ள பிரசைகளாய் நடந்துவந்த பிழையைப் பொறுத்தருளும், பொறுத்தருளும். இனிமேல் தேவரீருடைய அளவில்லாத வரப்பிரசாத உதவியை முன்னிட்டு, நாங்கள் எப்போதும் தேவரீரோடு நின்றுகொள்ளுவோம். தேவரீருடைய ஞான யுத்தங்களை வீர ஆவேசத்தோடு ஆடி, தேவரீருடைய ஞான இராச்சியத்தில் எங்களால் இயன்றளவில் பிறரையும் சேர்த்து, அந்த இராச்சியத்தை விசாலமாக்கப் பிரயாசப்படுவோம். தேவரீரே என்றென்றும் சகலருடையவும் இராசாவாக இருந்து ஆண்டருளும்,— ஆமென்.

அநுபந்தம் 1

On General Confession

பொதுப் பாவசங்கீர்த்தனத்தின் பேரில்

ஞான ஒடுக்க நாட்களிலே ஒவ்வொருவரும் தாங்கள் முன் செய்த பாவசங்கீர்த்தனங்களைப் பற்றி ஆராய்ந்து பார்க்கிறது நல்லது. முன்னே எப்போதும் பாவசங்கீர்த்தனத்துக்கு மெய்யான ஊக்கத்தோடு ஆத்தும சோதனை பண்ணியிருந்தால், மனதில் உள்ள கனமான பாவங்களை எல்லாம் ஒன்றும் ஒளியாமற் சொல்லியிருந்தால், இயன்ற வரையிலே அந்தப் பாவங்களுக்காகக் கெட்டியான பிரதிக்கினையோடு கூடிய உண்மையான மனஸ்தாபத்தையும் எழுப்பிக் கொண்டு வந்திருந்தால் முன் செய்த பாவசங்கீர்த்தனங்கள் நல்ல சங்கீர்த்தனங்களாகும். இப்படி நல்ல பாவசங்கீர்த்தனஞ் செய்திருக்கிறவர்கள் ஞான ஒடுக்க நாட்களிலே பொதுப் பாவசங்கீர்த்தனஞ் செய்ய, அதாவது, முன் பண்ணின பாவசங்கீர்த்தனங்களைத் திரட்டி ஒருமிக்கச் செய்யவேண்டியது இல்லை. ஆனாலும், பல முறையும், பொதுப் பாவசங்கீர்த்தனமானது நாம் பெரிய மன ஆறுதல் அடையவும், தேவ பயம், பத்தி வேகம் முதலியவைகளிலே வளரவும் நமக்கு உதவியாய் இருக்கிறபடியால், ஞான ஒடுக்க காலத்திலே அதைச் செய்வது அநேகருக்குப் பிரயோசனமாகக் கூடும். அநேகருக்கு என்கிறோம். ஏனென்றால், பொதுப் பாவசங்கீர்த்தனஞ் சிலருக்கு நட்டமாகவுங் கூடும். இவர்கள் ஆரென்றால், மனக் குழப்பங்களால் அல்லற்பட்டுக் கொண்டு இருக்கிற வீண்பயக் காரராம். இப்படிப்பட்டவர்கள் பொதுப் பாவசங்கீர்த்தனம் பண்ணப் போய் முன்னிலும் அதிக கலக்கங்களுக்கும் பாவச் சோதனைகளுக்கும் அவ நம்பிக்கைக்கும் ஆளாவார்கள். ஆனபடியால், அவரவர் தங்கள் தங்கள் ஆத்தும குருவானவருடைய ஆலோசனைப்படி, பொதுப் பாவசங்கீர்த்தனம் செய்வதோ விடுவதோ என்று தீர்மானித்துக் கொள்ளக் கடவார்கள்.

ஆனால், இதற்குமுன், மெய்யான மனந் திரும்புதல் இல்லாமல் — மனம் மாறாமல் — பாவச் சமயங்களைக் கைவிடாமல், சாவான பாவப் பற்றுதலை அறுத்து விடாமல் ஒப்பாசாரத்துக்குப் பாவசங்கீர்த்தனங்கள் பண்ணினவர்களும், சாவான பாவத்தை மனம் பொருந்தி ஒளித்துக் கொண்டு வந்தவர்களும், அல்லது சாவான பாவத்

தை அற்ப பாவம் போலச் சோடித்துக் காட்டினவர்களும் அவசியமாய்ப் பொதுப் பாவசங்கீர்த்தனம் பண்ண வேண்டியவர்கள். கள்ளப் பாவசங்கீர்த்தனத்தினால் ஒரு பாவமும் தீராது. அதற்குப் பின் அந்த மகா துரோகத்தை நிவிர்த்தி பண்ணாமல் செய்து கொண்ட பாவசங்கீர்த்தனங்கள் எல்லாம் தேவ துரோக அநாசாரங்கள் ஒழிய வேறல்ல. இப்படி இருக்க, பொதுப் பாவசங்கீர்த்தனம் இல்லாமல், அதாவது கள்ளப் பாவசங்கீர்த்தனஞ் செய்த நாள் தொடக்கம் கட்டிக் கொண்ட சகல கனமான பாவங்களையும் அறிக்கையிடாமல், பாவப்பொறுதியும் இல்லை, ஈடேற்றமும் இல்லை. கள்ளப் பாவசங்கீர்த்தனஞ் செய்து கொண்டு வந்த நிர்ப்பாக்கியர்களுக்குப் பொதுப் பாவசங்கீர்த்தனந் தான் ஒரே ஒரு ஈடேற்ற வழி என்றது நிச்சயம்.

பொதுப் பாவசங்கீர்த்தனம் ஏதோ மலை ஏறுகிறது போலப் பெருங் கடினமான காரியம் என்று நினைக்கத் தேவையில்லை. நல்ல தாழ்மையோடும் நம்பிக்கையோடும் சருவேசுரனைப் பிரார்த்தித்துக் கொண்டு, சிறிது நேரம் அமைதியாய் இருந்து, தன்னுடைய சீவிய காலத்திலே, அல்லது அதின் ஒரு பங்கிலே, கட்டிக் கொண்ட சாவான பாவங்களை ஞாபகப்படுத்திக் கொள்ளுவது பெரும் பிரயாசை ஆகாது. பத்துக் கற்பனை, திருச்சபையின் கட்டளைகள், தனது தனது அந்தஸ்தின் கடமைகள் என்ற ஒழுங்கின்படி ஆத்துமத்தைச் சோதித்துப் பார்க்கலாம். அற்ப பாவங்களை எந்தப் பாவசங்கீர்த்தனத்திலாவது சொல்ல வேண்டிய கடமை இல்லை என்று அறிவோமே. ஆனபடியால், பொதுப் பாவசங்கீர்த்தனத்திலேயும் அவைகளைக் கண்டுபிடிப்பதைப்பற்றிக் கவலைப்படத் தேவை இல்லை. சாவான பாவங்களைத் தானும், நன் மனதோடு ஆத்தும சோதனை செய்தபோது மனதிற் பட்டவைகளுக்குமேல் சங்கீர்த்தனம் பண்ண வேண்டிய கடமை இல்லை. இதற்கு மேல் உள்ள விபரங்களைப் பாவசங்கீர்த்தனங் கேட்கிற குருவானவருடைய உதவியோடு ஆராய்ந்து கண்டு அறிக்கையிடலாம். ஞான ஒடுக்கஞ் செய்தவர்கள், தங்களைத் தாங்களே ஏமாற்றிக்கொள்ளாமல், எது விதத்திலும் முற்றாய் மனந்திரும்பி, பழைய பாவக் கசடுகளைப் போக்கி, ஆண்டவருக்கு ஏற்ற புதுச் சீவியந் தொடக்கிக் கொள்ள நல்ல மனதோடும் தளராத ஊக்கத்தோடும் துணியக் கடவார்கள். மற்றதெல்லாம் அளவில்லாத இரக்கம் உள்ளவர் கைகூடச் செய்தருளுவார்.

—:o:—

ஆத்தும சோதனை

(பத்துக் கற்பனையும் திருச்சபையின் கற்பனைகளும்)

முதலாங் கற்பனைக்கு விரோதமான பாவங்கள்

1. வேத சத்தியங்களுள் எதையாகிலும் விசுவசியாமல் விட்டாயா? அல்லது எதைக் குறித்தாகிலும் சந்தேகப்பட்டாயா? வேத சத்தியங்களுக்கு விரோதமான சந்தேகங்களைப் பிறரிடத்திலே உண்டாக்கினாயா? அல்லது பிறரிடத்திலுள்ள அப்படிப்பட்ட சந்தேகங்களை உறுதிப்படுத்தினாயா?

2. திருச்சபையின் போதனைகளுக்கு விரோதமான புத்தகங்களை, பத்திரிகைகளை வாசித்தாயா? அவைகளை உன் வசத்தில் வைத்திருந்தாயா? வைத்திருக்கிறாயா? அப்படிப்பட்ட புத்தகங்கள் பத்திரிகைகளைப் பிறருக்கு விற்றாயா? கொடுத்தாயா?

3. பதிதருடைய அல்லது அஞ்ஞானிகளுடைய ஆராதனையிலே பங்குபற்றினாயா?

4. சருவேசுரன் இரக்கமுள்ளவராயிருக்கிறபடியால் அவர் எப்போதும் உன்னுடைய பாவங்களை மன்னித்துக் கொள்ளுவாரென்று குருட்டு நம்பிக்கைகொண்டு பாவத்தைக் கட்டிக்கொண்டாயா? பாவத்திலே நிலைகொண்டாயா?

5. ஆத்தும ஈடேற்றமும் கிடையாது, ஆத்தும ஈடேற்றத்துக்குரிய பரம உதவியும் கிடையாது என்று நினைத்து வேண்டுமென்று அவநம்பிக்கைப்பட்டாயா?

6. சிலவேளை உனக்கு நேரிட்டிருந்த யாதொரு கேட்டைக் குறித்து சருவேசுரனைப் பகைத்தாயா? அல்லது வெறுத்தாயா?

7. நெடுங்காலமாகத் தேவ வழிபாட்டுக்கு உரிய செபம் முதலான கிரியைகளை அனுசரியாமலிருந்தாயா?

8. வேதத்தையாகிலும் திருச்சபையையாகிலும் திருச்சபையின் திரு ஊழியரையாகிலும் தூஷித்தாயா? அல்லது பகைத்தாயா? குருமார் கன்னியாஸ்திரிமார் முதலானவர்களைப் பற்றி ஆவலாதி அவதூறுகளைச் சொன்னாயா?

9. பேய்க்காரியஞ் செய்தாயா? செய்வித்தாயா? அதற்குப் பிறரைத் தூண்டினாயா? பல்லிச் சாத்திரம் பார்த்தாயா? சாத்திரங் கேட்டாயா? அல்லது கேட்பித்தாயா? நல்ல நாள் தீய

நாள் பார்த்தல், திருஷ்டி தோஷங் கவனித்தல், அதற்குப் பரிகாரஞ் செய்தல் முதலான அஞ்ஞான வீணாசாரங்களை அனுசரித்தாயா ? அனுசரிக்கப் பண்ணினாயா ?

இரண்டாங் கற்பனைக்கு விரோதமான பாவங்கள்

1. தேவ தூஷணஞ் சொன்னாயா ?
2. பொய்ச் சத்தியம் பண்ணினாயா ?
3. பொய்ச் சத்தியத்தினால் பிறருக்கு நஷ்டம் விளைவித்தாயா ?
4. செய்வேன் என்று சத்தியத்தோடே உடன்பட்ட ஒரு பொருத்தனையை நிறைவேற்ற அசட்டை பண்ணினாயா ?
5. பொய்யாணை இடப் பிறரை இணக்கினாயா ?
6. உண்மை பேசுவேன் என்று சத்தியம் பண்ணினபின் சொல்ல வேண்டிய உண்மையைச் சொல்லாமல் விட்டாயா ?
7. சருவேசுரனுக்கு நீ செய்த கனமான பொருத்தனையை அல்லது வாக்குத்தத்தத்தை மீறினாயா ?
8. அப்படிப்பட்ட பொருத்தனையை அல்லது வாக்குத்தத்தத்தைக் குறித்த காலத்திலே நிறைவேற்ற அசட்டை பண்ணினாயா ?

மூன்றாங் கற்பனைக்கு விரோதமான பாவங்கள்

1. அவசியமில்லாமல் அல்லது முறைப்படி உத்தரவுபெற்றுக் கொள்ளாமல் ஞாயிற்றுக்கிழமைகளில், கடன் திருநாட்களில், விலக்கப்பட்ட வேலைகளைச் செய்தாயா ? செய்வித்தாயா ?
2. உன்னுடைய சொந்தக் குற்றத்தினால் அந்த நாட்களில் பூசை காணாமல் விட்டாயா ?
3. பூசைக்கு நேரஞ் சென்று வந்தபடியால், அல்லது பூசை முடியுமுன் நேரத்தோடு எழுந்து போய்விட்டபடியால் பூசையின் பெரும் பகுதியைக் காணாமல் விட்டாயா ?
4. பூசைநேரத்திலே அந்தத் திருப்பலியோடு சம்பந்தமற்ற காரியங்களில்—அதாவது பேசிக்கொண்டிருப்பதில், அங்கங்கே பராக்குப் பார்த்துக்கொண்டிருப்பதில் அல்லது வேறேதும் வாசித்துக்கொண்டிருப்பதில் நெடுநேரஞ் செலவழித்தாயா ?
5. ஒருசந்திநாட்களில் ஒருசந்தி அனுசரியாமல் விட்டாயா ?
6. சுத்தபோசன நாட்களில் மாமிசம் சாப்பிட்டாயா ?

7. ஒரு வருஷத்துக்கு மேல் பாவசங்கீர்த்தனம் பண்ணாமலிருந்தாயா ?
8. பாஸ்குகாலத்திலே தேவநற்கருணை வாங்க அசட்டையாயிருந்தாயா ?
9. கோவிலையுங் குருமாரையுந் தாபரிக்கிறதற்காக உன் அவகாசத்துக்குத் தக்கபடி பண உதவி பொருளுதவி பண்ணாமல் விட்டாயா ?
10. திருச்சபையின் விக்கினங்களைச் சட்டைபண்ணாமல் விவாகம் முடித்தாயா ? நீ அறிந்த விக்கினங்களை அறிவியாமல் விட்டாயா ?
11. திருச்சபையால் விலக்கப்பட்டுள்ள இரகசிய சபைகள், பிறசமயக் கூட்டங்களிற் சேர்ந்திருந்தாயா ?

நாலாங் கற்பனைக்கு விரோதமான பாவங்கள்

1. பெற்றோர் உனக்கு வெளிப்படையாகக் கற்பித்த எந்தப் பெரிய காரியத்திலாவது அவர்களுக்குக் கீழ்ப்படியாமல் இருந்தாயா ? உதாரணமாக, உன்னுடைய விசுவாசத்துக்காவது நல்லொழுக்கத்துக்காவது கேடு விளைவிக்கக் கூடிய ஆட்களையும் இடங்களையும் விலக்க வேண்டுமென்று அவர்கள் கற்பித்தபோது அவர்களுடைய கற்பனையை மீறினாயா ?
2. உன் பிதா மாதாக்களைப் பகைத்தாயா ? திட்டினாயா ?
3. உன்னுடைய கிரமந் தப்பின நடக்கையால் அவர்களுடைய சீவியத்தைத் துக்கமான சீவியம் ஆக்கினாயா ?
4. அவர்களைப் பற்றிக் கவனியாமல், அவர்களுடைய அவசியங்களில் அவர்களுக்கு உதவி செய்யாமல் விட்டாயா ?
5. அவர்களுடைய மரண சாதனத்தை, சொல்லிச் செத்த கனமான காரியங்களை நிறைவேற்ற அசட்டைபண்ணினாயா ?
6. அவர்களுக்கு நிந்தை அவமானமான பேச்சுப் பேசினாயா ? அவர்களுக்கு முன்பாக அல்லது அவர்களில்லாத இடத்தில் அவர்களைக் கேலிபண்ணினாயா ?
7. அவர்களைப் பயமுறுத்தினாயா ? அடிக்கக் கையோங்கினாயா ?
8. மேற்றிராணிமாருக்கு அல்லது குருமாருக்கு மாறாகச் செய்யப்பட்ட கலகங்களில் நீயும் பங்குபற்றினாயா ? அவர்களுடைய பரிசுத்த அந்தஸ்துக்கு அடாத அவதூறுகளைப் பரப்பினாயா ?
9. உலக இராசாங்கத்துக்கு, அல்லது ஊர் அமரிக்கைக்கு மாறாகக் கலகஞ் செய்கிறவர்களுக்குள்ளே நீயும் ஒருவனாயிருந்தாயா ?

ஐந்தாங் கற்பனைக்கு விரோதமான பாவங்கள்

1. அவசியமில்லாமலும் வேண்டுமென்றும் உன்னுடைய தேக சௌக்கியத்தைக் கெடுத்துக்கொண்டாயா? அல்லது உன்னுடைய உயிருக்கு அழிவு வருவித்துக்கொள்ள வேண்டுமென்று மனந் துணிந்து எண்ணினாயா?

2. பிறருடைய கேட்டிலே சந்தோஷப்பட்டாயா?

3. பொறாமைக்கு இடங் கொடுத்தாயா?

4. உன் சத்துருவுக்கு ஏதாகிலும் பெருங் கேடு வரவேண்டுமென்று ஆசித்தாயா?

5. பிறரைச் சபித்தாயா? அல்லது அவர்களுக்கு தேவ சாபம் வரவேண்டும் என்று கேட்டாயா?

6. எல்லாருக்கும் வழக்கமாய்க் காண்பிக்கும் அறிமுகத்தின் அடையாளங்களை வெறுப்பின் நிமித்தம் சிலருக்குக் காண்பியாமல் விட்டாயா?

7. வாக்குவாதத்திலே பெருங் கோபங் கொண்டாயா?

8. பிறரோடு சண்டைபோட்டுக்கொண்டாயா?

9. பிறரை அடித்தாயா? காயப்படுத்தினாயா?

10. உன்னுடைய செய்கையாலே, அல்லது புத்திசொல்லிக் கொடுத்ததினாலே, அல்லது சம்மதி கொடுத்ததினாலே மனித உயிருக்கு அழிவு வருவித்தாயா? உதாரணமாக, கருவழித்தல் முதலான மனித உயிர்க் கொலைகளை நீயாய்ச் செய்தாயா? பிறர் செய்யப் புத்தி சொன்னாயா? உன்னாற் கூடியபோது தடாமல் விட்டாயா?

11. தற்கொலை செய்துகொள்ளப் பார்த்தாயா?

12. வெறிவரக் கள்ளு சாராயம் முதலியவைகளைக் குடித்தாயா? பிறருக்கு வெறிவரக் குடிக்கக் கொடுத்தாயா?

13. உன்னுடைய துன்மாதிரி துர்ப்புத்தி முதலியவைகளால் பிறரைப் பாவத்திலே விழுத்தினாயா?

14. உன்னுடைய வீட்டிலே உள்ளவர்களைத் தாறுமாறாய் நடக்கவிட்டாயா?

ஆறும், ஒன்பதாங் கற்பனைகளுக்கு விரோதமான பாவங்கள்

1. வேண்டுமென்றும் சந்தோஷத்தோடும் அசுசியான எண்ணங்களுக்கு அல்லது ஆசைகளுக்கு இடங்கொடுத்தாயா?

2. அசுசியான பேச்சுக்களைப் பேசினாயா? அல்லது பிறர் பேசச் சந்தோஷமாயும் வேண்டுமென்றுங் கேட்டாயா?

3. அசுசியான பாட்டுக்களைப் படித்தாயா? அல்லது பிறர் படிக்கச் சந்தோஷமாய்க் கேட்டுக்கொண்டிருந்தாயா?

4. கெட்ட காரியங்களைக் குறித்துப் பிறருக்குக் கடிதமெழுதினாயா? பிறர் அவைகளைக் குறித்து உனக்கு எழுதின கடிதத்தை வாங்கி வாசித்தாயா?

5. கெட்ட புத்தகங்கள் புதினத்தாள் முதலியவைகளை வாசித்தாயா? மறு பேருக்கு வாசிக்கக் கொடுத்தாயா?

6. மரியாதைக்கு விரோதமாக உன்னை, அல்லது பிறரைப் பார்த்தாயா? சிற்றின்ப ஆசைகளைப் பிறப்பிக்கக் கூடிய யாதொன்றை உற்றுநோக்கினாயா?

7. அந்தரங்கமான சிற்றின்பக் கிரியைகளுக்கு இடங்கொடுத்தாயா?

8. அடக்க ஒடுக்கத்துக்கு விரோதமான அல்லது மோசமான சேட்டை பரியாசஞ் செய்தாயா? அல்லது பிறர் செய்யவிட்டாயா?

9. உன்னுடைய அடக்கவீனமான நடைகளால் பிறருக்குப் பாவச் சோதனை வருவித்தாயா?

10. குற்றமும் மோசமுமான விதமாக எவரோடாகிலும் ஊடாடிக்கொண்டு வந்தாயா?

11. பாவச் சமயங்களுக்கு, உதாரணமாக, சிற்றின்பக்கூத்து, நாடகம், காட்சி பார்த்தல், உனக்கெதிர்ப்பாலாரான ஆட்களுடைய கூட்டத்திலே நடமாடுதல், அவர்களோடு தனியே தங்குதல், இராவிலே வெளியே திரிதல் முதலானவைகளுக்கு வேண்டுமென்று உன்னை ஏதுவாக்கிக் கொண்டாயா?

12. சிற்றின்பத்துக்கு அடுத்த வேறெந்தக் கிரியையாகிலும் செய்தாயா? எப்படிப்பட்ட ஆளோடு அப்படிச் செய்தாய்?

ஏழாம், பத்தாம் கற்பனைகளுக்கு விரோதமான பாவங்கள்

1. பணத்தையாவது, வேறே பொருள்களையாவது திருடினாயா?

2. நீ கொஞ்சமுஞ் செய்யாமல் விட்ட, அல்லது பழுதாய்ச் செய்த வேலைக்குக் கூலி வாங்கினாயா?

3. புறத்தியாருடைய பொருள்களை அழித்தாயா? பழுதாக்கினாயா?

4. பிரசித்த உத்தியோகத்திலே, அல்லது தனிப்பொறுப்பிலே பணத்தைப் பொதுக்கிக்கொண்டாயா?

5. பிறனுடைய களவிலே, அல்லது வஞ்சகச் சூழ்ச்சிகளிலே, அல்லது அநியாயத்திலே பங்குபற்றினாயா ?

6. திருடினதென்று நீ அறிந்த பொருளை விலைக்கு வாங்கினாயா ? அல்லது உன்னிடத்தில் வைத்துக்கொண்டாயா ?

7. அநியாய வழக்கு வைத்தாயா ? வைப்பித்தாயா ?

8. அநியாயமான, அல்லது சந்தேகமான ஒரு வியாச்சியத்தைக் கைக்கூலியினாலே, பயமுறுத்தலினாலே, அல்லது வேறே தகாத உபாயங்களினாலே வெல்லத் தேடினாயா ?

9. விற்றல் கொள்ளல்களில் அவமடிப்புச் செய்தாயா ?

10. உனக்கு லாபமாக, அல்லது உன் எசமான்களுக்கு லாபமாகச் சரக்குகளின் அளவு நிறை குணம் முதலியவைகளில் பிறரை ஏமாற்றினாயா ?

11. கடு விலையாவது கடு வட்டியாவது வாங்கினாயா ?

12. கள்ள நாணயம் செலுத்தினாயா ?

13. உன்னுடைய கடனை இறுக்க அசட்டையாயிருந்தாயா ? அல்லது கடனிறுக்க ஒரு வழியும் உனக்கு இராது என்று அறிந்துகொண்டு கடன்பட்டாயா ?

14. உனக்குக் கடன் கொடுத்தவர்களை வஞ்சித்தாயா ?

15. கண்டெடுத்த பணமாவது விலைபுபார்ந்த பொருளாவது ஆருடையதென்று போதியமட்டும் விசாரித்துப் பாராமல் நீ அவைகளை வைத்துக்கொண்டாயா ?

16. பிறருக்குரிய பொருள்களை அவர்களுக்குக் கொடுத்துவிட மனமில்லாமல் இருந்தாயா ? அல்லது கொடுத்துவிட நியாயவீனமாய்த் தாமதித்தாயா ?

17. எப்படிப்பட்ட அநியாயத்தையாகிலுஞ் செய்யத் துணிந்தாயா ? அல்லது கருதினாயா ? அல்லது விரும்பினாயா ?

எட்டாங் கற்பனைக்கு விரோதமான பாவங்கள்

1. பெருங் காரியத்திலே பிறரை அணுப்ப, அல்லது பெருங் காரியத்திலே பிறருக்கு நஷ்டம் விளைவிக்கக் கூடிய பொய்களைச் சொன்னாயா ? அல்லது அப்படிப்பட்ட பொய்களைச் சொல்லுவித்தாயா ?

2. அவசியமில்லாமல் பெருங் காரியத்திலே உன் புறத்தியானுடைய மறைந்த குற்றங்களை அல்லது குறைகளை வெளியாக்கினாயா ?

3. பெருங் காரியத்திலே பொய் சொல்லி உன் புறத்தியானை அவதூறுபடுத்தினாயா ?

4. பிரசித்தமாகப் பிறரைத் தூஷித்தாயா ?

5. புறங்கூற்றினால், அல்லது அவதூற்றினால் நீ உன் புறத்தியானுக்கு வருவித்த சங்கை நஷ்டத்துக்குப் பரிகாரஞ் செய்யாமல் விட்டாயா ?

6. பிறர் உனக்கு நம்பிக்கையின் நிமித்தந் தெரிவித்திருந்த பெரும் இரகசியங்களை வெளிவிட்டாயா ?

7. போதிய நியாயம் இல்லாமல் பிறருடைய கடிதங்களை உடைத்து வாசித்தாயா ?

உன்னுடைய சீவிய அந்தஸ்துக் கடமைகளுக்கு
விரோதமான பாவங்கள்

நீ பிதாவாய் அல்லது மாதாவாய் இருந்தால் :

1. போதிய நியாயமில்லாமல் உன் பிள்ளைகளுக்கு ஞானஸ்நானங் கொடுப்பிக்கத் தாமதித்தாயா ?

2. உன் பிள்ளைகளைச் சரியான பிராயத்திலே பாவசங்கீர்த்தனத்துக்கும் புது நன்மைக்கும் உறுதிப்பூசுதலுக்கும் ஆயத்தப்படுத்துவிக்க அசட்டையாயிருந்தாயா ?

3. அவர்களை ஒரு கத்தோலிக்குப் பள்ளிக்கு அனுப்பக்கூடியதாயிருந்தும் அப்படிச் செய்யாமல், அவர்களுடைய விசுவாசத்துக்கும் நல்லொழுக்கத்துக்குங் கேடு வருவிக்கக் கூடிய பிற சமயப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பினாயா ?

4. அவர்களுடைய பரிசுத்தத்துக்குக் கேடு வரக்கூடிய விதமாய் அவர்களை நடத்தினாயா ? அல்லது நடக்கவிட்டாயா ?

5. உன்னுடைய வேதக் கடமைகளை அசட்டை செய்ததினால், தேவதூஷணஞ் சொன்னதினால், சபித்ததினால், சத்தியம்பண்ணினதினால், குடித்து வெறித்ததினால், கெட்ட பேச்சுகளைப் பேசினதினால் அவர்களுக்குத் துன்மாதிரி காண்பித்தாயா ?

6. அவர்கள் கெட்ட புத்தகங்கள் புதினத்தாள்கள் முதலியவைகளை வாசியாதபடி தடைபண்ணாமல் விட்டாயா ?

7. அவர்களை நியாயமில்லாமல் இராக்காலங்களில் வெளியே திரியவும், கெட்டவர்களோடு சங்காத்தஞ் செய்யவும், விலக்கப்பட்ட கூத்து நாடகங்களுக்குப் போகவும், அவைகளிலே பங்குபற்றவும் விட்டாயா ?

8. அவர்களைப் பிறசமயத்தவர்களோடு கூடிக் கொண்டாட்டஞ் செய்துதிரிய விட்டாயா ?

9. அவர்களைத் தண்டித்துத் திருத்த வேண்டியபோது தண்டிக்க அசட்டைபண்ணினாயா ?

10. அவர்கள் தேவதூஷணஞ் சொல்லுதல், திட்டிச் சபித்தல் இவை முதலானவைகளைச் செய்துகொண்டு வந்தபோது அவர்களை அதட்டிக் கண்டியாமல் சும்மா விட்டாயா?

11. உன்னுடைய அசட்டைத்தனத்தினால், அல்லது மிதமிஞ்சின பட்சத்தினால் அவர்களை அடக்கி நடத்த அசட்டையாயிருந்தாயா?

12. கோபத்தை அடக்கமாட்டாமல் அவர்களைக் குரூரமாயும் மிருகத்தனமாயுந் தண்டித்தாயா?

நீ புருஷனாய் அல்லது பெண்சாதியாயிருந்தால்:

1. உன் சமுசாரக் கடமைகளை எல்லாம் அநுசரித்து நடந்தாயா?

2. சமுசாரக் கடமையிலே சாவானபாவமான கிரியைகளை எல்லாம் விலக்கி நடக்க அசட்டையாயிருந்தாயா?

3. வியபிசாரத்துக்கு உட்பட்டாயா?

4. அந்நியோந்நிய சமாதானத்தையும் ஒற்றுமையையுங் காத்து நடந்தாயா?

5. எரிச்சற்பட்டாயா? அல்லது எரிச்சலை வருவித்தாயா?

நீ எசமானாய் அல்லது எசமாட்டியாய்
அல்லது வேலைகொள்ளுகிறவன், கொள்ளுகிறவளாயிருந்தால்:

1. ஞாயிற்றுக்கிழமைகளிலே, அல்லது கடன் திருநாட்களிலே உன்னுடைய ஊழியக்காரர்களைக்கொண்டு அவசியமில்லாத பெரும் வேலைகளைச் செய்வித்தாயா?

2. போதிய நியாயமில்லாமல் அவர்களைப் பூசைக்குப் போகாமல் தடுத்தாயா?

3. அவர்களுக்குப் போக வேண்டிய கூலியைக் கொடாமல் விட்டாயா? கொடுக்க வீணாய்த் தாமதித்ததினால் அவர்களுக்கு நஷ்டம் விளைவித்தாயா?

4. கடினமான வேலை செய்வித்துக் குறைந்த கூலிகொடுக்கப் பொருந்திக்கொண்டாயா?

5. குறித்த காலத்துக்கு முன், அல்லது கொடுமையாய் அவர்களைத் தள்ளிப்போட்டாயா?

6. அவர்களுடைய நல்லொழுக்கத்தைப்பற்றி விசாரிக்க அசட்டையாயிருந்தாயா?

7. அவர்களுடைய கெட்ட நடக்கையைப்பாராமலும், அவர்களால் ஒருவேளை உனக்காவது உன் குடும்பத்துக்காவது விளையக் கூடிய ஆத்தும கேட்டைப் பாராமலும் அவர்களை வேலையிலே வைத்துக்கொண்டாயா?

8. அவர்களை ஒவ்வாத நேரங்களிலே கூட்டங் கூடியிருக்க விட்டாயா? அல்லது அவர்களைக் கவனமாய்க் காவல்செய்யாமல் விட்டாயா?

9. அவர்கள் உன்னிடத்தில் வேலைக்கு அமர்ந்தபடியால், அவர்களை உன்னுடைய அதிகாரத்தாலும் இச்சகத்தாலும் உபகாரங்களாலும் பாவத்திலே விழுத்தினாயா?

10. கூடாத ஒழுக்கமுள்ள ஆட்களை உன் வீட்டிலே தங்க விட்டாயா? அங்கே கெட்ட கூட்டங்களைக் கூடவிட்டாயா? அல்லது அந்தக் கூட்டங்களிலே பெருந் துர்மாதிரி நடக்கக் கண்டும் கவனியாமலிருந்தாயா?

நீ ஒரு எசமானுக்குக் கீழ் இருந்தால்:

1. உன்னுடைய எசமானுடைய பொருள்களைத் திருடினாயா?

2. உன்னுடைய எசமானின் பொருள்களை உன் இனசனத்தாருக்காவது சிநேகிதருக்காவது கொடுத்தாயா?

3. தனக்காக யாதொன்றைக் கொள்ளும்படியாக, அல்லது யாதொரு கருமத்தை நடத்தும்படியாக அவன் உன்னிடத்திலே ஒப்பித்த பணத்திலே, அல்லது பொருள்களிலே யாதொரு பங்கை அபகரித்துக்கொண்டாயா?

4. உனக்குப் போதிய கூலி கிடைக்கவில்லை என்ற போக்கு நியாயத்தினால் அவனுடைய பொருள்களை எடுத்தாயா? அல்லது வைத்துக்கொண்டாயா?

5. அவனுடைய பெருங் குற்றங்களை அவசியமில்லாமலும் அவனுக்கு நட்டமாகவும் பராசியப்படுத்தினாயா?

6. அவனுடைய குடும்பத்தில் பிரிவினையுண்டாக்கினாயா?

7. உன்னுடைய பொய்யான, அல்லது வன்மமான குற்றச்சாட்டினால் மற்ற வேலைகாரரை வேலையிலிருந்து தள்ளுவித்தாயா?

8. பிற சமயத்தவர்களிடத்திலே வேலைசெய்யும்போது நீ அவர்களுடைய சமய முறையை அனுசரித்தாயா? அவர்களுடைய சமய நூல்களை வாசித்தாயா? பாவமான காரியங்களிலே உன்னுடைய எசமானுக்கு உதவி செய்தாயா?

9. உன்னுடைய வேலையையும் மற்றக் கடமைகளையும் மனச்சாட்சிப்படி செய்து முடியாமல் விட்டாயா?

—:o:—

அநுபந்தம் 2

Fr. Gonzalves's *Miserere*



பிழை தீர்க்கிற மந்திரம்

சர்வ தயாபர யேசுவே! பாவிகளாயிருக்கிற எங்கள் பேரில்,

தயவாயிருஞ் சுவாமீ! தயவாயிரும்.

மண்ணால் மனுஷனை உண்டாக்கி,
திவ்விய கருணையால் வல்லவனாக்கி,
அவன் கையாற் பாடுபடத் திருவுளமான
என் தயாபர யேசுவே! த.ப.ச.த.

துஷ்டயூதர் கையிற் சிறைப்பட்டு,
திருக்கண்டத்திற் கரத்திற் கயிறிட்டு,
செம்மறிபோலப் பலிக் கேகப்பட்ட
என் தயாபர யேசுவே!

அந்நீத குருச்சபையில் அமைந்து,
பொய்ச் சாட்சிகளுக்குப் பணிந்து,
தேவ பழிகாரனாகக் கூறப்பட்ட
என் தயாபர யேசுவே!

திருக்கன்னத்தில் அறையுண்டு,
திருவிழிகள் மறைக்கப்பட்டு,
இராமுழுதுங் கோரணிவாதைகள் அநுபவித்த
என் தயாபர யேசுவே!

பிலாத்திட்ட துஷ்டநீர்வையாற் கற்றூணிற் கட்டுண்டு,
நிஷ்டூரமாய் ஐயாயிரத்துக்கதிகம் அடிபட்டு,
சர்வாங்கமும் இரத்தவாறாகப்பட்ட
என் தயாபர யேசுவே!

திருச்சிரசில் முள்முடி தரித்து,
பீற்றற் சகலாத்தை மேலிற் போர்த்து,
பரிகாச ராசனாக நிந்திக்கப்பட்ட
என் தயாபர யேசுவே!

பாரதூரச் சிலுவை தோளிற் சுமந்து,
கபாலமலைமட்டுந் தொய்வோடே நடந்து,
பெலவீனமாகத் தரையிலே விழுந்த
என் தயாபர யேசுவே!

திருத் துகிலைக் கடூரமாயுரிந்து,
சர்வாங்க காயங்கள் விரிவாய் மிகுந்து,
சபைமுன்பாக நாணித்து வாதிக்கப்பட்ட
என் தயாபர யேசுவே!

சிலுவை மரத்தின் மீதே சயனித்து,
திருப்பாதகரங்களில் ஆணிகள் அறைந்து,
இரு கள்வருக்கு நடுவே நிறுத்தப்பட்ட
என் தயாபர யேசுவே!

சிலுவையிலேறிச் சுகிர்தம் மொழிந்து,
வாதிக்கிற சத்துராதிகளுக்குப் பாவம் பொறுத்து,
அனைவருக்குந் தயவு காண்பித்த
என் தயாபர யேசுவே!

தயவாயிருஞ் சுவாமீ! தயவாயிரும்.

சகல வாதைகளைத் தீரவனுபவித்து,
பாவிகள் ஈடேற்றம் முகிய முகித்து,
சீவபலியாகப் பிராணனைக் கொடுத்த
என் தயாபர யேசுவே!

திருமுகமலர்வு மடிந்து,
திருவிழிகள் மறைந்து,
திருத்தலை கவிழ்ந்து மரணித்த
என் தயாபர யேசுவே!

எனக்காக இத்தனை பாடுகளைப் பட்டீரே,
என் பாவம் உத்தரிக்க உமதுதிரஞ் சிந்தினீரே,
எனதாத்துமத்துக்காக உமதாத்துமத்தைக் கொடுத்த
என் தயாபர யேசுவே!

தயவாயிருஞ் சுவாமீ! தயவாயிரும்.

இந்த நன்றிகளையெல்லாம் அடியேன் பாராமல்,
எனக்காகப் பாடுபட்டதையும் எண்ணாமல்,
மகா துஷ்ட துரோகத்தைச் செய்தேனே,

என் பாவத்தைப் பொறுஞ்சுவாமீ என்பாவத்தைப் பொறும்

இதோ என்னிருதயஞ் சகலமும் அதிர்ந்து,
விதனத்தாற் பொடிப்பொடியாகப் பிளந்து,
கண்களாற் கண்ணீர்சொரிந்தழுது நிற்கிறேன்,

என் பாவத்தைப் பொறுஞ் சுவாமீ என் பாவத்தைப்பொறும்

என்பாவத்தி னதிகத்தையுங் கொடுமையையும் பாராமல்,
உம்முடைய கிருபையையும் மகிமையின் மிகுதியையும் பார்த்து,
உம்முடைய கசையடிகளையும் முள்முடியையும் பார்த்து,
உம்முடைய சிலுவையையுந் திருமரணத்தையும் பார்த்து,
உம்முடைய சர்வாங்க காயங்களையும் திருவுதிரங்களையும்
பார்த்து,

என் பாவ.பொ.சு...

சர்வ தயாபர யேசுவே! பாவிகளாயிருக்கிற எங்கள் பேரில்
தயவாயிருஞ் சுவாமீ! தயவாயிரும்.

Printed by B. Santiagoepillai.

005699